# எம்.ஜி.ஆர். கதை



எஸ்.விஜயன்



# எம்.ஜி.ஆர். கதை



முதல் பாகம்

# எம்.ஜி.ஆர். கதை- முதல் பாகம்

முதல் பதிப்பு: ஜனவரி 1989
மறுபதிப்பு: அக்டோபர் 1990
மூன்றாம் பதிப்பு: பிப்ரவரி 1992
நான்காம் பதிப்பு : அக்டோபர் 1995

உரிமை: அருள்மொழி பதிப்பகம்

வண்ணப்படங்கள்:
ஆர்.என். நாகர்ராஜராவ்,
சுபா சுந்தரம்,
ரவி

விலை : ரூ.20.00 25-00

அச்சிட்டோர்:
பார்வதி ஆர்ட் பிரிண்டர்ஸ்
6, மேற்கு கூவம் ஆற்றுச்சாலை,
சென்னை-600 002.

நூல் கிடைக்குமிடம்:
அருள்மொழி பதிப்பகம்,
6, அஜிஸ் முல்க் 1-வது தெரு,
ஆயிரம் விளக்கு, சென்னை - 600 006.

அருள்மொழி பதிப்பகம்
64, சிவன் கோயில் தெரு,
பவர் ஹவுஸ் ரோடு
கோடம்பாக்கம், சென்னை 600 024



# ஒரு ரசிகனின் சமர்ப்பணம்

இதை நீங்களெல்லாம் வாசிக்கும் இந்த நிமிடம் வரையிலும் எனக்குள்ள வியப்பு இன்னும் மாறவில்லை. சொந்த ஊரில் 'எங்கள் சிவாஜி' என்ற பத்திரிகை நடத்தி சிவாஜி மீது என் தீவிர அபிமானத்தைக் காட்டியவன், இன்று எம்.ஜி.ஆரின் வாழ்க்கை வரலாற்றைத் தொகுத்து புத்தகமாக வெளியிடும் எனது செயலை நினைத்து எனக்கே வியப்புதான்.

ஒரு பத்திரிகையாளனுக்கு விருப்பு வெறுப்பு இருக்கக் கூடாது என்ற ரீதியில் இந்த நூலுக்கான ஆதாரங்களைச் சேகரிக்க ஆரம்பித்த கட்டத்தில், எம்.ஜி.ஆர். என்ற மனிதர் மேல் எனக்கு அவ்வளவாக ஈடுபாடு இல்லை. ஆனால் நாட்கள் செல்லச் செல்ல அந்த மனிதர் மாமனிதராக... 'எம்.ஜி.ஆர்.' என்ற மூன்றெழுத்து என்னுள்ளேயே கலந்ததை என்னால் தவிர்க்க முடியவில்லை. ஆயுளுக்கும் நிலைத்திருக்கிற போதைப் பொருளாக மாறிவிட்டார் என்பது நிஜம். இதில் எனக்கு ஏற்பட்ட அனுபவங்களை தனி புத்தகமாகவே எழுதலாம்.

இந்த நூல் இந்த அளவு சிறப்புடன் உருவாக ஆதாரமாக அமைந்து ஆதரவுக்கரம் நீட்டிய 'தேவி வார இதழ்' ஆசிரியர் திரு. பா. இராமச்சந்திர ஆதித்தன் அவர்களுக்கு பெரிதும் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன்.

பின்னணியில் இருந்து நல்ல ஆலோசனைகளை வழங்கி என்னை ஒழுங்கு படுத்திய 'தேவி' துணை ஆசிரியர் திரு. ஜேம்ஸ் அவர்களையும், 'தேவி' மணி அவர்களையும் என்றும் மறவேன்.

குறுகிய காலத்தில் 'எம்.ஜி.ஆரின் கதை' வெளிவர எனக்கு முன்னணியில் இருந்து உதவிய 'வளர் தொழில்' மாத இதழ் ஆசிரியர் திரு. க. ஜெயகிருஷ்ணன் அவர்களுக்கும் என் நன்றி.

எம்.ஜி.ஆரின் உடல் மறைந்தாலும், அவரது உயிராக வாழ்ந்து வரும், இன்னும் அவரை பூஜித்துக் கொண்டு இருக்கும் உண்மை அபிமானிகளுக்கு இந்நூலை சமர்ப்பிக்கிறேன்.

-எஸ். விஜயன்

(ராமகிருஷ்ணன்)

# மதிப்புரை

எல்லோருக்கும் வணக்கங்க!

நண்பர் விஜயனை நான் முதன்முதலா சந்திச்சு பேசியது 'நான் மகான் அல்ல' படப்பிடிப்பில் தாங்க! அப்புறம் '24 மணிநேரம்', 'காக்கிசட்டை' படப்பிடிப்பில், பின்னே அடிக்கடி பல முறை சந்திப்போங்க! அதிகம் பேசாத சுபாவங்க. ஆனா எழுதறதில, விமர்சனம் செய்யறதில, பழகினவங்க தானேன்னு பாரபட்சம் பார்க்காம எழுதற அவரோட போக்கு ரொம்ப புடிச்சதுங்க.

விஜயன் எழுதின 'எம்.ஜி.ஆர். கதை' யை படிச்சுப் பார்த்தேங்க. ஒரு கடவுளைப் போல ஜனங்க மதிச்ச ஒரு பெரிய மனுஷன் உயிரோட இருக்கறப்போ சரியான, தப்பான விஷயங்களை எழுதறது பெரிய விஷயமில்லீங்க. அவர் காலமானதுக்கப்புறம் குற்றங்குறையெல்லாம் சொல்றது நியாய மில்லீங்க. விஜயன் இதில எம்.ஜி.ஆரது நல்ல குணத்தை யெல்லாம் சொல்றதோட அல்லாம, அவரிட்டேயும் குறை இருந்துச்சுங்கறதை நேரிடையா சொல்லாம – குறை எப்படி வந்துச்சுங்கற காரண காரியங்களோட நியாயப்படுத்திச் சொல்லியிருக்காரு. அப்படித்தாங்க எழுதணும்.


தலைவர் எம்.ஜி.ஆரைத்தாங்க நான் பார்த்திருக்கேன். பழகியிருக்கேன். நடிகர் எம்.ஜி.ஆரை எனக்கு அறிமுக மில்லீங்க. ஒரு வேளை நடிகர் எம்.ஜி.ஆரோட பேசற, பழகற சந்தர்ப்பம் எனக்கு கிடைச்சிருந்ததுன்னு நெறைய விஷயம் அவரிட்ட இருந்து கத்துகிட்டிருப்பேன். சினிமாவிலேயும் புதுசு புதுசா உங்களுக்கு நடிச்சுக் காட்ட முடிஞ்சுருக்கு. இந்த ஏக்கம் எனக்குள் இருக்குங்க.

ஆனா அந்த ஏக்கத்தை விஜயன் 'எம்.ஜி.ஆர் கதை' யில் ஓரளவு போக்கியிருக்காருங்க. இதை படிக்கிறப்போ எம்.ஜி.ஆர் நாடக மன்றத்தோட பொங்கல் விழா கொண்டாடினது போல, தேர்தல் பிரச்சாரத்துக்கு கூடவே போனது போல, அவர் கூட ஷூட்டிங்கில் நடிச்சது போல, ....இப்படி எம்.ஜி.ஆர் கூடவே நானும் இருந்ததா விஜயன் எனக்குள்ள உணர்ச்சியை ஏற்படுத்தியிருக்காரு. எனக்கு வந்த உணர்ச்சி உங்களுக்கும் ஏற்படும்னு நினைக்கறேன்.

அன்புக்கு நன்றி

(சத்யராஜ்)





CHICAGO











'வல்லபாய் படேல்' படத்திறப்பு விழாவில் முதல்வர் எம்.ஜி.ஆர்., கவர்னர் பிரபுதாஸ் பட்வாரி, பிரதமர் மொரார்ஜிதேசாய், கேரள கவர்னர் ஜோதியம்மாள்.



'எங்க வீட்டுப் பிள்ளை' தெலுங்கு, இந்தி, தமிழ் மொழிப் படங்களின் கதாநாயகர்கள் என்.டி. ராமாராவ், திலீபகுமார், எம்.ஜி.ஆர்.



# மூச்சிருக்கும் மூன்றெழுத்து

உலகிலேயே திரைப்படத்தின் மூலமாக மக்களிடையே செல்வாக்கைப் பெற்று, அதை அரசியல் சக்தியாக மாற்றி ஆட்சி புரிந்தவர் எம்.ஜி.ஆரைப் போல எவரும் இருக்க முடியாது.

திரைப்படத் துறையில் அவரை ஒரு சகாப்தம் என்று சொல்லும் அதே நேரத்தில் அரசியலிலும் அவர், யாராலும் யூகிக்க முடியாத அதிசய மனிதராக விளங்கினார்.

சினிமா மூலம் மக்களுக்கு அறிமுகமான நாளிலிருந்து இன்று வரை எம்.ஜி.ஆரின் வாழ்க்கை கட்டங்கள் ஒரு சரித்திரமாகவே அமைந்து விட்டிருக்கின்றன. எம்.ஜி.ஆருடன் கருத்து மாறுபட்டவர்கள் கூட அவரது நல்ல இயல்புகளை உணர்ச்சி வசத்துடன் சொல்கிறார்கள்.

மொத்தத்தில் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பே 'மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும்;

அது முடிந்த பின்னாலும் பேச்சிருக்கும்' என்று 'தெய்வத்தாய்' படத்தில் எம்.ஜி.ஆர். பாடி நடித்ததை நிரூபிப்பதைப் போல அவரது வாழ்க்கை அமைந்து விட்டது.

இத்தனை சாதனை மனிதராக விளங்கிய எம்.ஜி.ஆர். பிறந்தது 1917-ம் ஆண்டு ஜனவரி மாதம் 17-ந் தேதி ரேவதி நட்சத்திரத்தில்.

எம்.ஜி.ஆருக்கு இரண்டு மூத்த சகோதரிகளும், இரண்டு மூத்த சகோதரர்களும் உண்டு.

முதலாவதாக பிறந்த சகோதரி பெயர் காமாட்சி. இரண்டாவதாக பிறந்த மூத்த சகோதரர் பெயர் பாலகிருஷ்ணன். மூன்றாவது சகோதரி சுமித்ரா. நான்காமவர்தான் சக்கரபாணி.

பாலகிருஷ்ணனும், சுமித்திராவும் இலங்கையில் இருக்கும்போதே இறந்து விட்டார்கள். எம்.ஜி.ஆருக்கு இரண்டு வயதானபோது மீண்டும் தாயகம் திரும்பினார்கள் பெற்றோர். நெருங்கிய உறவினர்கள் ஆதரிக்காத நிலையில் அப்பா கோபாலன் காலமானார். அதனால் தன் உறவினர் சிலர் ஏற்கனவே குடியிருந்த கும்பகோணம் நகருக்கு தாயார் சத்தியபாமா தன் குழந்தைகளோடு வந்தார்.

கும்பகோணத்தில் உறவினர்கள் வேலு நாயரும், மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் பின்பாட்டு பாடியவரான நாராயண நாயரும் சத்தியபாமா குடும்பத்துக்கு உதவியாக இருந்தார்கள். எம்.ஜி.ஆரும், சக்கரபாணியும் கும்பகோணத்தில் உள்ள ஆனையடி பள்ளியில் சேர்க்கப்பட்டார்கள். அங்கு எம்.ஜி.ஆர். மூன்றாவது வகுப்பு வரைதான் படிக்க முடிந்தது. அதற்கு மேல் படிக்க குடும்பத்தில் உள்ள வசதியின்மை இடம் கொடுக்கவில்லை.

பள்ளியில் படித்தபோது எம்.ஜி.ஆர். பள்ளியில் நடந்த 'லவகுசா' என்ற நாடகத்தில் லவனாக நடித்தார். இதுதான் எம்.ஜி.ஆர். நடித்த முதல் நாடகமும், முதல் வேடமும் ஆகும். அப்போது மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி நாடகக் குழு கும்பகோணத்தில் முகாமிட்டு இருந்தது. 'லவகுசா' நாடகத்தில் எம்.ஜி.ஆரின் நடிப்பைப் பார்த்த நாராயண நாயர், மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியாரிடம் எம்.ஜி.ஆரின் அழகிய தோற்றத்தையும், சுறுசுறுப்பையும் கூறி கம்பெனியில் சேர்த்துக் கொள்ள சிபாரிசு செய்தார்.

தன்னையும் சேர்த்துக் கொண்டால்தான் தம்பியை நடிக்க அனுமதிக்க முடியும் என்று சக்கரபாணி சொல்ல, இருவரும் நாடகக் குழுவில் சேர்க்கப்பட்டனர். ''படிக்க வேண்டிய வயதில் என் பிள்ளைகளை நடிக்க வைத்து பிழைக்கும் நிலைக்கு ஆளாகி விட்டேனே'' என்று எம்.ஜி.ஆரின் தாயார் கண் கலங்கினாராம்.

ஆரம்பத்தில் எம்.ஜி.ஆருக்கு கும்பலில் ஒரு வேஷம். வாரத்துக்கு நாலரை ரூபாய் சம்பளம். நகைச்சுவை நடிகர் 'காளி' என். ரத்தினம் சிபாரிசில் எம்.ஜி.ஆருக்கு நல்ல வேஷங்கள் கிடைத்தன. கம்பெனியில் சகோதரர்களின் நண்பர் பி.யூ. சின்னப்பா. சின்னப்பா ராஜபார்ட் ஆனதும் அவருக்கும் ஸ்திரீ பார்ட்டாக எம்.ஜி.ஆர். நடித்தார்.

நாடகக் குழுவில் சேர்ந்து எம்.ஜி.ஆர். நடித்த முதல் நாடகம் மகாபாரதம். நடித்த வேடம் அபிமன்யு. பதினைந்து வயதுக்குள்ளாக எம்.ஜி.ஆர். அந்த கம்பெனி நடத்திய 30 நாடகங்களுக்கு மேல் நடித்து புகழ் பெற்றார்.

இதற்கிடையே கும்பகோணத்தில் இருந்த அவருடைய குடும்பம் சென்னைக்கு வர நேர்ந்தது. சென்னை வால்டாக்ஸ் ரோட்டில் எம்.ஜி.ஆர். தன் குடும்பத்துடன் வசித்து ...ார். அங்கு இருக்கும் போதுதான் எம்.ஜி.ஆரின் மூத்த சகோதரரி காமாட்சி தனது பதினாறாம் வயதில் நோய்வாய்ப்பட்டு இறந்து போனார்.

சகோதரியின் மறைவு எம்.ஜி.ஆரை மிகவும் பாதித்தது. அதுமட்டுமல்ல, ஒரிஜினல்

பாய்ஸ் கம்பெனியார் நாடகங்களை சரிவர நடத்த முடியாத நிலையில் தத்தளித்ததால் எம்.ஜி.ஆர். வருமானமின்றி அவதிப்பட்டார்.

அப்போது வெற்றிகரமாக நடந்து கொண்டு இருந்த உறையூர் மொய்தீன் நாடகக் கம்பெனியில் சேர எம்.ஜி.ஆர்., சக்கரபாணி இருவருக்குமே அழைப்பு வந்தது. அழைப்பை இருவரும் ஏற்றுக் கொள்ள ஒரு காரணமும் உண்டு.

ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் எம்.ஜி.ஆருக்கு நல்ல மதிப்பு இருந்தபோது அவரது தொண்டை தகராறு செய்தது. மகரக்கட்டு ஏற்பட்டது. குரல் உடைந்தவர் இனிமையாக பாட முடியாது என்பதால் மதிப்பு குறையும் என்பதறிந்த எம்.ஜி.ஆர். தன் கவுரவத்தை இழக்க



எம்.ஜி.ஆர். சக்கரபாணி

விரும்பாமல் 1930-ல் விலகி, மொய்தீன் கம்பெனி குழுவுடன் ஸ்பெஷல் நாடகங்களில் நடிக்க பர்மாவின் தலைவர் ரங்கூனுக்கு புறப்பட்டார்.

ரங்கூனில் இருந்து திரும்பிய எம்.ஜி.ஆரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி முதலாளி மீண்டும் அழைத்தார். எம்.ஜி.ஆரும் சேர்ந்தார். தொண்டை உடைந்து போனதால் கதாநாயகன் வேஷங்களைத் தன்னால் சமாளித்துக் கொள்ள இயலாது என்று உணர்ந்த எம்.ஜி.ஆர். வீர விளையாட்டுக்களைக் கற்றுக் கொள்ளத் தொடங்கினார். கத்திச் சண்டை, கம்புச் சண்டை போன்ற வீர விளையாட்டுகளில் பயிற்சி பெற்றார். எம்.ஜி.ஆருக்கு மட்டுமின்றி நம்பியார், பி.யூ. சின்னப்பா ஆகியோருக்கும் இந்த பயிற்சிகளை அளித்த குரு 'காளி' என். ரத்தினம்.

இந்த சமயத்தில் தான் 'சதி லீலாவதி' படத்தில் நடிக்க முதலாளி எம். கந்தசாமி முதலியார் எம்.ஜி,ஆரை சிபாரிசு செய்து இன்ஸ்பெக்டர் வேடத்தில் நடிக்க வைத்தார்.

அதைத் தொடர்ந்து டி.எஸ். பாலையா கதாநாயகனாக நடித்த 'இரு சகோதரர்கள்' படத்தில் எம்.ஜி.ஆர். மட்டுமின்றி சக்கரபாணியும் நடித்தார். தொடர்ந்து எம்.ஜி.ஆருக்கு



'சீதா ஜனனம்' படத்தில்
எம்.ஜி.ஆர்.

தக்ஷயக்ஞம், வீரஜெகதீஷ், மாயமச்சீந்திரா, பிரகலாதன், அசோக்குமார், சீதா ஜனனம், தாசிப் பெண், அரிச்சந்திரா, பைத்தியக்காரன், மீரா, சாலிவாகனன், ஸ்ரீமுருகன் ஆகிய படங்களில் சிறு வேடங்களில் நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது.

'சாலிவாகனன்' படத்தின் கதாநாயகன் ரஞ்சன். அவருக்கு எதிரான விக்கிரமாதித்தன் வேடம் எம்.ஜி.ஆருக்கு. அவரது மந்திரி பட்டியாக சின்னப்பா தேவர் நடித்தார்.

ரஞ்சனுக்கும், எம்.ஜி.ஆருக்கும் கத்திச் சண்டை நடப்பதாக படப்பிடிப்பு. காட்சிப்படி ரஞ்சனின் கை ஓங்கியிருக்க வேண்டும். ஆனால் கேமரா ஓடிக் கொண்டு இருக்கையில் ரஞ்சனை விட எம்.ஜி.ஆரின் கத்திவீச்சு வேகமாக இருந்தது. ரஞ்சனால் எம்.ஜி.ஆருக்கு ஈடு கொடுக்க முடியவில்லை. இதனால் ஆத்திரமுற்ற ரஞ்சன், இயக்குநர் பி.என். ராவிடம் புகார் செய்தார்.

அதன் பின்னர் ரஞ்சனை விட குறைவான வேகத்தில் கத்தி வீசுமாறு எம்.ஜி.ஆருக்கு யோசனை சொல்லப்பட்டது. எம்.ஜி.ஆர் மனம் நொந்தார்.

''நம் உண்மையான திறமையை எப்படித்தான் வெளிப்படுத்துவது?'' என்று சின்னப்பா தேவரிடம் கூறி தன் வேதனையை வெளிப்படுத்திய போது, அவர், ''உங்கள் திறமையை உலகம் அறிந்து வியந்து பாராட்டும் நாள் வரத்தான் போகிறது. கலக்கம் அடையாதீர்கள்'' என்று சமாதானம் கூறினார்.

அப்போது சின்னப்பா தேவரும் சிறு, சிறு ஸ்டண்டு வேடங்களில் நடித்து முன்னேறிய நேரம். இருவரும் நெருக்கமான நண்பர்களாக இருந்தார்கள்.

அதன்பிறகு ஜுபிடர் பிக்சர்சில் மாத சம்பளத்துக்கு எம்.ஜி.ஆர். நடித்துக் கொண்டு இருந்தார். 'ராஜகுமாரி' என்ற படத்தில் பி.யூ. சின்னப்பா, டி.ஆர். ராஜகுமாரியை நடிக்க வைப்பதற்கு ஜுபிடர் பிக்சர்ஸார் திட்டமிட்டார்கள்.

குறைந்த பட்ஜெட்டில் படமெடுக்க யோசனை சொன்ன இயக்குநர் ஏ.எஸ்.ஏ. சாமி, ''ஸ்ரீமுருகன் படத்தில் எம்.ஜி.ஆரும், மாலதியும் பரமசிவன்- பார்வதியாக அற்புதமாக நடித்து இருக்கிறார்கள். பொருத்தமான ஜோடியாகவும் இருக்கிறார்கள். அவர்களையே



எம்.ஜி.ஆர்.,
சின்னப்பா தேவர்

கதாநாயகன்- கதாநாயகியாக நடிக்க வைத்து விடலாம்'' என்றார்.

செய்தியைக் கேள்விப்பட்ட எம்.ஜி.ஆரால் நம்ப முடியவில்லை. தயாரிப்பாளர் ஒப்புக் கொள்ள படப்பிடிப்பு துவங்கியது. படத்திற்கு வசனம் கலைஞர் மு. கருணாநிதி.

கதையில் ஒரு மகாராணி. அவளுக்கு ஒரு மெய்க் காப்பாளன். மெய்க்காப்பாளனைச் சண்டையிட்டுக் கதாநாயகன் வெற்றி பெற வேண்டும். பிரபல பயில்வான் ஒருவரை அந்த வேஷத்தில் நடிக்க ஏற்பாடு செய்து இருந்தார் ஸ்டண்ட் சோமு.

''உங்கள் கம்பெனியிலேயே அந்த வேஷத்துக்குப் பொருத்தமான நடிகர் இருக்கிறாரே, வெளியிலிருந்து ஏன் வரவழைக்க வேண்டும்?'' என்று சோமுவிடம் கேட்டார், எம்.ஜி.ஆர். எம்.ஜி.ஆர். குறிப்பிட்டது சின்னப்பா தேவரை!

''மாதச் சம்பளம் வாங்குகிற எக்ஸ்ட்ரா நடிகர் அவர். வேறு பிரபலமானவரைப் போடலாம்'' இது சாமி.

''சின்னப்பாவின் திறமை உங்களுக்குத் தெரியாது. எனக்குத் தெரியும். ரொம்ப நன்றாகச் சண்டை போடுவார். வளரும் நடிகருக்கு உதவியாகவும் இருக்கும். அவரையே போடலாம்'' என்றார் எம்.ஜி.ஆர்.

''நீங்களே கதாநாயகனாக நடிப்பது இதுதான் முதல் தடவை. உங்களுக்கு எதிராக சண்டை போடக் கூடியவர் பிரபலமானவராக இருந்தால்தானே நன்றாக இருக்கும். கமால் தீன் பயில்வான்னு பிரபலமான ஒருத்தர் இருக்கிறார். அவரையே போட்டுக்கலாம் என்றார், சோமு.

''என்னை மன்னிச்சிடுங்க. இந்த சண்டைக் காட்சியில் சின்னப்பாவையே போடுங்க. இல்லாட்டி இந்த சண்டைக் காட்சியே வேண்டாம்'' என்றார் எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆரின் விருப்பப்படியே இறுதியில் சின்னப்பா தேவர் நடித்தார். இப்படி தன் வாய்ப்பு நிச்சயமற்ற நிலையில்கூட தனது நண்பருக்காக உறுதியுடன் போராடி வாய்ப்பு பெற்றுத் தந்த மனம் எம்.ஜி.ஆருடையது.

'ராஜகுமாரி' படத்தின் வெற்றி அவரை மக்கள் மத்தியில் பிரபலமடையச் செய்தது. வீரத்தின் விளை நிலமான தமிழ்மக்களுக்கு எம்.ஜி.ஆரின் வீரமிக்க நடிப்பு நிறைந்த படங்கள் உற்சாகமூட்டின.

**வி.**என். ஜானகியை எம்.ஜி.ஆர். நேசிக்கத் தொடங்கியது. அவர் வாழ்க்கையின்



எம்.ஜி.ஆர்., வி.என். ஜானகி

திருப்பு முனையான கட்டமாகும். 'ராஜமுக்தி' படத்தில் வி.என். ஜானகி கதாநாயகி. தியாக ராஜ பாகவதர் கதாநாயகன். இது பாகவதரின் சொந்தப்படம்.

இப்படத்தில் எம்.ஜி.ஆர். இரண்டாவது கதாநாயகனாக நடித்தபோது ஜானகி இவர் மனதை வெகுவாக கவர்ந்து விட்டார்.

பச்சை நரம்புகள் பளிச்சென்று தெரியும் சிவந்த மேனியைக் கொண்ட எம்.ஜி.ஆரின் அழகு, அவரது மென்மையான குணம் ஜானகியை கவர, இருவரிடையே காதல் வளர்ந்தது.

பின்னர் 'மருதநாட்டு இளவரசி' படப்பிடிப்பில் இருவருமே தங்கள் காதலை உறுதி செய்து திருமணம் செய்ய முடிவு எடுத்தார்கள்.

ஜானகி கணபதிபட்டை விட்டுப் பிரிந்ததோடு, தான் நடித்து சம்பாதித்த சொத்துக்கள் அனைத்தையும், தனக்கு கார்டியனாக இருந்து கெடுபிடி செய்த மாமா நாராயணன் நாயரிடமே ஒப்படைத்து விட்டு விலகினார்.

எம்.ஜி.ஆருடன் தன் காதல் பற்றி ஜானகி தன் நெருங்கிய உறவினர்கள், தோழர்களிடம் கூறுகையில், ''எம்.ஜி.ஆரின் அழகும், அவரது தன்மையான குணமும்தான் என்னை அவர் மீது காதல் கொள்ளச் செய்தது'' என்று குறிப்பிடுவது உண்டாம்.

எம்.ஜி.ஆரின் இதே வாலிப அழகுதான் அவரது முதல் இரு திருமணங்களையும் நடத்தச் செய்து இருக்கிறது என்பதை கேரள மாநிலம் பாலக்காட்டிற்கு சென்றபோது அவர் குடும்பத்தாரிடம் நேரிடையாக அறிய முடிந்தது.



# முதல் மனைவி கோள்ளை. அழகி

எம்.ஜி.ஆரின் முதல் திருமணம் அவரது 22-வது வயதில் நிகழ்ந்து இருக்கிறது. எம்.ஜி.ஆரின் முதல் மனைவி பார்கவி என்கிற தங்கமணியும் எம்.ஜி.ஆரைப் போலவே அழகு மிக்கவர்.

'சிகப்பு என்றால் அவ்வளவு சிகப்பு' என்று தங்கமணியின் அழகைப் பற்றி வியந்து கூறுகிறார் பழம்பெரும் நடிகை சி.டி. ராஜகாந்தம். வால்டாக்ஸ் ரோட்டில் எம்.ஜி.ஆர். தங்கமணியுடன் குடித்தனம் செய்தபோது எதிர்வீட்டில் இருந்த சி.டி. ராஜகாந்தம் தங்கமணியை பார்த்து இருக்கிறாராம்!

பாலக்காடு நகரின் கிழக்கு ஓரத்தில் இருப்பது அம்பிகாபுரம், சேகரிபுரம் ஆகிய இடங்கள். இங்குதான் தங்கமணி பற்றிய விஷயங்களை தெரிந்து கொள்ள முடிந்தது.

வேஷு அம்மா என்பவர் எம்.ஜி.ஆரின் தாயார் சத்யபாமாவுக்கு உறவு வழியில் தங்கை முறையாவார். பாலக்காட்டில் எம்.ஜி.ஆர். குடும்பம் வசித்தபோது சில காலம் வேஷு அம்மா அடைக்கலம் கொடுத்து இருக்கிறார்.

எம்.ஜி.ஆர். அப்போது சினிமாவில் நடிக்கத் தொடங்கி இருந்த நேரம். வேஷு அம்மா தங்கமணியைப் பார்த்திருக்கிறார். 18 வயதில் தங்கமணியின் கொள்ளை அழகு வேஷு அம்மாவைக் கவர்ந்து இருக்கிறது.

''நமது அக்கா மகன் ராமச்சந்திரன் ராஜபார்ட் மாதிரி அழகாக இருக்கிறான். அவனுக்கு

இவள்தான் பொருத்தமான ஜோடி'' என்று மனதிற்குள் முடிவு செய்து, அப்போது பாலக்காட்டில் தன்னுடனேயே இருந்த சத்யபாமாவிடம் தனது எண்ணத்தை வெளிப்படுத்தி இருக்கிறார். சத்யபாமாவும் உடன்பட்டு தங்கமணியின் குடும்பத்தாரை சந்தித்து திருமணம் பேசி முடித்தார்கள்.

தங்கமணியின் தாயார் லட்சுமிகுட்டி, மலையாளியான இவர் விஸ்வநாத அய்யர் என்னும் தமிழ்நாட்டுக்காரரை மணந்து இருந்தார். வேற்று இனத்தில், மொழியில் திருமணம் செய்ததால் லட்சுமிகுட்டி தனது சேகரிபுரத்தில் இருந்த பூர்வீக வீட்டில் இருந்து வெளியேறி அம்பிகாபுரத்தில் தனிக் குடித்தனம் செய்ய வேண்டியதாயிற்று.


அந்த வீட்டிற்கு அருகில்தான் வேஷு அம்மா குடி இருந்தார். அருகில் இருந்ததால் எம்.ஜி.ஆர்- தங்கமணி திருமணம் பற்றி பேசி முடிக்க எளிதாயிற்று.

அந்த சமயத்தில் எம்.ஜி.ஆர். பூனாவில் 'மாய மச்சீந்திரா' என்ற படத்தின் படப்பிடிப்



எட்டு வயதில் தங்கமணி

தங்கமணி வீடு



பில் கலந்து கொண்டு இருந்தார். திருமணம் என்றால் தன் மகன் வரமாட்டான் என்று நினைத்த சத்யபாமா தனக்கு உடல்நிலை சரியில்லை என்று தந்தி கொடுத்தார்.

பதற்றத்துடன் பூனாவில் இருந்து வந்த எம்.ஜி.ஆருக்கு அம்பிகாபுரத்தில் தனக்கு திருமுணம் பேசி முடிவு செய்யப்பட்டது அறிந்து கோபம் வந்து விட்டது. ''இந்த வயதில் எனக்கு திருமணம் தேவையா? இப்போதுதான் சினிமாவில் நடிக்க ஆரம்பிக்கிறேன். வருமானமும் இல்லாத நிலையில் எதற்கு திருமணம்?'' என்று சத்தம் போட்டு இருக்கிறார்.

சத்யபாமாவும் ''இந்த பெண்ணை விட்டால் அப்புறம் உனக்கு நல்ல பெண் கிடைப்பாளா என்று சந்தேகம். அதனால்தான் முடிவு செய்தோம்'' என்று சமாதானப்படுத்தி தங்கமணியை பார்க்கச் செய்து இருக்கிறார். எம்.ஜி.ஆருக்கு மிகவும் பிடித்து விட்டது. ஆனாலும்



சதானந்தவதியுடன் தங்கை மீனாட்சி குட்டி

எம்.ஜி.ஆர். தன் தாயிடம் ஒரு நிபந்தனை விதித்தார்.

எம்.ஜி.ஆருக்கு அப்போது காங்கிரஸ் இயக்கத்தின் மீது தீவிரமான ஈடுபாடு இருந்தது. அதனால் கதர் ஆடைகளையே விரும்பி அணிந்து கொண்டு இருந்தார்.

'திருமணத்திற்கு கதர்தான் உடுத்துவேன்' என்பது எம்.ஜி.ஆர். நிபந்தனை. ஆனால் சத்யபாமாவுக்கோ அதில் விருப்பம் இல்லை. எம்.ஜி.ஆரின் அரசியல ஈடுபாட்டிலேயே அவருக்கு உடன்பாடில்லை. தவிர கேரள வழக்கப்படி திருமணத்தின்போது கதர் ஆடையெல்லாம் மணமகன் அணிவது இல்லை. ஆனால் எம்.ஜி.ஆரின் பிடிவாதமதான் வென்றது.

பூனாவில் இருந்து வந்த முதல் நாள் மாலை 7-00 மணிக்கு பெண் பார்த்த எம்.ஜி.ஆர்., மூன்றாவது நாளில் தங்கமணியின் கணவரானார். சேகரிபுரத்தில் இருந்த லட்சுமி குட்டியின் 'தெக்கின் கூற்றில்' என்ற பூர்வீக வீட்டில் எம்.ஜி.ஆர்- தங்கமணி திருமணம் நடந்தது.

வீட்டின் முன்பாக பந்தல் போட்டு எளிமையாக- ஆனால் விமரிசையாக நடந்த திருமணத்தின் போது புகைப்படம் எடுக்கப்படவில்லை. காரணம் தங்கமணி வீட்டில்

அதற்கு அனுமதியில்லை. படமெடுத்தால் ஆயுள் குறையும் என்பது அவர்கள் நம்பிக்கை.

கேரள வழக்கப்படி மணமகன் எம்.ஜி.ஆர்- தங்கமணிக்கு 'புடவை முறி' (தமிழ் வழக்கத்தில் 'கூரைப்புடவை' என்பார்களே அதுபோல்) வழங்கினார்.

'புடவை முறி' என்றால் மணமகள் அணிய பார்டர் போட்ட வேஷ்டி, ரவிக்கை, மேல் வேஷ்டி (நாம் துண்டு, முண்டு என்போம்) ஆகிய உடைகள் அடங்கியது. தவிர பெண் ணுக்கு எம்.ஜி.ஆர். திருமண சடங்காக (தாலிக்குப் பதிலாக) மோதிரமும் அணிவித்தார்.

எம்.ஜி.ஆர். தங்கமணியை சென்னைக்கு அழைத்து வந்தால் வீட்டில் வருமானம் போதாத நிலை. உடன் சக்கரபாணியின் குடும்பமும் வேறு. அவருக்கும் அதிக வருமானம் இல்லை.

இதனால் குடும்ப வாழ்விற்கு சிரம நிலையில் வேறு வழியின்றி எம்.ஜி.ஆர்- தங்கமணி



வி.என். ஜானகி, சதானந்தவதியுடன். (எம்.ஜி.ஆருக்கு கால் முறிந்து குணமாகிய போது எடுத்த படம்)

யின் நகைகளை விற்க வேண்டியதானது. இப்படி சுமார் இரண்டு வருடங்கள் ஓடி விட்டன. குழந்தையும் கிடையாது. தங்கமணிக்கு மணவாழ்க்கையின் சிரமங்களை தாங்க முடிய வில்லை. அதனால் தன் பெற்றோருக்கு கடிதம் எழுதி போட்டார்.

சென்னை சென்ற லட்சுமி குட்டி- விஸ்வநாத அய்யர் இருவரும் தங்கள் பெண்ணின் நிலை கண்டு கண்ணீர் விட்டனர். மருமகனின் வருமானம் இல்லாத நிலை கண்டும் அவர்க ளால் தாள முடியவில்லை. அதனால் தங்கமணியை தங்கள் ஊருக்கே அழைத்துச் செல்ல விரும்பினார்கள். எம்.ஜி.ஆர். மறுப்பு சொல்ல முடியாமல் தங்கமணியை அனுப்பி வைத் தார்.

சேகரிபுரம் வந்தால், தங்கமணியின் பெற்றோர் வீட்டிலும் வறுமை நிலை. தங்கமணி யின் தந்தை விஸ்வநாத அய்யரும் வேலை ஏதுமின்றி இருந்தார். விற்பதற்கும் எதுவு



சதானந்தவதியுடன் சக்கரபாணியின் மனைவி மீனாட்சி குட்டி, வி.என். ஜானகி- மூவரும் ஒரே மாதிரி உடையில்.

மில்லை.

சரியாக சாப்பிடாத தங்கமணி, சென்னையில் இருந்து வந்த 20-வது நாளில் தன் சின்னம்மா பாருக்குட்டி அம்மாவிடம் குடிக்க தண்ணீர் கேட்டு இருக்கிறார். தண்ணீரை குடித்த சிறிது நேரத்திலேயே தங்கமணிக்கு மாரடைப்பு ஏற்பட்டு, சின்னம்மா மடியிலேயே இறந்து போனார்.

18 வயதில் 1940- பங்குனியில் திருமணம் செய்த தங்கமணி- 1942- பங்குனியில் காலமானார். இத்தனைக்கும் எம்.ஜி.ஆரின் ரேவதி நட்சத்திரம், தங்கமணியின் பூரட்டாதி நட்சத்திரத்துடன் பொருந்தி இருந்ததால்தான் வேஷு அம்மா திருமண உடன்பாட்டிற்கே தயார் செய்தார்.

தங்கமணி இறந்த விவரம் தெரிவித்து எம்.ஜி.ஆருக்கு தந்தி கொடுக்கப்பட்டது. ஆனால், அப்போது எல்லாம் நினைத்த மாத்திரத்தில் வர முடியாதே. எம்.ஜி.ஆர். மூன்றாவது நாளில்தான் வர முடிந்தது.

பாலக்காடு ரெயில் நிலையத்தில் இருந்து ஜட்காவில் சேகரிபுரம் வந்த எம்.ஜி.ஆர். தன் மனைவி அதற்குள் புதைக்கப்பட்டது கண்டு மனமொடிந்து போனார்.

அழுதபடியே தங்கமணியின் முகத்தை கடைசியாக பார்க்க விரும்பி, புதைக்கப்பட்ட இடத்தை தோண்டச் சொல்லி கேட்டு இருக்கிறார். ஆனால், அதற்கு நகரசபையில் இடம் கொடுக்க மாட்டார்கள் என்று சொல்லி எம்.ஜி.ஆரை சமாதானம் செய்தார்கள்.

நாயர் குடும்பத்தில் இந்துமத ஆச்சாரப்படி பெண் இறந்து போகும் நேரத்தில், அவளது தாயார் உயிரோடு இருந்தால் பெண்ணை புதைத்து விடுவார்களாம். தாயார் காலமாகி இருந்தால் எரித்து விடுவார்களாம். லட்சுமிகுட்டி அப்போது உயிரோடு இருந்ததால் புதைத்து இருக்கிறார்கள்.

எம்.ஜி.ஆர். கவலையுடன் அன்று மாலையே அழுதபடி சென்னை திரும்பினார்.

தங்கமணி இறந்த 30-வது நாளில் சக்கரபாணியின் முதல் மனைவி நாணிக்குட்டி இறந்து விட்டார். நாணிக்குட்டிக்கு பிறந்தவர்கள் எம்.சி. ராமமூர்த்தி, திருமதி. மணி.

இவர்களில் ராமமூர்த்தி படத் தயாரிப்பாளர், டைரக்டர் கே. சங்கரின் பெண்ணை மணந்தவர். திருமதி. மணி, பம்பாயில் வசிப்பவர். கணவர் இறந்து விட்டார்.

நாணிக்குட்டியின் ஊர் பாலக்காட்டில் இருந்து பத்து மைல் தொலைவில் உள்ள கொடு வாயூருக்கு அடுத்த எத்தனூர்.

தங்கமணி மறைந்தாலும், அவரது குடும்பத்தாருடன் எம்.ஜி.ஆருக்கு தொடர்பு விட்டுப் போய் விடவில்லை. தங்கமணியின் தம்பி மணி என்கிற சேது மாதவன் (இவரும் பத்தாண்டுகளுக்கு முன் காலமாகி விட்டார்) அடிக்கடி சென்னை வந்து எம்.ஜி.ஆரை பார்த்து இருக்கிறார்.

மணியின் மனைவி கமலம்மாள் ராமாவரம் தோட்டத்திற்கு சென்று இரண்டு மாதம் தங்கிவிட்டு திரும்பி இருக்கிறார். மணியின் குடும்ப கஷ்டம் அறிந்து வீடு வாங்க, நிலம் வாங்க என்று எம்.ஜி.ஆர். ஆயிரக் கணக்கில் பண உதவி செய்து இருக்கிறார்.

மணி மகன் ரவீந்திரனுக்கு இரண்டு தையல் மிஷின்களும் ஆட்டோ ஒன்றும் வாங்கிக் கொடுத்து இருக்கிறார். ஆட்டோ எம்.ஜி.ஆர். பெயரிலேயே பாலக்காட்டில் ஓடியிருக்கிறது.



திருமணம் நடந்த எரகாட் இல்லம்.



எம்.ஜி.ஆர். கட்டிய சந்திரானந்த நிலையம்.

இத்தகைய உதவிகள் எதுவும் மணி குடும்பத்திற்கு பலன் அளிக்கவில்லை. வீண் செலவு செய்து எம்.ஜி.ஆரிடம் பெற்ற சொத்துக்களை எல்லாம் அழித்து விட்டார்கள். பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு மணி இறந்தபோது எம்.ஜி.ஆருக்கு தகவல் கொடுத்தும் பதிலேதும் இல்லை.

எம்.ஜி.ஆர். இறந்தது அறிந்து சென்னை சென்ற மணியின் மகன் ரவீந்திரனால் எம்.ஜி. ஆரின் உடலைப் பார்க்கக்கூட முடியவில்லை. தங்கமணி இறந்தபோது சேகரிபுரம் வந்த எம்.ஜி.ஆர்., அதற்குப் பின் மீண்டும் அங்கு வரவே இல்லையாம்.

இப்போது 'தெக்கின் கூற்று' வீடு பாகப்பிரிவினை காரணமாக விற்கப்பட்டு விட்டது. தங்கமணியின் குடும்பத்தார் வாடகை வீட்டில் இருக்கிறார்கள்.

முதல் மனைவி தங்கமணி மாரடைப்பால் இறந்து போனது எம்.ஜி.ஆரை மிகவும் பாதித்தது. அதனால் எம்.ஜி.ஆருக்கு இன்னொரு திருமணம் செய்து வைத்தால் சமாதான மாகி விடுவார் என்று நினைத்த சத்யபாமா மீண்டும் மகன்களுடன் பாலக்காட்டிற்கு சென் றார்.

பாலக்காட்டில் குஞ்சு கிருஷ்ணன் நாயர் என்ற கல்யாண தரகர் மூலம் பல இடங்களில் பெண் தேட, பாலக்காட்டில் இருந்து பத்து மைல் தொலைவில் உள்ள 'குழல் மன்னம்' என்ற இடத்தில் 'எரகாட்' குடும்பத்தில் பெண் கிடைப்பதாக இருந்தது.

எம்.ஜி.ஆர். தான் நடித்த 'சீதா ஜனனம்' என்ற படத்தின் புகைப்பட பிரதியொன்றை குஞ்சு கிருஷ்ணன் நாயர் மூலம் கொடுத்து அனுப்பினார். படத்தைப் பார்த்த பெண்ணின் (சதானந்தவதி) தாயார் மூகாம்பிகை அம்மாள் எம்.ஜி.ஆரை நேரில் பார்க்க விரும்பி, பாலக்காடு சென்றார். எம்.ஜி.ஆரும் தன் தாயார், அண்ணனுடன் குழல் மன்னம் சென்று பெண்ணைப் பார்த்து திருப்தி அடைந்தார்.

'எரகாட்' குடும்பம் என்பது குழல் மன்னம் பகுதியில் வசதியான குடும்பங்களில் ஒன்று. சதானந்தவதியின் பூர்வீக வீட்டிற்குத்தான் 'எரகாட்' என்று பெயர். இந்த வீட்டில்தான்

எம்.ஜி.ஆர். சதானந்தவதி திருமணம் நடந்தது.

சதானந்தவதியின் தந்தை கடுங்க நாயர். இவருக்கும் மனைவி மூகாம்பிகை அம்மாளுக்கும் சதானந்தவதி, மீனாட்சி குட்டி, நாராயணன் என்று மூன்று வாரிசுகள். நாராயணன் மூத்தவர். மீனாட்சி குட்டி, வீட்டில் கடைக்குட்டி.

இவர்களது பூர்வீக சொத்தாக 100 ஏக்கர் விவசாய நிலமுண்டு. எம்.ஜி.ஆர். குடும்பத்தை விட பல மடங்கு வசதி உடையவர்கள் சதானந்தவதி குடும்பத்தார்.

திருமணத்திற்கு முன் எம்.ஜி.ஆர். சதானந்தவதி இருவரின் ரேவதி- திருவாதிரை நட்சத்திரத்தைப் பார்த்தபோது ஜோதிடர் மூகாம்பிகை அம்மாளிடம், ''உங்கள் பெண்ணின் ராசிப்படி இதைவிட வசதியான குடும்பத்தில் மணமுடிக்க வாய்ப்புண்டு'' என்று கூறி இருக்கிறார்.

ஆனால் மூகாம்பிகை அம்மாளோ, தன் பெண்ணுக்கு எம்.ஜி.ஆரை விட அழகான கணவன் வர முடியாது என்று வீட்டில் உள்ளவர்களின் கருத்தையும் மீறி திருமணத்திற்கு ஒப்புதல் அளித்தார்.

பொதுவாக நாயர் குடும்பங்களில் பெண்கள்தான் நிர்வாகிகளாக இருப்பார்கள். நாயர் பெண்களை மணக்கும் ஆண்கள், நம் பகுதியில் 'வீட்டோடு மாப்பிள்ளை' என்பார்களே, அது போல் பெண்ணின் பூர்வீக வீட்டில் வசிப்பதுதான் அவர்களது சம்பிரதாயம்.

அதுதவிர, நாயர் குடும்பத்து பெண்கள் அக்காலத்தில் முதல் கணவரோடு வாழ விரும்பவில்லை என்றால் அவர்களை விலக்கி விட்டு வேறொரு ஆணை திருமணம் செய்து கொள்வதும் அவர்களுக்கு சகஜமான விஷயம்.

மற்றொன்று- நாயர் குடும்பத்தில் பிறக்கும் பிள்ளைக்கோ, பெண்ணுக்கோ பெயரின் முதல் எழுத்தாக குடும்பப் பெயரும் தாயாரது பெயரும்தான் இடம்பெறும். உதாரணத்திற்கு சதானந்தவதி 'எரகாட்' வீடு, தாயார் மூகாம்பிகை அம்மாள் சேர்ந்து இ.எம். சதானந்தவதி என்று அழைக்கப்பட்டார்.

அப்படிப்பட்ட குடும்பத்தில் மூகாம்பிகையின் விருப்பத்துக்கு எதிராக எழுந்த எதிர்ப்பு எடுபடவில்லை.

அக்காலத்திலேயே ஆறாம் வகுப்பு வரை படித்த சதானந்தவதி, எம்.ஜி.ஆரை கைபிடித்தபோது எம்.ஜி.ஆருக்கு வரதட்சணையாக 300 ரூபாய் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அப்போது சதானந்தவதிக்கு வயது 14. எம்.ஜி.ஆருக்கு 26 வயது.

1942 ஆனி 16-ம் நாள் சனிக்கிழமை அன்று திருமணம் நடந்தது. திருமணம் சம்பிரதாயமாக மணமக்கள் மாலை மட்டும் மாற்றிக் கொண்டார்கள்.

திருமணம் முடித்து சதானந்தவதி பத்து மாதம் தாய் வீட்டிலேயே இருந்தார். சென்னை வந்த எம்.ஜி.ஆர். வால்டாக்ஸ் ரோட்டில் 147-ம் எண் வீட்டை 25 ரூபாய் வாடகைக்கு ஏற்பாடு செய்து அதன்பின் சதானந்தவதியை அழைத்து வந்தார்.

இந்த வீட்டிற்கு சதானந்தவதி வந்த பின்புதான் எம்.ஜி.ஆர். தன் முதல் திருமணம் பற்றி கூறி இருக்கிறார். 15 வயது பெண்ணான சதானந்தவதிக்கு இது அதிர்ச்சியாக இருந்து இருக்கலாம். அது மட்டுமல்ல.

அப்போது தியாகராஜ பாகவதர் மற்றும் அப்போதிருந்த முன்னணி நடிகர்களைப் பற்றிய அந்தரங்க விஷயங்கள் பத்திரிகைகளில் வெளிவந்து கொண்டு இருந்தன.

அதை பக்கத்து வீடுகளில் உள்ள பெண்கள் படித்து விட்டு சதானந்தவதியிடமும் கூறி, ''உன் கணவரும் சினிமாவில்தானே இருக்கிறார். அவருக்கும் பிற பெண்கள்- நடிகையரி

டம் தொடர்பு இருக்கலாம். கவனமாக இரு'' என்று பயமுறுத்தி விட்டார்கள்.

மென்மையான சுபாவம் படைத்த சதானந்தவதியை இது பாதித்து காச நோயில் கொண்டு போய் அது வலுவடையவே, அப்போது மைலாப்பூர் லஸ்ஸில் காச நோய் நிபுணராக விளங்கிய வாசுதேவராவிடம் எம்.ஜி.ஆர். மனைவியை அழைத்துச் சென்று காட்டினார்.

அப்போதுதான் எம்.ஜி.ஆர். பிரதான வேடங்களில் நடிக்க துவங்கிய நேரம் என்றாலும், வருமானம் ஒன்றும் பெரிதாக சொல்லிக் கொள்ளும்படி இல்லை. ரிக்ஷா மூலம் மனைவியை டாக்டரிடம் அழைத்துச் சென்று இருக்கிறார்.

சென்னையிலேயே வாசுதேவராவ் ஒருவரிடம் மட்டுமே 'ஸ்டெப்டோமைசின்' என்ற வெளிநாட்டு ஊசி மருந்து உண்டு. அந்த ஊசி மருந்து மூலம் சதானந்தவதியை ஓரளவு குணமாக்கி விட்டார்கள். ஒவ்வொரு முறையும் டாக்டரிடம் சென்று வர எம்.ஜி.ஆர். 100 ரூபாய் வரை செலவிட்டு இருக்கிறார்.

வருமானத்திற்கு சிரமம் இருந்தாலும், மனைவியை குணப்படுத்துவதில் மிகுந்த அக்கறை காட்டியிருக்கிறார். தான் படப்பிடிப்புக்கு சென்ற சமயங்களில் அண்ணன் சக்கரபாணி மூலம் மனைவியை மருத்துவமனைக்கு அனுப்பி இருக்கிறார்.

இடையில் நோய் கடுமையானபோது குழல் மன்னத்திற்கு மனைவியை அனுப்ப அங்கு சதானந்தவதிக்கு நாட்டு வைத்தியம், ஆயுர்வேத சிகிச்சைகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டும் பயனில்லை.

பத்து மாதத்திற்குப் பின் எம்.ஜி.ஆர். சதானந்தவதியை சென்னைக்கு அழைத்துச் சென்ற பின்பே வாசுதேவராவ் பற்றி கேள்விப்பட்டு அவரிடம் அழைத்துப் போயிருக்கிறார்.

1950-ல் சதானந்தவதிக்கு வயிற்றில் ஒரு கோளாறு. அடிக்கடி வயிற்று வலியால் துடித்துக் கொண்டு இருந்தார். அப்போது பூந்தமல்லி நெடுஞ்சாலையில் இருந்த டாக்டர் மாதவனிடம் எம்.ஜி.ஆர். அழைத்துச் சென்று காட்டினார்.

சதானந்தவதியை பரிசோதித்தபோது வயிற்றில் உள்ள கர்ப்பப்பைக்கு வெளியே குடல் பகுதியில் நான்கு மாத சிசு வளர்ந்து இருப்பதைக் கண்டு பிடித்தார், மாதவன். அதை மேலும் வளர விட்டால் தாயின் உயிருக்கே ஆபத்து என்று கருதி ஆபரேஷன் மூலம் கருவை வெளியேற்றினார்.

இந்த காரணங்களால் சதானந்தவதி மேலும் நலிவுற்றார். அவருக்கு இருதய கோளாறும் ஏற்பட்டது. அதற்கு பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள பி.கே. கிருஷ்ணன் குட்டி சிகிச்சை அளித்து குணப்படுத்தினார்.

1947-ல் எம்.ஜி.ஆர். குடும்பம் அடையாறுக்குச் சென்றது. அங்கு 170 ரூபாய் வாடகையில் குடியிருந்தார்கள். அந்த வீட்டில் இருந்தபோது எம்.ஜி.ஆரின் தாயார் சத்யபாமா காலமானார்.

சில ஆண்டுகளில் எம்.ஜி.ஆர். புகழ்மிக்க நடிகராகி நிறைய சம்பாதித்தார். பணம் சேர்ந்ததும் இப்போதுள்ள லாயிட்ஸ் சாலையில் உள்ள 160-ம் எண் வீட்டை 40 ஆயிரம் ரூபாய் கொடுத்து வாங்கி புதுப்பித்து மேலும் சில மாற்றங்களைச் செய்து அண்ணன் சக்கரபாணியுடன் அந்த வீட்டில் குடிபுகுந்தார்.

பிறகு ராமாவரம் தோட்டத்தை கிருஷ்ணா பிக்சர்ஸ் லேனா செட்டியாரிடம் எம்.ஜி.ஆர். வாங்கினார்.

அங்கு சதானந்தவதியுடன் தனிக்குடித்தனம் செய்ய எம்.ஜி.ஆர். விரும்பியபோது,

சதானந்தவதி மறுத்து விட்டார். காரணம், சக்கரபாணியின் மனைவி மீனாட்சிகுட்டி, சதானந் தவதியிடம் மிகுந்த பாசம் காட்டியதுதான்.

மீனாட்சி குட்டியை விட்டுப் பிரிந்து தூரத்தில் இருக்க சதானந்தவதிக்கு விருப்பம் இல்லை. இறப்பதற்கு மூன்று வருடங்கள் முன் வரை சதானந்தவதி படுக்கையிலே இருக்கும ளவு நோய் அவரைத் தாக்கியது. அப்போது மீனாட்சி குட்டியின் அன்பும், பரிவும், கவனிப் பும் அவருக்கு இதமாக இருந்தது.

எம்.ஜி.ஆரும் படப்பிடிப்பு இல்லாத நாட்களில் மனைவியின் அருகிலேயே இருந்து கவனித்து இருக்கிறார். மனைவிக்கு பல் தேய்த்து விடுவது, குளிப்பாட்டுவது என் ...லவி தங்களிலும் உதவியாக இருந்திருக்கிறார்.

இருந்தும் 1962, பிப்ரவரி 25-ல் சதானந்தவதி காலமானார். அதற்கு மே... ...ாயிட்ஸ் சாலையில் இருக்க விருப்பம் இல்லாத எம்.ஜி.ஆர்., சதானந்தவதி இறந்து ஐந்தா... நாளிலேயே ராமாவரம் தோட்டத்திற்கு தன் வசிப்பிடத்தை மாற்றினார்.

சதானந்தவதி இறந்த பிப்ரவரி 25-ம் நாளை எம்.ஜி.ஆர். மிகவும் பாதிப்பாகக் கருது னார். அதனால் வருடந்தோறும் பிப்ரவரி 25-ல் எம்.ஜி.ஆர். மவுன விரதம் இருந்து வந்தார்.

சதானந்தவதியின் மரணத்துக்குப் பிறகு அந்தக் குடும்பத்து உறவு விட்டுப் போய் விடாமல் இருக்க வி.என். ஜானகியின் தம்பிக்கு சதானந்தவதியின் குடும்பத்திலேயே பெண் எடுத்தார்.

சதானந்தவதியின் பெரியம்மாவின் மகள் வயிற்றுப் பேத்தி சீதா தேவியை நாராயண னுக்கு மணம் முடித்து வைத்தார் எம்.ஜி.ஆர்.

சதானந்தவதி இறந்த 90-வது நாளில் அவரது நகைகள், உடைமைகளை எம்.ஜி.ஆர். குழல் மன்னம் எடுத்துச் சென்று சதானந்தவதியின் தங்கை மீனாட்சி குட்டியிடம் ஒப்படைத்து இருக்கிறார்.

ஆனால் நகைகளை வைத்துக் கொள்ள விரும்பாமல் மீனாட்சி குட்டியின் கணவர் விசுவநாத பணிக்கர், அதை திரும்ப எம்.ஜி.ஆரிடமே ஒப்படைத்து விட்டார்.

குழல் மன்னத்தில் சதானந்தவதிக்கென்று ஒரு வீடு இருக்க வேண்டுமென்றும் எம்.ஜி. ஆர். விரும்பினார். அதற்காக சதானந்தவதியின் அண்ணன் நாராயணன் (அவர் போலீஸ்கா ரராக பணியாற்றினார்) மூலம் பணம் கொடுத்தனுப்பினார்.

சதானந்தவதியின் பூர்வீக வீட்டிற்கு பின்புறமுள்ள நிலத்தில் வீடு எழுப்பும் நேரத்தில், வீடு இப்படித்தான் அமைய வேண்டுமென்று எம்.ஜி.ஆர். மாதிரி வடிவம் எல்லாம் போட் டுக் கொடுத்திருக்கிறார். அதன்படி வீடு கட்டப்பட்டிருக்கிறது. மரங்களில் பூ வேலைபாடு கள் எல்லாம் அமைக்கப்பட்டு அழகுற அமைந்து இருக்கிறது.

''நாடோடி மன்னன்'' வெற்றி விழா மதுரையில் கொண்டாடப்பட்டபோது அங்கு எம்.ஜி.ஆருக்கு தங்கவாள் கொடுக்கப்பட்டது. தங்கவாளோடு எம்.ஜி.ஆர். நேராக குழல் மன்னர் சென்றார்.

அங்கு மனைவிக்காக கட்டப்பட்ட வீட்டில் தனது உருவமுள்ள இரு படங்களை மாட்டும்படி சொல்லி வீட்டிற்கு 'சந்திரானந்த நிலையம்' என்று பெயர் சூட்டும்படி செய்தார். தன் பெயரில் உள்ள சந்திரனையும், சதானந்தவதி பெயரில் உள்ள ஆனந்தத்தையும் சேர்த்து 'சந்திரானந்த நிலையம்' என்று பெயர் வைத்தார்.

சதானந்தவதி இறந்த பின் நகைகளை ஒப்படைக்க எம்.ஜி.ஆர். அங்கு சென்றார். அதன் பின் எம்.ஜி.ஆர். குழல் மன்னம் சென்றது கடந்த 1985, மே 29-ல்தான்.



கார்த்திகேயனியம்மாவிடம் நலம் விசாரிக்கும் எம்.ஜி.ஆர்.



பூஜையறையில் சதானந்தவதியின் படம்.

பாலக்காட்டில் தன் வளர்ப்பு மகள் ராதாவின் (வி.என். ஜானகியின் சின்னம்மா மகள்) உறவினர் வீட்டுத் திருமணத்திற்காக எம்.ஜி.ஆர். குழல் மன்னம் சென்றார்.

எம்.ஜி.ஆர். அங்கு போனபோது நல்ல மழை சீசன். அதனால் காரை நிறுத்தி விட்டு மனைவி வி.என். ஜானகியுடன் சேற்றில் நடந்து சென்றார்.

'எரகாட்' வீட்டில் தனது திருமணம் நடந்த இடம், அங்கு மாட்டப்பட்டிருந்த தனது இளமைக்கால படங்களைசெயல்லாம் பார்வையிட்டார். கண்ணீர் மல்க அங்கிருந்த சதானந்தவதியின் பெரியம்மா பெண் (85 வயது கார்த்திகேயணி அம்மாவிடம்) நலம் விசாரித்திருக்கிறார்.

கார்த்திகேயணி அம்மா எம்.ஜி.ஆரிடம், ''எப்போ திரும்பவும் வருவே?'' என்று கேட்டதற்கு எம்.ஜி.ஆர். சைகையாலேயே இரண்டு விரலைக் காட்டி (இரண்டு வருடங்கள் கழித்து) வருவதாகச் சொன்னாராம்.

பின் அங்கிருந்த 'சந்திரானந்த நிலையம்' வீட்டை பார்வையிடச் சென்றபோது தூரத்திலேயே வீட்டு முகப்பைப் பார்த்து சில நொடி நின்று விட்டார். காரணம் எம்.ஜி.ஆர். சொன்ன பூ வேலைப்பாடு அமைப்பெல்லாம் காணாமல் போயிருந்ததுதான். நாளடைவில் மழையில் முகப்பு சேதம் அடைந்தது அவருக்குச் சொல்லப்பட்டது.

வீட்டினுள் நுழைந்ததும் சதானந்தவதியின் தங்கை மீனாட்சி குட்டியின் தலையில் கை வைத்து எம்.ஜி.ஆர். அழ, மீனாட்சி குட்டியும் அழ, சில நிமிடங்கள் இருவரும் துக்க மிகுதியில் பேச முடியாமல் மவுனமாக இருந்திருக்கிறார்கள்.

சதானந்தவதியுடன், தான் அங்கு சில நாட்கள் வசித்த சயன (படுக்கை) அறைக்குச் சென்றார். அங்கு எம்.ஜி.ஆர். சதானந்தவதி பயன்படுத்திய கட்டில், காட்சிப் பொருளாக

வைக்கப்பட்டிருந்தது. அதில் சுமார் 20 நிமிடம் அமர்ந்தபடி கண்ணீர் வடித்திருக்கிறார்.

'சந்திரானந்த நிலையம்' வீட்டில் இப்போது அவரது தங்கை மீனாட்சி குட்டி - கணவர் விஸ்வநாத பணிக்கர் (இருவருக்கும் 1946-ல் திருமணம் நடைபெற்றதாம்) தங்களது நான்கு வாரிசுகளுடன் (2 மகன், 2 மகள்) வசிக்கிறார்கள்.

சதானந்தவதியின் மறைவிற்குப் பின் குழல் மன்னத்துடன் எம்.ஜி.ஆருக்கு தொடர்பில்லையென்றாலும் சென்னையில் இருந்த சதானந்தவதியின் அண்ணன் நாராயணன் நாயர் எம்.ஜி.ஆரை அடிக்கடி தோட்டம் சென்று சந்தித்து இருக்கிறார். அவரது குடும்பத்திற்கும் எம்.ஜி.ஆர். உதவி செய்திருக்கிறார். மூத்த மகன் சக்திதரன் திருமணத்தையும் எம்.ஜி.ஆர்-வி.என். ஜானகி, சக்கரபாணியுடன் வந்து நடத்தி வைத்தாராம்.

## எம்.ஜி.ஆர். பிறந்த ஊரில்...



'ராஜகுமாரி'யில் எம்.ஜி.ஆருக்கு மேக்கப் டெஸ்ட்.

பாலக்காடு மாவட்டம் கொல்லங்கோடு அருகே (பாலக்காட்டிலிருந்து 20 கி.மீ. தொலைவில்) இருப்பது வடவனூர். எம்.ஜி.ஆர். அன்னையின் சொந்த ஊரான அங்கு சென்றபோது எதிர்பாராத சில ஆச்சர்யமான தகவல்களை அறிய நேர்ந்தது. அப்போது சில உண்மைகளும் புரிந்தது.

'தமிழ்நாட்டுக்கு வெளியே பிறந்தவரானாலும், எம்.ஜி.ஆர். தமிழ்நாட்டிலேயே வளர்ந்து அரசியல், கலை இரண்டு துறைகளிலும் தமிழ் மக்களுடன் இரண்டறக் கலந்தார்.

அவரை தமிழக மக்களும், தங்கள் குடும்பத்தில் ஒரு உடன்பிறப்பாகவே ஏற்றுக் கொண்டு விட்டதால்தான் கலை, அரசியல் இரண்டு துறைகளிலும் அவர் உயர்ந்த நிலையை எட்டிப் பிடிக்க முடிந்தது.

எம்.ஜி.ஆர். கண்டியில் பிறந்தார் என்று பல வாழ்க்கை குறிப்புகளில் திரும்பத் திரும்ப கூறப்பட்ட போதிலும் வடவனூரில் உள்ள 'மருதூர் வீடு'தான் சக்கரபாணி, எம்.ஜி.ஆர். இருவருக்கும் பிறப்பிடம் என்று அப்பகுதியில் உள்ள மக்கள் திட்டவட்டமாக கூறினார்கள்.

ஓட்டப் பாலம் அருகில் 'நல்லே பள்ளி' என்ற ஊரைச் சேர்ந்த கோபாலமேனனின் பெயர் மருதூர் கோபாலமேனன் அல்ல. 'மெனகத் கோபாலமேனன்' என்பதாகும். 'மென கத்' என்பது கோபாலமேனனின் குடும்பப் பெயர்.


எம்.ஜி.ஆரின் அன்னை சத்யபாமா என்பது தமிழக மக்களுக்கு பரிச்சயமானன பெயர். ஆனால் வடவனூரில் அவர் 'கண்ணச்சி அம்மா' என்றே அழைக்கப்பட்டு இருக்கி றார். அதுதான் அவரது பூர்வீகப் பெயரும் கூட.

எம்.ஜி.ஆர். தனது தமிழ் உணர்வு காரணமாகவோ, பெயர் முதலெழுத்தில் கேரள பாணியில் தாய்வழி பெயரை முதல் எழுத்தாக கொள்ளாமல் தமிழர் பாணியில் தந்தையின் பெயர் எழுத்தை (மெனகத் கோபால் மேனன் அதாவது எம்.ஜி. என்று) சேர்த்துக் கொண்டி ருக்கிறார்.

கோபால மேனன் பாலக்காட்டில் பணியாற்றியவர். அவர் சத்யபாமாவைக் கைப்பிடித் தபோது சத்யபாமாவின் பூர்வீக சொத்து பிரிவினைக்கு வந்தது.



தாயார் சத்யபாமா



தந்தை கோபாலகிருஷ்ணன்

பெரிய மருதூர் வீட்டை (மலையாளத்தில் 'வலிய மருதூர் வீடு' என்றழைக்கிறார்கள்) நிர்வகிக்க முடியாத சத்யபாமா சில காலம் வடவனூரை விட்டு பாலக்காடு சென்று பின் அங்கிருந்து இலங்கைக்கு சென்று இருக்கிறார். இலங்கையிலும் சில வருடங்கள் வசித்த பின் மீண்டும் பாலக்காடு வாசம். அங்குதான் கோபால மேனன் மறைவு நிகழ்ந்திருக்கிறது.

அதன்பின் பாலக்காட்டிலுள்ள சத்யபாமாவின் உறவினர் வேலு நாயர் அந்தக் குடும்பத்திற்கு கார்டியன் போலிருந்து கும்பகோணத்திற்கு இடம் பெயரச் செய்து பின் சென்னை வால்டாக்ஸ் சாலையில் எம்.ஜி.ஆர். குடும்பத்தோடு உதவியாக இருந்திருக்கிறார். இவையெல்லாம் எம்.ஜி.ஆர். குடும்பம் பற்றி வடவனூரில் சொல்லப்பட்ட தகவல்கள்.

கொல்லங்கோடு, பாலக்காடு ஆகிய இடங்களில் நடந்த 'தசாவதாரம்' நாடகத்தில் சக்கரபாணி ராமராகவும், எம்.ஜி.ஆர். லட்சுமணனாகவும் நடித்திருப்பதை வடவனூர் வாசிகள் ஆர்வத்தோடு போய் பார்த்து இருக்கிறார்கள்.

வடவனூரில் பலசரக்கு கடை வைத்து இருக்கும் வாசுதேவ மேனன் (80 வயது) எம்.ஜி.ஆரின் இளமைக்கால நண்பராக சில நாட்கள் அனுபவம் பெற்றிருக்கிறார்.

அவர் எம்.ஜி.ஆர். பற்றி சொன்ன தகவல்.

''அப்போது தியாகராஜ பாகவதர் நடித்த 'சத்திய சீலன்' படம் கொல்லங்கோட்டில் திரையிடப்பட்டு இருந்தது. 'அந்தப் படத்தில் நானும் நடித்து இருக்கிறேன். வாருங்கள் பார்க்கப் போகலாம்' என்று எம்.ஜி.ஆர். என்னையும் அழைத்தார். எங்களுடன் நாராயணன் நாயர் என்பவரும் சேர்ந்துக் கொண்டார்.

மூவருக்கும் எம்.ஜி.ஆர். வெற்றிலை பாக்கு வாங்கித் தர, அதை மென்று கொண்டே தியேட்டருக்கு சென்றோம். அப்போது வாகன வசதிகள் எதுவும் இல்லாத காலம். அதனால் மூன்று மைல் தூரமுள்ள தியேட்டருக்கு நடந்தே சென்று படம் பார்த்து விட்டு நடந்தே வீடு திரும்பினோம்.

மீண்டும் இரண்டு வருடங்களுக்குப் பின் எம்.ஜி.ஆரைப் பார்த்தேன். அதற்கப்புறம் நான் அவரை பார்க்கவே இல்லை'' என்றார், வாசுதேவ மேனன்.

வடவனூரில் தங்களுக்கென்று சொந்தமான வீடு இல்லையென்ற நினைப்பு எம்.ஜி.ஆருக்கு நீண்ட காலமாக உண்டு. அதனால் சுமார் 35 வருடங்களுக்கு முன் கவுண்டத்தரா என்ற இடத்தில் உறவினர் ஒருவரிடம் இருந்து பழைய வீடொன்றை 2,500 ரூபாய்க்கு எம்.ஜி.ஆர். வாங்கியிருக்கிறார்.

வீட்டை புதுப்பித்ததுடன் அங்குள்ள கிணற்றின் பக்கவாட்டு சுவரில் 'சத்ய விலாஸ்' என்று மலையாளத்தில் பெயர் பொறிக்கச் செய்திருக்கிறார்.

'சத்யவிலாஸ்' வீட்டை பள்ளிக்கூடமாக மாற்ற வேண்டும் என்று எம்.ஜி.ஆர். விரும்பியிருக்கிறார். அதை தன்னிடம் கூறியிருப்பதாக நண்பர் வாசுதேவ மேனன் சொன்னார்.

இப்போது 'சத்யவிலாஸ்' வீட்டில் அரசு ஊழியர் ஒருவர் குடியிருக்கிறார். வாடகை ரூபாய் தாலுகா அலுவலகத்தில் கட்டப்படுகிறதாம்.

ஆரம்பத்தில் சவ்ரத் தொழிலாளி ஒருவர் குடியிருக்க விரும்பி, அதற்காக சென்னையில் எம்.ஜி.ஆரை சந்தித்து அனுமதி பெற்று வந்தாராம்.

மொத்தத்தில் இந்த வீடு எம்.ஜி.ஆர். குடும்பத்திற்குப் பயன்படவில்லை. அவரது நோக்கமும் நிறைவேறாமல் போய் விட்டது. 25 வருடங்களுக்கு முன் எம்.ஜி. சக்கரபாணி வடவனூர் வந்து சத்யவிலாஸ் வீட்டை பார்த்துச் சென்றாராம்.

வடவனூரில் உள்ள எம்.ஜி.ஆரது தாயார் சத்யபாமாவின் பூர்வீக வீடான 'வலிய



எம்.ஜி.ஆர். பிறந்த மருதூர் இல்லம்



எம்.ஜி.ஆர். விலைக்கு வாங்கிய வீடு. கிணற்றுச் சுவரில் 'சத்யவிலாஸ்' என்று மலையா ளத்தில் பொறிக்கப் பட்ட பெயர்.

மருதூர் வீடு' மிகுந்த அமைதியோடு இருக்கிறது.

செட்டி நாட்டு பகுதிகளில் காணப்படும் பிரம்மாண்டமான வீட்டைப் போலிருக்கிறது மருதூர் இல்லம். முற்றத்தில் கிழக்கு பார்த்தாற்போல் நாகராஜா கோவில் ஒன்று உள்ளது. இங்கு எம்.ஜி.ஆர். குடும்ப வம்சா வழியினர் காலை- மாலை இரு வேளைகளிலும் பூஜை செய்கிறார்கள்.

வீட்டின் கட்டுமானம், உள் அமைப்பைக் கணக்கிட்டால் 200 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டதாக இப்போது அங்கு வசிப்பவர்கள் கூறுகிறார்கள். வீட்டிற்குள் அம்மன் பீடம் உள்ள பூஜையறை உள்ளது. பீடத்தில் குத்துவிளக்கொன்று இருக்கிறது.

வீட்டின் முகப்பில் ஓடு வேய்ந்த நீண்ட திண்ணை இருக்கிறது. அதே அளவில் பின்புறமும் இருந்ததாம். ஆனால் நாளடைவில் பின்புற பகுதி இற்றுப் போய் இடிக்கும்படி ஆனதால், பின்புறம் மொட்டையாக இருக்கிறது.

எம்.ஜி.ஆர். மனது வைத்திருந்தால் மருதூர் வீட்டை சீரமைத்திருக்கலாம் என்று அந்த வீட்டில் உள்ளவர்கள் கருதுகிறார்கள். மருதூர் வீட்டில் இருந்து எம்.ஜி.ஆரை பார்க்கச் சென்றவர்களும் சில இடையூறுகளால் அவரை சந்திக்க முடியாமல் போய் விட்டது என்று குறைபட்டு கொள்கிறார்கள் 'மருதூர் வீடு' வாசிகள்.

எம்.ஜி.ஆர். அந்த வீட்டுக்கு கடைசியாக வந்தது 1963-ல் தானாம். அண்ணன் சக்கரபாணியுடன் வந்தவர் உடனே திரும்பி விட்டாராம். மற்றபடி இந்த வீட்டோடு அவர்களுக்கு எந்தவித தொடர்பும் இல்லையாம்.

மருதூர் வீட்டில் இப்போது இருப்பவர்கள் எம்.ஜி.ஆரின் தாயார் சத்யபாமாவின் அண்ணன் (பரங்கோட மேனன்) மகள் வயிற்று பேத்தி கமலாதேவியும், அவரது கணவர் சிவசங்கரமேனனும்.

மற்றும் சத்யபாமாவின் தங்கை மகள் குஞ்சுலட்சுமி, இவர்களுடன் கமலாதேவியின்



'ஸ்ரீ முருகன்' படத்தில் மாலதியுடன் எம்.ஜி.ஆரின் ருத்ர தாண்டவம்.



மகள் ரமாதேவி, ரமாதேவியின் கணவர் சிவன், அவர்களது குழந்தை- கமலாதேவியின் சகோதரிகள் ராதாதேவி, பார்வதி ஆகியோரும் இருக்கிறார்கள்.

சிவசங்கர மேனன் அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்று வீட்டிலேயே இருக்கிறார். வீடுதான் பெரிதாக இருக்கிறதே தவிர, வருமானமும், வாழ்க்கையும் எளிமையாகத்தான் இருக்கிறது.

மருதூர் குடும்பத்திற்கு பூர்வீக குலதெய்வமான கோவில் ஒன்று உண்டு. பாலக்காட்டில் இருந்து 8 கி.மீ. தொலைவில் பொள்ளாச்சி சாலையில் 'பாரா குன்னாச்சி' என்ற இடத்தில் 'மாம்புள்ளிக்காவு' என்ற பூர்வீக அம்மன் கோவில் ஒனன்று இருக்கிறது.

பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். பிறந்த ஊரான வடவனூரில் எம்.ஜி.ஆரின் வாழ்க்கை கதைக்கான உண்மை நிகழ்ச்சிகளை தொடர்ந்து திரட்டியபோது பல தகவல்கள் கிடைத்தன.

எம்.ஜி.ஆரின் தந்தை பெயர் கோபால் (மேனன் அல்ல) பணிக்கர் என்றும், கதகளி நடிப்புக்காக வடவனூர் வந்தவர் என்றும், சத்யபாமாவின் வீடான மருதூர் வீட்டில் சொல் லப்பட்டது.

எம்.ஜி.ஆரின் தாயார் சத்யபாமாவின் உடன்பிறந்தவர் நான்கு பேர்களாம். அ[illegible] பெயர் சோனு அம்மா, சகோதரர்கள் பெயர் கருணாகரன் மேனன், கண்ணன் மேன[illegible] நாராயண மேனன்.

நாயர் வகுப்பில் பணிக்கர் என்பது ஒரு பிரிவு. [illegible] வகையில் சத்யபாமாவுக்கும், கோபாலனுக்கும் காதல் ஏற்பட்டு திருமணம் செய்ய முடிவு எடுத்தபோது மருதூர் வீட்டில் எதிர்ப்பு கிளம்பியிருக்கிறது. எதிர்ப்பையும் மீறி இருவரும் இணைந்து இருக்கிறார்கள்.

இதன் விளைவு மருதூர் வீட்டில் சத்யபாமாவுக்கு யாருடைய ஆதரவும் இல்லை.

தங்கள் இனத்தை விட்டு வேற்று இனப்பிரிவில் திருமணம் செய்து கொண்டால் அந்த வீட்டிற்குள்ளேயே ஒதுக்கி வைத்து விடுவார்களாம்.

அதன்படி சமையலறைக்குச் செல்ல முடியவில்லை. அது மட்டுமா, பூஜை அறை, கிணற்றுப் பக்கம் இப்படி எங்கும் செல்ல முடியாமல் சுதந்திரமற்று இருக்க வேண்டியதா யிற்று.

சக்கரபாணி, எம்.ஜி.ஆர்., இவர்களது தங்கை தங்கம் என்று வரிசையாகக் குழந்தைகள் பிறந்தபின் அந்த வீட்டு நிலை இன்னும் மோசமானது.

மருதூர் வீடு, அதனைச் சார்ந்த சொத்துக்கள் பிரிவினை செய்யப்பட்டபோது, வீட்டில் ஒரு சிறு இடம் மட்டுமே சத்யபாமாவுக்கு சொந்தமாக வந்தது. அதைப் பற்றி மனம் குமுறி வடவனூரில் தனக்கு அறிமுகமானவர்களிடம் எல்லாம் சொல்லி வருந்தி இருக்கிறார், சத்யபாமா.

இந்த தகவலைச் சொன்னவர், அவர்களை அறிந்த வாசுதேவ மேனன்.

அதன்பின் பிழைப்பிற்காக பாலக்காடு, இலங்கை சென்று தாயகம் திரும்பியபோது கும்பகோணம் சென்றிருக்கிறார். அங்குதான் எம்.ஜி.ஆர்., சக்கரபாணியின் பள்ளிப்படிப்பு நிகழ்ந்திருக்கிறது.

பின்னர் எம்.ஜி.ஆர். எந்த சந்தர்ப்பத்தில் வடவனூர் வந்ததாலும் தன் மாமா நாராயண மேனன் வீட்டிலேயே தங்கி இருக்கிறார். சக்கரபாணியும் அப்படியே.

சுமார் 40 வருடங்களுக்கு முன் எம்.ஜி.ஆர். வடவனூரில் மருதூர் வீடு சென்றபோது, அங்குள்ள அவரது உறவினர்கள் 'ஸ்ரீ முருகன் படத்தில் நீ சிவன் போல் பிரமாதமாக ஆடியிருக்கிறாய். அதைப் போல் எங்கள் முன் இப்போது ஆடிக் காட்டேன்' என்றபோது எம்.ஜி.ஆர். சில தாண்டவ நடனம் ஆடி காட்டினாராம்.

எம்.ஜி.ஆரை விட சக்கரபாணி வடவனூருக்கு அதிகம் வந்து போயிருக்கிறாராம். அப்படி ஒருமுறை வந்தபோது நாராயண மேனன் வீட்டில் தங்கி இருக்கிறார்.



பள்ளியில் பதிவு செய்யப்பட்ட தன் பெயரை பார்க்கிறார் எம்.ஜி.ஆர். பின்புறம் இருப்பவர் ஆதிமூலம்.

---

சொந்த ஊர் மீது எம்.ஜி.ஆருக்கு வெறுப்பு ஏற்பட ஒரு காரணம் உண்டு. ஒரு சமயம் எம்.ஜி.ஆர்., சக்கரபாணி இருவருமே வடவனூர் சென்றபோது (அப்போது இருவருமே சினிமாவில் நடித்து பிரபலமாகியிருந்த நேரம்) வீட்டிலிருந்த, ஊரிலிருந்த சின்னஞ்சிறுவர் கள் எல்லாம், ''அட, நம்ம எம்.ஜி.ஆர்., சக்கரபாணி வர்றாங்க'' என்று உற்சாகமாக குரல் எழுப்பி இருக்கிறார்கள்.

ஆனால் அங்குள்ள பெரியவர்கள் எல்லாம், ''ஆமா, இந்த கூத்தாடி பசங்களுக்கு வேற வேலை இல்லை'' என்று அவர்களது காதுபடவே சொல்ல இருவரும் மனம் நொந்து போனார்களாம். குறிப்பாக அவர்களது செய்கை எம்.ஜி.ஆர். மனதை முள்ளாய் தைத்திருக் கிறது. இதற்கு பதிலடியாய் இன்னொரு சம்பவம் நடந்திருக்கிறது.

எம்.ஜி.ஆர். சினிமாவில் பெரிய நடிகராக வசதியடைந்த நேரம். வடவனூரைச் சேர்ந்த வர்கள் சென்னை சென்று எம்.ஜி.ஆரைச் சந்தித்து இருக்கிறார்கள்.

''நம்ம ஊரில் நம் வகுப்பின் சார்பாக ''மகிளசபா' கட்டிடமொன்று கட்டவிருக்கிறோம். அதற்கு நீங்கள் நிதி உதவி செய்ய வேண்டும்'' என்று கேட்டிருக்கிறார்கள்.

அதற்கு எம்.ஜி.ஆர். ''தனிப்பட்ட முறையில் ஒரு இனத்திற்காக கட்டிடம் கட்ட நான் பண உதவி செய்ய முடியாது. எல்லோருக்கும் பொதுவாக ஒரு கட்டிடம் எழுப்புங்கள். அதற்கு என் தாயார் பெயரை வைத்தால் பண உதவி செய்யத் தயார்' என்று கூறி இருக்கிறார். அதை ஒப்புக் கொள்ளாமல் வடவனூர் வாசிகள் திரும்பி விட்டார்கள்.

எம்.ஜி.ஆர்., சக்கரபாணி இருவரும் படித்தது கும்பகோணத்தில் உள்ள ஆனையடி நகராட்சி புள்ளியில். அன்றைக்கு பள்ளியானது கூரைக் கட்டிடத்துடன் இருந்ததாம்.

எதிரே காயான் குளம். அந்த இடம் இப்போது காந்தி பார்க்காக மாறி விட்டது. பள்ளி

இருந்த இடம் கிளப்பாகி இருக்கிறது. இப்போது உள்ள பள்ளி பழைய இடத்தில் இருந்து சற்று இடம் பெயர்ந்து இருக்கிறது.

அந்த இடம் இப்போது கும்பகோணத்தில் 'நாகேஸ்வரம் வடக்கு வீதி' என அழைக்கப் படுகிறது. முன்பிருந்தது அடுக்கு மாடி கடைகளாக மாறி விட்டன.

கும்பகோணத்தில் எம்.ஜி.ஆர். குடும்பம் இருந்தபோது அவர்களுக்கு உதவியாக இருந்தவர் மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் பின்னணி பாடும் நாராயணன் நாயர்.

ஆனையடி பள்ளியில் எம்.ஜி.ஆரையும்; சக்கரபாணியையும் சேர்த்தது அவர்தானாம். பள்ளியில் படிக்கும்போது எம்.ஜி.ஆர். மேல் சட்டை, இடுப்பில் (துண்டு போல்) சிறு வேஷ்டி, தோளில் சிறு துண்டு அணிந்து நடந்து செல்வதை பார்க்கவே கண்கொள்ளாக் காட்சியாக இருக்குமாம்.

எம்.ஜி.ஆருக்கு படிப்பில் இருந்த ஆர்வம் போல விளையாட்டிலும் அதிக ஆர்வம் உண்டாம். அவருக்கு பிடித்தமான இனிப்பு சவ் மிட்டாய். எம்.ஜி.ஆரிடம் காசில்லாத போது வசதி படைத்த பள்ளித் தோழர்கள் வாங்கித் தந்திருக்கிறார்களாம்.

பள்ளியில் எம்.ஜி.ஆரின் தோழர்களில் தீனன், சுவாமிநாதன் ஆகியோர் குறிப்பிடத் தகுந்தவர்கள். படித்த நேரம் போக இருவருடனும் கும்பகோணத்தைச் சுற்றி வந்ததாக அந்த காலத்தில் பார்த்த சில பெரியவர்கள் கூறுகிறார்கள்.

கும்பகோணத்தில் அசேன், உசேன் என்று இரட்டையர் குச்சி சண்டை, அடிதடி என எல்லா வகை சண்டையும் போடுவார்கள். அதைப் பார்க்க எம்.ஜி.ஆர். மிகுந்த ஆர்வம் காட்டுவாராம்.

சுவாமிநாதன் அடிக்கடி எம்.ஜி.ஆரை அழைத்துச் சென்று 'அசேன்- உசேன்' சண்டையைப் பார்த்து மகிழ்வார்களாம்.

பள்ளியில் நடந்த 'லவகுசா' நாடகத்தில் எம்.ஜி.ஆரும் நடித்து இருக்கிறார்.

இந்த நாடகம்தான் நாராயண நாயர் மூலம் எம்.ஜி.ஆரை மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் சேர்க்கச் செய்தது.

கும்பகோணத்தில் நாடகங்கள் நடந்தபோது 'சந்திரகாந்தா' என்ற நாடகம் பார்த்த கோவில் குடை வியாபாரம் செய்யும் தண்டாயுதபாணி பிள்ளை (80 வயதை எட்டியவர்) அந்த நிகழ்ச்சியை நினைவு கூர்ந்தார்.

'சந்திரகாந்தா' நாடகத்தில் பண்டார சந்நிதியாக விகடன் பக்கிரிசாமி நடித்தார். 'முனி சாமி' என்ற வேடத்தில் நடித்தவர் காளி என். ரத்தினம்.

பண்டார சந்நதிக்கு பல சாதிகளில், மொழிகளில் ஆசை நாயகியர் உண்டு. அந்த ஆசை நாயகியரில் ஆங்கிலேயே பெண்ணும் உண்டு. ஆங்கிலேயப் பெண்ணாக அழகு காட்டி நடித்தவர் எம்.ஜி.ஆர்.தான். அந்த வேடத்தில் எம்.ஜி.ஆருக்கு வசனமெல்லாம் இல்லை என்று கூறினார்.

மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி கும்பகோணத்தை விட்டு இடம் பெயர்ந்தபோது எம்.ஜி.ஆர்., சக்கரபாணியும் உடன் சென்றார்கள்.

அதற்குப் பின் எம்.ஜி.ஆர். கும்பகோணத்திற்கு வந்தது 'தேர்த்திருவிழா' படப்பிடிப் பின் போதுதான். பொதுவாக எம்.ஜி.ஆர். வெளியூர் சென்றால் வசதி படைத்த செல்வந்தர் வீடுகளில் தங்குவதில்லை.

ஆனால் கும்பகோணத்தில் பெயர் பெற்ற டி.எஸ்.ஆர். குடும்பத்தினரின் கெஸ்ட் ஹவுசில் பல நடிக- நடிகையர் வந்து தங்கி இருக்கிறார்கள்.




எம்.ஜி.ஆர். படித்த பள்ளி

தேர்த்திருவிழா படத்தின் தயாரிபபாளர் சின்னப்பா தேவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க எம்.ஜி.ஆர்., டி.எஸ்.ஆர். வீட்டிலேயே படப்பிடிப்பு நடந்த நாட்களில் தங்கியிருக்கிறார். வீட்டின் முன்புறம் உள்ள ஒரு அறை அவருக்கு ஒதுக்கப்பட்டு இருந்தது.

படப்பிடிப்பு முடிந்து வந்தாரானால் வெளியில் எங்கும் சென்றதில்லை, யாருடனும் பேச்சு இல்லை. வீட்டிலேயே மேக்- அப் போட்டு, காலையில் படப்பிடிப்பு வேனில் ஏறி கும்பகோணத்தில் இருந்து 20 கி.மீ. தொலைவில் உள்ள கொள்ளிடக்கரையில் நடக்கும் படப்பிடிப்பில் கலந்து கொள்வார். டி.எஸ்.ஆரின் மகன் குமார் எம்.ஜி.ஆரின் வசதிகளை கவனித்திருக்கிறார்.

குமாரின் தந்தை இறந்தது செவ்வாயன்று. அதனால் ஒவ்வொரு வாரமும் செவ்வாய்க் கிழமை குமார் தன் தந்தையின் அறையில் விசேஷ பூஜை செய்வதோடு, சிலருக்கு உணவளிக்கவும் ஏற்பாடு செய்வாராம். அப்படி ஒரு நாளில் பூஜை நடந்தபோது எம்.ஜி.ஆரும் (படப்பிடிப்பிற்காக மேக்கப்போடு தயாராக இருந்தவர்) கலந்து கொண்டிருக்கிறார்.

அப்போது எம்.ஜி.ஆர். குமாரிடம் ''என் தந்தையார் இறந்தது செவ்வாயன்று. அன்று நான் விரதமிருப்பேன்'' என்று கூறியிருக்கிறார். இந்த தகவலைச் சொன்னவர் அப்போது டி.எஸ்.ஆர். குடும்ப புரோகிதராக இருந்த சடகோபாச்சாரியார்.

கும்பகோணத்தை விட்டுப் போனாலும் எம்.ஜி.ஆருடன் படித்தவர்களில் தொடர்ந்து அவருடன் தொடர்பு வைத்து இருந்தவர் தீனன். அவருக்கு எம்.ஜி.ஆர். பல வகையிலும் உதவி செய்திருக்கிறார். ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்த தீனனுக்கு நிதி திரட்டுவதற்காக கும்பகோணத்தில் எம்.ஜி.ஆர். 'அட்வகேட் அமரன்' 'இன்பக்கனவு' ஆகிய நாடகங்களை நடத்தி இருக்கிறார்.

அப்போது கும்பகோணத்தில் புனித அன்னை மருத்துவமனை எதிரில் இருந்தது தீனனின் குடிசை. அந்த குடிசைக்கு எம்.ஜி.ஆர். சென்று விரும்பிச் சாப்பிட்டிருக்கிறார். எம்.ஜி.ஆருக்கு பிடிக்கும் என்பதற்காக நெத்திலி கருவாடு சமைத்துக் கொடுத்து இருக்கிறார்

கள், தீனன் வீட்டில்.

எம்.ஜி.ஆர். தமிழக முதல்வரான பினன் ஆனையடி பள்ளியில் அவரது உருவப்படத்தினை முனுஆதி திறந்து வைத்தார்.

30-10-1977-ல் தஞ்சை மாவட்ட பட்டதாரி மாநாடு கும்பகோணத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொள்ள முதல்வர் எம்.ஜி.ஆர். வந்திருந்தார். அப்போது நேரில் சென்று ஆனையடி பள்ளியை சுற்றிப் பார்த்தவர் பள்ளிப் பதிவேட்டில் தனது பெயர், தான் பள்ளியில் சேர்க்கப்பட்ட மற்ற விவரங்களை பார்த்தார்.

எம்.ஜி.ஆரின் பள்ளி சீரியல் எண். 100 என்றும், சக்கரபாணியின் எண் 113 என்றும் இருந்ததாக எம்.ஜி.ஆரின் பள்ளித் தோழர் சுவாமிநாதனின் மகன் ஆதிமூலம் (இவர் கும்பகோணம் நகர அ.தி.மு.க.வில் முக்கிய பொறுப்பாளராக இருக்கிறார்) எம்.ஜி.ஆருடன் உடனிருந்து கவனித்ததாக குறிப்பிட்டார்.

பள்ளி பதிவேட்டில் எம்.ஜி.ஆரின் பெயர் ஜி. ராமச்சந்திரன் என்றும், தந்தை பெயர் கோபாலமேனன் - பெரிய தெரு (வியாபாரம்) என்றும், எம்.ஜி.ஆர். பிறந்த தேதியாக 25-5-1916 என்றும், வகுப்பு: மலையாளி என்றும் குறிப்பிட்டு இருந்ததாம்.

எம்.ஜி.ஆர். பள்ளியில் சேர்ந்த தேதி 7-12-1922. முதல் வகுப்பு 'அ' பிரிவில், பள்ளியை விட்டு வெளியேறியது நான்காம் வகுப்பு தொடங்கிய சில நாட்களில் 27-7-1925 என்றும் உள்ளதாம்.

ஆனையடி பள்ளிக்கு எம்.ஜி.ஆர். வந்தபோது, தனது பள்ளித் தோழருக்கு பிடிக்கும் என்பதற்காக சாமிநாதன் நிறைய இனிப்புகளை வாங்கி பொட்டலம் கட்டி எடுத்துச் சென்றிருக்கிறார். சுவாமிநாதனைக் கண்டதும் எம்.ஜி.ஆர். கட்டிப்பிடித்துக் கொண்டாராம். அவர் கொடுத்த இனிப்புகளையும் சுவைத்து மகிழ்ந்து இருக்கிறார்.

அப்போது முன்னாள் காங்கிரஸ் எம்.எல்.ஏ. காசிராமன் ''இந்த பள்ளிக்கு உங்கள் பெயரை வைக்கச் சொல்லப் போகிறோம்'' என்றபோது, எம்.ஜி.ஆர். கூடாது என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டாராம்.

''என் தந்தை சுவாமிநாதன் சில ஆண்டுகளுக்கு முன் காலமானார். அந்த விஷயத்தை நாங்கள் எம்.ஜி.ஆருக்கு தெரியபடுத்த எண்ணியிருந்த நேரத்தில், எம்.ஜி.ஆரிடம் இருந்து அனுதாப தந்தியே வந்து விட்டது, எங்களுக்கு மிகுந்த ஆச்சரியம்'' என்று கூறினார் சுவாமிநாதனின் மகன் ஆதிமூலம்.

---

## நடித்த படங்களில் பிடித்தது !

*என் எண்ணப்படி அமைந்த படங்கள் 'பெற்றால் தான் பிள்ளையா?', 'என் தங்கை'. குறிப்பாக 'பெற்றால் தான் பிள்ளையா'வில் நான் போட்ட வேஷம் ரொம்பவும் கவர்ந்தது.*

*நான் பெற்ற பிள்ளைகளுக்கு மட்டும்தான் நான் பாதுகாப்பா இருப்பேன்னு அந்த வேஷம் சொல்லலே. நான் யாரோ பெத்த பிள்ளை. ஆனால் எல்லாப் பிள்ளைகளையுமே வளர்க்கக் கடமைப்பட்டவன் என்ற நல்ல கருத்தைச் சொன்ன பாத்திரம் அது.*

**-எம்.ஜி.ஆர்.**



# பள்ளித் தோழனுடன்...

கும்பகோணம் ஆனையடி பள்ளியில் எம்.ஜி.ஆருடன் படித்தவர்களில் ஒருவரான 'தீனன்' என்ற தீனதயாளு நாயுடு சென்னை பெரம்பூருக்கு அருகில் தன் மனைவி, மக்களுடன் இருக்கிறார்.

80 வயதாகும் இவர் கடந்த சில ஆண்டுகளாக தன் நண்பர் எம்.ஜி.ஆர். போல நினைவிழந்த நிலையில், உடல் செயலற்று சரிவரப் பேச முடியாமல் இருந்தவர் இப்போது ஓரளவு குணமடைந்து இருக்கிறார். எம்.ஜி.ஆருடன் தான் பழகிய அந்தக் கால நினைவுகளை அசை போடுவதில் சற்று சிரமப்பட்டார். ஒவ்வொரு விஷயத்தையும் யோசித்து, யோசித்து சொன்னார்.

" 6-ம் வகுப்பு வரை உள்ள ஆனையடி பள்ளியில் நான் 5-வது படிக்கையில் எம்.ஜி.ஆர். 3-வது படித்தார்.

உச்சிப் பிள்ளையார் கோவில் தெருவில் எங்கள் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில்தான் எம்.ஜி.ஆர். குடும்பமும் வசித்து வந்தது.

அரியலூரில் என் பெற்றோர் இருக்க, கும்பகோணத்தில் பிள்ளைச் செல்வம் இல்லாத என் மாமாவின் வீட்டில் தங்கியிருந்து படித்து வந்தேன். என் மீது மாமாவுக்கு தனி அன்பு.

எம்.ஜி.ஆர்., சக்கரபாணி இருவரும் எங்கள் வீட்டிற்கு காலையில் வந்து விடுவார்கள்.

நாங்கள் மூவரும் பள்ளிக்குச் செல்வோம். படித்த நேரம் போக விளையாட்டுக்களில் எங்களுக்கு அதிக ஆர்வம். தெருவில் கிட்டி விளையாடுவது மற்றும் பல விளையாட்டுக ளில் பங்கு கொள்வோம்.

சாரங்கபாணி கோவில் கோபுரத்தில் ஏறி அங்கு உட்கார்ந்து நேரம் போவதே தெரியா மல் விளையாடுவோம்.

எம்.ஜி.ஆரின் குடும்பத்துக்கு அவர் மாமா வேலு நாயர் என்பவர் கும்பகோணத்தில் கார்டியனைப் போலிருந்தார். அவர் நாடகங்களுக்கு ஸ்கிரீன் இழுக்கும் வேலையை செய்து கொண்டிருந்தார். அதில் வந்த வருமானத்தில்தான் எம்.ஜி.ஆர்., அவரது தாயார் சத்ய பாமா, ஒரு சகோதரி, சக்கரபாணி ஆகியோர் வாழ்க்கையை நடத்த வேண்டி இருந்தது.

பல நாட்கள் வீட்டில் உணவில்லாத நிலை. அப்போது எல்லாம் எம்.ஜி.ஆர்., சக்கர பாணி இருவரையும் என் வீட்டிற்கு அழைத்துச் சென்று விடுவேன். நான் அவர்களுக்கு உதவுவதில் என் மாமா எந்த தடையும் சொல்வதில்லை.

'அசேன்- உசேன்' என்ற சகோதரர்களின் குஸ்தி மற்றும் வீர விளையாட்டுகளைப் பார்த்து எங்களுக்கும் அதுபோல் செய்ய ஆசை பிறந்தது.

'அசேன்- உசேனிடம்' எங்கள் விருப்பத்தைச் சொல்ல, சிறுவர்களான எங்களது ஆசையை அவர்கள் நிராகரிக்கவில்லை. அவர்களிடம் கற்ற வித்தைகளை நானும், எம்.ஜி. ஆரும் பரீட்சித்து பார்த்துக் கொள்வோம். ஒரு சமயம் என் கை ஓங்கினால் மற்றொரு சமயம் எம்.ஜி.ஆர். கை ஓங்கியிருக்கும்.

இப்போது கும்பகோணத்தில் ராஜா டாக்கீஸ் இருக்கும் இடம் முன்பு அரண்மனைத் தோட்டமாக இருந்தது. அங்கு 'மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி' முகாமிட்டு நாடகம் நடத்தி கொண்டு இருந்தார்கள். ஒரு நாள் விட்டு ஒரு நாள் நாடகம் நடக்கும். நாடகம் நடக்காத ஒரு நாளில் ஆனையடி ஸ்கூல் சார்பில் 'லவகுசா' நாடகம் நடந்தது.

நான் சீதையாகவும், எம்.ஜி.ஆர். லவனாகவும், கருப்பையா என்ற மாணவர் குசனாக வும் நடித்தோம்.


அப்போது பாய்ஸ் கம்பெனி இரண்டு பிரிவாக இருந்தது. ஒன்று சச்சிதானந்தம் பிள்ளையாலும், மற்றொன்று ஜெகநாதய்யராலும் நடத்தப்பட்டது.

எம்.ஜி.ஆர்., சக்கரபாணி இருவரும் 'லவகுசா' மூலம் சச்சிதானந்தம் நடத்தும் மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் சேர்க்கப்பட்டார்கள். சேர்த்தது அங்கு பின்னணி பாடும் நாராயணன் நாயர்.

இவர் கும்பகோணம் வந்தபோது எம்.ஜி.ஆர். இவரை தனது மற்றொரு மாமன் என்று அறிந்து கொண்டார். அந்த வகையில் நாராயணன் நாயரின் துணையும் எம்.ஜி.ஆர்., சக்கரபாணி இருவருக்கும் இருந்தது.

அவர்கள் நாடகத்தில் சேர்ந்த அதே நேரத்தில் பாலமீன ரஞ்சனி சபாவில் அங்கு நடித்துக் கொண்டு இருந்த சாரங்கபாணியும், யதார்த்தம் பொன்னுசாமி பிள்ளையும் (இவர் பின்னாளில் சிவாஜிகணேசனுக்கு குருவாக இருந்தவர்) என்னை என் மாமா மூலம் சேரும் படி செய்தார்கள்.

நானும், நாடகக் குழுவுடன் சென்னை வந்து விட்டேன். ஒரு வருடம் சென்னையில் நடந்த நாடகங்களில் நடித்துக் கொண்டு இருந்தபோது, என் பெற்றோர் விஷயம் அறிந்து என்னைத் தேடி வந்து விட்டார்கள். எனது ஐந்து வருட ஒப்பந்தத்தை ரத்து செய்து மீண்டும் கும்பகோணம் அழைத்துச் சென்றார்கள்.



இன்றைய தீனன்



எம்.ஜி.ஆருடன் தீனன்

''இவனை ஏன் நாடகத்தில் சேர்த்து கெடுக்கிறாய்?'' என்று என் மாமாவிடம் சண்டை போட்டு, மீண்டும் என் படிப்பைத் தொடரச் செய்தார்கள். டவுன்ஹால் ஸ்கூலில் ஒரு வருடம் மட்டும் படித்தேன். நடிப்பு ஆசையால் அதற்கு மேல் படிப்பில் எனக்கு நாட்டம் செல்ல வில்லை. வாய்ப்பு கிடைத்த நாடகங்களில் நடித்தேன். அப்புறம் நானே நாடகக் குழு நடத்தி தஞ்சை மாவட்டம் முழுவதும் சென்று நாடகங்கள் நடத்தினேன்.

அந்த இளம் வயதில் எனக்கு காங்கிரஸ் இயக்கத்தில் ஈடுபாடும், சுதந்திரப் போராட்ட உணர்வும் ஏற்பட்டது. உப்பு சத்தியாகிரகத்திலும் ஈடுபட்டு சிறை சென்றேன்.

இந்த கால கட்டங்களில் ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் நடிக்கப் போன எம்.ஜி.ஆர்., சக்கரபாணி இருவரும் கும்பகோணத்திற்கோ, தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் நடக்கும் நாடகங்களில் நடித்தாலோ என்னைத் தேடி வந்து விடுவார்கள். எங்களது சந்திப்பு ஏதேனும் ஒரு வகையில் தொடர்ந்து கொண்டே இருந்தது.

சென்னையில் நாடகக் குழு தங்கிவிட்டபோது நான் சென்னைக்கும் சென்று எம்.ஜி. ஆரை சந்தித்து இருக்கிறேன்.

எம்.ஜி.ஆர். சினிமாவில் நடிக்க ஆரம்பித்த பின் எனக்கு அதிக தொடர்பில்லை. நான் ஊரில் எங்களுக்குச் சொந்தமான நிலங்களை எல்லாம் விற்று கட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தேன். வேறு வேலையும் செய்யத் தோன்றவில்லை. தெரியவு மில்லை. கிட்டத்தட்ட நாடோடியைப் போலிருந்த நிலையில் எனக்குத் திருமணமும் நடந் தது.

எம்.ஜி.ஆர். சினிமாவில் கதாநாயகனாக நடிக்க ஆரம்பித்து சற்று வசதியடைந்த நிலையில் இப்போது லாயிட்ஸ் சாலையில் சக்கரபாணி குடும்பம் இருக்கும் வீடு, கோடம் பாக்கத்தில் தன் தாயார் பெயரில் 28 ஏக்கர் நிலம் (அது இப்போது சத்யா தோட்டம் என்றழைக்கப்படுகிறது) ஆகியன வாங்கினார். வாங்கியவர் நேராக கும்பகோணத்திற்கு

என்னைத் தேடி வந்தார்.

''எனது சொத்துக்களை கவனிப்பதற்கு நம்பிக்கைக்கு உரியவர்கள் யாருமில்லை. உங்களுக்கும் இங்கு சரியான வருமான வாய்ப்பு இல்லை. நீங்கள் இங்கு ஏன் கஷ்டப்படுகி றீர்கள்? என்னோடு வந்து விடுங்கள், உங்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்து கொடுக்கிறேன். உங்களுக்காக ஒரு படமும் செய்து கொடுக்கிறேன்' என்று கூறி என்னை சென்னைக்கு அழைத்து வந்தார்.

சென்னை வந்த பின் விருகம்பாக்கத்தில் எம்.ஜி.ஆர். வாங்கி இருந்த நிலத்தை தோட்ட மாக மாற்றும்படி சொன்னார்.

தோட்டம் ஏற்படுத்தி, அதில் தங்குவதற்கு வீடுகளையும் கட்டினேன். எல்லாம் முடிந்த பின் அதன் முழு நிர்வாகமும் என்னிடமே இருக்கும்படி செய்தார். அங்கு எம்.ஜி.ஆர். சம்பந்தப்பட்ட படப்பிடிப்புகளும் நடந்தன. அதனால் என்னிடம் ஆயிரக்கணக்கில் பணம் புழங்கிக் கொண்டு இருக்கும்.

என்ன வரவு, என்ன செலவு என்பதையெல்லாம் எம்.ஜி.ஆர். என்னிடம் கேட்ப தில்லை. நானும் அந்த பணத்தை தொட்டதில்லை. என் தேவைக்கான செலவு, கும்பகோணத் தில் உள்ள என் குடும்பத்திற்கான தேவை எல்லாவற்றையும் எம்.ஜி.ஆர். கவனித்துக் கொண்டார்.

இப்போது ராமாவரம் தோட்டமிருக்கும் நிலத்தை (மதுரை வீரன், ராஜா தேசிங்கு, படங்களை தயாரித்த) கிருஷ்ணா பிக்சர்ஸ் லேனா செட்டியாரிடம் எம்.ஜி.ஆர். பெற்ற பின் அதை சீரமைக்கும் பணியை நானே மேற்கொண்டேன். அந்த இடம் முன்பு கிறிஸ்துவர்களுக் கான கல்லறை தோட்டமாக இருந்தது. அதனால் அந்த இடத்தை யாரும் பயன்படுத்தக் கூடாது என்று அந்தப் பகுதி வாழ்மக்கள் கோர்ட்டுக்குப் போக, கோர்ட்டு விவகாரம் எம்.ஜி.ஆருக்கு சாதகமாகவே அமைந்தது. அதன்பின் நாங்கள் தோட்டம் மற்றும் கட்டிடம் எழுப்ப, நிலத்தை தோண்டியபோது மனித எலும்பு கூடுகளாக வெளியே வந்தன. அதை எல்லாம் அப்புறப்படுத்திய பின்பே அந்த இடத்தை அழகுபடுத்த முடிந்தது.

எம்.ஜி.ஆரின் விருப்பத்தின் பேரில் அங்கு ஒரு நீச்சல் குளமும் நிறுவப்பட்டது. எம்.ஜி.ஆருக்கு நீந்துவதிலும் மிகுந்த விருப்பமுண்டு. காலையில் உடற்பயிற்சி செய்த பின் எம்.ஜி.ஆர். நீச்சல் குளத்தில் நீண்ட நேரம் இருப்பார். டைவ் அடிப்பது மற்றும் பல்வேறு வகையான நீச்சல் கலைகளில் எம்.ஜி.ஆர். அத்துப்படியாக இருந்தார்.

இதற்கிடையில் கும்பகோணம் மற்றும் திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் எம்.ஜி.ஆர். தன் நாடகக் குழுவுடன் 'அட்வகேட் அமரன்', 'இன்பக்கனவு', 'சுமைதாங்கி' ஆகிய நாடகங் களை நடத்தும்போது என்னையும் அழைத்துச் செல்வார்.

கும்பகோணத்தில் நடந்த நாடகங்களில் ஒன்றை எனக்காக நடத்தி நிதி திரட்டினார். அதில் வந்த ஐயாயிரம் ரூபாயை அப்படியே என்னிடம் தந்து விட்டார். இதுபோல் இன்னும் சில ஊர்களில் நாடகம் நடத்தி நிதி திரட்டிக் கொடுத்து இருக்கிறார்.

அப்போதெல்லாம் கும்பகோணத்திற்கு எம்.ஜி.ஆர். வந்தால் எங்கள் வீட்டிற்கு வந்து தான் சாப்பிடுவார். அவருக்கு கருவாடு என்றால் மிகுந்த இஷ்டம். சாப்பாடு இல்லாமல் வெறும் கருவாடாகவே ஒரு கை பார்த்து விடுவார்.

எங்கள் வீட்டிற்கு அருகில் பயணிகள் விடுதி உண்டு. கும்பகோணம் வரும் முக்கிய அரசியல் தலைவர்கள் எல்லாம் அங்குதான் தங்குவார்கள். எம்.ஜி.ஆர். மட்டுமின்றி, அண்ணா, கருணாநிதி, காமராஜர் போன்ற தலைவர்கள் எல்லாம் என் வீட்டிற்கு வந்து

உணவருந்தியிருக்கிறார்கள்.

பின்னர் என் குடும்பத்தாரை சென்னைக்கே அழைத்து வந்து விட்டேன். தங்கசாலையில் அவர்களை குடி வைத்து விட்டு, நான் சக்கரபாணி வீட்டிலேயே இருப்பேன். மாதத்தில் ஒரு நாள் வீட்டிற்கு வருவேன். அப்படி இருந்தபோது எம்.ஜி.ஆர். எனக்காக ஒரு படம் செய்து தர முனைந்தார்.

''தாய் மகளுக்கு கட்டிய தாலி'' என்ற படத்தினை உருவாக்கிய ஆர்.ஆர். சந்திரனையும், என்னையும் பங்குதாரராக்கி, 'கேரளகன்னி' என்ற பெயரில் ஒரு படத்தை துவக்கினார். எம்.ஜி.ஆருக்கு அதில் ஜோடி சரோஜாதேவி. பூஜை போட்ட அன்று படப்பிடிப்பு நடந்தது. அவ்வளவுதான்.

சீர்காழியில் 'இன்பக்கனவு' நாடகம் நடந்தபோது குண்டுமணியைத் தூக்கி கீழே போடுகையில் எம்.ஜி.ஆர். கால் முறிந்து விட, அதற்கு சிகிச்சை அளித்து குணமாகும் வரை கூடவே இருந்தேன்.

குணமான பின் சின்னப்பா தேவர் தொடர்ச்சியாக ஐந்தாறு படங்களில் எம்.ஜி.ஆரை ஒப்பந்தம் செய்து கொண்டார். அதனால் 'கேரள கன்னி'யில் நடிக்க எம்.ஜி.ஆரால் முடியவில்லை. சில வருடங்களில் ஆர்.ஆர். சந்திரனும் காலமாகி விட்டார்.

சத்யா தோட்டத்திலேயே எனக்கொரு வீடும் தருவதாகச் சொன்னார் எம்.ஜி.ஆர். அது தள்ளிப் போனதால் எம்.ஜி.ஆர். மீது எனக்கு கோபம். எம்.ஜி.ஆர். ராமாவரம் தோட்டத்தில் குடியேறிய பின் அவரை அதிகமாக சந்திக்க முடியவில்லை.

ஒரு சமயம் வீட்டில் அவசரமான பணத்தேவை இருந்தது. எம்.ஜி.ஆரை சந்திப்பதாக இருந்தால் அவரை அதிகாலையிலேயே பிடிக்க வேண்டும். இல்லையென்றால் 6-00 மணிக்கெல்லாம் அவர் வெளியே போய் விடுவார். அதனால் ஒருநாள் அதிகாலை 5-30-க்கெல்லாம் ராமாவரம் தோட்டம் போனேன்.

தூங்கிய எம்.ஜி.ஆரை எழுப்பியபோது அவருக்கு கோபம் வந்து விட்டது. சாதாரணமாக 5-30-க்கெல்லாம் எம்.ஜி.ஆர். விழித்துக் கொள்வார்.

அன்று படப்பிடிப்பு முடிந்து காலை 3-00 மணிக்குத்தான் வந்தாராம்.

இருந்தாலும் நம்மிடம் கோபப்பட்டு விட்டாரே என்று நானும் கோபத்துடன் வேகமாக தோட்டத்தை விட்டு வெளியேறினேன். நான் மன வருத்தத்துடன் போகிறேனே என்று எம்.ஜி.ஆர். தன் பாதுகாவலர்களை அனுப்பி என்னை அழைத்து வரச் சொன்னார். அவர்கள் துரத்திக் கொண்டே வந்தார்கள். நான் வேகமாக வந்து விட்டேன்.

1972-ல் எம்.ஜி.ஆர். தி.மு.க.வை விட்டு வெளியேற்றப்பட்ட பின் லாயிட்ஸ் சாலையில் சக்கரபாணி வீட்டிற்கருகில் முதல் கூட்டம் நடந்தது.

அதில் எம்.ஜி.ஆர். பேசி முடித்த பின் நானும், சக்கரபாணியும் அவருடன் அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றி பேசினோம்.

எம்.ஜி.ஆர். தனிக்கட்சி துவங்கியபோது சக்கரபாணியும், நானும் தமிழ்நாடு முழுவதும் கூட்டங்களில் கலந்து கொண்டு பேசினோம். கதர் சட்டை போட்டு இருந்த காங்கிரஸ்காரனான நான் எம்.ஜி.ஆருக்கு ஆதரவாக பேசினேன்.

எம்.ஜி.ஆருடன் அடுத்து அதிக தொடர்பு இல்லாவிட்டாலும், சக்கரபாணி கடைசி வரை எனக்கு நெருக்கமாக இருந்தார். என் நான்கு பெண்களுக்கும், திருமணம் நடக்க எம்.ஜி.ஆர். பண உதவி செய்தாலும், திருமணத்தை முன்னின்று நடத்தியது சக்கரபாணியே.

எம்.ஜி.ஆர். முதல்வரான பின் அவரோடு எனக்கு இடைவெளி அதிகமானது. சந்தித்த

ஒரு சில சந்தர்ப்பங்களும் சக்கரபாணி குடும்பத்தாருடன் சென்றபோதுதான். மற்றபடி என் மனைவி அவ்வப்போது ராமாவரம் சென்று வி.என். ஜானகி மூலம் பண உதவி பெற்றிருக்கிறாள்.

எம்.ஜி.ஆர். அப்பல்லோவில் சேர்க்கப்படுவதற்கு சில மாதங்களுக்கு முன் சக்கரபாணி வீட்டிலேயே இருந்தேன். தொடர்ச்சியாக வீடியோ படங்கள் பார்த்து, அதனால் உடம்பு சூடேறி, அதைத் தணிக்க தலையில் தண்ணீர் ஊற்றியதன் விளைவு திடீர் மயக்கமாகி விட்டேன்.

சக்கரபாணி மருத்துவர்களை அழைத்து பரிசோதித்தார். 'உங்கள் தலையிலேயே துளை போட வேண்டியிருக்கும்' என்றார்கள். அதனால் பொது மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று நரம்பியல் நிபுணர் நரேந்திரன் பரிசோதிக்க, அவரது சிகிச்சையும், அணுகுமுறையும் மரணவாயிலிருந்து மீட்டது.

பேச முடியாத நிலை ஏற்பட்டு எனக்கு 'அ ஆ' கற்றுத் தர ஒரு டாக்டர், நடை பயிலச் செய்ய ஒரு டாக்டர் என்று ஒரு டாக்டர் குழுவே எனக்கு சிகிச்சை அளித்தார்கள். சக்கரபாணி குடும்பமும் அதற்கு உதவியாக இருந்தார்கள். எம்.ஜி.ஆர். அந்த சந்தர்ப்பத்தில் வந்து பார்க்காதது எனக்கு வருத்தமே.

அதன்பின் நான் பழையபடி செயல்பட முடியாததால் என் வீட்டுக்கு திரும்பி விட்டேன். சக்கரபாணி வீட்டுக்குச் சென்று பல வருடங்களாகி விட்டது. எம்.ஜி.ஆர். காலமானதற்கு கூட நான் வீட்டை விட்டுச் செல்ல முடியவில்லை.''

பானுமதி ஆதிக்க மனப்பாங்குடையவர். அது எம்.ஜி.ஆராக இருந்தாலும், சிவாஜியாக இருந்தாலும் எதிரொலிக்கும். இருவரும் சமாளித்துப் போக வேண்டிய நிலை.

'நாடோடி மன்னன்' படத்தில் காயமுற்ற பானுமதியை எம்.ஜி.ஆர். கைகளில் தூக்கிச் செல்வது போல் படமாக்க வேண்டும். ஆனால் பானுமதி அப்படி நடிக்க முடியாது என்று மறுத்து விட்டார். ஒரு டைரக்டர் என்ற நிலையில் கூட எம்.ஜி.ஆரால் அவரை சம்மதிக்கச் செய்ய முடியவில்லை. பிரச்சினைக்கு வழி, டூப் போட்டு எடுத்து விட்டு, பானுமதி இறந்து போனது போல் கதையில் திருத்தம் செய்து, புதிதாக சரோஜாதேவியை கலந்து வண்ணத்தில் காட்சிகளை கதையைத் தொடர்ந்தார். இதனால் படத்ததிற்கு கூடுதல் செலவு வேறு. செலவைப் பற்றி கவலைப்படாதவர் எம்.ஜி.ஆர். அது அடிமைப் பெண்ணாகட்டும், உலகம் சுற்றும் வாலிபனாகட்டும் கணக்கு பார்க்காமல் செலவு செய்து படங்களை முடிக்கப் பார்ப்பார்.

அயல்நாடுகளில் படமாக்கப்பட்ட 'உலகம் சுற்றும் வாலிபன்' படத்தின் 'பேட்ச் ஓர்க்கை' சென்னையிலேயே முடித்தார். மனோகர், தேங்காய் சீனிவாசன், நம்பியார் இவர்களையெல்லாம் அயல்நாடுகளுக்குச் செல்லாமலேயே சென்றது போல் ஆர்ட் டைரக்ஷன்,படப்பிடிப்பில் ஒரு முழுமையை உருவாக்கினார் எம்.ஜி.ஆர். சிங்கப்பூர் டைகர் பாம் கார்டனை சென்னையிலே கொண்டு வந்தார். புத்தர் கோவிலை சத்யா ஸ்டுடியோவிலேயே நிர்மாணித்து நம்பியாருடன் சண்டை செய்து நடித்தார்.

# கலைஞருக்கு எம்.ஜி.ஆர். சிபாரிசு...!



'அட்வகேட் அமரன்' நாடகத்தில் எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆர். முதன் முதலில் கதாநாயகனாக நடித்த படம் 'சாயா'. 3000 அடிகளுடன் அந்தப் படம் நின்று போனது.

அதற்குப் பின் 'ராஜகுமாரி'யில் அவர் கதாநாயகனாக நடித்தாலும், அவர் முதன் முதலில் கதாநாயகனாக ஒப்பந்தமாகி நடித்த படம் 'மருத நாட்டு இளவரசி'. இந்தப் படம் உருவாகி வெளிவருவதில் சற்று தாமதம் ஏற்பட்டது. அவ்வளவுதான்.

தவிர வி.என். ஜானகி கதாநாயகியாக நடித்து வெற்றிகரமாக அமைந்த முதல் படமும் இதுதான். கலைஞர் கருணாநிதி கதை- வசனம் எழுதிய முதல் படமும் 'மருதநாட்டு இளவரசி'யே!

'மருதநாட்டு இளவரசி'யை 'கோவிந்தன் கம்பெனி என்ற பெயரில் தயாரித்த ஜி. முத்துசாமி தனது 75-வது வயதில் சொந்த ஊரான ஸ்ரீவில்லிப்புத்தூரில் காலமானார். 1988-ல் அவரை சந்தித்த போது எம்.ஜி.ஆருடன் தனது அனுபவங்களைக் கூறினார்.

''அப்போது சிறிய வேடங்களில் நடித்துக் கொண்டு இருந்த எம்.ஜி.ஆரை கதாநாயக னாக ஒப்பந்தம் செய்தோம். கதை, வசனம் எழுதும் டி.வி.சாரியே அவரை சென்னையில்

உள்ள எங்கள் அலுவலகத்திற்கு அழைத்து வந்தார். முதல் கதாநாயக வாய்ப்பு என்பதாலோ என்னவோ, மிகவும் பணிவாகவும், மரியாதையாகவும் இருந்தார், எம்.ஜி.ஆர்.

கதர் சட்டை, கதர் வேட்டி, கழுத்தில் துளசி மாலை அணிந்து சிவந்த தோற்றத்துடன் கம்பீரமாகக் காணப்பட்ட அவரது அந்த தோற்றமே பிடித்துப் போனது. நடிப்பதற்கு ஊதிய மாக ரூ. 4,001 தருவதாக சொன்னேன்.

எம்.ஜி.ஆருக்கு இதில் மிகவும் மகிழ்ச்சி. 27-11-1946-ல் எம்.ஜி.ஆர். எங்களது ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். சாட்சியாக அவரது அண்ணன் எம்.ஜி. சக்கரபாணியும் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டார். அவரையும் ஒரு கதாபாத்திரத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்தோம்.

டி.வி. சாரி யோசனையின் பேரில் மைசூர் நவஜோதி ஸ்டூடியோவில் படம் தயாரிக்க ஏற்பாடு செய்தோம். (இந்த ஸ்டூடியோ இப்போது பிரிமியர் ஸ்டூடியோ என்று அழைக்கப்ப டுகிறது. எம்.ஜி.ஆர். நடித்த ஊருக்கு உழைப்பவன், உழைக்கும் கரங்கள், மு.க. முத்து நடித்த சமையல்காரன், ஜெயலலிதா நடித்த கங்கா கவுரி ஆகிய படங்கள் இங்குதான் உருவாக்கப் பட்டன)

டி.வி. சாரி உடனடியாக கதை, வசனம் தயார் செய்து கொடுக்கவில்லை. ''கதை என் மண்டைக்குள் இருக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாகத்தான் வெளியிடுவேன்'' என்றார். இதைக் கேட்ட என் அண்ணன் பெருமாளுக்கு கோபம் வந்து விட்டது. ''நீயும் உன் கதையும், வெளியே போ'' என்று போகச் சொல்லி விட்டார்.

டி.வி. சாரி இல்லை என்றாகி விட்டதால், புதிதாக வசனம் எழுத ஒருவரைத் தேடி னோம். எம்.ஜி.ஆர். 'எனக்குத் தெரிந்த பையன் ஒருத்தர் இருக்கிறார். கருணாநிதி என்று பெயர். திருவாரூரில் இருக்கும் அவருக்கு நல்ல எழுத்து வளம் உண்டு. அவரையே எழுதச் சொல்வோம்' என்று கேட்டுக் கொண்டார்.

அதன்படியே கருணாநிதியை வரவழைத்து பேசினோம். கருணாநிதி மிக இளம் வயது உடையவராய் இருந்ததைக் கண்டு தயங்கினோம். எம்.ஜி.ஆர். மீண்டும் அவரது திறமைக ளைப் பற்றி எங்களிடம் எடுத்துச் சொல்ல, மறுக்க மனமின்றி அவரையே வசனம் எழுத ஒப்பந்தம் செய்தோம்.

'காளி தாசி' என்ற பெயரில் முன்பு எடுக்க இருந்த படத்தை நிறுத்தி விட்டு, 'மருத நாட்டு இளவரசி' என்ற பெயரில் படத்தைத் தொடங்கினோம். கருணாநிதியும் எங்கள் நிலை உணர்ந்து ஒரு வாரத்திற்குள் முழுப் படத்திற்கான வசனங்களையும் எழுதிக் கொடுத்து விட்டார்.

கதை மாறியதால் முன்பு கதாநாயகியாக ஒப்பந்தம் செய்து இருந்த அனுராதா என்ற நடிகையை நீக்கி விட்டு, புதிய கதாநாயகியாக யாரைப் போடலாம் என்று ஆலோசனை செய்தோம்.

அப்போது பரவலான நல்ல வேடங்களில் நடித்து முன்னுக்கு வந்து கொண்டிருந்த வி.என். ஜானகியை எம்.ஜி.ஆர். சிபாரிசு செய்தார். அதன்படி சென்னை மந்தைவெளியில் குடியிருந்த வி.என். ஜானகியை ரூபாய் ஐயாயிரத்திற்கு ஒப்பந்தம் செய்தோம்.

படத்திற்கு டைரக்டராக எனது உறவினரும், நாகர்கோயில் வடசேரியைச் சேர்ந்தவரு மான ஏ. காசிலிங்கம் என்பவரை முடிவு செய்தோம். இவர் மட்டுமின்றி படத்தின் ஸ்டண்ட் மாஸ்டர் உட்பட பல டெக்னீஷியன்களையும், பி.எஸ். வீரப்பா, புளிமூட்டை ராமசாமி, கொட்டாப்புளி ஜெயராமன், திருப்பதிசாமி ஆகியோரையும் நடிப்பதற்கு தேர்வு செய்தது



'மருதநாட்டு இளவரசி'யில் எம்.ஜி.ஆர்., வி.என். ஜானகி.

எம்.ஜி.ஆர்.தான்.

'சாயா' படத்தில் ஏற்பட்ட அனுபவம் எம்.ஜி.ஆரை விழிப்படையச் செய்து, 'மருத நாட்டு இளவரசி'யின் தயாரிப்பு நிர்வாக வேலைகளை தானே இழுத்துப் போட்டுக் காண் டார்.

மைசூரில் படப்பிடிப்புக்கான ஏற்பாடுகளைச் செய்து விட்டு, வி.என். ஜானகிக்கும், எம்.ஜி.ஆருக்கும் தவகல் கொடுத்தோம். எம்.ஜி.ஆருக்கு அப்போது அதிகம் வசதி இல்லை. அதனால் மைசூருக்கு வர சி.டி. ராஜகாந்தத்திடம் 150 ரூபாய் பெற்றுக் கொண்டு அண்ணனுடன் மைசூர் வந்து சேர்ந்தார்.

மைசூர் 100 அடி சாலையில் நடிகர்கள் மற்றும் யூனிட்டில் உள்ள ஆண்கள் எல்லாம் தங்குவதற்கு மாதம் 100 ரூபாய் வாடகையில் ஒரு பங்களாவும், மற்றொரு பங்களாவின் மாடியில் வி.என். ஜானகி உட்பட மற்ற பெண்கள் தங்கவும், கீழ்ப்பகுதியில் எங்களது அலுவலகமும் அமைத்துக் கொண்டோம். அது பெண்களுக்குப் பாதுகாப்பு போலவும் ஆனது.

100 அடி ரோடு பங்களாவில் 'ரிகர்சல் ஹால்' ஒன்றிருந்தது. அங்கு எம்.ஜி.ஆர்., ஜானகிக்கு எப்படி கத்தி சண்டை போட வேண்டும் என்று கற்றுக் கொடுத்தார்.

படத்தில் இளவரசியான ஜானகி தனக்குச் சாதகமாக சாதாரண மனிதன் எம்.ஜி.ஆரை மாற்றி வீரனாக்குவார். அதற்காக எம்.ஜி.ஆருக்கு (படத்தில் அவருக்கு காண்டீபன் என்று பெயர்) சண்டைகள் கற்றுத் தருவார்.

தனக்கு எப்படிக் கற்றுத் தருவது போல நடிக்க வேண்டும் என்பதற்காகத்தான் எம்.ஜி. ஆர்., ஜானகிக்கு பயிற்சி அளித்தார். அது மட்டுமல்ல படத்தின் ஸ்டண்ட் காட்சி எப்படி


அமைய வேண்டும் என்றெல்லாம் யோசனை சொல்வார்.

மைசூரில் படப்பிடிப்பு எப்படி நடைபெறுகிறது என்று அறிய விரும்பிய கருணாநிதி திருவாரூரில் இருந்து எம்.ஜி.ஆருக்கு ஒரு கடிதம் அனுப்பினார். ''நான் மைசூர் வர நீங்கள்தான் ஏற்பாடு செய்ய வேண்டும். நீங்கள் சொன்னால் முதலாளி கேட்பார். அதனால் நீங்களே பேசி ஏற்பாடு செய்யுங்கள்'' என்று கேட்டிருந்தார்.

எம்.ஜி.ஆர். என்னைச் சந்தித்து, ''கதையில் சில திருத்தங்கள் செய்ய வேண்டும். கருணாநிதி வந்தால் நல்லது'' என்று சொல்ல, நான் ஒப்புக் கொண்டேன்.

கருணாநிதி மைசூருக்கு வந்து இரண்டு நாள் இருந்தார். திரும்பிச் செல்கையில் பணம் கேட்டார். நான் ஆயிரம் ரூபாய் கொடுத்தேன்.

அது என்னைப் பொறுத்தவரை குறைவான தொகையாக இருந்தாலும், கருணாநிதி மறவாமல், 'நெஞ்சுக்கு நீதி'யில் நான் எதிர்பாராத பெருந்தொகையை ஜி.எம். (ஜி. முத்து





**எம்.ஜி.ஆர். நூறு ரூபாய் கேட்டு எழுதிய கடிதம்**

சாமி) கொடுத்து விட்டார்'' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

மைசூரில் இருந்தபோது, படப்பிடிப்பு இல்லாவிட்டாலும் எம்.ஜி.ஆர். அங்கேயே இருந்தார். சென்னைக்கு அடிக்கடி சென்று வர அவரது வசதிகள் இடம் கொடுக்கவில்லை. படப்பிடிப்பு நடந்த பத்து மாத காலத்திற்குள் சுமார் ஒன்றிரண்டு முறை கம்பெனி காரிலேயே சென்னை சென்று திரும்பினார்.

அப்போது நாங்கள் எது சொன்னாலும் கேட்கும் நிலையில் இருந்தார். எந்த விஷயத்திலும் என்னை கலந்து கொள்வார். நானும் எந்தவொரு விஷயத்திற்கும் அவரை கலந்து கொள்வேன். என்னை 'ஜி.எம். சார்' என்றே அழைப்பார்.

வசதியற்ற சூழ்நிலையாக இருந்தாலும் எம்.ஜி.ஆர். கவுரவமான மனிதராக நடந்து



ஜி. முத்துசாமி

கொண்டார். அவருக்கு உதவியாளர் போல இருந்தவர் கொட்டாப்புளி ஜெயராமன்.

எம்.ஜி.ஆர். அசைவ உணவு வகைகளை விரும்பிச் சாப்பிடுவார். நான் சைவம் என்பதால் கம்பெனியில் அசைவ சமையல் கிடையாது. அதற்காக எம்.ஜி.ஆருக்கும், அவரது நண்பர்களுக்கும் ஓட்டலில் இருந்து அசைவ உணவு வகைகளை வரவழைத்துக் கொடுப்போம்.

படப்பிடிப்பு இல்லாத சமயம் வெளியில் நடந்தோ, காரிலோ சென்றால் எம்.ஜி.ஆர். தலைப்பாகை கட்டிக் கொள்வார், தன்னை பிறர் அடையாளம் கண்டுக் கொள்ளக் கூடாது என்பதற்காக. படப்பிடிப்பில் ஜானகி உட்பட தனது நண்பர்களிடம் மலையாளத்திலேயே பேசுவார். அவரது வீட்டிலும் அப்படித்தான்.

சென்ன்ன வால்டாக்ஸ் சாலையில் இருந்த எம்.ஜி.ஆர். வீட்டிற்கு ஒரு நாள் சென்ற போது, எம்.ஜி.ஆரை வைத்து படம் எடுக்கும் முதலாளி என்ற வகையிலோ என்னவோ, எம்.ஜி.ஆரின் தாயார் சத்யபாமா, சக்கரபாணியின் மனைவி மீனாட்சி குட்டி, எம்.ஜி.ஆரின் மனைவி சதானந்தவதி, சக்கரபாணியின் பிள்ளைகள், அந்தக் குடும்பத்திற்கு கார்டியனாக இருந்த வேலு நாயர் அனைவரும் என்னிடம் பணிவாக பேசினார்கள்.

சத்யபாமா தன் மகன் எம்.ஜி.ஆர். மீது எந்த அளவு பாசம் வைத்திருந்தாரோ, அதை விட பல மடங்கு தாயின் மீது பாசம் வைத்திருந்தார் எம்.ஜி.ஆர். என்பதை பல சந்தர்ப்பங்க ளில் அறிந்திருக்கிறேன்.

'மருதநாட்டு இளவரசி' படத்தின் பாடல் காட்சிகள் சிலவற்றை மைசூர் பிருந்தாவனி லும், மைசூர் அரண்மனையிலும் படமாக்கினோம். அனேகமாக இந்த இடங்களில் முதல் முதலாக படப்பிடிப்பு நடத்தியது நாங்களாகத்தான் இருக்க முடியும். அதற்குக் காரணம் மைசூர் நவஜோதி ஸ்டுடியோ முதலாளி ராமையா அரண்மனையில் செல்வாக்கு உடையவ ராக இருந்தார்' என்றார் திரு. ஜி. முத்துசாமி.

'மருத நாட்டு இளவரசி'க்காக எம்.ஜி.ஆர். எழுதி தந்த ஒப்பந்த பத்திரத்தின் மேல் 'முருகன் துணை' என்று காணப்பட்டது. ''இதை எழுதியவர் எம்.ஜி.ஆர்.தானா?'' என்று கேட்டபோது, முத்துசாமி அதை உறுதி செய்தார்.

''அப்போதெல்லாம் எம்.ஜி.ஆருக்கு கடவுள் பக்தி உண்டு. படப்பிடிப்பு இல்லாத சமயங்களில் நான் அடிக்கடி சாமுண்டீசுவரி கோவிலுக்குச் செல்வேன். எம்.ஜி.ஆரும் பலமுறை என்னோடு வந்திருக்கிறார். சாமி கும்பிட்டிருக்கிறார்'' என்றார் முத்துசாமி.

''மருதநாட்டு இளவரசிக்கு ஏற்பட்ட மொத்த செலவு 5 லட்சம். இதை 18 பிரிண்டுகள்

எடுத்து சென்னையில் மட்டும் 5 தியேட்டர்களில் ரிலீஸ் செய்தோம். திரையிட்ட இடங்களில் எல்லாம் அமோக வசூலானது. 'சூப்பர் ஹிட்' என்பார்களே அப்படி ஓடியது படம்.

கலைஞரின் வசனத்தை படத்தில் யார் பேசினாலும் தியேட்டரில் கை தட்டல் பிரமாத மாக இருந்தது.

படம் வெளியாகி பல வருடங்கள் எம்.ஜி.ஆருடன் எங்களுக்கு தொடர்பில்லை. எம்.ஜி.ஆர். சொந்தமாக நாடக மன்றம் துவங்கி பல ஊர்களுக்குச் சென்று இன்பக்கனவு, அட்வகேட் அமரன் ஆகிய நாடகங்களை நடத்திக் கொண்டு இருந்தார்.

விருதுநகரில் நாடகம் நடந்தபோது நான் எனது பிள்ளைகளை நாடகம் பார்க்க அழைத்துச் சென்றேன். நாடக முடிவில் எங்களைக் கண்டு பேசிய எம்.ஜி.ஆர்., ''இன்பக்கனவு நாடகம் வெற்றிகரமாகப் போகிறது. இதற்கு நல்ல பெயர். இதை நீங்களே படமாக எடுங்கள். நன்றாகப் போகும்'' என்றார். எனக்கும் அது சரி என்று பட்டது.

சிங்கப்பூரைச் சேர்ந்த ராமசாமி அய்யர் என்பவர் எங்களுடன் கூட்டாகச் சேர எம்.ஜி. ஆர். மூவீஸ் என்ற பெயரில் படத்தை துவக்கினோம்.

'இன்பக்கனவு' படத்தில் சரோஜாதேவி எம்.ஜி.ஆருக்கு ஜோடி. அப்போதுதான் நாடோடி மன்னன் படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தது.

''நாடோடி மன்னன் வெளியானால் புதுமுகம் சரோஜாதேவிக்கு நல்ல பெயர் வரும். அதனால் 'இன்பக்கனவு' படமும் வெற்றி அடையும்'' என்று எம்.ஜி.ஆர். எங்களிடம் சொல்லி இருந்தார். படத்தை எம்.ஜி.ஆரே டைரக்ட் செய்தார்.

சரோஜாதேவி தவிர்த்து எம்.ஜி.ஆர்., புஷ்பலதா சம்பந்தப்பட்ட காட்சிகள் படமாக்கப் பட்டன. இதற்கிடையில் எங்களது பங்குதாரர் ராமசாமி அய்யர் எம்.ஜி.ஆரின் 'அட்வகேட் அமரன்' என்ற மற்றொரு நாடகத்தை தனியாக படமாக்க விரும்பி அதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

இது பற்றி எம்.ஜி.ஆரிடம் கேட்டபோது, தனக்கு எதுவும் தெரியாதது போல், ''ஆரம்பித்து விட்டார். என்ன செய்வது? இரண்டு படங்களையும் முடித்துக் கொடுப்பது என் பொறுப்பு'' என்று சமாதானம் சொன்னார். ஆனால் அதற்குப் பிறகு 'இன்பக்கனவு' படத்திற்கு கால்ஷீட் தரக் காணோம். 'தருகிறேன்' என்று பலமுறை சொல்லி படப்பிடிப்பு நடக்காததால், நாங்கள் கம்பனியில் இருந்து பிரிந்து வந்து விட்டோம். அப்புறம் படம் வளரவில்லை.

அதன்பின் எம்.ஜி.ஆர். ஸ்ரீவில்லிபுத்தூருக்கு தேர்தல் பிரச்சாரம், கட்சிக் கூட்டங்களில் கலந்து கொள்ள வந்த போதெல்லாம் என் வீட்டுக்கு வர விரும்பினாலும் ''ஜி.எம். காங்கிரஸ் காரராச்சே. அவர் வீட்டுக்கு நீங்கள் எப்படி போகலாம்?'' என்று தடுத்து விட்டார்கள்.

லாயிட்ஸ் ரோட்டில் இருந்தபோது எம்.ஜி.ஆரை பார்க்கப் போனபோது, என்னிடம் நலம் விசாரித்தார். சரி வரப் பேசாமல், ''சக்கரபாணியிடம் மேற்கொண்டு பேசுங்கள்'' என்று சொல்லி விட்டுப் போய் விட்டார்.

எம்.ஜி.ஆர். முதல்வரான பின் நெசவாளர் பிரச்சனை தொடர்பாக அவரை சந்திக்கப் போனேன். கெடுபிடிகள் அதிகமாக இருந்ததால் திரும்பி விட்டேன்' என்றார்.

'மருத நாட்டு இளவரசி' படம் சம்பந்தப்பட்ட சில தஸ்தாவேஜுகள் மட்டும் முத்துசாமியிடம் உள்ளன. எம்.ஜி.ஆர். அவரிடம் எப்போதும் நேரிடையாக பணம் கேட்டதில்லையாம். தன் உதவியாளர்கள் அல்லது அண்ணன் சக்கரபாணி மூலம் கடிதம் கொடுத்தனுப்பி தான் பணம் பெற்றாராம். அந்த கடிதங்கள் எல்லாம் அவரிடம் பத்திரமாக இருக்கின்றன.



## "புரட்சி நடிகராக" மாறியது...

**எம்.**ஜி.ஆருக்கு 'புரட்சி நடிகர்', 'மக்கள் திலகம்', 'பொன்மனச் செம்மல்' என்று பல பட்டங்கள் உண்டு.

'மக்கள் திலகம்' பட்டம் மறைந்த கல்கண்டு ஆசிரியர் தமிழ்வாணனால் வழங்கப்பட்ட தாகும்.

திருமுருக கிருபானந்தவாரியார் 'பொன்மனச் செம்மல்' என்று திருச்சியில் நடந்த விழா ஒன்றில் எம்.ஜி.ஆருக்கு பட்டம் சூட்டினார். 'புரட்சி நடிகர்' என்ற பட்டம் கலைஞர் கருணாநிதியால் வழங்கப்பட்டது என்றுதான் பலருக்கு தெரியும்.

அது எங்கு, என்று, எந்த சூழ்நிலையில் வழங்கப்பட்டது என்பது போன்ற வெளிவராத தகவல்களை 'மணப்பாறை'யில் 'வசந்த கலா மன்றம்' என்ற பெயரில் நாடகக் குழுவினை நடத்தும் 'உறந்தை' உலகப்பன் வெளிப்படுத்துகிறார்.

''அப்போது எம்.ஜி.ஆருக்கு திரையுலகில் நிலையான ஒரு இடம் உண்டு என நிர்ண யிக்கப்பட்ட காலம் அது. கலைஞரும். எம்.ஜி.ஆரும் திரையுலகில் நண்பர்களாக இணைந்து வளர்ந்து வந்த நேரம்.

அதனால் கலைஞரை சந்தித்தபோது கலைஞரை எங்கள் நாடகமொன்றிற்கு தலைமை வகிக்க கேட்டதுடன், எம்.ஜி.ஆரையும் முன்னிலை வகித்திட கூட்டி வரக் கோரினேன். கலைஞரோ, ''எம்.ஜி.ஆர். மிகவும் பிஸியாக, இடைவிடாத படப்பிடிப்பில் இருக்கிறாரே.

இருந்தாலும் அவரிடம் விசாரித்து சொல்கிறேன்'' என்று கூறிச் சென்று விட்டார்.

சென்னையில் கலைஞர், எம்.ஜி.ஆரிடம் தனது வேண்டுதல் பற்றி சொல்ல, அவரும் சம்மதித்து, குறிப்பிட்ட நாளில் வருவதாக ஒப்புதல் அளித்து 1-4-1952-ல் கடிதம் எழுதினார்.

கடிதத்தில், ''தங்களது 29-3-52-ந் தேதி கடிதம் இன்று (1-4-52) கிடைத்தது, மகிழ்ச்சி. திரு.மு.க. அவர்கள் முன்னதாகவே எனக்கு ஆணை விதித்து விட்டார்.

அதோடு தங்களது கடிதமும் என்னை மீற முடியாதவாறு பிணைத்து விட்டது. சனியன்று காலையில் திருச்சி வருவதென்பது முடியாததாக இருப்பதால், இரவு எப்படியும் திருச்சி வந்து விடுகிறேன் என்று உறுதியளித்துக் கொண்டு சந்திப்பை எதிர்பார்த்து கடிதத்தை முடித்துக் கொள்கிறேன்.''

இப்படிக்கு,
**எம்.ஜி. ராமச்சந்தர்.**

-என்று கையொப்பமிட்டிருந்தார்.

கடிதம் எம்.ஜி.ஆரின் அடையாறு முகவரியில் (அப்போது எம்.ஜி.ஆர். குடும்பம் அடையாறில் குடி இருந்தது) எம்.ஜி. ராமச்சந்தர், '181- நான்காவது மெயின் ரோடு, காந்திநகர், சென்னை என்ற முகவரியில் இருந்து வந்தது.

கலைஞரிடமிருந்தும்- தானும் எம்.ஜி.ஆரும் வருவதாக 3-4-1952-ல் தகவல் கார்டில் வந்தது.

''அன்புள்ள தோழரே கடிதம் கிடைத்தது. மகிழ்ச்சி. நாடகம் நல்ல முறையில் நடைபெற ஆவன செய்யுங்கள். நானும் எம்.ஜி.ஆரும் வந்து சேருகிறோம். முதல் கடிதத்தில் எழுதியிருந்தபடி எல்லா ஏற்பாடுகளும் குறைவற செய்யுங்கள். தோழர்கள் பண்ணை உள்ளிட்ட அனைவருக்கும் வணக்கம் கூறவும்''

அன்பு,
**மு.க.**

-என்று எழுதியிருந்தார் கலைஞர்.

இருவரின் ஒப்புதலும் கிடைத்தபோது, கிடைத்தற்கரிய பேறு எனக் கருதி, விளம்பரம் சிறப்பாகச் செய்ததுடன், கம்பெனி நாடகம் போல் காட்சி அமைப்பு, ஆட்டோ ரிக்ஷாவே மேடையில் வருவது போன்று இன்னும் பல புதிய காட்சிகளுடன் ஏற்பாடு செய்தேன்.

சில நோட்டீசுகளில் 5-4-52-ல் திருச்சி தேவர் மன்றத்தில், 'கலைஞர் மு. கருணாநிதி தலைமையில், சினிமா நடிகர் எம்.ஜி. ராமச்சந்திரன் முன்னிலையில்' என அச்சிடப்பட்டு வெளியாகியது.

விளம்பரத்தாள் பெரிய அளவிலும், பிளாக்குகளுடன் போட ஏற்பாடு செய்யும்போது, கலைஞர், எம்.ஜி.ஆர். இருவரது புகைப்படங்களும் வந்து சேர்ந்தன.

திருவாரூர் மு. கருணாநிதிக்கு 'கலைஞர்' பட்டம் அளித்தது போல், கே.ஆர். ராமசாமி 'நடிப்பிசைப் புலவர்', எஸ்.எஸ். ராஜேந்திரன் 'இலட்சிய நடிகர்', ஈ.வெ.கி. சம்பத் 'சொல்லின் செல்வர்', நெடுஞ்செழியன் 'நாவலர்' என சிறப்புடன் அழைக்கப்பட்டது போல் எம்.ஜி.ஆருக்கு ஒரு பட்டம் அளித்து நோட்டீசில் போடுவோம். நாடக மேடையில் அறிவித்து விடலாம் என நினைத்து 'புரட்சி நடிகர்' என வழங்கலாம் என்று முடிவு செய்தேன்.

எங்களது குழுவிலுள்ள ஒருவர் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து 'எம்.ஜி.ஆர். என்ன புரட்சி பண்ணி விட்டார். சினிமா நடிகர் என்றே போடுவோம்' என்று தன் கருத்தைச் சொன்னார். நான் பிடிவாதமாக என் எண்ணப்படியே செய்தேன். ஆயிரக் கணக்கான


நோட்டீஸ் அச்சிட்டு விநியோகம் செய்தோம்.

நாடகத்திற்கு வருவார்களா என எதிர்பார்த்திருந்த எங்களை திகைப்பில் ஆழ்த்தும் வகையில், மேக்கப்பைக் கூட சரியாகக் கலைத்திடாமல், கலைஞருடன் காரிலேயே 5-4-1952 மாலையே திருச்சி வந்து சேர்ந்தார் எம்.ஜி.ஆர்.

நாடகம் தொடங்கி இடைவேளையில் கலைஞர் கருணாநிதி அவர்களை எம்.ஜி.ஆருக்கு 'புரட்சி நடிகர்' என கவுரவித்திட கோரிட, அவரும் தனக்கே உரிய பாணியில் பேசும்போது, ''அன்பு என்ற மூன்றெழுத்து...'' என்று சுமார் 33 மூன்றெழுத்து வார்த்தைகளை வரிசைப் படுத்தி முடிக்கும்போது, 'அண்ணா' என்ற மூன்றெழுத்து, 'தி.மு.க.' என்ற மூன்றெழுத்து, 'எம்.ஜி.ஆர்.' என்ற மூன்றெழுத்துக்காரருக்கு 'புரட்சி நடிகர்' என்ற பட்டத்தினை இந்த நாடக நிகழ்ச்சியின் வாயிலாக அறிவித்து அறிமுகம் செய்கிறேன்'' என்றபோது பலத்த கைதட்டல்களுக்கு இடையே எழுந்து நின்றார், எம்.ஜி.ஆர்.

தூய கதராடை அணிந்து, தங்க நிற மேனியுடைய எம்.ஜி.ஆர். சிவந்த கரம் உயர்த்திப் பேசிய பாணியும், உதிர்ந்த வார்த்தைகளும் என்றைக்கும் எங்கள் நெஞ்சை விட்டு நீங்காத காட்சியாகும்.

''புரட்சி நடிகராகவே என்னை கழகத்திற்கு அர்ப்பணித்துக் கொள்கிறேன். கதராடை அணிந்திருந்தாலும், பெரியார், அண்ணா கொள்கைகளுக்காகப் பாடுபடுவேன். கலைஞருடன் மாடர்ன் தியேட்டர்ஸ் படங்களின் மூலம் பழக்கம் ஏற்பட்ட பின் இருவரும் தீவிர



M. G. RAMCHANDER

161, FOURTH MAIN ROAD,
GANDHINAGAR
MADRAS.

1-4-1952

வணக்கம்



உறந்தை உலகப்பன்

1-4-1952-ல் எம்.ஜி.ஆர். எழுதிய கடிதம். தன் பெயரை எம்.ஜி. ராம்சந்தர் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

நண்பர்களாகி விட்டோம். அதனால் இயக்க கொள்கைகளில் தீவிர ஈடுபாடு வந்திருக்கிறது.

''என் உடலில் ஒரு சொட்டு ரத்தம் இருக்கும் வரை அண்ணாவிற்காகவும், தி.மு.க.விற்காகவும் கடைசி வரை உழைப்பேன் என்று உறுதியளிக்கிறேன்'' என்று முழங்கிய எம்.ஜி.ஆர். ''அமெச்சூர் நாடகம் இதுபோல் அமையும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. கம்பெனி நாடகம் போல் சிறப்பாக அமைந்திருந்தது.'' என்று எங்கள் 'அரும்பு' நாடகத்தை பாராட்டினார்.

கலைஞர். எம்.ஜி.ஆர். இருவருக்கும் தங்க டாலர் அணிவித்தோம். நாடகம் முடிவதற்கு முன் விடைபெற இருவரும் ஒப்பனை அறைக்கு வந்தார்கள். அப்போது வின்செண்ட் சோடா கம்பெனி தயாரித்த 'விம்டோ கலர்' பானத்தை இருவருக்கும் பருக கொடுத்தோம்.

அதன்பின் கலைஞர் சேலத்திற்கு காரில் செல்ல முடிவு செய்தார். எம்.ஜி.ஆருக்கு சென்னை செல்ல ரெயில் டிக்கெட்டிற்கான பணம் கொடுத்து விடச் சொன்னார். நான் எம்.ஜி.ஆரிடம் 50 ரூபாய் தந்ததற்கு வேண்டாமென்றார். நான் வற்புறுத்திக் கொடுத்ததனால் வாங்கிக் கொண்டார். கலைஞர் ரெயில் நிலையம் வரை எம்.ஜி.ஆருடன் வந்து விடைபெற்றுச் சென்றார்.

அப்புறம் எம்.ஜி.ஆருடன் கடிதத் தொடர்புகள் கொண்டிருந்தேன். எம்.ஜி.ஆர். மிக பிரபலமான நடிகராக பிறருக்கு வாரிக் கொடுக்கும் வள்ளலாக வளர்ந்தார்.

1956-ல் எம்.ஜி.ஆரிடம் உதவி கேட்டு, மீண்டும் எங்கள் நாடகமொன்றிற்கு தலைமை தாங்க வேண்டி கடிதம் எழுதினேன். -'நேரமில்லை' என்று பதில் வந்தது.

1958-ல் லாயிட்ஸ் ரோடு வீட்டிற்குச் சென்றபோது என் மனக் குறைகளைச் சொல்லி நாடகத்திற்கு உதவும்படி கேட்டதற்கு, 'பார்க்கிறேன்' என்று சுருக்கமாக பதில் சொல்லி விட்டு படப்பிடிப்பிற்கு போய் விட்டார்.

1960-ல் என் சிரமங்களைக் கூறி, நாடகத்திற்கு நிதி உதவி கேட்டு கடிதம் எழுதினேன். அவரிடம் 'நிதி உதவி செய்ய வசதியில்லை' என்று உதவியாளர் மூலமாக பதில் வந்தது. கலைஞரும் அதே போலவே 'நாடகத்தில் கலந்து கொள்ள வசதியில்லை' என்று பதில் எழுதியிருந்தார்.

எம்.ஜி.ஆர். எழுதிய கடிதத்திற்கு பதில் கடிதம் எழுதிய நான் சற்று திமிராக, ''பாத்திரம் அறிந்து பிச்சை இடு கோத்திரம் அறிந்து பெண்ணை எடு'' என்பார்கள். இதைப்போல எனக்கு அளித்திடும் பொருளுதவி- விளம்பரம் ஆகாது போய் விடுமோ எனக் கருதி எனக்கு உதவி செய்ய தயங்குகிறீர்கள். நல்லது. இருப்பினும் தங்கள் கொடுக்கும் குணம் குறையாதிருக்க வேண்டுகிறேன். நன்றி'' என்று எழுதியிருந்தேன்.

ராமாவரம் தோட்டத்திற்கு மாறிய பின் அங்கு அவரைச் சந்திக்க முயன்று பயனில்லை. 1970-ல் திருச்சியில் ஜெயலலிதாவின் 'காவிரி தந்த கலைச்செல்வி' என்ற நாட்டிய நாடகம் நடைபெற்றது. அதற்கு தலைமை தாங்க வந்த எம்.ஜி.ஆர்., திருச்சி 'ஆஸ்பி' ஓட்டலில் தங்கி இருந்தார்.

இந்த சந்தர்ப்பத்திலாவது எம்.ஜி.ஆரை பார்த்து பேசி விட வேண்டுமென்று ஓட்டலுக்குப் போனேன். அங்கு பணிபுரிந்த சிலர் எனக்கு பழக்கமானவர்கள் என்பதால், சில முட்டுக்கட்டைகளையும் தாண்டி எம்.ஜி.ஆரை சந்தித்தேன். என்னை அறிமுகப்படுத்திக் கொண்டபோது நலம் விசாரித்தபடியே நிகழ்ச்சிக்கு புறப்பட்டு விட்டார்.

மீண்டும் 'நாடகம், தலைமை' என்றபோது 'இப்போ அதற்கெல்லாம் நேரம் இருக்காதுங்க. மெட்ராஸ் வாங்க பார்க்கலாம்' என்று சொல்லியபடியே தன் அறையை விட்டு

வெளியே வந்தவரை சந்திக்க சிலர் காத்திருந்தார்கள்.

தன்னை சந்திக்க வந்தவர்கள், மனு கொடுக்க வந்தவர்களுடன் விசாரணை செய்து விட்டு புறப்பட்ட யத்தனித்த எம்.ஜி.ஆரின் பார்வையில் 14- வயது ஆங்கிலோ- இந்தியப் பெண் ஒருத்தி தென்பட்டாள். அவளிடம் "Have you come lonely?" (நீ தனியாக வந்தாயா?) என்று ஆங்கிலத்தில் கேட்க, அவள், 'Yes' (ஆமாம்) என்று பதிலளித்தாள். "Here afterwards don't come lonely" (இனிமேல் தனியாக வராதே) என்றார் எம்.ஜி.ஆர்.

"Yes" (சரி)- ஆங்கிலோ இந்தியப் பெண்.

"Meet me at Madras. You must accompany with anyone mind you. Don't come lonely" (என்னை சென்னையில் வந்து பார். வரும்போது யாருடைய துணையோடாவது வர வேண்டும். புரிகிறதா. தனியாக வராதே) என்று ஆங்கிலத்திலேயே எம்.ஜி.ஆர். பேசி அனுப்பியதை வியப்போடு பார்த்து நின்றேன். அதற்கு மேல் கூட்டம் சேர்ந்து கொள்ள எம்.ஜி.ஆருடன் பேச முடியவில்லை.

## அமெரிக்காவிலும் ஆண்டவன் நினைவு



கழுத்தில் துளசி மாலையுடன் எம்.ஜி.ஆர்.

என்.எஸ். கிருஷ்ணன்- மதுரம் ஜோடி எவ்வளவு புகழ்மிக்கவர்களாக இருந்தார் களோ, அதற்கு ஈடாக சினிமாவில் மட்டுமின்றி நிஜ வாழ்விலும் ஜோடி சேர்ந்தவர்கள் காளி என். ரத்தினம், சி.டி. ராஜகாந்தம் என்ற நகைச்சுவை ஜோடி.

ராஜகாந்தத்தின் ஒரே பெண் ராஜலட்சுமி. தன் மகளை 1949-ல் பின்னணி பாடகர் திருச்சி லோகநாதனுக்கு திருமணம் செய்து கொடுத்தார்.

எம்.ஜி.ஆரின் வாழ்வில், எம்.ஜி.ஆர். குடும்பத்திற்கு நெருக்கமாக இருந்தவர்கள். காளி என். ரத்தினம்- ராஜகாந்தம் ஜோடி.

மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் பாலகன் எம்.ஜி.ஆருக்கு குருவாக இருந்து நடிப்பு, இசை, நடனம், சண்டை ஆகிய எல்லாமும் கற்றுக் கொடுத்தவர் ரத்தினம். அவரது மனைவி என்ற வகையிலும், தன் ஆரம்ப கால சினிமா வாழ்க்கையில் தடுமாறிய கட்டங்களில் எல்லாம் கை கொடுத்து உதவியவர் என்ற முறையிலும் எம்.ஜி.ஆருக்கு ராஜகாந்தம் மீது மிகுந்த மதிப்பும், மரியாதையும் உண்டு.

அதனால் ராஜகாந்தம் அவரால் 'ஆண்டவனே' என்று உயர்வாகச் சொல்லி அழைக்கப் பட்டார். ராஜகாந்தமும் எம்.ஜி.ஆரை, 'ஆண்டவனே' என்றுதான் அழைப்பார்.

எம்.ஜி.ஆர். பிறந்த வருடத்திலேயே (1917) ராஜகாந்தமும் (தை மாதம் 12-ந் தேதி) பிறந்தார். உருக்குலையாத உறுதியை உடலிலும், உள்ளத்திலும் பெற்ற ராஜகாந்தம், தளர்ந்து போயிருக்கிறார்.

''என் ஆண்டவனே போனபின் எனக்கு என்ன இருக்கிறது?'' என்று எம்.ஜி.ஆர். பற்றி பேச்செடுத்தாலே கண்களில் கண்ணீர் வழிந்தோட அழுகிறார். பழைய சம்பவங்களைப் பற்றி பேசும்போது மீண்டும் கண்ணீர் குறுக்கிட்டு தடங்கல் ஏற்படுகையில் எம்.ஜி.ஆரிடம் அவருக்குள்ள அன்பு புரிந்தது.

''1940-க்கு மேல் என்று நினைவு. வால்டாக்ஸ் ரோட்டில் 147-ம் எண் வீட்டில் எம்.ஜி.ஆர். குடும்பம் இருந்தது. எதிர் வீடு எங்களுடையது. அப்போது எம்.ஜி.ஆரின் முதல் மனைவி தங்கமணி, சக்கரபாணியின் முதல் மனைவி நாணி அம்மாள், அவர்களது இரண்டு குழந்தைகள், தாயார் சத்யபாமா வீட்டில் இருந்தார்கள்.

அப்போது எம்.ஜி.ஆரின் உடை அனைத்தும் கதராக இருந்தது. உடை அணிவதில் கூட உறுதியோடு இருந்தார். ''ஏன் இப்படி கதர் அணியத்தான் வேண்டுமா?'' என்று கேட்டால், ''என் இஷ்டம்'' என்பார்.

குளித்து விட்டு வந்தாரானால் கண்ணாடி முன் அமர்ந்து நெற்றியில் விபூதிப்பட்டை, சந்தனம், குங்குமம் இட்டு, கழுத்தில் ருத்ராட்ச மாலை அணிந்த பின்பே வெளியே போவார்.

கழுத்தில் ஒரு சமயம் துளசி மாலை அணிந்திருந்தார். திருப்பதி சென்று திரும்பிய சத்யபாமா தன் மகனுக்கு அதை அணிவித்தார். தாயார் மறைவிற்குப் பின், அவர் பயன்படுத்திய துளசி மாலையை சில காலம் எம்.ஜி.ஆர். அணிந்திருந்தார்.

பசியின் கொடுமையை அறிந்த குடும்பம் என்பதால் 'பசி' என்று குரல் கேட்டாலே சத்யபாமா தங்களிடம் இருக்கின்ற உணவை அப்படியே தானம் செய்து விடுவார். கொடுத்ததை இறைவன் திருப்பித் தருவான் என்று அவருக்கு ஒரு நம்பிக்கை. நம்பிக்கைக்கு மற்றொரு காரணம் எம்.ஜி.ஆர். அந்த இளவயதில் குடும்பத்தின் பாரங்களை தன் மீது சுமந்து கொண்டு கடினமாக உழைத்தார்.

சத்யபாமாவுக்கு அவ்வப்போது மூத்த மகன் சக்கரபாணி மீது கவலை வரும். ''திருமணம் செய்து, இரண்டு குழந்தைகள் ஆகியும் ராமச்சந்திரனுக்கு உள்ள பொறுப்புணர்ச்சி மூத்தவனுக்கு வரவில்லையே' என்று கூறுவார். எம்.ஜி.ஆரின் சுறுசுறுப்பு சக்கரபாணிக்கு இல்லையே என்பது அவரது ஆதங்கம்.

இந்த நிலையில் எம்.ஜி.ஆர்., சக்கரபாணி இருவருக்கும் ஜூபிடர் பிக்சர்ஸ் மூலமாக



கணவர் காளி என். ரத்தினத்துடன் ராஜகாந்தம்.

இன்றைய ராஜகாந்தம்

ஒரு யோகம் வந்தது. கோவை சென்டிரல் ஸ்டூடியோவில் அவர்களது படங்களின் படப்பிடிப்பு நடைபெற்றது. அதில் எம்.ஜி.ஆர்., சக்கரபாணி மட்டுமினன்றி எம்.கே. முஸ்தபா, திருச்சி லோகநாதன், எம்.எஸ். விஸ்வநாதன் ஆகியோர் 150 ரூபாய் மாத சம்பளத்தில் சேர்ந்தார்கள். எம்.ஜி.ஆரைப் போல் மற்றவர்கள் சம்பாதித்தாலும், வெளியில் ஓட்டலுக்கு ஒன்றாகப் போனால், பில்லுக்கு எம்.ஜி.ஆர்.தான் பணம் கொடுப்பார்.

திருச்சி லோகநாதன் ஜூபிடரில் சேர்ந்தது நடிகராக. அப்புறம்தான் பாடகரானார்.

மாடர்ன் தியேட்டர்ஸ் படங்களில் எம்.ஜி.ஆர். நடிகராகவும், லோகநாதன் பாடகராகவும் இருந்தபோது அதிக பழக்கம். படப்பிடிப்பு இல்லாதபோது இருவரும் கேரம் விளையாடுவார்கள். விளையாட்டில் தப்பாக ஆடுவது கூடாது என்று எம்.ஜி.ஆர். உறுதியாக இருப்பார். ''காய்களை அடிப்பது பெரிதில்லை'' என்பாராம்.

அப்போது லோகநாதனிடம் குதிரை வண்டி இருந்ததால், விளையாடி முடித்த பின் எம்.ஜி.ஆரை அதில் அழைத்துச் சென்று, சேலத்திலுள்ள அவரது இருப்பிடத்தில் கொண்டு விட்டுச் செல்வார்.

லோகநாதனின் திருமணம் 1949-ல் நடைபெற்றது. அதற்கு எம்.ஜி.ஆரால் வர முடியவில்லை. படப்பிடிப்புக்கு பூனா சென்றதாக நினைவு.

படப்பிடிப்பிலிருந்து திரும்பிய பின் லோகநாதன் தம்பதியரை தன் வீட்டுக்கு அழைத்து விருந்து கொடுத்தார், எம்.ஜி.ஆர். சக்கரபாணி- எம்.ஜி.ஆர். இருவருக்கும் நடுவில் லோகநாதனை அமர வைத்து சத்யபாமா உணவு பரிமாறி மகிழ்ந்தார்.

'நாடோடி மன்னன்' படத்தில் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் எழுதிய லோகநா

தன் பாடிய ஒரு பாடல் பதிவு செய்தார்கள். ''மாத்தறங்க ஏமாத்தறங்க- மனசு வச்சு மக்களையே ஏமாத்தறாங்க'' என்ற இந்த பாடல் வரிகள் அன்றைய காங்கிரஸ் அரசை விமர்சிப்பது போலிருந்ததால் சென்சாரில் வெட்டி விட்டார்கள். அதற்கு எம்.ஜி.ஆர். லோக நாதனிடம் பாடல் இடம்பெற முடியாததற்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

1946-லிருந்து 1950-ம் ஆண்டுகளில் நான் சென்னையில் மைலாப்பூர் அருந்ததி தெருவில் குடியிருந்தேன். படப்பிடிப்பு இல்லாத நாட்களில் எம்.ஜி.ஆர். என் வீட்டிற்கு வந்து விடுவார்.

எம்.ஜி.ஆருடன் பி.எஸ். வீரப்பா, நம்பியார், ஸ்டண்ட் சோமு, காமிரா சண்முகம் (பின்னாளில் நேற்று இன்று நாளை, மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன் ஆகிய படங்களில் ஒளிப்பதிவு செய்தவர்), தபலா ராமு என்று ஒரு கூட்டமே வரும். அத்தனை பேர்களுடன் நானும் சீட்டு விளையாட்டில் உட்கார்ந்து விடுவேன். காலையில் ஆரம்பித்தால் மாலையில் தான் முடியும்.

அப்போது சந்திரபாபுவும் வீட்டிற்கு வந்துவிடுவான். அப்போது அவன் அரை டிராயர் போட்ட பையன். இந்தி பாடல்கள் எல்லாம் நன்றாக பாடுவான். எங்களுக்கு காபி, டீ வாங்கி வருவான். அனைவருக்கும் சாப்பாடு என் வீட்டில்தான்.

சீட்டு விளையாட்டில் 'ரிட்ரேச்சர்' என்று ஒரு விளையாட்டு. 2-லிருந்து 10 வரை சின்ன செட். ஏஸ்-ல் (ass) இருந்து பொம்மை பூராவும் பெரிய செட். இதில் எம்.ஜி.ஆர். மாதிரி ஆட முடியாது யாராலும். பெரும்பாலும் அவர்தான் ஜெயித்துக் கொண்டு இருப்பார். அப்போதெல்லாம் காசு வைத்து விளையாடுவது கிடையாது.

1967-ல் குண்டடிபட்ட பின், ராமாவரம் தோட்டத்தில் முதல் மாடி ராசியில்லை என்று தன் படுக்கையறையை இரண்டாவது மாடிக்கு மாற்றிக் கொண்டார் எம்.ஜி.ஆர்.

சீட்டாட்டமெல்லாம் முதல் மாடியில் நடக்கும். சில சமயம் டைரக்டர் கே. சுப்ரமணியத் தின் மனைவி எஸ்.டி. சுப்புலட்சுமியும் கலந்து கொள்வார்.

காசு வைத்து விளையாடுவதில்லை என்பதால் சீட்டாட்டத்தில் தோற்றவர் தலைய ணையை தன் தலையில் அடுத்த ஆட்டம் முடியும் வரை வைத்திருக்க வேண்டும். இது எம்.ஜி.ஆர். கண்டுபிடித்த ஒரு வழி. எப்போதாவது எம்.ஜி.ஆரும் தலையணையை தலை யில் சுமந்திருக்கிறார்.

எம்.ஜி.ஆருக்கு மோர், பால் என்றால் மிகுந்த இஷ்டம். சீட்டாட்ட இடைவேளைகளில் அதிகம் மோர் அருந்துவார்.

என் பேரன் மகராஜன் சிறுவனாக இருந்தபோது பள்ளி விடுமுறை நாட்களில் தோட்டத் திற்கு போய் விடுவான். சீட்டாட்டத்தில் எம்.ஜி.ஆருக்கு உதவி செய்வது அவன்தான். இரண்டாவது மாடிக்குப் போய் கண்ணாடி, தலையணை எடுத்து வரச் சொல்வார்.

அடிக்கடி ஏறி இறங்க முடியாமல் ''மூச்சு வாங்குதே சேச்சா'' என்பான். அதற்கு எம்.ஜி.ஆர். செல்லமாக கடிந்து கொண்டு ''நான் கிழவன்டா. எத்தனை தடவை ஏறி இறங்கறேன். நீ சின்னப் பையன். மாடி ஏறி இறங்க சலிச்சுக்கறியே. போய் எடுத்து வா' என்பார்.

'மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன்' படப்பிடிப்பு மைசூரில் நடைபெற்றபோது நான், வி.எஸ். ராகவன், தேங்காய் சீனிவாசன், எம்.ஜி.ஆருடன் சீட்டு விளையாடுவோம். அந்த சமயத்தில் பணம் வைத்து விளையாடினோம்.

மற்றவரிடம் பணம் இல்லாவிட்டால் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு கொடுத்து விளையா



எம்.ஜி.ஆர். நாடக மன்றக் குழு. மூன்றாவது வரிசையில் இடமிருந்து வலமாக 1-வது புத்தூர் நடராஜன், 5-வது எம்.ஜி. சக்கரபாணி, 6-வது எம்.ஜி.ஆர்., 8-வது ஆர்.எம். வீரப்பன், 9-வது திருப்பதிசாமி, பெண்கள் வரிசையில் 4-வது ஜி. சகுந்தலா, 5-வது புஷ்பலதா.

டச் சொல்வார். ''திருப்பித் தர வேண்டுமே'' என்று சொன்னாலும் கேட்க மாட்டார். வாங்கிக் கொள்ளவும் மாட்டார்.

சீட்டாட்டத்தில் வி.எஸ். ராகவன், கொஞ்சம் சம்பாதித்தார். ஆனால் தேங்காய் சீனிவாசன் முற்றிலும் இழந்து விட்டார். ஆட்ட முடிவில் எம்.ஜி.ஆர். பெரும்பகுதி பணத்தை கவர்ந்து விட்டார்.

அதனால் எம்.ஜி.ஆர். தன் பணத்தை தந்து விடுவார் என்று தேங்காய் எதிர்பார்த்து, ''அண்ணே எனக்கு பணம் கொடுங்கண்ணே'' என்று புலம்பினார். எம்.ஜி.ஆர். சிரித்துக் கொண்டே மறுத்தவர், படப்பிடிப்பு யூனிட்டில் இருந்த தொழிலாளர்களிடத்தில் ஜெயித்த பணத்தை பிரித்துக் கொடுத்து விட்டார். இப்படி காசு வைத்து விளையாடிய சந்தர்ப்பங்களில் எம்.ஜி.ஆர். ஜெயித்து பெறும் பணம், அருகே தேவையுள்ளவர்களுக்குப் போய் சேர்ந்து விடும்.

எம்.ஜி.ஆர்., வி.என். ஜானகிக்கு காதல் ஏற்பட்டது 'ராஜமுக்தி' படப்பிடிப்பில்தான். இதன் படப்பிடிப்பு பூனா பிரபாத் ஸ்டுடியோவில் நடைபெற்றது. தியாகராஜ பாகவதரின் சொந்த படம் அது. அதில் பாகவதருக்கு ஜோடி ஜானகி. அந்த படத்திற்கு அவர் பெற்ற சம்பளம் இருபதாயிரம் ரூபாய். படத்தில் சேனாபதியாக நடித்த எம்.ஜி.ஆரின் சம்பளமோ 1,500 ரூபாய்தான்.

'ராஜமுக்தி'யில் சக்கரபாணியும் நடித்தார். நானும் ஒரு வேடத்தில் நடித்தேன். படம் கால்வாசி வளர்ந்த சமயம். சேனாபதி எம்.ஜி.ஆர். மீது ராணி ஜானகி காதல் பார்வை வீசியதைப் பார்த்தேன். சக்கரபாணியும் கவனித்து விட்டார்.

சரி, இது ஏதோ ஒருதலைக் காதலாக இருக்கும் என்று அசிரத்தையாக விட்டால் ஜானகியை எம்.ஜி.ஆரும் பதிலுக்கு காதல் பார்வை பார்க்க ஆரம்பித்து விட்டார். சரி, இதை வளர விட்டால் தப்பாச்சே என்று நானும், சக்கரபாணியும் முடிவு செய்தோம். அவர்களை ஒருவரையொருவர் பார்ப்பதற்கோ, சந்திப்பதற்கோ விடாமல் குறுக்கே நின்று சதி செய்தோம்.

ஒரு நாள் ஜானகி பாகவதருடன் ஏழைகளுக்கு தானம் செய்வது போன்ற காட்சி படமானது. அன்று எனக்கும், சக்கரபாணிக்கும் வேலை இல்லை. ஆனால் வேறு வேலை இருந்தது.

படப்பிடிப்பு இடைவேளையில் எம்.ஜி.ஆரும், ஜானகியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். நான் ஜானகிக்கு எதிரேயும், சக்கரபாணி எம்.ஜி.ஆருக்கு எதிரேயும் நின்று கொண்டு தடுத்தோம்.

ஆனால் எம்.ஜி.ஆர்- ஜானகி இருவரும் இணைவதை யாராலும் தடுக்க முடியவில்லை. சக்கரபாணியின் எதிர்ப்பு கடுமையாக இருக்கவே, எம்.ஜி.ஆர் அவருக்கு பயந்து கொண்டு ஜானகியை மைலாப்பூர் பஜார் தெருவில் குடி வைத்தார்.

எம்.ஜி.ஆரின் இரண்டாவது மனைவி சதானந்தவதிக்கு இந்த விஷயங்களெல்லாம் தெரிய வந்தாலும், காச நோயால் பாதிக்கப்பட்ட தன்னால் எம்.ஜி.ஆருக்கு என்ன பயன் என்று விஷயத்தை பெரிதுபடுத்தவில்லை. ஆனால் ஒரே ஒரு நிபந்தனை மட்டும் எம்.ஜி.ஆருக்கு விதித்தார், ஒரே வீட்டில் இருக்க ஜானகியை அனுமதிப்பதில்லை என்று.

எம்.ஜி.ஆர்., சக்கரபாணி குடும்பம் லாயிட்ஸ் ரோட்டில் குடி வந்தபோது எதிர் தெருவில் ஜானகி குடி வந்தார்.

நாளடைவில் ஜானகி, எம்.ஜி.ஆர், சக்கரபாணி குடும்பத்தோடு நெருக்கமாகி விட்டார்.

வீட்டில் நடைபெறும் விசேஷங்களிலெல்லாம் ஜானகி கலந்து கொள்வார். அப்போது சதானந்தவதியுடன் படமெல்லாம் எடுத்துக் கொண்டிருக்கிறார்.

சதானந்தவதியின் நோய் முற்றி படுக்கையிலேயே இருக்க வேண்டிய கட்டத்தில் கூட எம்.ஜி.ஆர். ஒரு தாதியைப் போல் கவனித்து சேவை செய்து இருக்கிறார்.

காலையில் எழுந்ததும் சதானந்தவதிக்குரிய காலைக் கடன்களை- பல் தேய்த்து விடுவது, குளிக்கச் செய்வது என்று- எம்.ஜி.ஆரே அருகில் இருநது கவனித்து, கூந்தலை சரி செய்து, மருந்து, உணவு கொடுப்பது வரை தானே செய்வதில்தான் அவருக்கு திருப்தி.

படப்பிடிப்பு முடிந்து எம்.ஜி.ஆர். வீடு திரும்பினால், தன் அருகிலேயே கணவர் இருக்க வேண்டுமென்று சதானந்தவதி விரும்புவார். எம்.ஜி.ஆரும் அதை மறுப்பதில்லை.

சதானந்தவதி கட்டிலில் வசதியாக படுக்க உதவி செய்து கொடுத்தால் எம்.ஜி.ஆருக்கு அதில் இடமிருக்காது. அதனால் ஒரு ஸ்டூலை கட்டிலுக்கு அருகில் போட்டுக் கொண்டு கட்டிலில் ஒருக்களித்துப் படுத்தபடி, காலை ஸ்டூல் மீது போட்டுக் கொள்வார்.

சதானந்தவதி தன் கணவர் இரவில் தன்னைவிட்டுச் சென்று விடக்கூடாது என்பதற்காக தன் சேலையின் ஒரு முனையை எம்.ஜி.ஆரின் வேஷ்டியில் முடிச்சு போட்டு விடுவார். காலையில்தான் முடிச்சை அவிழ்ப்பார்.

இப்படி புகழும், வசதிகளும் உச்சத்தில் இருந்தபோது கூட எம்.ஜி.ஆரின் தாம்பத்ய வாழ்வு சிரமகதியில்தான் இருந்திருக்கிறது.

எம்.ஜி.ஆர். 'ராஜகுமாரி'யில் நடித்து கதாநாயகனாக புகழ் பெற ஆரம்பித்தார். பிஸியாக பல படங்களில் நடித்த நேரம். அதனால் இடையில் சில ஆண்டுகள் எம்.ஜி.ஆர். குடும்பத்தோடு எனக்கு தொடர்பு இல்லாமல் போனது.

எம்.ஜி.ஆரின் தாயார் இறந்த விஷயம் கூட எனக்குத் தெரியாது. காரணம், படப்பிடிப்பு இல்லையென்றால் வீட்டை விட்டு எங்கும் வெளியே போக மாட்டேன். அதனால் வெளி உலகில் என்ன நடக்கிறது என்பது கூட என்னால் அறிய முடியாது.

சற்று தாமதமாக சத்யபாமா இறந்த தகவல் அறிந்து மனம் கலங்கினேன். அதை எம்.ஜி.ஆர். நமக்குத் தெரிவிக்கவில்லையே என்று வருத்தமும் இருந்தது.

1952-ல் சக்கரபாணியின் மூத்த பெண் சத்யபாமா (மணி என்றழைப்பார்கள்) திருமண அழைப்பிதழை எடுத்துக் கொண்டு எம்.ஜி.ஆரும், சக்கரபாணியும் வந்தார்கள். பரஸ்பரம் இருவரது ஆதங்கங்களையும் தீர்த்துக் கொண்டோம்.

மணியின் திருமண நாளில் வி.கே. ராமசாமியின் 'பம்பாய் மெயில்' நாடகத்தில் நான் நடிக்க வேண்டியிருந்தது. அதைப் பற்றிச் சொன்னேன்.

மறு சந்திப்பில் எம்.ஜி.ஆர். தன் எம்.ஜி.ஆர். நாடக மன்றத்தில் சேரும்படி கேட்டுக் கொண்டார். நாடகக் குழுவில் என்னைத் த்விர்த்து ஒன்பது பெண்கள் இருந்ததால் அவர்களுக்கு என்னைத் தலைவியாக்கி விட்டார்.

செந்தாமரையின் மனைவி கவுசல்யா, புஷ்பலதா, யசோதா, ஜி. சகுந்தலா, சுலோச்சனா என்று நாடகக் குழுவில் பெண்கள் இருந்தார்கள். வெளியூர் செல்வதென்றால் பெண்களுக்கு தனி வேன் கொடுத்து விடுவார்.

நாடகக் குழுவில் 30 ஆண்கள் இருந்தார்கள். அனைவரையும் எம்.ஜி.ஆர். தி.மு.க. வில் உறுப்பினராக்கி விட்டார். என்னையும் சேரும்படி கேட்டார். ''என்ன சொல்றீங்க?'' என்று கேட்டேன்.

''நீங்க ஒருத்தர்தான் பாக்கி ஆண்டவனே, சேர்ந்துடுங்க'' என்றார்.

''எனக்கு அரசியலே வேணாம். கட்சியிலே சேர்ந்து என்னப் பண்ணப் போறேன்? என்னை விட்டுடுங்க ஆண்டவனே'' என்று நான் சொல்ல, எம்.ஜி.ஆர். வற்புறுத்தவில்லை.

எம்.ஜி.ஆர். நாடக மன்றம் என்றாலே அப்படியொரு கட்டுக்கோப்பான அமைப்பு. பெண்கள் இருக்கும் இடத்திற்கு ஆண்கள் வரக் கூடாது. ஆண்கள் இருக்கும் பகுதிக்கு பெண்கள் தலையே தெரியக் கூடாது. ஒரு ஆணும் பெண்ணும் பேசுவதாக இருந்தால் நாடகத்தில் நடிக்கும்போது வசனம் பேசுகிறார்களே, அதுதான் நடக்கும்.

நாடக ஒத்திகை பெரும்பாலும் இப்போதுள்ள அ.தி.மு.க. தலைமைக் கழகக் கட்டிடத்தில் (லாயிட்ஸ் சாலையிலுள்ள) தான் நடைபெறும். நாளடைவில் ராமாவரம் தோட்டத்தில் உள்ள தியேட்டர் ஹாலில் நடைபெறும்.

ஒவ்வொரு வருடமும் பொங்கல் நாள் என்றாலே நாடக மன்றத்தில் உள்ளவர்களுக்கு மகிழ்ச்சிதான். அன்றைக்கு அனைவருக்கும் ஒரே மாதிரி துணிவகைகள் கிடைக்கும். பெண்களுக்கு சேலை, ரவிக்கைத் துணியும், ஆண்களுக்கு வேஷ்டி, சட்டைத் துணியும் கிடைக்கும்.

அதே ரக உடையைத்தான் எம்.ஜி.ஆரும், சக்கரபாணியும் அணிவார்கள். நாடக மன்றத்தில் உள்ளவர்களுக்கு என்ன உடையோ, அதுதான் எம்.ஜி.ஆர். குடும்பத்தில் உள்ளவர்களுக்கும்.

அது மட்டுமல்ல, வீட்டில் அணிகின்ற உடையைப் போலவே டிரைவர், மற்றும் வேலைக்காரர்கள், தோட்ட வேலை செய்வோரிலிருந்து தோட்டி வேலை செய்பவர் வரை அணிந்திருப்பார்கள். அந்தக் காட்சியை நாம் வேறு எங்கும் காண முடியாது.

தவிர ஒவ்வொருவருக்கும் பணமும் கொடுப்பார் எம்.ஜி.ஆர். அது நிதி வசதியைப் பொறுத்து 20 ரூபாய் ஆகவும் இருக்கலாம். நூறு ரூபாயாகவும் இருக்கலாம். கணக்கு பார்க்காமல் கடன் பட்டாவது பொங்கல் கடமைகளை தவறாமல் செய்வார்.

எம்.ஜி.ஆர். நாடக மன்றத்தில் உள்ள பெண்கள் அணியும் உடையும் நாகரீகமாக இருக்க வேண்டும். நாகரீகம் என்றால் உடலைக் காட்டுகின்ற உடை அல்ல. அணிகின்ற உடை எதுவானாலும் உடலை மூடி மறைத்திருக்க வேண்டும்.

யாராவது மறந்து நைலக்ஸ் அல்லது நைலான் சேலை அணிந்து அவர் கண்ணில் பட்டால், அவ்வளவுதான். மகாகோபம் வந்து விடும் அவருக்கு.

ஒரு சமயம் நாகர்கோவிலில் நாடகம் நடத்தப் போய் இருந்தோம்.

நாங்கள் தங்கியிருந்த லாட்ஜில் பெண்கள் அணிய வேண்டிய உடைகளையெல்லாம் இஸ்திரிக்கு கொடுத்தனுப்பி இருந்தேன்.

காலையில் குளித்து முடித்து எம்.ஜி.ஆரை பார்க்கப் போனேன். வேறு சேலை இல்லாததால், நைலான் சேலை ஒன்று அணிந்து கொண்டு சென்றேன். வழியில் சக்கரபாணி உட்கார்ந்து இருந்தார். என் உடையைப் பார்த்ததும் முறைத்தார்.

''தம்பியைப் பார்க்க போறீங்களோ, இதெல்லாம் அவனுக்கு பிடிக்காது தெரியும் இல்லே'' என்றவர், ''போய் பாருங்கள்'' என்று கை காட்டினார்.

எம்.ஜி.ஆரை பார்த்து ''வணக்கம் ஆண்டவனே'' என்றதும், ''என்ன ஆண்டவனே காலையிலேயே'' என்றவர், என் உடைகளைப் பார்த்ததும் அவர் முகம் ஒரு மாதிரியாகி விட்டது.

''ஆண்டவனே இப்படிச் செஞ்சா எப்படி?'' என்றார். நான் விளக்கம் சொன்னாது எடுபடவில்லை. ''எதுவாக இருந்தாலும் என் முன்னால் இப்படி வராதீர்கள்'' என்று சொன்னார்.

இது நடந்து பல வருடங்களுக்குப் பின் ''மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன்'' படத்திற்காக மைசூர் சென்றிருந்தேன். ஒரு நாள் படப்பிடிப்பு முடிந்தும், நானும், லதாவும் ஷாப்பிங் போனோம்.

ஒரு ஜவுளிக் கடையில் நுழைந்து சேலைகளை உருட்டினோம். நான் எனக்கு தகுந்த சேலையைத் தேர்வு செய்தேன்.

லதா அதை ஒதுக்கி விட்டு, ''என்ன செலக்ட் பண்றீங்க?'' என்று நைலான், நைலக்ஸ் சேலைகளில் புது டிசைன்கள் பலவற்றை தேர்வு செய்து கொண்டிருந்தார்.

நான் லதாவிடம் ''ஆண்டவனுக்கு இதுபோல் சேலை எல்லாம் பிடிக்காதம்மா'' என்றேன். லதா சிரித்தபடி, ''அதெல்லாம் எதுவும் சொல்ல மாட்டார்'' என்றார்.

ஷாப்பிங் முடிந்து ஓட்டலுக்குத் திரும்பி எம்.ஜி.ஆரிடம் சேலைகளை காட்டி, ''இதெல்லாம் உடுத்தலாமா?'' என்று தயங்கியபடி கேட்டேன்.

''இன்னிக்கு எல்லோருமே வயது வித்தியாசமில்லாமல் இதுபோல் சேலைகளை உடுத்த ஆரம்பிச்சுட்டாங்களே, உங்களை மட்டும் தடுத்து என்ன பிரயோஜனம்?'' என்று சொல்லிவிட்டார்.

எம்.ஜி.ஆர். லாயிட்ஸ் சாலையில் இருந்து ராமாவரம் தோட்டத்திற்கு போன பின், நான் பொங்கலுக்கு போவதில்லை. ஆனால் பொங்கல் தவறாமல் புதுத் துணிகள் தோட்டத்தில் இருந்து என் வீட்டிற்கு வந்துவிடும். பட்டுப்புடவை, ஜாக்கெட், வீட்டில் உடுத்திக் கொள்ள நான்கு புடவைகள், ஜாக்கெட் என்று அனுப்பி விடுவார்.

ஒவ்வொரு வருடமும் தன் தாயார் நினைவு நாளில் எம்.ஜி.ஆர். பூஜையறையில் தன் தாயார் படத்தை வைத்து வழிபடுவார். அன்று தன் தாயின் படத்திற்கு முன் சுமார் ஒரு மணி நேரம் அமர்ந்திருப்பார். சாம்பிராணி புகை பரவ, கற்பூரக்கட்டிகளை குவித்து பெரிதாக எரிய விடுவார். தாயின் மீது அப்படியொரு பக்தி அவருக்கு.

மற்றவர்களுக்கு இல்லாத விநோதமான பழக்கமெல்லாம் எம்.ஜி.ஆருக்கு உண்டு. பொதுவாக யாரும் சாப்பிட்ட பின் உடற்பயிற்சி, கடினமான வேலைகளையெல்லாம் செய்ய மாட்டார்கள்.

ஆனால் எம்.ஜி.ஆரோ சாப்பிட்டபின் பத்து முறை புல்-அப் செய்வார்.

அதை ஒரு நாள் பார்த்து விட்டு, ''தப்பில்லையா ஆண்டவனே'' என்று கேட்டேன்.

அதற்கு அவர், ''கஷ்டம் தான். அதையும் செய்து பார்க்க வேண்டும். உடற்பயிற்சி எந்த நேரத்திலும் செய்து பார்க்கலாம். சும்மா இருங்க ஆண்டவனே'' என்றார்.

என் பேரன் மகராஜன் சிறு வயதில் அடிக்கடி தோட்டத்திற்கு சென்று எம்.ஜி.ஆர். வீட்டுக் குழந்தைகளோடு விளையாடுவான். சாப்பாடு அங்கேதான்.

படப்பிடிப்பு இல்லாத போது எம்.ஜி.ஆரும் குழந்தைகளோடு சாப்பிட உட்கார்ந்து விடுவார். அதற்காகவென்றே பெரிய தட்டு இருக்கும். காய்கறி மற்றும் பதார்த்தங்கள் வைப்பதற்காக குழிகளும் பெரிதாக இருக்கும்.

அதில் எல்லா வகைகளும் வைக்கப்படும். அந்த தட்டைச் சுற்றி எம்.ஜி.ஆரும், குழந்தைகளும் உட்கார்ந்து கொள்வார்கள். எம்.ஜி.ஆர். அதில் தானும் உண்டு, மற்ற குழந்தைகளுக்கும் ஊட்டி விடுவார். அதுவே கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

1967-ல் எம்.ஜி.ஆர். குண்டடி பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது, நான் பேரன் மகராஜனையும் அழைத்துச் சென்றேன்.

கழுத்ததில் கட்டோடு இருந்த எம்.ஜி.ஆரைப் பார்த்து எனக்கு அழுகை வந்து விட்டது.

அப்போதும், ''எனக்கு உயிருக்கு ஆபத்தில்லையே. நல்லாத்தானே இருக்கேன். ஏன் அழ றீங்க?'' என்று சிரித்தபடியே கேட்டார்.

அப்புறம் வீட்டில் உள்ளவர்கள் நலம் விசாரித்து விட்டு பேரனைப் பார்த்து ''மகராஜன் என்ன பண்றான்?'' என்று கேட்டார். ''படிப்பதோடு, நாடகத்தில் நடிக்கிறான்'' என்றேன்.

மகராஜனை பாடிக் காட்டச் சொன்னார். அவனும் பாடினான். அதைக் கேட்ட எம்.ஜி. ஆர், ''இவன் நடிக்கட்டும் பாடட்டும். அத்தோடு கர்நாடக சங்கீதமும் கற்றுக் கொடுங்கள்'' என்று கேட்டுக் கொண்டார்.

1972-ல் வானொலியில் எம்.ஜி.ஆரின் 'தேன் கிண்ணம்' நிகழ்ச்சி இடம்பெற்றது. அதில் முதல் பாடலாக ''கப்பலோட்டிய தமிழன்'' படத்தில் இடம்பெற்ற ''என்று தணியும் இந்த சுதந்திர தாகம்'' என்ற பாரதி பாடலை இடம்பெறச் செய்தார்

என் பேரன் மகராஜன், ''உங்கள் படப்பாடலுக்கு பதில் வேறு படப்பாடலை போடுகி றீர்களே'' என்று கேட்டிருக்கிறான். அதற்கு எம்.ஜி.ஆர். ''உங்களுக்கு பிடித்தது என் பாடல்கள். எனக்குப் பிடித்தது இந்தப் பாடல்'' என்றார் சிரித்தவாறு.

'திருவருட் செல்வர்' படத்தில் மாஸ்டர் பிரபாகருக்கு பின்னணியாக மகராஜன் (அப் போது அவனுக்கு வயது 11) ''காதலாக கசிந்து'' என்ற பாடலைப் பாடியிருக்கிறான். சினிமாவில் அவனுக்கு அது முதல் பாடல்.

அதற்காக எம்.ஜி.ஆரிடம் ஆசி பெறச் சென்றபோது அவனை உச்சி மோந்து வாழ்த்தி யவர் அவனது வயதையும் பாராமல், ''என் அடுத்த படம் 'அடிமைப் பெண்'. அதற்கு இசை கே.வி. மகாதேவன். அவரிடம் நான் சொன்னேன் என்று சொல். அந்தப் படத்தில் நீயும் பாடலாம்' என்றார்.

1986-ல் மகராஜனின் திருமணம். காலை 9-00 மணிக்கு நேரம் குறிக்கப்பட்டு இருந் தது. அன்று நல்ல மழை. குளிர் காற்றும் கடுமையாக இருந்தது. அப்போது எம்.ஜி.ஆருக்கு இருந்த உடல்நிலையில் அவரால் வர முடியுமோ என்று சந்தேகமாக இருந்தது.


ஆனால் குறித்த நேரத்திற்கு முன்னதாகவே ஜானகியுடன் வந்து, மாங்கல்யம் எடுத்துக் கொடுத்து வாழ்த்தியவர், மகராஜனுக்கு மட்டுமின்றி, அறிமுகமே இல்லாத மணமகளுக்கும் பரிசு கொடுத்து விட்டுப் போனார்.

கடந்த ஆண்டில் என் மற்றொரு பேரன் தீபன் சக்கரவர்த்தி திருமணத்திற்கும் வந்தார். வாழ்த்தி பரிசுகள் கொடுத்து விட்டுப் புறப்பட்டார்.

காரில் ஏறப் போனவரிடம், ''ஆண்டவனே இனி உங்களை தொந்தரவு பண்ண மாட்டேன்'' என்றேன். அதற்கு எம்.ஜி.ஆர். கையை உயர்த்தியபடி, ''கொன்னுப்புடுவேன். இன்னும் எத்தனை பேரப்பசங்க (எனக்கு நிறைய பேரன்கள், ஒரு பேத்தி) இருக்காங்க. அத்தனை பேர் கல்யாணத்திற்கும் வருவேன்'' என்று உரிமையோடு சொன்னபோது என் கண்கள் கலங்கி விட்டன.

1980-ம் ஆண்டு ஜனவரி 31-ந் தேதி வி.என். ஜானகியின் தம்பி மணியின் மகள்களான ஜானு, சுதா, கீதா ஆகிய மூவர் திருமணமும் ஒரே நேரத்தில் கலைவாணர் அரங்கில் நடத்தப்பட்டது.

முக்கிய சடங்கு நேரத்தில் எம்.ஜி.ஆரை அந்த இடத்தில் எதிர்பார்த்தார்கள். அவரோ திருமணத்திற்கு வந்திருந்த பிரமுகர்களுடன் வெளியே நின்று பேசிக் கொண்டிருந்தார். அதனால் அவர் கையைப் பிடித்து இழுத்தேன். எம்.ஜி.ஆர். சிரித்தபடி, ''அய்யய்யோ இங்க பாருங்க. ஒரு பெண் என் கையைப் பிடிச்சு இழுக்கறது'' என்று சொல்ல வேடிக்கை



அமெரிக்காவில் நயாகரா நீர்வீழ்ச்சி அருகில் எம்.ஜி.ஆர்., பழனி பெரியசாமி, பண்ருட்டி ராமச்சந்திரன்.

பார்த்தவர்களெல்லாம் வியப்பு தாங்காமல் சிரித்தார்கள்.

நான் இதற்கு முன் ஆழ்வார்பேட்டை பீமண்ண முதலி தெருவில் குடி இருந்தேன். அப்போது ஈஸ்னோ பீலியோ தொல்லை காரணமாக மூச்சு திணறல் ஏற்பட்டு இசபெல்லா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன். அங்கு 23 நாட்கள் சிகிச்சை பெற்றேன்.

ஒவ்வொரு நாள் காலையிலும், மாலையிலும் ஜானகி வந்து விட்டுப் போனார். அந்த மருத்துவமனை செலவு முழுவதையும் எம்.ஜி.ஆரே பார்த்துக் கொண்டார். நான் குணமாகி வீடு திரும்பிய பின் வீட்டில் மின் விசிறி, தண்ணீர் வசதி இல்லாதது கண்டு ஜானகி, எம்.ஜி.ஆரிடம் கூறியிருக்கிறார்.

எம்.ஜி.ஆர். அப்போது வீட்டு வசதி வாரியத்திலிருந்த ஏ.சி. தேவரிடம் சொல்லி இப்போது நான் குடியிருக்கும் பட்டினப்பாக்கம் எம்.ஐ.ஜி. (434 ரூபாய் வாடகை) வீட்டை கிடைக்கும்படி செய்தார்.

1986 ஜனவரி 12-ந் தேதி தோட்டத்திலிருந்து கார் வந்தது. போனேன். நான் வந்திருப்பதை அறிந்து எம்.ஜி.ஆர். ஜானகியிடம் ''ஆண்டவன் என்னப் பண்ணப் போறாங்க. பேசாம சாப்பிட்டுட்டு ஓய்வெடுக்கட்டும்'' என்று சொல்லி அனுப்பினார். நானும் அதைத் தான் செய்தேன்.

மாலையாகி விட்டது. கீழே எம்.ஜி.ஆரைக் காண நிறைய பேர் வந்திருந்தார்கள், மந்திரிகள் எல்லாம் இருந்தார்கள். அப்போது என்னிடம் வந்த ஜானகி, ''உங்க ஆண்டவன் கீழே வர ரெடியாயிட்டார். நீங்களும் அப்படியே பார்த்துடுங்க'' என்றார்.

நான், ''ஆமா, என் ஆண்டவனை இங்கே பார்க்கறதுக்காக இவ்வளவு நேரம் காத்திருந்தேன்? வண்டியை அனுப்பும்மா. நான் வீட்டுக்குப் போறேன்'' என்றேன்.

ஜானகிக்கு தர்மசங்கடம். மேலே போய் எம்.ஜி.ஆரிடம் சொல்ல, அவர் உடனே என்னை மேலே வரச் சொன்னார்.

அப்போது கீழே வரத் தயாராக இருந்தவரைப் பார்த்து ''பொங்கல் வணக்கம்'' என்றேன், இயந்திர கதியில்.

எம்.ஜி.ஆர். ''ஏன் பொங்கலுக்கு இங்கே வரமாட்டீங்களோ?'' என்று கேட்டார்.

''கார் வந்தால் வருவேன்'' என்றேன்.

எப்போதுமே தோட்டத்திலிருந்து கார் வந்தால் தான் நான் அங்கு செல்வேன். நானாக அங்கு சென்றதில்லை. ஒரு விஷயம், நீங்கள் நம்பக் கூட மாட்டீர்கள். எனக்கு தோட்டத்தின் போன் நம்பர் கூட தெரியாது. என் வீட்டிலிருந்து தோட்டத்திற்கு போனே செய்தது கிடையாது.

எம்.ஜி.ஆரிடம் விடைபெற்றுக் கொண்டு செல்கையில் ஜானகி பச்சை மொச்சை கொட்டை வாங்கி வரச் சொன்னார். மறுநாள் அதை வாங்கி இரவுக்குள் பாதி உரித்து விட்டேன்.

பொங்கலன்று காலை 8-15-க்கு தோட்டத்திலிருந்து கார் வந்தது. தோட்டத்திற்கு சென்ற பின் மீதி மொச்சை கொட்டையையும் அங்கு வந்திருந்தவர்களிடமெல்லாம் ஆளுக்கு கொஞ்சம் கொடுத்து உரிக்கச் சொன்னேன்.

பகலில் சாப்பிட்டு விட்டு வழக்கம் போல் தூக்கம். மாலையில் எம்.ஜி.ஆரைப் பார்த்தேன். ஆயிரம் ரூபாய் (10 ரூபாய் கட்டு) கையில் கொடுத்தார். அந்த பணம் இன்னும் வைத்திருக்கிறேன். செலவு செய்யவே இல்லை. (என்று எடுத்து வந்து காட்டினார்)

எம்.ஜி.ஆர். குடும்பத்தில் சக்கரபாணியின் வாரிசுகள் அனைவருக்குமே பெயர் சூட்டியவர் எம்.ஜி.ஆர்.தான். குழந்தை பிறந்த 28-வது நாளில் அவர்கள் வீட்டில் பெயர் சூட்டு விழா, காது குத்தல் நடைபெறுவது வழக்கம். ஜானகியின் தம்பி மணியின் வாரிசுகளுக்கும், அவர்களது பேரக் குழந்தைகளுக்கும் எம்.ஜி.ஆர்.தான் பெயர் சூட்டுவார்.

1962-ல் மணியின் முதல் பெண் லதா பிறந்த 28-வது நாள் விசேஷத்திற்காக நாங்களெல்லாம் அங்கு செல்ல தயாராக இருந்தபோது எம்.ஜி.ஆரின் மனைவி சதானந்தவதி காலமான செய்தி வந்தது. அதற்கப்புறம் எம்.ஜி.ஆர். குடும்பத்தில் குழந்தைகள் பிறந்தாலும் பெயர் சூட்டுவது விசேஷமாக கொண்டாடுவதெல்லாம் கிடையாது.

கடந்த ஆண்டு (1987) ஆகஸ்டு மாதம் எம்.ஜி.ஆர். பரிசோதனைக்காக அமெரிக்கா சென்றிருந்தபோது, மணியின் 4-வது பெண் ஜானகிக்கு பெண் குழந்தை பிறந்தது. ஜானகியின் கணவர் அமெரிக்காவில் டாக்டராக இருக்கிறார்.

குழந்தைக்கு அனிதா என்று பெயர் சூட்டினார்கள். 1962-க்குப் பின் அனிதாவுக்குத் தான், பிறந்த 28-வது நாளில் பெயர் சூட்டல், காது குத்தும் விசேஷமெல்லாம் நடந்தது. அதில் கலந்து கொண்ட எம்.ஜி.ஆர். குழந்தைக்கு தன் கையால் பாயசம் ஊட்டி மகிழ்ந்தார்.

ஜானகி அம்மாளுக்கு கடந்த மூன்றாண்டுகளாகவே ஆபரேஷன் செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதிகம் நடந்தாலே மூச்சு வாங்கும். ஆனால் ஆபரேஷனுக்கு பயந்து கொண்டு ஜானகி பயந்தபடியே இருந்திருக்கிறார். கடந்த ஆகஸ்டில் எம்.ஜி.ஆருடன் அமெரிக்கா சென்றபோது ஜானகியை வற்புறுத்தி சம்மதிக்க வைத்து விட்டார்கள்.

ஜானகியின் ஆபரேஷன் நடந்த நேரத்தில் அவரது நகைகளெல்லாம் எம்.ஜி.ஆரிடம் கொடுத்திருக்கிறார்கள்.

அவர் அவற்றை தானே அணிந்து கொண்டு ''என் ஜானு ஆபரேஷனை தாங்குவாளா?'' என்று சிறு குழந்தை போல் அரை மணி நேரம் அழுதிருக்கிறார். ஆபரேஷன் முடிந்து ஜானகியை மீண்டும் காணும் வரை எம்.ஜி.ஆர். மூன்று நாட்களாக சாப்பிடவே இல்லை.

டாக்டர்கள் எவ்வளவோ வற்புறுத்தியும் எம்.ஜி.ஆர். மருந்து, மாத்திரைகளைக் கூட சாப்பிட மறுத்து விட்டார்.

அமெரிக்காவிலிருந்து திரும்புவதற்கு முன் ஜானகியின் தம்பி மணியின் மனைவி கடைக்குச் சென்று புடவைகள் எடுத்திருக்கிறார்.

யார், யாருக்கெல்லாம் புடவை வாங்கப்பட்டிருக்கிறது என்ற லிஸ்டை எம்.ஜி.ஆர். பார்த்திருககிறார். பார்த்தவர், ஒரு பெயர் காணவில்லை என்று குறைப்பட்டிருக்கிறார். ''எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது'' என்று பதில் சொல்லியிருக்கிறார்கள்.

''நல்லா யோசிச்சு பாருங்க'' என்று எம்.ஜி.ஆர். மீண்டும் கேட்டிருக்கிறார். ''ஆண்டவன்'' என்று பதில் வர, ''ஆம் ஆண்டவன்தான். அவருக்கு புடவை எடுக்காம இருக்கலாமா?'' என்று சொன்ன பின் எனக்கும் இரண்டு புடவைகள் எடுத்து வந்திருக்கிறார்கள் (என்று இரண்டு புடவைகளை எடுத்து வந்து காட்டினார்)

அமெரிக்காவில் போய் என்னைப் பத்தி ஞாபகம் வச்சுக்கணும்னு எம்.ஜி.ஆருக்கு ஒன்றும் அவசியமில்லை. ஆனால் என்னையும் ஞாபகம் வச்சிருந்த ஆண்டவனை என் கிட்ட இருந்து பிரிச்சுட்டாங்களே'' (என்று அழுதார்)

அமெரிக்காவில் இருந்து திரும்பியதிலிருந்தே எம்.ஜி.ஆருக்கு தன் முடிவை பற்றி தானே தெரிந்து கொண்டாரோ என்னவோ, அதற்குப் பின் அவரது நடவடிக்கைகளெல்லாம் வழக்கத்திற்கு மாறாக இருந்தன.

திருமண நாளில் தன்னிடமிருந்த நகைகள், மோதிரங்களையெல்லாம் அணிந்து கொண்டிருக்கிறார்.

அமெரிக்காவிலிருந்து திரும்புவதற்கு முன் அங்குள்ள டாக்டர்களுக்கும், சிப்பந்திகளுக்கும், திரும்பிய பின் டெல்லி தமிழ்நாடு இல்லத்தில் உள்ளவர்களுக்கும் ஆயிரக் கணக்கில் பணத்தை அள்ளிக் கொடுத்து இருக்கிறார்.

நேரு சிலை திறப்பு விழாவுக்கு சென்னை வந்த ராஜீவ்காந்திக்கும், கவர்னர் குரானாவுக்கும் கட்டிப் பிடித்து முத்தம் கொடுத்து இருக்கிறார்.

நான் என் ஆண்டவனை கடைசியாகப் பார்த்தது 1-12-87 அன்று தான். காலை 8-15-க்கு போய், மாலை 6-45-க்கு சந்தித்தேன். என் கைகளைப் பிடித்துக் கொண்டு ஜானகிக்கு ஆபரேஷன் நடந்தது பற்றி சொல்லி அழுதார்.

அப்போது ஜானகியும் அங்கு வர எம்.ஜி.ஆர். அழுவதைக் கண்டு, ''ஆமா உங்க ஆண்டவன்தானே ஆரம்பத்தில் நாம ஒன்றா சேருவதற்கு குறுக்கே நின்றார்'' என்று பொய்க் கோபத்துடன் சொல்ல எம்.ஜி.ஆர். சிரித்து விட்டார்.

24-12-87 வியாழன் காலையில் ''என் ஆண்டவன் இறந்து போனதாக செய்தி வந்த போது எனக்கு நம்பிக்கையில்லை. தோட்டத்திலிருந்து ஜீப் ஒன்று வந்தது, ராஜாஜி ஹாலுக்கு என்னை அழைத்துச் செல்ல. என்னை தயாராக இருக்கச் சொல்லி விட்டு, இன்னொருவரையும் அழைக்கச் சென்ற ஜீப் கலவர கூட்டத்திடம் சிக்கிக் கொண்டு விட்டது. ஆக என் ஆண்டவன் உடலைக் கூட என்னால் பார்க்க முடியாமல் போனது.''



## ஊருக்குத் தெரியாத கண் ஆபரேஷன்...

எம்.ஜி.ஆரின் குடும்ப டாக்டர் பி.ஆர். சுப்பிரமணியம் தனது அனுபவங்களைக் கூறுகிறார்.


"23-12-87 அன்று புதன் காலையில் 8-00 மணிக்கு ராமாவரம் தோட்டத்திற்கு சென்றேன். அமெரிக்காவில் சிகிச்சை பெற்று திரும்பியதிலிருந்து தினசரி காலையில் எம்.ஜி.ஆர். உடலை நான் பரிசோதனை செய்வது வழக்கம்.

அன்றும் அப்படித்தான் அவரது ரத்த அழுத்தம், இதயத் துடிப்பு மற்றும் பொதுவான சோதனைகளையெல்லாம் செய்தேன்- சாதாரணமாகவே இருந்தார். எந்தப் பிரச்சினையும் இல்லை- எப்போதும் போல் என்னோடு தமாஷாக சிரித்துப் பேசினார். அப்புறம் வீடு திரும்பி விட்டேன்.

எம்.ஜி.ஆர். அமெரிக்காவிலிருந்து திரும்பியதிலிருந்தே அவரது உடலை 24 மணி நேரமும் இடைவிடாமல் கவனித்துக் கொள்ள எட்டு மணி நேரத்திற்கு ஒரு டாக்டர் என்ற வகையில் முத்துசாமி, சந்திரமோகன், மகாலிங்கம் என்ற மூன்று டாக்டர்கள் இருந்தார்கள்.

'டியூட்டி டாக்டர்கள்' என்று அழைக்கப்பட்ட இவர்கள் மாற்றி மாற்றி எம்.ஜி.ஆரின் உடல்நலனை கவனிப்பார்கள். அதற்காக ஒரு மருத்துவனையில் உள்ள மருத்துவக் கருவிகள், மருந்துகள் உட்பட எல்லா வசதிகளும் ராமாவுரம் தோட்டத்திலேயே இருந்தன.

அன்று மாலை 5-00 மணிக்கு பாத்ரூம் சென்று திரும்பிய எம்.ஜி.ஆர். உடலில்



டாக்டர் பி.ஆர்.எஸ்., எம்.ஜி.ஆர்., ஜப்பானிய நரம்பியல் நிபுணர் டாக்டர் கானுான் (தங்கயானை பரிசு பெற்றவர்).

அசதியான உணர்வு ஏற்பட்டு, அதை டாக்டர் முத்துசாமியிடம் கூறி இருக்கிறார். அப்படியே ''டாக்டர் பி.ஆர்.எஸ்.ஸை வரச் சொல்லுங்கள்'' என்றும் கேட்டுக் கொண்டிருக்கிறார். முத்துசாமியும் எனக்கு போன் செய்து, ''எம்.ஜி.ஆர். வரச் சொல்கிறார்'' என்று தகவல் தெரிவித்தார்.

நான் உடனே தோட்டத்திற்கு விரைந்தேன். மாலை 5-35 அல்லது 5-40 இருக்கும். நான் செல்வதற்குள் முத்துசாமி எம்.ஜி.ஆரின் இதயத் துடிப்பை சரி பார்த்திருக்கிறார். இதயத் துடிப்பு குறைந்து இருப்பதை அது காட்டியிருக்கிறது.

என்னிடம் முத்துசாமி சொன்னபோது ஈ.சி.ஜி.யை நானும் கவனித்தேன். எம்.ஜி.ஆரின் இதயத் துடிப்பு திருப்திகரமாக இல்லை. ரத்த ஓட்டம் குறைந்தது போலிருந்தது.

எம்.ஜி.ஆர். உடலைப் பொறுத்தவரையில் இதயத்துடிப்பில் கோளாறு என்றதுமே எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. அதற்கு முன் இதயத்தில் அவருக்கு எந்த பிரச்சனையும் ஏற்பட்டதில்லை.

1984-ல் அப்பல்லோவில் எம்.ஜி.ஆர். அனுமதிக்கப்பட்டபோது, அவருக்கு இதயத்தில் கோளாறு இருப்பதாக நிபுணர்களெல்லாம் கூறினார்கள். நான் அதை மறுத்து, இதயத்தில் கோளாறு இல்லை என்பதை நிரூபித்தேன்.

எனவே இந்த முறை இதயத் துடிப்பில் கோளாறு என்றதுமே, மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லலாம், என்று முடிவு செய்தோம். அதை எம்.ஜி.ஆரிடம் சொன்னபோது, ''எனக்கு என்ன நெஞ்சுவலி இருக்கா, உடம்பில் வியர்வை இருக்கா, எதுக்கு ஆஸ்பத்திரி

போகணும்?'' என்று பிடிவாதமாக மறுத்து விட்டார்.

அதனால் சந்திரமோகன், மகாலிங்கம் ஆகிய டியூட்டி டாக்டர்கள் உட்பட, நரம்பியல் நிபுணர் டாக்டர் நரேந்திரன், இருதய நிபுணர் கே.எம். செரியன் (விஜயா மருத்துவமனை), கல்யாண்சிங் (விஜயா மருத்துவமனையைச் சேர்ந்த இவர் இதய சிகிச்சைக்கு மயக்க மருந்து கொடுப்பவர்), டாக்டர் சுப்பிரமணியம் (இரத்தப் பரிசோதனை செய்பவர்) ஆகிய அனைவரையும் தோட்டத்திற்கு வரவழைத்தோம்.

இரவு 8-00 மணிக்கு மீண்டும் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல அனுமதி கேட்டபோது எம்.ஜி.ஆர். அப்போதும் மறுத்து விட்டார். ''எனக்கு எதுவும் இருக்காது. ஏன் பயப்படுகிறீர்கள்?'' என்று எங்களுக்கு தைரியம் சொன்னார். ''எனக்கு எதுவானாலும் இங்கேயே பாருங்கள்'' என்றும் சொல்லிவிட்டார்.

8-00 மணிக்கு கஞ்சி சாப்பிட்டார். 10-00 மணிக்கு மோர் அருந்தினார். அதற்குள் இரண்டு முறை சிறுநீர் கழித்தார். (பாத்ரூம் செல்ல தேவையின்றி படுக்கையறையிலேயே அதற்கு வசதி செய்யப்பட்டு இருந்தது) அதில் எந்த சிக்கலும் இல்லை.

10-00 மணி வரை எங்கள் அனைவருடனும் இயல்பாக சிரித்துப் பேசிக் கொண்டிருந்த எம்.ஜி.ஆர்., ''எனக்கு தூக்கம் வருது. தூங்கப் போறேன். நீங்களெல்லாம் போகலாம்'' என்று எங்களை போகச் சொல்லிவிட்டார். அதுவரை அவரது இதயத்துடிப்பில் எந்த முன்னேற்றமும் இல்லை.

அதனால் முத்துசாமி, கல்யாண்சிங் இருவரையும் எம்.ஜி.ஆருக்கு அருகிலேயே இருக்கச் சொல்லிவிட்டு, மற்ற அனைவரும் மாடியிலிருந்து கீழே வந்து விட்டோம். நள்ளிரவு 12-00 மணி வரை எந்த மாறுதலும் தெரியவில்லை.

நள்ளிரவுக்கு பிறகு 12-50 மணி இருக்கும். முத்துசாமி மாடியிலிருந்து வேகமாக இறங்கி வந்து, ''ஈ.சி.ஜி. சரியாக இல்லை. எம்.ஜி.ஆர். நிலைமை மோசம்'' என்று கூற நாங்கள் மாடிக்கு ஓடினோம்.

அந்த நேரத்தில் எம்.ஜி.ஆர். இதயத்திலுள்ள இடதுபக்க அறையில் (Ventricular Techy Cardia) துடிப்பு அதிகமாக இருந்திருக்கிறது. நாங்கள் மேலே செல்வதற்குள்ளாகவே எம்.ஜி.ஆருக்கு இதயத் துடிப்பு நின்று போனது.

அதனால் கல்யாண்சிங்கும், முத்துசாமியும் மார்பில் பிசைந்து (Resuscitation Measures) பார்த்தார்கள். காலை 3-00 மணி வரை அந்த முயற்சி நடந்தது.

நடுநடுவே லேசான துடிப்பு வந்தாலும்- குறித்த நேரத்திற்கு மேல் பலனில்லை. எம்.ஜி. ஆர். உடம்பில் நீலம் (அதை Cyoanosis என்பார்கள்) வந்து விட்டது. அதனால் எம்.ஜி.ஆர். மரணத்தை உறுதிப்படுத்தி (3-00 மணிக்கு), அதிகாரப்பூர்வமாக அறிவித்தோம்.

எம்.ஜி.ஆர். இறந்ததை ஜானகி அம்மையாரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதிக துக்கத்தினால் உடல் குலுங்கினார். ஆபரேஷன் செய்த உடம்பு தாங்காது என்பதால் அவருக்கு தூக்க மாத்திரை கொடுத்தோம். அருகில் லி∴ப்டிலேயே படுத்துக் கொண்டார்.

எம்.ஜி.ஆரின் உடல் கெட்டுப் போகாதிருக்க 'Formalin' ஊசி போட்டாக வேண்டும். அதற்காக அரசு தலைமை மருத்துவமனைக்கு தகவல் கொடுத்தோம். அவர்கள் எல்லாம் தயார் செய்து தோட்டத்திற்கு வரவே காலை 6-00 மணிக்கு மேல் ஆகி விட்டது.

நோயாளி உடலில் குளுகோஸ், ரத்தம் செலுத்துவது போல் '∴பார்மாலின்' ஊசி மருந்தை இறந்தவர் உடலில் செலுத்த வேண்டும். அதற்காக எம்.ஜி.ஆர். தொடையில் சிறிய துளையிட்டு அதில் ஊசியைச் செலுத்தினார்கள். மருந்து உடல் முழுவதும் பரவவே சுமார்



எம்.ஜி.ஆர்., சதானந்தவதி

ஒரு மணி நேரத்திற்கு மேலாக விட்டது.

அப்போது எம்.ஜி.ஆரின் உடல் ஆடைகளின்றி இருக்குமென்பதால் வெளியாட்கள் யாரையும் பார்க்க நாங்கள் அனுமதிக்கவில்லை. அந்த நேரத்தில்தான் கருணாநிதி, ஜெயலலிதா ஆகியோர் எம்.ஜி.ஆரைப் பார்க்க வந்து திரும்பி இருக்கிறார்கள்.

லிஃப்டை உடைத்து எம்.ஜி.ஆர். உடலை வெளியேற்றினார்கள், என்றெல்லாம் வந்த செய்திகள் தவறு. விளக்குகள் அணைந்து விட்டன என்பது கிடையாது. எம்.ஜி.ஆர். உடலை படுத்த நிலையில் லிஃப்டில் கொண்டு வர முடியாது என்பதால், சாய்ந்த நிலையில் லிஃப்ட் மூலமாகவே கீழே எடுத்துச் சென்றார்கள். அங்கிருந்து அப்படியே ராஜாஜி ஹாலுக்கு கொண்டு போனார்கள். இதுதான் நடந்த நிகழ்ச்சிகள்'' என்றார் டாக்டர் பி.ஆர். சுப்பிரமணியம்.

''பொன்னிறமான எம்.ஜி.ஆரின் உடல் கருத்துப் போன மர்மம் என்ன என்று பேசுகிறார்களே?'' என்று கேட்டதும் டாக்டர் கூறினார்.

''மனிதனுக்கு மரணம் ஏற்பட்டாலே உடலில் ஆக்ஸிஜன் குறைந்து (இதை 'Anoxia' என்பார்கள்) உடல் கறுத்து விடும். அந்த வகையில்தான் எம்.ஜி.ஆரின் நிறம் மாறியிருக்கிறது.

இரண்டு நாட்கள் உடலை வைத்திருந்தால் நிறம் மாறாமல் என்ன செய்யும். ரத்தத்திலுள்ள திசுக்கள் செயலிழந்தாலே உடல் அதன் தன்மையிலிருந்து மாறி விடுவது இயற்கை'' என்று விளக்கமளித்தார், டாக்டர்.

''எந்த சூழ்நிலையில் எப்போது முதல் எம்.ஜி.ஆருக்கு நெருக்கமானவராக மாறினீர்கள்'' என்று கேட்டதற்கு பி.ஆர். சுப்பிரமணியம் கூறினார்.

''எம்.ஜி.ஆரின் இரண்டாவது மனைவி சதானந்தவதிக்கு காசநோய் ஏற்பட்டு, மைலாப்பூரிலிருந்த டாக்டர் வாசுதேவராவிடம் சிகிச்சை பெற்றார். 'ஸ்டெப்டோமெசின்'

ஊசியைத் தொடர்ந்து போட்டுக் கொண்டார். இதயத்தில் புரை ஏற்பட்டதால் இருமும்போது ரத்தம் வந்தது. இந்த நிலையில் வாசுதேவராவ் எம்.ஜி.ஆரிடம் ''உங்கள் மனைவியின் உயிர் ஆறு மாதத்திற்கு மேல் தாங்காது. அதற்குள் அவரது ஆசைகளையெல்லாம் முடிந்தவுரை பூர்த்தி செய்யப் பாருங்கள்'' என்று சொல்லிவிட்டார்.

நான் அப்போதுதான் சைனாபஜார் ரோட்டில் புதிதாக கிளீனிக் துவங்கியிருந்தேன். அதே சாலையில்தான் எம்.ஜி.ஆரின் குடும்பம் குடியிருந்தது. அதனால் எம்.ஜி.ஆர். அண்ணன் சக்கரபாணி, சதானந்தவதியின் மெடிக்கல் ரிப்போர்ட், எக்ஸ்ரே எல்லாம் எடுத்து வந்து என்னிடம் காட்டி, ''சதானந்தவதி உயிர் பிழைக்க வழி இருக்கிறதா?'' என்று கேட்டார்.

அப்போது காசநோய்க்கு 'ஆம்னாமெசின்' என்ற புதிய மருந்து கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. அந்த நம்பிக்கையிலும் வேலூரில் உள்ள 'பெட்ஸ்' என்ற டாக்டரிடம் காட்டி சதானந்தவதியின் இதயத்தில் உள்ள புரையை ஆபரேஷன் மூலம் சரி செய்து விடலாம் என்றும் சக்கரபாணி, எம்.ஜி.ஆர். இருவருக்கும் தைரியம் சொன்னேன்.

வேலூருக்குச் செல்லாமலே, மூன்றே மாதத்தில் சதானந்தவதியின் நோயை குணமாக்கியும் விட்டேன். எம்.ஜி.ஆர். குடும்பத்திற்கு அப்போது என் மீது ஏற்பட்ட ஆழமான நம்பிக்கை இன்று வரை விடவில்லை.

1956 அல்லது 1957 எந்த வருடமென்று நினைவில்லை. சதானந்தவதியின் கர்ப்பப்பையில் அடிக்கடி வலி இருப்பதாக என்னிடம் அழைத்து வந்தார்கள். பரிசோதனையில் அவரது கர்ப்பப்பையிலுள்ள 'பலோபியன் டியூப்' என்ற குழாய் பாதையில் கரு வளர்ந்திருப்பதைக் கண்டு பிடித்தேன்.

சிறிய மெல்லிய அந்த குழாயில் நான்கு மாத கரு இருந்தது. அதற்கு மேல் வளர்ந்தால் டியூப் வெடித்து சதானந்தவதி உயிரிழக்க நேரிடும் அபாயம் உண்டு என்பதால் ஆபரேஷன் செய்யச் சொன்னேன்.

சதானந்தவதியை மதுரநாயகம் என்ற பெண் டாக்டர் பரிசோதித்து 'குடல் வால்' (அபெண்டிஸைஸ்) நோய் என்றார்.

கடைசியில் ஸ்டான்லி மருத்துவமனையில் உள்ள டாக்டர் மாதவன் எனது கூற்றை உறுதி செய்து ஆபரேஷன் மூலம் டியூபில் வளர்ந்த சிசுவை நீக்கி குணப்படுத்தினார். சதானந்தவதி அப்பறம் நீண்ட காலம் உயிரோடு இருந்து இருக்கலாம். ஆனால் எனது எச்சரிக்கைக்கு உகந்தவாறு அவர் நடக்கவில்லை. சமதரையில் நடந்து செல்வதோடு, பணிகளைக் கவனிப்பதோடு இருந்து இருக்கலாம்.

லாயிட்ஸ் சாலையிலுள்ள வீட்டின் மாடியிலிருந்து அடிக்கடி இறங்கி ஏறுவது என்று இதயத்திற்கு அதிக வேலையைக் கொடுக்க, அதனால் இதயம் பலவீனமடைந்து, காசநோய் மீண்டும் முற்றி, குணப்படுத்த முடியாமலே காலமானார்.

எம்.ஜி.ஆர். எந்த நிலையிலும் மருத்துவமனை சென்று சிகிச்சை பெறுவதை விரும்பாதவர். அவர் முதல்வராவதற்கு முன் ஒரு சமயம், வலது கண் பார்வை மங்கலாகத் தெரிகிறது என்றார். நான் 'காட்ராக்ட்' (சதை) வளர்ந்திருக்கிறதென்று சொன்னேன்.

எம்.ஜி.ஆர். ஒப்புக் கொள்ளவில்லை. முந்திய தேர்தல் பிரசாரத்தின்போது வேனில் சென்றிருக்கிறார். ஓரிடத்தில் வீதியின் மேலே சென்ற வயர்கம்பி அவரது நெற்றியில் இடித்து நரம்பில் அடிபட்டிருந்தது. அதை நான் குணப்படுத்தியிருந்தேன்.

அந்த நிகழ்ச்சியை அவர் நினைவுபடுத்தி, ''நீங்கள் சரியாக சிகிச்சை செய்யவில்லை. அதனால் தலையில் பாதிப்பு ஏற்பட்டு பார்வை மங்கியிருக்கலாம்'' என்று சொன்னார்.



வி.என். ஜானகி அருகில் லீலாவதி (எம்.ஜி.ஆருக்கு சிறுநீரகம் அளித்தவர்)

நான் அப்போதும், ''காட்ராக்ட்'' தான் உங்களுக்கு வந்து இருக்கிறது. அது உங்கள் தாயார் கொடுத்த சொத்து. பரம்பரையாக வருவதை எப்படி தடுக்க முடியும்? தவிர நடிகர் என்ற முறையில் தலையில் 'டை' அடித்துக் கொள்கிறீர்கள். அதன் ரசாயன விளைவுகள் 'காட்ராக்ட்டை' நிச்சயமாக உருவாக்கும்'' என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னேன். அப்போதும் அவருக்கு நம்பிக்கை பிறக்கவில்லை.

சுமார் மூன்று மாத காலம் அரைகுறை பார்வையிலேயே படப்பிடிப்பிலெல்லாம் கலந்து கொண்டார். சண்டைக் காட்சிகளிலும் நடித்திருக்கிறார்.

அப்புறம் எம்.ஜி.ஆர். அயல் நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். பிரான்ஸ் நாட்டில் ஒரு கண் டாக்டரிடம் தன்னை பரிசோதித்தபோது தனக்கு 'காட்ராக்ட்' இருப்பதை உறுதியாக அறிந்தார். சென்னை திரும்பியதும் என்னிடம் அது பற்றிக் கூறினார்.

நான் ''இனியும் தாமதிக்காதீர்கள். அறுவை சிகிச்சை செய்து கொள்ளுங்கள்'' என்றேன்.

எம்.ஜி.ஆரோ ''எந்த சிகிச்சை நடைபெறுவதானாலும் தோட்டத்திலேயே தான் நடை பெற வேண்டும். மருத்துவமனைக்கெல்லாம் வர மாட்டேன்'' என்று உறுதியாகச் சொல்லி விட்டார்.

நான் பத்ரிநாத்தை அணுகியபோது அவர் தோட்டத்திற்கெல்லாம் வர முடியாதென்று மறுத்து விட்டார். அதனால் ராமச்சந்திரன் (இப்போது கச்சேரி சாலையில் கிளீனிக் வைத்து இருப்பவர்) என்ற டாக்டரை தோட்டத்திற்கு அழைத்துச் சென்று, அவர் மூலம் எம்.ஜி.ஆருக்கு அறுவை சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. வெளி உலகம் அறியாத நிகழ்ச்சி இது.

எப்போதுமே மருத்துவமனைக்கு செல்ல எம்.ஜி.ஆர். விரும்பாத காரணங்களால்

அவர் வெளிப்புறப் படப்பிடிப்பிற்காக சிம்லா (அன்பே வா), காஷ்மீர் (ராமன் தேடிய சீதை, இதய வீணை), ஜப்பான் (உலகம் சுற்றும் வாலிபன்), ஊட்டி ஆகிய இடங்களுக்குச் சென்ற போதெல்லாம் நானும் உடன் சென்றிருக்கிறேன்.

கருணாநிதி முதல்வராக இருந்தபோது ஒரு சமயம் வயிற்றுப் போக்கு காரணமாக மிகுந்த அவதிப்பட்டார். எந்த சிகிச்சையாலும் கட்டுப்படுத்த முடியவில்லை. எம்.ஜி.ஆரின் யோசனையின்பேரில், அவரை பரிசோதித்து மருந்தளித்து குணப்படுத்தினேன்.

ஆரம்ப காலத்தில் என் கிளீனிக்கில் எனக்காக நீண்ட நேரம் எம்.ஜி.ஆர். காத்திருப் பார். கால மாற்றத்தில் எம்.ஜி.ஆர். தலைவராக உயர்ந்து விட்டதால் அவரைக் காணச் செல்லும் நான் அவருக்காக காத்திருக்க நேரிட்டது.

என்னை எப்போதுமே எம்.ஜி.ஆர்., ''டாக்டர் சார்'' என்றுதான் அழைத்தார். நானும் அவரை ''சார்'' என்றுதான் அழைத்து வந்தேன்.

எம்.ஜி.ஆர். அசைவமாக இருந்தாலும் அவருடன் நெருங்கி பழகிய நான், எனது சைவ பழக்கத்தை மாற்றிக் கொள்ளவில்லை.

''நான் அசைவம் சாப்பிட்டு உங்களை விட எவ்வளவு வலுவாக இருக்கிறேன் பார்த்தீர் களா?'' என்பார் எம்.ஜி.ஆர். நானும் விடாமல், ''புலால் உண்ணும் புலி, சிங்கத்தை விட சைவப் பிராணிகளான யானை, ஒட்டகச் சிவிங்கி நீண்ட தூரம் ஓடக் கூடியவை'' என்று பதில் அளிப்பேன். மற்றபடி எனது சைவ பழக்கத்திற்கு மிகுந்த மரியாதை அளிப்பவர் எம்.ஜி.ஆர். வெளியிடங்களுக்குச் செல்லும்போது நான் ஒருத்தன் மட்டும் சைவமாக இருந்தாலும், எனக்காக தனி சமையல், தட்டு, ஸ்பூன் எல்லாமும் அசைவ வாடையின்றி இருக்கச் செய்வார்.

எங்களுக்குள் வாதங்கள் நிகழும்போது ''பி.ஆர். எஸ்ஸின் நோயாளிதான் எம்.ஜி. ஆர். எம்.ஜி.ஆர். டாக்டர் அல்ல நான்'' என்பேன். அதைக் கேட்டு சிரித்துக் கொள்வார்.

60 வயதுக்கு மேல் எம்.ஜி.ஆர். நாக்கை கட்டுப்படுத்திக் கொள்ளவில்லை. பாதாம் பருப்பு, பாசந்தி கேக் என்று கொழுப்பு சத்துமிக்க பொருட்களை அதிகம் சாப்பிட்டார். என்னால் அதை தடுக்கவும் முடியவில்லை. அவரது ஆரோக்கியம் கெட அதுவும் ஒரு காரணமாக இருந்தது.

அமெரிக்கா சென்று வந்த பின்பும் எம்.ஜி.ஆர். சில விஷயங்களில் கட்டுப்பாடாக இருக்கவில்லை. வெளி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது, திருமணங்களுக்கு அதிகாலையி லேயே செல்வது என்று அனாவசியமாக உடலை வருத்திக் கொண்டார். இல்லையென்றால், இன்னும் பல்லாண்டுகள் அவர் உயிரோடு இருந்திருக்க முடியும்.

எம்.ஜி.ஆர். முதல்வரான பின் பலரும் மெடிக்கல் சீட், அது, இது என்று சிபாரிசுக்கு என்னிடம் வந்தார்கள். நான் அசைந்து கொடுத்திருந்தால் நிறைய சம்பாதித்து இருக்கலாம். அதை நான் விரும்பவில்லை.

எம்.ஜி.ஆரால் நான் பெற்ற ஒரே உதவி, பெசன்ட் நகரில் தவணை முறையில் பணம் கட்டும் வகையில் ஒரு வீடு கிடைத்தது. அவ்வளவுதான். அதை வாடகைக்கு விட்டு விட்டு இந்த வீட்டில் (ஆழ்வார்பேட்டையில்) வாடகைக்கு குடி இருக்கிறேன்."



அன்பே வா'வில்

# சினிமா தந்திரங்கள்

**எம்.**ஜி.ஆரின் 100-வது படத்தை யார் தயாரிப்பது என்று பெரிய தயாரிப்பாளர்க ளுக்குள் கடும் போட்டியே இருந்தது. மாடர்ன் தியேட்டர்ஸ் டி.ஆர். சுந்தரத்தின் வாரிசு ஆர். சுந்தரம் எம்.ஜி.ஆரை நேரிலேயே பார்த்து, 100-வது படத்தைத் தயாரிக்கும் வாய்ப்பை தனக்கே தர வேண்டும் என்று கேட்டிருக்கிறார். ஆனால் எம்.ஜி.ஆருக்கு விருப்ப மில்லை. அதனால் நாசூக்காக சொல்லி அவரை அனுப்பி விட்டாராம். நாகி ரெட்டியும் முயற்சித்ததாக தெரிகிறது. கலைஞர் கருணாநிதி தன் மேகலா பிக்சர்ஸ் மூலமாகவும் முயற்சி செய்திருக்கிறார். ஆனால் யாருக்கும் பிடி கொடுக்காத எம்.ஜி.ஆர். 100-வது பட வாய்ப்பை ஜெமினி நிறுவனத்திற்கே அளித்திருக்கிறார். அதுவும் எப்படி?

பொதுவாக எம்.ஜி.ஆர். படங்கள் என்றாலே கீழ்மட்ட மக்கள்தான் பார்ப்பார்கள் என்ற இமேஜ் இருந்தது. அவர்கள் எல்லாம் 'விசிலடிச்சான் குஞ்சுகள்' என்ற இழிவான பார்வையும் இருந்தது. அப்போது சிவாஜி ஆதிக்கம் செலுத்திய நேரம். பல்வேறு டைரக்டர் களின் படங்களில் அவர் நடித்துக் கொண்டிருந்தார். எல்லா தரப்பு மக்களும் சிவாஜியின் படங்களைப் பார்க்கிறார்கள் என்று ஒரு பெயர் இருந்தது. அதனால் எம்.ஜி.ஆர். தனது இமேஜை மாற்றிக் கொள்ள விரும்பினார். அப்போது அவர் நடித்த படங்களை எம்.ஏ. திருமுகம் அல்லது காசிலிங்கம் இப்படி குறிப்பிட்ட ஒரு சிலரே இயக்கிக் கொண்டிருந்தார். கள். அதனால் சிவாஜியை வைத்து இயக்கிய இயக்குநர்களின் பக்கம் தன் பார்வையை



'ஒளிவிளக்கு' படத்தில்.

விரித்தார் எம்.ஜி.ஆர்.

அப்போது டி. பிரகாஷ்ராவ் அமரதீபம், உத்தம புத்திரன் ஆகிய படங்களை இயக்கி பெரிய டைரக்டராக புகழ் பெற்றிருந்த நேரம். எம்.ஜி.ஆர். படத்தை இயக்க வேண்டும் என்று எந்த தயாரிப்பாளராவது அவரைக் கேட்டால், "சீ... போ..." என்று உதறித் தள்ளுமள வுக்கு உச்சத்தில் இருந்தார். அதனால் யாரையாவது அனுப்புவதை விட தானே அவரைப் பார்ப்பது நல்லது என்று எம்.ஜி.ஆர். முடிவு செய்து பிரகாஷ்ராவை நேரிலேயே பார்த்து பேசினார். விளைவு 'படகோட்டி'யை பிரகாஷ்ராவ் இயக்கினார்.

இதே வழியைப் பின்பற்றித்தான் ஜி.என். வேலுமணியைப் பிடித்தார் எம்.ஜி.ஆர். பணத்தோட்டம், படகோட்டி, கலங்கரை விளக்கம், குடியிருந்த கோயில் என்று வரிசையாக நடித்தார்.

நாகிரெட்டி மற்றவர்களை விட ஒரு படி மேலே போய் 'எங்க வீட்டுப்பிள்ளை'யில் எம்.ஜி.ஆரை ஒப்பந்தம் செய்ததோடு அல்லாமல், "நீங்கள் என்ன விரும்புகிறீர்களோ, அதை நான் செய்து கொடுக்கத் தயார்" என்று எம்.ஜி.ஆரின் விருப்பத்திற்கே விட்டு விட்டார். நாகிரெட்டிக்கும், எம்.ஜி.ஆருக்கும் உள்ள நட்பு சற்று நீண்டதாகும். எம்.ஜி.ஆர். தனது 'நாடோடி மன்னன்' படத்தின் பெரும்பகுதி படப்பிடிப்பினை வாகினி ஸ்டூடியோவி லேயே நடத்தி இருக்கிறார். அப்போதே எம்.ஜி.ஆர். விரும்பிய வசதிகளெல்லாம் வாகினி யில் செய்து கொடுக்கப்பட்டு இருக்கிறது. தேவர் பிலிம்ஸ் படங்களெல்லாம் வாகினியில் படமாக்கப்பட்டபோது நாகிரெட்டி எம்.ஜி.ஆர். நட்பு அதிகமாகி இருந்தது. அந்த ரீதியில் தயாரிக்கப்பட்ட 'எங்க வீட்டுப் பிள்ளை' எம்.ஜி.ஆரை வசூலில் சக்கரவர்த்தியாக உயர்த்தி



'ஆயிரத்தில் ஒருவன்' படத்தில்.

யது.

வீரபாண்டிய கட்டபொம்மன், கப்பலோட்டிய தமிழன், பலே பாண்டியா, கர்ணன் என்று சிவாஜியை வைத்து பல படங்களைத் தொடர்ந்து தயாரித்தவர் பி.ஆர். பந்தலு. 'முரடன் முத்து' நேரத்தில் சிவாஜிக்கும், அவருக்கும் ஒரு வகையில் மனக்கசப்பு இருந்தது. தேவர் எம்.ஜி.ஆரை வைத்து படமெடுத்தது போல் பி.ஆர். பந்தலு சிவாஜியை வைத்து அதிகளவில் படங்கள் தயாரித்தவர். அப்படி தயாரித்தபோது சிவாஜிக்கு பந்துலு நிறைய பணம் தர வேண்டி இருந்தது. பல படங்களில் நடித்ததற்கு பணம் தரப்படாததால் ஒரு நேரம் சிவாஜி கோர்ட்டுக்கு போகலாமா என்று முடிவு செய்திருந்தார். அதை எம்.ஜி.ஆர். அறிந்து கொண்டார். பந்துலுவுக்கு ஆளனுப்பி ஒரு படம் செய்யலாம் என்று பேசி, குறிப்பிட்ட காலத்திற்குள் படத்தை முடித்துத் தர முடிவாகி ஆரம்பிக்கப்பட்ட படம் 'ஆயிரத்தில் ஒரு வன்'.

இதுவரை சுறா அளவுக்கு தயாரிப்பாளர்களைப் பிடித்த எம்.ஜி.ஆரின் கண் திமிங்கல மான ஏவி.எம்., ஜெமினி நிறுவனங்கள் மீது விரிந்தது. ஏவி.எம்.மின் 'அன்பே வா'வில் நடிப்பதொன்றும் எம்.ஜி.ஆருக்கு பெரிய விஷயமாகப் படவில்லை. ஆனால் எஸ்.எஸ். வாசன் எளிதில் அகப்படக் கூடியவர் அல்லர். தனித்தன்மை வாய்ந்தவராக விளங்கியவர். ஜெமினி நிறுவனத் தயாரிப்புகள் தவிர வேறு எந்தப் படத்தின் படப்பிடிப்பும் ஜெமினி ஸ்டூடியோவில் நடைபெற அவர் அனுமதித்ததில்லை. அப்படி கட்டுப்பாடுள்ள ஸ்டூடியோ வில் தான் நடிக்கும் படங்களின் படப்பிடிப்பை நடத்த விரும்பினார் எம்.ஜி.ஆர். அதற்கு



'பட கோட்டி' படப்பிடிப்பில் டைரக்டர் டி. பிரகாஷ்ராவ் (தொப்பி அணிந்து கை நீட்டிய படி இருப்பவர்), எம்.ஜி.ஆர்.

தூண்டிலாக அமைந்தவர் ஜி.என். வேலுமணி. அவரது 'குடியிருந்த கோயில்' படப்பிடிப்பு சத்யா ஸ்டுடியோவில் நடைபெற்றபோது ''ஜெமினியில் படப்பிடிப்பு நடக்க வேண்டும்'' என்று வேண்டுகோள் விடுத்தார். சாதாரணமாக வேலுமணி நடிகர்களுக்காக வளைந்து கொடுக்கக் கூடியவர் இல்லை.

ஆனால் எம்.ஜி.ஆர். அதை அடிக்கடி சொல்லி தொந்தரவு கொடுத்துக் கொண்டே இருந்தார். ஒரு கட்டத்தில் கால்ஷீட் விஷயத்தில் எம்.ஜி.ஆர். குளறுபடி செய்து விடுவாரோ என்ற பயம் வந்து விட்டது வேலுமணிக்கு. எம்.ஜி.ஆர். விருப்பப்படி நடந்தால் படமும் விரைவில் முடிந்து விடக் கூடுமென்ற நம்பிக்கையினால் வாசன் அவர்களை சந்திக்க முடிவு செய்தார். வாசனை சந்திப்பதற்கு மற்றொரு விஷயமும் அவருக்கு உதவியாக இருந்தது. வேலுமணி, வாசன் இருவருமே காங்கிரஸ்காரர்கள். அந்த அடிப்படையில் வாசனை சந்தித்தபோது, எம்.ஜி.ஆரின் விருப்பம் அவருக்கு வியப்பாக இருந்தது. தனது ஸ்டூடியோ விதிமுறைகளை எம்.ஜி.ஆருக்காக எப்படி மாற்றுவது என்று யோசித்தார். இதனால் வேலு மணி வாசனை மீண்டும் மீண்டும் சந்திக்க வேண்டியிருந்தது. ஒரு வழியாக வாசன் இறங்கி

வந்தாா.

'குடியிருந்த கோயில்' படத்திற்காக சத்யாவில் போடப்பட்டிருந்த செட்டுகளெல்லாம் ஜெமினிக்கு இடம் மாறின. அது வரை உள்ளே என்ன நடக்கிறது என்று வெளியுலகம் அறியாத வகையில் மௌன கோட்டையாக செயல்பட்ட ஜெமினி, எம்.ஜி.ஆர். வருகை யால் அமர்க்களமானது. சென்னையில் மத்திய பகுதிக்கு எம்.ஜி.ஆர். வருகிறார் என்றால் ரசிகர்கள் சும்மா இருப்பார்களா?

எம்.ஜி.ஆர். வருகையை எதிர்பார்த்து ஜெமினி வாசலில் ரசிகர்கள் கூட்டம் தவமிருக் கத் தொடங்கியது. நாளடைவில் ஜெமினி ஸ்டூடியோ ஒரு வேடிக்கை பார்க்கும் இடமாக மாறி விட்டது.

ஜெமினி ஸ்டூடியோவில் வாசன் அவர்கள் மட்டுமே சென்று வர சிறப்பு வழி ஒன்று உண்டு. அந்த வழியில் வேறு யாரும் செல்ல முடியாது. எம்.ஜி.ஆருக்காக விதி தளர்த்தப் பட்டு அவருக்காகவும் வழி விடப்பட்டது. வாசன் எம்.ஜி.ஆர். வருகையை கண்டும் காணாதது போல் இருந்தார்.

ஆனாலும் வாசன் தன்னைக் காண வருபவர்களிடம் எம்.ஜி.ஆரைப் பற்றியும், அவரது படங்கள் பற்றியும் ஏதோ ஒப்புக்கு கேட்பதுபோல் விசாரிக்கவும் தவறவில்லை.

எம்.ஜி.ஆர். ஒரு பெரிய நடிகர். தன் ஸ்டூடியோவில் நடிக்க வருகின்ற அவரை ஒரு மரியாதைக்காக சந்திப்பது நல்லது என்று வாசன் விரும்பியதன் பேரில், ஒருநாள் படப்பி டிப்பு இடைவேளையில் எம்.ஜி.ஆரைச் சந்தித்துப் பேசினார். அப்புறம் இருவரும் அடிக்கடி சந்தித்துக் கொண்டார்கள். 'அதன் விளைவு 'ஒளிவிளக்கு' ஜெமினியின் முதல் தமிழ் வண்ணப்படமாகவும், எம்.ஜி.ஆரின் 100-வது படமாகவும் அமைந்தது. ஆக எம்.ஜி.ஆர். எங்கே தொட்டு வாசனை எப்படிப் பிடித்திருக்கிறார் பாருங்கள். தான் நினைத்ததை அடைவ தற்காக எவ்வளவு உயரத்திலிருந்தும் இறங்கத் தயாராயிருப்பார் எம்.ஜி.ஆர். அதனால் தான் எம்.ஜி.ஆரால் தொடர்ந்து வெற்றிகளைச் சந்திக்க முடிந்தது.



எம்.ஜி.ஆர்., ஜி.என். வேலுமணி.



# மனதை தைத்த கேள்வி...

திரைப்பட நடிகர் புத்தூர் நடராஜன் என்றாலே எம்.ஜி.ஆரை நினைவுபடுத்தும் அளவில் அவருடன் பெரும்பாலான படங்களில் நடித்திருக்கிறார் என்று சொல்வதை விட சண்டை செய்திருக்கிறார் என்பதே சரியாக இருக்கும்.

''1948-ல் 'மந்திரி குமாரி' படப்பிடிப்பில் ஒரு நாள் எம்.ஜி.ஆருக்கும் எனக்கும் கத்திச் சண்டை நடப்பது போல் காட்சி. ஒத்திகையின் போது, நான் எம்.ஜி.ஆரை நோக்கி கத்தியை வீச அவர் அதை தடுத்து நிறுத்தி திருப்பித் தாக்க வேண்டும். (அப்போதெல்லாம் நிஜமான நல்ல கனமான கத்திகள்தான் சண்டைக் காட்சிகளில் பயன்படுத்தப்பட்டன) அந்த நேரத்தில் நான் கத்தியை வீசிய வேகத்திற்கு அவர் ஈடு கொடுத்து தடுத்து நிறுத்தவில்லையென்றால் என் கத்தி அவர் மண்டையைப் பிளந்திருக்கும். இப்படி பல ஆபத்தான சந்தர்ப்பங்கள் அந்தப் படத்தின் படப்பிடிப்பில் ஏற்பட்டு- எனக்கும், எம்.ஜி.ஆருக்கும் அதனால் விரோதம் ஏற்படாமல் நட்பு நெருக்கமாக ஏற்பட்டது.

மாடர்ன் தியேட்டர்களில் பதினாறு ஆண்டு வாசம் முடிந்து, நேரே சென்னை வந்து, எம்.ஜி.ஆரிடத்தில் சென்று நின்றேன். எனது நிலைமையை அறிந்த எம்.ஜி.ஆர். என்னை அரவணைத்துக் கொண்டதோடல்லாமல் தன்னுடனேயே இருக்கும்படிக் கேட்டுக் கொண்டார். அப்போதுதான் எம்.ஜி.ஆர். நாடகமன்றம் ஆரம்பமாகியது. இன்பக் கனவு, அட்வகேட் அமரன், சுமைதாங்கி (இது பின்னர் 'நல்லவன் வாழ்வான்' என்ற பெயரில் படமாகியது) 'பகைவனின் காதலி' ஆகிய நாடகங்கள் எங்களால் நடத்தப்பட்டன. புஷ்பலதா,

ஜி. சகுந்தலா, தங்கவேலு ஆகியோர் எம்.ஜி.ஆர். நாடக மன்றத்தின் மூலமாகத்தான் சினிமாவுக்கு வந்தார்கள்.

இன்று சினிமாவில் சண்டைக் காட்சிகளைப் பல 'ஷாட்'டாகப் பிரித்து அதிகம் 'ரிஸ்க்' இல்லாமல் படமெடுத்து விடுகிறார்கள். ஆனால், அந்தக் கால நாடகங்களில் கத்திச் சண்டை, குத்துச் சண்டை எல்லாம் தத்ரூபமாக இருக்கும். அப்படி சண்டைக் காட்சிகளில் அந்தர் பல்டி, தாவுதல், பாய்ச்சல், எல்லாம் இருக்குமென்பதால்- பல நாட்கள் உடல் வலியால் அவஸ்தைப் படவேண்டி இருக்கும்.

சுமார் இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னால் காஞ்சீபுரத்தில் அறிஞர் அண்ணா தலைமையில் 'பகைவனின் காதலி' நாடகம் நடந்தது. அதில் ஒரு காட்சியில் எம்.ஜி.ஆருக்கும், எனக்கும் கத்திச் சண்டை. அவர் இரண்டு கத்திகளுடனும் நான் ஒரு கத்தியுடனும்



'மந்திரிகுமாரி'யில் எம்.ஜி.ஆர்.


சண்டை செய்தோம். ஒரு கட்டத்தில் அவர் கத்தி வீசுகையில் நான் தலையை பின்னுக்கு இழுக்க வேண்டும். அப்படி இழுத்தபோது மறைவாக இருந்த நாடகக் கொட்டகை தட்டியின் மேல் என் தலை மோதி நிற்கையில் எம்.ஜி.ஆரின் கத்தி வீச்சு என் வலது பக்க மூக்கை கிழித்து விட்டது. இரத்தம் பெருகியது. சண்டை செய்யும் மும்முரத்தில் அதை நான் கவனிக் கவே இல்லை. இருப்பினும் மேடைக்கு முன்னால் அமர்ந்து நாடகம் பார்த்துக் கொண்டிருந்த அண்ணாவும், இராம. அரங்கண்ணலும் அதைப் பார்த்து விட்டு உள்ளே வந்து என்னை டாக்டரிடம் அழைத்துச் சென்று அவசர சிகிச்சை செய்ய முயன்றனர். நான் அதற்கு மறுத்து விட்டு சிறிது பவுடரை எடுத்து மூக்கில் அப்பி ஒழுகும் இரத்தத்தை நிறுத்தி விட்டு, அடுத்த காட்சியிலேயே நான் நடிக்க வேண்டியிருந்ததால், எம்.ஜி.ஆர்., அண்ணா ஆகியோரது வேண்டுகோளை புறக்கணித்து விட்டு, தொடர்ந்து நடித்து முடித்தேன். அதன் பின் சென் னைக்கு வந்து எம்.ஜி.ஆரின் குடும்ப டாக்டர் பி.ஆர். சுப்ரமணியத்திடம் சிகிச்சை செய்து தையல் போட்டுக் கொண்டேன்' என்று சொல்லி தையல் போட்ட இடத்தைக் காட்டினார் நடராஜன். அந்த இடத்தில் ஒன்றரை அங்குல நீளத்திற்கு தழும்பு இருந்தது பளிச்சென்று தெரிந்தது.

'பகைவனின் காதலி' நாடகம் பாளையங்கோட்டையில் நடந்தபோது (சரித்திர நாடக மென்பதால்) வெளியிலிருந்து கோட்டைக்குள் வந்து குதிப்பதாக உள்ள காட்சியில், எம்.ஜி. ஆர். பாய்ந்து வந்தபோது பாலன்ஸ் தவறி விழுந்து, கழுத்து சுளுக்கிக் கொண்டு விட்டது. அதனால் இரண்டு நாட்கள் கழுத்தை அசைக்கக் கூட முடியாமல் மிகவும் அவஸ்தைப்பட்டுப் போய் விட்டார். அதன்பின் அந்த நாடகத்தையே நிறுத்தி விட்டார்.

''சீர்காழியில் 'இன்பக் கனவு' நாடகத்தின் போது தான் எம்.ஜி.ஆருக்குக் கால் முறிந் தது. அதற்கு முன் மற்ற ஊர்களில் இதே நாடகம் நடந்தபோது, அதில் இடம் பெறும் சண்டைக் காட்சியில் எம்.ஜி.ஆர். என்னை தூக்கி தூக்கி போட்டதால் உடம்பெல்லாம் கடுமையான வலி இருந்தது. இடுப்பை அசைக்க முடியவில்லை. அதனால் சீர்காழி நாடகத் தின் போது ''என்னால் நடிக்க இயலாது'' என்று மறுத்து விட்டேன். எனக்கு பதில் 'குண்டும ணியும்' மாணிக்கமும் (சண்டைக் காட்சியில் அதிகம் அனுபவம் இல்லாதவர்) எம்.ஜி.ஆ ரோடு மோதினார்கள். நான் உள்ளே மேக்கப் அறையில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தேன். முதலில் மாணிக்கம் சென்று (பந்தக்கால் சீனில்) எம்.ஜி.ஆரிடம் மோத அவர் மாணிக்கத்தை தூக்கி எறியும்போது கீழே விழுந்து ஓடிவிட அதனால் எம்.ஜி.ஆர். அப்படி எறியும்போது, தலைகீழாக விழுந்து மாணிக்கத்தின் நடுமண்டையில் சதை பிய்ந்து ஒரு கொத்து முடியோடு வந்து விட்டது.

அந்த நிலையில் மாணிக்கம் சுயநினைவற்று அப்படியே கிடக்க, அடுத்த விநாடியே குண்டுமணி வந்தார். எம்.ஜி.ஆர். அவரை தூக்குகையில் குண்டுமணியின் உடம்பெல்லாம் வியர்வையாக இருந்ததால், எம்.ஜி.ஆரின் கை வழுக்கி, நிலை தடுமாறி அப்படியே மாணிக் கத்தின் அருகில் விழுந்தார். விழும்போது மாணிக்கத்தின் கையின் மேல் எம்.ஜி.ஆரின் இடதுகால் அழுத்தமாக விழுந்ததால் அப்படியே பட்டாசு வெடித்தார் போன்ற சப்தத்துடன் அவரது கால் ஒடிந்து விட்டது. குண்டுமணியும்; எம்.ஜி.ஆரோடு சேர்ந்து விழுந்ததால் தான் அந்த எடையும் சேர்ந்து எம்.ஜி.ஆருக்கு அந்த நிலையை ஏற்படுத்தி விட்டது.

எம்.ஜி.ஆர். கைகளை ஊன்றி எழுந்திருக்க முயற்சித்தார். முடியவில்லை. கடைசியாக டாக்டர் ஒருவர் வந்து எம்.ஜி.ஆரின் காலுக்கு கட்டுப் போட்டு, ரசிகர்கள் மத்தியில் தொடர்ந்து நாடகம் நடத்த இயலாமைக்கு வருத்தம் தெரிவித்து, மற்றொரு முறை நடத்துவ



புத்தூர் என்.எஸ். நடராஜன், திருப்பதிசாமியுடன் எம்.ஜி.ஆர்.

தாகக் கூறி விடைபெற்றபோது அங்குள்ள மக்களெல்லாம் எம்.ஜி.ஆருக்கு ஏற்பட்ட நிலை கண்டு அழுதனர். சென்னை வந்து பெரிய மருத்துவர்களிடம் சிகிச்சை பெற்று இரண்டே மாதத்தில் எம்.ஜி.ஆரின் கால் குணமடைந்தது. அதன் பின் அந்தக் காலுக்கே தனி பலம் வந்து சண்டைக் காட்சிகளில் முன்னைக் காட்டிலும் வேகமாக நடித்தார்'' என்று எம்.ஜி.ஆருடன் தனக்குள்ள நாடக உலக அனுபவங்களைக் கூறினார் திரு. நடராஜன்.

அடுத்து எம்.ஜி.ஆருடன் தனது சினிமாவுலக அனுபவங்களையும், எம்.ஜி.ஆரது குணாதிசயங்களையும் வரிசையாகச் சொன்னார்.

''படப்பிடிப்பு இடைவேளையின் போது, மற்றவர்களுக்கு என்ன உணவு அளிக்கப்படுகிறதோ, அதையே தான் எம்.ஜி.ஆரும் சாப்பிடுவார். எல்லோரையும் நன்கு கவனிக்க வேண்டும் என்பதற்காக தனது சொந்தப் பணத்தையே செலவு செய்வார். ஊட்டி, கொடைக்கானல் ஆகிய இடங்களுக்குச் சென்றுவிட்டால் உடன் வரும் படப்பிடிப்புக் குழுவினருக்கு தனது சொந்தச் செலவிலேயே கம்பளி ஆடைகள் வாங்கிக் கொடுப்பார். தான் நடிக்கும் படங்களில் யாருக்கும் எந்த வசதிக்குறைவும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வார்.

மற்றவர்களை நன்றாக சாப்பிடச் செய்து அதைப் பார்த்து ரசிப்பதில் எம்.ஜி.ஆருக்கு மிகுந்த ஆர்வமுண்டு. அதற்காக என்னையும் அவரது மற்றொரு உதவியாளராக இருந்த காலஞ்சென்ற திருப்பதி சாமியையும் அழைத்து பணத்தைக் கொடுத்து, ''யார் புகாரியில் அதிகமாகச் சாப்பிடுகிறீர்களோ, அவருக்கு நூறு ரூபாய் பரிசு?'' என்று சொல்லி அனுப்ப, பல சந்தர்ப்பங்களிலும் நானே வெற்றி பெற்று எம்.ஜி.ஆரிடம் பல நூறுகள் பரிசு பெற்றிருக்கிறேன்.

ஒரு முறை சக்கரபாணியும் ஸ்டண்ட் மாஸ்டர் ஆர்.என். நம்பியாரும் (இறந்து விட்

டார்) படப்பிடிப்பு முடிந்து கோவையிலிருந்து கிளம்பி, சேலத்தில் மதிய உணவை ஓட்டல் ஒன்றில் வாங்கிக் கொண்டு, தர்மபுரிக்கு வந்து டூரிஸ்ட் பங்களாவில் சாப்பிட்டோம்.

நான் சக்கரபாணிக்கு வைத்த வறுத்த கறி, காடை, கவுதாரி, புறா- ஆகிய அயிட்டங்க ளில் வறுத்த கறியை மட்டும் சாப்பிட்டு விட்டு மற்றதை சாப்பிடாமலேயே விட்டு அகன்றார். அதனால் அவற்றில் ஒரு பகுதியை (அது சிறு பகுதிதான்) நம்பியாருக்கு கொடுத்து விட்டு, மற்றவை எல்லாவற்றையும் ஒரு கை பார்த்தேன்.

நான் சாப்பிடுவதை தூரத்தில் இருந்து சக்கரபாணி கவனித்துக் கொண்டிருந்தார். சாப்பிட்ட பின் செல்லும் வழியில் பில் போட்டார். கொடுத்தேன். 29-00 ரூபாய் என்றிருந்த தைப் பார்த்ததும் சக்கரபாணியின் முகம் ஒரு மாதிரியாகப் போய் விட்டது.

பின்னர் சென்னையில் எம்.ஜி.ஆரிடம் சக்கரபாணி பில்லைக் காட்ட எம்.ஜி.ஆர். வியப்புற்று ''அப்படி 29-00 ரூபாய்க்கு என்ன சாப்பிட்டீர்கள்?'' என்று கேட்டதற்கு, சக்கரபாணி ''வானில் பறக்கிற பட்டமும்... நாலு காலில் கட்டிலும் தவிர எல்லாமும் வாங்கி வந்தாரு'' என்று என்னைப் பற்றி, நான் சாப்பிட்டதைப் பற்றிச் சொல்லி முகம் சுளிக்க, அதற்கு எம்.ஜி.ஆர். ''அவரிடம் (நடராஜன்) பணம் இல்லை. ஆனால் சாப்பிட வயிறு இருக்கிறது.

நம்மிடம் பணமிருந்தும் இஷ்டத்திற்கு சாப்பிட முடியவில்லை!'' என்றார். ''உன்னிடம் போய் சொன்னேனே!'' என்று சக்கரபாணி அலுத்துக் கொண்டார்.

எம்.ஜி.ஆர். வீட்டில் விருந்து நடக்கும் போது கூட அவரோடு தான் சாப்பிடுவேன். அவர் இல்லாமல் சாப்பிட என்னை அனுமதிக்க மாட்டார். அவரே எனக்கு பல சமயங்களில் பரிமாறியிருக்கிறார். என் சாப்பிடும் குணம் அவருக்குத்தான் தெரியும்.

எம்.ஜி.ஆர். பலமுறை உயிருக்கு ஆபத்தான விஷயங்களில் தப்பித்து வந்திருக்கிறார். ஒரு முறை காரில் டிரைவருடன் முன் சீட்டில் நான் உட்கார்ந்திருக்க, வழியெல்லாம் கொக்கு சுட்டுக் கொண்டே வந்த எம்.ஜி.ஆர். களைப்பில் துப்பாக்கியை கால் பக்கத்தில் வைத்து விட்டு அப்படியே படுத்துத் தூங்கி விட்டார். மதுராந்தகம் அருகே அச்சிறுபாக்கம் வருகை யில், காலருகில் இருந்த துப்பாக்கியை மிதித்துவிட, எதேச்சையாய் துப்பாக்கி (இரட்டைக்குழல் துப்பாக்கி அது) வெடித்து அவரது தலையணையை துளைத்து, கார் கதவில் பாய்ந்து சென்று விட்டது. கொஞ்சம் திசைமாறி இருந்தால் குண்டு அவர் மீதே பாய்ந்திருக்கும்.

சினிமாவில் சண்டைக் காட்சிக்கு மதிப்பு இருப்பதே எம்.ஜி.ஆரால்தான். எம்.ஜி.ஆர். ரொம்பவும் பாப்புலரான பின்புதான் 'டூப்' உபயோகித்தார். அதற்கு முன் 'ரிஸ்க்'கான காட்சிகளில் கூட அவரே சண்டை செய்தார். அவருக்கு 'டூப்' போட்டது கூட தெரியாமல் இருக்கும்.

சண்டைக் காட்சியில் யாருக்காவது அடிபட்டு விட்டால், உடனே படப்பிடிப்பை நிறுத்தி, அவருக்கு நல்லபடியாய் சிகிச்சை செய்த பின்புதான் மீண்டும் படப்பிடிப்பையே துவங்க வேண்டும் என்பார் எம்.ஜி.ஆர். அதேபோல் 'ரிஸ்க்' ஷாட்டின் போதும் 'டூப' உபயோகிக்கும் போதும், செட்டில் அதை எப்படி எடுக்க வேண்டும் என்பதற்கான யோச னைகளைச் சொல்லி விட்டு, அந்த இடத்தை விட்டு அகன்று விடுவார், அவர்களுக்கு கூச்சம், தயக்கம் எதுவும் வரக்கூடாதென்று.

எம்.ஜி.ஆர். போல் ஈடுபாட்டோடு சண்டைக் காட்சிகளில் நடித்தவர் யாருமில்லை என்பதே என் அனுபவம். எம்.ஜி.ஆரின் ஸ்டண்ட் நடிப்பு அழகாக இருக்கும். இப்போ

துள்ள நடிகர்கள் சண்டைக் காட்சிகளில்நடிப்பதை ரசிக்க முடியவில்லை. என்னைப் பொறுத்தவரையில் எம்.ஜி.ஆர். நடிப்பதை விட்டுவிட்ட பிறகு சண்டைக் காட்சிகளில் திறமையாக ஜொலிப்பவர் யாருமிருப்பதாகத் தெரியவில்லை.''

பல ஆண்டுகளுக்கு முன்பே புத்தூர் நடராஜனைப் பற்றி எம்.ஜி.ஆர். கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார், வாரப் பத்திரிகையொன்றில்.

''புத்தூர் என்.எஸ். நடராஜன் அவர்கள், அவரது உள்ளத்தில் யாரைத் தனது நண்பர் அல்லது மரியாதைக்குரியவர் என்று நம்பி ஏற்றுக் கொள்கிறாரோ, அதற்கு பிறகு யாராலும் அவரை திரு. நடராஜன் அவர்களிடமிருந்து பிரிக்க இயலவே இயலாது. அது மட்டுமல்ல, அந்த நண்பர்கட்காகத் தனது உயிரையும் பலி கொடுக்கச் சிறிதும் பின்வாங்காதவர்; அதோடு அவருடைய நண்பர்களின் குடும்பத்தில் ஒரு நெருங்கிய அங்கமாகவே ஆகி விடுவார்!

சமையல் வேலையிலிருந்து அறிவு சொல்லும் அளவு வரை அவர் தனது தொண்டினைச் செவ்வனே செய்பவர்; தனது நண்பர்களைக் காக்காய் பிடிக்கத் தெரியாதவர்; அதன் காரணத்தாலேயே அவர் பல நண்பர்களை இழந்து விட்டவர்; பெரிய செலவாளி; வரவு எவ்வளவு என்பதைப் பற்றிக் கவலைப்பட மாட்டார். தனக்கும் மற்றவர்களுக்கும் செய்ய வேண்டிய கடமைகளை செயல்படுத்துவதில் தான் அக்கறை மிகவும் காட்டுவார்!'' என்று எம்.ஜி.ஆர். குறிப்பிட்டுள்ளபடி வித்தியாசமான மனிதராகவே விளங்குகிறார் நடராஜன்.

ஒரு முறை எம்.ஜி.ஆர். நாடக மன்றம் சார்பில் அதில் பணியாற்றும் ஆண்கள், பெண்கள் அனைவருக்கும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு புதுச்சட்டை, வேட்டி, சேலை, ரவிக்கைத் துணி போன்றவை வழக்கம் போல வாங்கிக் கொடுக்கப்பட்டு இருந்தது. அப்போது அனைவரும் புதுத்துணிகளை அணிந்திருக்க புத்தூர் நடராஜன் மட்டும் பழைய துணிகளை உடுத்திக் கொண்டு வந்திருந்தார்.

இதை யாராவது பார்த்தால், ''மற்றவர்களுக்கெல்லாம் புதுத்துணி வாங்கிக் கொடுத்து விட்டு இவருக்கு மட்டும் வாங்கிக் கொடுக்கவில்லையே! இப்படியா ஓரவஞ்சனை செய்வது?'' என்று தவறாக நினைத்து விடுவார்களே என்று எம்.ஜி.ஆர். மனம் வருந்தியதோடு நடராஜனை தனியே அழைத்து விசாரிக்கவும் செய்தார்.

அதற்கு புத்தூர் நடராஜன், ''உங்களை அவமதிக்கணும்னு எந்த ஜென்மத்திலேயும் நினைக்கக்கூட மாட்டேன்!'' என்று கூறியவாறு குழந்தை போல தேம்பித் தேம்பி அழுது விட்டாராம்.

''நீங்க கொடுத்த புதுத்துணிகளை நாங்க கட்டிக்கிட்டு வருகிறோம். ஆனா எங்க வீட்டிலே இருக்கிற மத்தவங்க புதுத்துணி கட்டிக்கணுமே? அவங்களுக்கு யார் வாங்கிக் கொடுக்கிறது? பெரியவங்களுக்கு வேண்டாம். குழந்தைகள் 'அப்பா, எங்களுக்குப் புதுத் துணி கிடையாதா?' என்று கேட்குதே. அதுகளுக்கு யார் பதில் சொல்றது? நம்ம கம்பெனி சம்பளத்தாலேதான் எப்படியோ ஒரு மாதிரியா கவுரவமா வாழ்ந்துக்கிட்டு இருக்கோம். இதுக்கு மேலே கம்பெனியில் பணம் கேட்க முடியுமா? அப்படி கம்பெனி கொடுத்தாலும் நாங்க எப்படி திருப்பிக் கொடுக்க முடியும்?'' என்று எம்.ஜி.ஆரிடம் புத்தூர் நடராஜன் தனக்கே உரிய வேகத்துடன் கூறினாராம்.

''அவர் தன்னைப் போன்ற ஒரு சில நடிக- நடிகையர்களின் குறைகளை மட்டும்தான் தெளிவுபடுத்த அவ்வாறு கூறினார். ஆனால், என் உள்ளத்தில் ஆழமாகத் தைத்து என்றென்றும் மறக்க முடியாததும், சிந்தித்துக் கொண்டே இருக்க வேண்டியதுமான ஒரு பெரிய கேள்வி

யையும், பொதுவாக பெருவாரியான மக்கள் சமுதாயத்தின் வாழ்க்கை நிலையையும் அல்லவா மிகமிகத் தெளிவாகப் படம் வரைந்து காட்டி விட்டார்...!'' என்று இந்த நிகழ்ச்சியைப் பற்றி எம்.ஜி.ஆர். குறிப்பிட்டுள்ளார்.

தனது நேர்மைக்கும், நினைத்ததை சொல்லும் துணிவுக்கும் சான்றாக எம்.ஜி.ஆர். குறிப்பிட்டுள்ள வார்த்தைகளை புத்தூர் நடராஜன் பெருமிதத்துடன் இன்றைக்கும் நினைவு கொள்கிறார்.

ஆனால் தி.மு.கழகத்தில் ஏற்பட்ட பிளவு, இவரை எம்.ஜி.ஆரை விட்டு விலக்கி வைத்து விட்டது என்றே சொல்லலாம்.

இது பற்றி புத்தூர் நடராஜன் சொன்னார்:

'ஒரு தாய் மக்கள்' தான் நான் எம்.ஜி.ஆருடன் கடைசியாக பணிபுரிந்தது. அதற்கு முன் அவருடன் நடித்த படங்களில் பறக்கும் பாவை, நாடோடி மன்னன், ஒளிவிளக்கு, குடியிருந்த கோயில், முகராசி, அரசகட்டளை ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும்.

1972-ல் தி.மு.க.வை. விட்டு எம்.ஜி.ஆர். விலக்கப்பட்ட பின் நான் தி.மு.க.விலேயே இருந்தேன். அதை எம்.ஜி.ஆர். விரும்பவில்லை போலும். 'நினைத்ததை முடிப்பவன்' படத்தில் முதலில் என்னைக் கேட்டபோது 'எவ்வளவு கொடுக்க வேண்டும்' என்று தயாரிப்பாளர் தரப்பில் வினவ, ஐயாயிரம் ரூபாய் என்று சொன்னேன்.

படப்பிடிப்பு நாள் நெருங்குகையில் ஒப்பந்தத்தில் ரூ. 2,500 என்று எழுதியிருந்தைக் கண்டு, ''என்ன தொகை குறைந்திருக்கிறதே!'' என்று நான் கேட்டதற்கு, ''எம்.ஜி.ஆர். அவ்வளவுதான் கொடுக்கச் சொன்னார்'' என்று சொன்னதும், ''அப்படியென்றால் நான் நடிக்கவில்லை'' என்று சொல்லிவிட்டு வந்ததுதான்.அதன்பின் எம்.ஜி.ஆரை நான் சந்திக்க வேயில்லை.

கட்சி பிரிந்துபோன பின் எம்.ஜி.ஆர். என்னிடமோ, நான் அவரிடமோ தொடர்பு கொள்ளவேயில்லை. அதன்பின் எந்த கூட்டத்திலும் நான் பேசவில்லை. அப்படியே பேசினாலும், எம்.ஜி.ஆரைப் பற்றித் தாக்கிப் பேசியது இல்லை- அது நன்றி கெட்ட செயல் என்பதால்! இன்றைக்கு நான் குடியிருக்கும் வீடு எம்.ஜி.ஆர். வாங்கிக் கொடுத்ததுதான். ''நாடோடி மன்னன்'' படத்தில் நடித்ததற்கு எனக்கு கிடைத்த பரிசுதான் இந்த வீடு'' என்று சொன்ன திரு. நடராஜன் வீட்டைச் சுற்றிக் காண்பித்தார்.

'பல்லாண்டு வாழ்க' படத்தின் படப்பிடிப்பு கர்நாடக மாநிலம் கலசாபுரத்தில் தொடர்ந்து நடைபெற்ற போது, படத்தின் வில்லன்களில் ஒருவரான மனோகர், பம்பாயில் நாடகம் நடத்த போக வேண்டும். அவர் அங்கு போனால் இங்கு படப்பிடிப்பு தடைபடும். நாடகத்தை நிறுத்த வேண்டும் என்று யார் சொல்வது? 'நான் சொல்கிறேன்' என்று எம்.ஜி. ஆர். சிக்மளூருக்கு காரில் சென்று அங்கிருந்து பம்பாய்க்கு போன் செய்து நாடகம் நடக்கவிருந்ததை ரத்து செய்தார்.

இதே படத்தின் படப்பிடிப்பில் மற்றொரு சம்பவம். 'ஒன்றே குலம் என்றே பாடுவோம்' என்ற பாடல் காட்சி அவுட்டோரில் போடப்பட்ட செட்டில் படமாக்கப்பட்டது. அப்போது செட்டுக்கு வெளியே திடீரென மழை வர, 'அதையும் படமாக்கலாம்' என்று எம்.ஜி.ஆர். கேட்டதற்கு, டைரக்டர் கே. சங்கர், ''அது எனக்குத் தெரியும். நீங்க சும்மா இருங்க'' என்று சொல்லி விட்டார். எம்.ஜி.ஆர். சிரித்தபடியே ''உன் இஷ்டம்'' என்று வேறு எதுவும் பேசவில்லை.



# நடுங்க வைத்த நாகராஜராவ்

எம்.ஜி.ஆருக்கு முத்தமளிக்கும் நாகராஜராவ்.

தமிழ் சினிமா உலகில் ஆர்.என். நாகராஜராவ் என்றால் ''எம்.ஜி.ஆர். பட ஸ்டில் போட்டோ கிராபர்'' என்று சொல்லுமளவில் பிரசித்தம். எம்.ஜி.ஆர். முன்னுரிமை அளிதது பழகியவர்களில் நாகராஜராவும் ஒருவர்.

ஆர்.என். நாகராஜராவ் 'மதன காமராஜன்' படத்திற்கு முதன் முதலாக ஸ்டில் போட்டோகிராபராக பணிபுரியத் தொடங்கினார். அன்றிலிருந்து 1,000-க்கும் மேற்பட்ட படங்களுக்கு 'ஸ்டில் போட்டோகிராபராக' பணி புரிந்துள்ளார். இதில் தமிழ்ப் படங்கள் அதிகம். தெலுங்கு, இந்தி கன்னடம், மலையாளம் (ஒரு சில) ஆகிய மொழிப் படங்களிலும் பணிபுரிந்து உள்ளார். தனது பெயர் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற வேண்டிய அளவு உலக சாதனை புரிந்திருக்கிறார்.

தமிழ் திரையுலகினால் மரியாதைக்குரியவராக 'குரு' என்றும் 'பாஸ் என்றும் அழைக்கப்படும் நாகராஜராவ் எம்.ஜி.ஆரின் ஆரம்ப கால தொடர்பையும், அன்பையும் பெற்ற புகைப்படக் கலைஞர்களில் முதன்மையானவர். எம்.ஜி.ஆர்., நடித்த 'பணக்காரி' படத்திலிருந்து ('நாம்' படத்தின் மூலம் எம்.ஜி.ஆர்., கலைஞர் கருணாநிதி இருவரின் நட்பும்

வலுப்பெற்றது.) எம்.ஜி.ஆர். முதல்வராவதற்கு முன் வெளிவந்த 'இன்று போல் என்றும் வாழ்க' வரை அவர் நடித்த 136 படங்களில் 60 படங்களுக்கு மேல் நாகராஜராவ் ஸ்டில் போட்டோ கிராபராகப் பணியாற்றி உள்ளார். எம்.ஜி.ஆர். முதல்வராகி முதலமைச்சர் நாற்காலியில் உட்கார்ந்ததும், தன்னைப்படமெடுக்கச் சொல்லி அழைப்பு விடுத்து, முதன் முதலாக படம் எடுத்தவரும் நாகராஜராவ்தான்.

''1940-க்கு மேல் எந்த வருடமென்று நினைவில்லை. அப்போது நான் 'சுதேமித்திரன்' நாளிதழின் போட்டோகிராபராக இருந்தேன். நான் சினிமாவுலகுக்கு வராத நேரம் அது. என் முதல் மனைவி அனுசூயாபாய் காச நோயினால் பாதிக்கப்பட்ட போது டாக்டர் வாசுதேவராவின் (இப்போது தேவகி மருத்துவமனை இருக்குமிடம்) மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன்.

வாகினி ஸ்டியோவின் முன்னாள் அதிபர் நாராயணசாமி ரெட்டியும் நோயினால் பாதிக்கப்பட்டு அந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவரை நான் அடிக் கடி சந்தித்துப் பேசுவேன். அந்த சமயத்தில்தான் காச நோயினால் பாதிக்கப்பட்டிருந்த தன் இரண்டாவது மனைவியை எம்.ஜி.ஆர். அங்கு அழைத்து வந்திருந்தார். நான் முதல் முத லாக எம்.ஜி.ஆரை சந்தித்தது அப்போதுதான். இருவரும் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து கொண்டு பேசினோம். அடிக்கடி அதே மருத்துவமனையில் சந்தித்துப் பேசுவோம். அப்போதும் கூட எம்.ஜி.ஆர். அளவுடன்தான் பேசுவார். அனாவசிய பேச்செல்லாம் அவரிடம் காண முடியாது.

ஒரு வருடத்திற்குப் பின் என் மனைவி குணமாகி விட்டதாக மருத்துவமனையில் சொல்லப்பட்டதால், வீட்டுக்கு அழைத்து வந்து விட்டேன். ஆனால் ஆறு மாதத்திலேயே அவள் இறந்து விட்டாள். எம்.ஜி.ஆரின் மனைவி சில மாதங்கள் மட்டுமே சிகிச்சை பெற்று வீடு திரும்பினாலும், சுமார் பத்து ஆண்டுகள் உயிரோடு இருந்து அதன்பின் மரணம் அடைந்தார். எம்.ஜி.ஆருக்கு அப்போதிருந்தே அவரது குடும்ப டாக்டர் பி.ஆர். சுப்ரமணி யம்தான். எம்.ஜி.ஆர். அப்போது யானைக்கவுனியில் வசித்து வந்தார் என்று நினைக்கிறேன்.

மருத்துவமனை சந்திப்புக்குப் பின் எம்.ஜி.ஆர். என் வீட்டுக்கு வந்து அவரது நாடக மன்றத்தின் இடிந்த கோயில், இன்பக்கனவு, அட்வகேட் அமரன், சுமைதாங்கி ஆகிய நாடகங்களுக்காக புகைப்படங்கள் எடுத்துக் கொண்டு சென்றார்.

இப்போது தினசரி பத்திரிகைகளில் சினிமா விளம்பரங்கள் வருவது போல் அந்தக் காலத்தில் (சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்) தனது நாடக விளம்பரங்களை தினசரிப் பத்திரிகைகளில் கொடுத்திருக்கிறார், எம்.ஜி.ஆர். அதற்காகத்தான் 'ஆக்ஷன் ஸ்டில்' எடுத்தார்.

எம்.ஜி.ஆர். நடித்த 'நாம்' படத்தின்போதுதான் அவருக்கும், எனக்கும் நட்பு ஏற்பட் டது. ஏனென்றால் நான் பணிபுரிந்த முதல் எம்.ஜி.ஆர். படம் அதுதான். நான் உண்டு. என் வேலை உண்டு என்றிருந்த எனது குணமே எம்.ஜி.ஆரைக் கவர்ந்து இருக்க வேண்டும். ஆரம்பத்தில் சாதாரணமாக இருந்த எங்களது நட்பு நாளடைவில் நெருக்கமாகி விட்டது.

ஜெமினி நிறுவனத்தின் படங்களுக்கு ஸ்டில் போட்டோ கிராபராக நான் பணியாற்றத் துவங்கியபின் எம்.ஜி.ஆரின் சினிமா செல்வாக்கும் அதே நேரத்தில் வளர்ந்து, தான் பணி யாற்றும் படங்களில் என்னை சிபாரிசு செய்ய ஆரம்பித்தார்.

எம்.ஜி.ஆர். சொந்தமாக 'நாடோடி மன்னன், படத்தயாரிப்பினை துவக்கியபோது,



நாகராஜராவ், எம்.ஜி.ஆர்.

அதற்காக மேக்கப் டெஸ்ட் ஸ்டில் எடுத்துக் கொள்ள என் வீட்டுக்கு வந்திருந்தார். 'நாடோடி மன்னன்' சில ஆயிரம் அடிகள் படமாகி, அதனைப் பார்க்கும் பொருட்டு விநியோகஸ்தர்களுடன் என்னையும் அழைத்திருந்தார்.

எம்.ஜி.ஆருடன், அவரது சகோதரர் பெரியவர் எம்.ஜி.ஆர். சக்கரபாணியும் வந்திருந்தார். படம் பார்த்து முடிந்த பின் நான் இருவரிடத்திலும் ''இந்தப் படம் நிச்சயம் நூறு நாள் ஓடும். இல்லையென்றால் நான் ஆயிரம் ரூபாய் கொடுக்கத் தயார்'' என்று சொன்னேன். எம்.ஜி.ஆருக்கு ரொம்ப சந்தோஷம்.

நாங்கள் எதிர்பார்த்ததை விட படம் நூறு நாட்களுக்கு மேல் பிரமாதமாக ஓடியது. நூறாவது நாள் விழா தீவுத் திடலில் நடந்தது. அறிஞர் அண்ணா விழாவில் கலந்து கொண்டு படத்தில் பங்கு பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினார். விழாவைப் படமெடுக்கச் சென்றிருந்தேன். படத்தில் ஸ்டில் போட்டோகிராபராகப் பணியாற்றியதால் எனக்கும் பரிசு கிடைத்தது. விழா நடக்கையிலேயே எம்.ஜி.ஆர். என்னிடம் வந்து ''அண்ணன் (எம்.ஜி. சக்கரபாணி) பணம் கொடுத்தாரா?'' என்று கேட்டார்.

அதற்கு நான், ''அவர் கொடுக்கமாட்டாரு, பெரிய கஞ்சனாமே!'' என்று தமாஷாகச் சொல்ல, எம்.ஜி.ஆர். சிரித்துக் கொண்டே சென்று சக்கரபாணியிடம் என்ன பேசினாரோ, சக்கரபாணி என்னருகில் வந்து ''நீங்க விழா முடிந்து வீட்டுக்குப் போகும் போது நம்ம வீட்டுக்கு வந்துட்டுப் போங்க'' என்று கேட்டுக் கொண்டார். நான் அதன்படியே சென்றால் அங்கு ஒரு கவரில் ரூ. 1001- தந்தார்கள். அதில் 'என் சிறந்த நண்பர் நாகராஜராவ், (To my best friend Nagarajarao) என்று எழுதி இருந்தார், எம்.ஜி.ஆர்.

'காவல்காரன்' படத்தின் படப்பிடிப்பு நேரம் என்று நினைக்கிறேன். சத்யா ஸ்டூடியோ

வில் ஒருநாள் இரவு படப்பிடிப்பில் சில அரசியல் பிரமுகர்களுடன் என்னையும் அமர்த்திக் கொண்டு அரசியலைப் பற்றி தீவிரமாக விவாதித்துக் கொண்டிருந்தார். அவரது அரசியல் அறிவு என்னைக் கவர்ந்தது. விவாத முடிவில் நான் அவரிடம், 'சார்! நீங்கள் ஒரு நாள் அமைச்சர் ஆவீர்கள்' என்று சொன்ன போது அவர் சிரித்துக் கொண்டார்.

அதே படத்திற்காக 'நினைத்தேன் வந்தாய் நூறு வயது' என்ற பாடல் காட்சியில் காஷ்மீரத்து மனிதர் போல் குல்லாய் உடைகள் அணிந்த மேக்கப்பில் எம்.ஜி.ஆர். அழகாக மிக மிக இளமையாக இருப்பதைப் பார்த்து அவரிடம் 'நீங்கள் எம்.ஜி.ஆரின் மகன் போல இருக்கிறீர்கள்' என்று பாராட்டிச் சொல்ல அப்போதும் சிரித்துக் கொண்டார்.

நாம் என்ன பாராட்டினாலும் சிரிப்புதான் அவரது பதிலாக இருக்கும்.

உணவு விஷயத்தில் அவரைப் போல் கட்டுப்பாடாக இருந்த மனிதர் யாரையும் நான் பார்த்ததில்லை. படப்பிடிப்புக்கு வரும் போது வீட்டிலிருந்து பிரத்யேகமாக எடுத்து வரப்படும் சீரகத் தண்ணீரைத்தான் அருந்துவார். வெளியில் யார் என்ன கொடுத்தாலும் அருந்தி விட மாட்டார். அப்படிப்பட்டவரா இப்படி நோய்வாய்ப்பட்டு இறந்தார் என்பதை இன்னும் என்னால் நம்ப முடியவில்லை.

எம்.ஜி.ஆருக்காக வரும் மீன் குழம்பில் புளி எதுவும் கலந்திருக்காது. எலுமிச்சம் பழச்சாறு தான் புளிப்புக்காக மீன்குழம்பில் பிழியப்பட்டிருக்கும்.

எம்.ஜி.ஆர். ஸ்டுடியோக்களில் நடக்கும் படப்பிடிப்புகளில் கலந்து கொண்டால் பக



'காவல்காரன்' படத்தில்.



சின்னப்பா தேவருடன் எம்.ஜி.ஆர்.

வில் அவருக்கு வீட்டிலிருந்து தான் சாப்பாடு வரும். அது பத்துப் பதினைந்து பேர் சாப்பிடுவதாக இருக்கும். இந்த ஒரு விஷயத்தில் மட்டுமின்றி சாப்பாடு விஷயத்திலும் திட்டமிட்டபடி தான் இருப்பார். சாப்பாட்டில் பத்து, பதினைந்து வகையறாக்கள் இருக்கும். மட்டன், சிக்கன், கருவாடு என்று அசைவ உணவு வகைகள் தவறாமல் இடம்பெறும்.

சாப்பாட்டில் இடம்பெறும் முட்டை அரை அவியலாக இருக்க வேண்டும். முழுவதும் அவிந்திருந்தால் சமைத்தவரை கோபத்துடன் பார்ப்பார். அவர் மட்டன் வகைகளை சுவைத்துக் கடித்துச் (எலும்புகள் நொறுங்க) சாப்பிடுகையில் எனக்கெல்லாம் பொறாமையாக இருக்கும், அவரைப் போல் என்னால் சாப்பிட முடியவில்லையே என்று.

நடிகர் அசோகன் எம்.ஜி.ஆருடன் நடித்துக் கொண்டிருந்தாலும், அல்லது வேறு படப்பிடிப்பில் கலந்து கொண்டாலும் சரி, தவறாமல் மதிய உணவு நேரத்தில் எம்.ஜி.ஆருடன் சாப்பிட வந்துவிடுவார். நான் ஒருமுறை அசோகன் வருவதைப் பார்த்து, ''திருக்கழுக்குன்றம் கழுகு வருது சார்'' என்றதும் எம்.ஜி.ஆர். அடக்க முடியாமல் சிரித்தார்.

படப்பிடிப்பில் இடைவேளை நேரங்களில் எம்.ஜி.ஆர். பால், சீரகத் தண்ணீர்தான் அருந்துவார். சில சமயங்களில் கேரட்டிலிருந்து ஜூஸ் எடுத்து சாப்பிடுவார். நான் ஒரு முறை அவரிடம், 'டிரை ஜிஞ்சர் சோடா' சாப்பிடுங்கள். அஜீரணம், உடல்வலி இருக்காது'' என்று யோசனை தெரிவித்த பின் தொடர்ந்து அதை அருந்த ஆரம்பித்தார்.

படப்பிடிப்பு நாட்களில் மாலை நேரத்தில் பலமுறை டிரைவ்-இன் உட்லண்ட்ஸிலிருந்து பக்கோடா போன்ற காரவகை தருவித்து சாப்பிட்டிருக்கிறார், எம்.ஜி.ஆர். மற்றபடி படப்பிடிப்பு இடைவேளைகளில் நொறுக்குத் தீனி தின்னும் சமாச்சாரமெல்லாம் அவரிடம் கிடையாது.



'அடிமைப்பெண்' படத்தில்.

ஒரு முறை ஒகேனக்கலில் 'அடிமைப் பெண்' படப்பிடிப்பின் போது புத்தூர் நடராஜனைக் (ஸ்டண்ட் நடிகர்) கூப்பிட்டு, ஒரு மணி நேரத்திற்குள் ஐந்நூறு மசால் வடை வரவழைத்துத் தரும்படி சொன்னார். அது எம்.ஜி.ஆர். கொடுத்த ஆர்டரோ என்னவோ, அதிசமாய் ஒரு மணி நேரத்திற்குள்ளாகவே ஐந்நூறு மசால் வடைகளை தருவித்து விட்டார், நடராஜன். சாப்பாட்டு விஷயத்தில் எம்.ஜி.ஆர். ஒரு பயங்கர செலவாளி.

நடித்துக் கொண்டிருக்கும் போதே பிறருக்குத் தெரியாதபடி செட்டில் என்னென்ன நடக்கிறது என்பதைக் கவனித்துக் கொண்டே இருப்பார். அதனால் அவர் படப்பிடிப்பு நடக்கும் சமயத்தில் அனாவசியமாக, வேடிக்கை பார்க்க யாரையும் அனுமதிக்க மாட்டார். அப்படி ஒரு கட்டுப்பாடு அவரிடமும், அவரைச் சுற்றியுள்ளவர்களிடமும் இருக்கும்.

இன்று திரை உலகம் மக்களிடையே மதிப்பிழந்து வருவதற்கு காரணம் படப்பிடிப்பை கண்ட கண்ட இடங்களில் நடத்தி எல்லோரும் சாதாரணமாக நினைக்கும்படி செய்வதால் தான். மக்களிடையே சினிமாவுக்கென்றே தனி மதிப்பை ஏற்படுத்தியவர் எம்.ஜி.ஆர். ஒருவர்தான். அதனால்தான் அவரது இமேஜ் கெடாமல் அப்படியே இருக்கிறது.

சொந்த படத்திற்கு எம்.ஜி.ஆர். போல் செலவு செய்து யாரையும் நான் பார்த்ததில்லை. வெள்ளை யானை வேண்டுமென்றாலும், கொண்டு வந்து நிறுத்துவார். படம் நன்றாக வரவேண்டுமென்ற ஆர்வம் அவருக்கு நிறைய உண்டு.

ஸ்டண்ட் காட்சிகளிலெல்லாம் தானே காமிரா கோணம் அமைத்து, தானே சொல்லிக் கொடுப்பார். மாஸ்டர்கள் என்று பெயருக்குத்தான் இருந்திருக்கிறார்கள். உடன் நடிக்கும் ஸ்டண்ட் நடிகர்களுக்கு உடலில் காயம் ஏற்பட வழியே இருக்காது. அந்த அளவுக்கு டைமிங் சென்ஸுடன் சண்டைக் காட்சிகளில் நடிப்பார்.

வசனங்கள் முழுவதையும் படித்துவிட்டு, பலமுறை திருத்தம் செய்து விட்டுத்தான் பேசுவார். நன்றாகப் பாடவும் செய்வார். அது பலருக்குத் தெரியாது.

உடைகளை அணிந்து முதலில் கண்ணாடியில் பார்த்து விட்டு, சரியில்லை என்றால் திருத்தங்கள் செய்வார். நடனக் காட்சிகளில் டான்ஸ் மாஸ்டர் நடன அசைவுகள் சொல்லிக் கொடுத்தாலும், தனக்கு எது நன்றாக இருக்கும் என்று தானே முடிவு செய்து கொண்டு ஆடுவார்.

என்னை எம்.ஜி.ஆர். 'பாஸ் ஆஃப் பாஸஸ்!' என்று அழைப்பார். நான் அவரை 'சார்' என்றுதான் சொல்வேன். வருடந்தோறும் பொங்கலன்று எம்.ஜி.ஆரிடமிருந்து ஜரிகை வேட்டி என் வீடு தேடி வரும்.

1970- என்று ஞாபகம். எனக்கு ஒரு நாள் முதுகுத் தண்டில் வலி ஏற்பட்டு, படப்பிடிப்புக்குப் போக முடியாமல் அவதிப்பட்டேன். படப்பிடிப்பில் எனக்குப் பதில் என் மகன் பாபு வந்திருப்பதைப் பார்த்த எம்.ஜி.ஆர். ''அப்பா ஏன் வரவில்லை? அவருக்கு என்ன ஆச்சு?'' என்று விசாரித்த போது என் மகன் விவரம் கூற, உடனே தன் குடும்ப டாக்டர் பி.ஆர். சுப்பிரமணியத்தை என் வீட்டுக்கு அனுப்பி வைத்து எனக்கு சிகிச்சை அளிக்கச் செய்தார். நான் அதற்காக டாக்டருக்குப் பணம் கொடுக்க முன் வந்தபோது அவர் மறுத்து, ''நான் உங்களிடம் பணம் வாங்கினால் சின்னவர் (எம்.ஜி.ஆர்) கோபப்படுவார். அவரே பணம் கொடுத்து விடுவார்'' என்று கூறி விட்டார். அன்றிலிருந்து எனக்கும் அவரேதான் குடும்ப டாக்டர்.

படப்பிடிப்பு நேரங்களில் எம்.ஜி.ஆரின் சிந்தனையும் செயலும் சினிமாவைப் பற்றிய தாகத்தான் இருக்கும். அவருடைய நடவடிக்கை எதுவும் படப்பிடிப்பைப் பாதிக்கும்படி இருக்காது. அவரைக் காண யாராவது அரசியல்வாதி வந்தால் கூட அவரை அழைத்துக் கொண்டு ஓரங்கட்டி விடுவார். சினிமா உலகத்தைப் பொறுத்தவரையில் படப்பிடிப்பில் ஒரு ஒழுங்குமுறை இருந்ததென்றால், அதற்கு காரணம் எம்.ஜி.ஆர். தான். தன்னைப் போல் பிறரும் படப்பிடிப்பில் ஒழுங்காக இருக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பார். அனாவசியமாக, சினிமாவுலகைத் தவிர்த்த மனிதர்கள் படப்பிடிப்பினை வேடிக்கை பார்க்க அனுமதிக்க மாட்டார். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தனது சினிமா இமேஜை கீழிறக்கிக் கொள்ள அவர் இடங் கொடுத்ததில்லை. அனாவசிய அரட்டையெல்லாம் அவரது படப்பிடிப்புகளில் காண முடியாது.

படப்பிடிப்பில் எம்.ஜி.ஆர். போல் சுறுசுறுப்பாக இருந்த வேறு யாரையும் நான் பார்த்ததில்லை. 24 மணி நேரமும் தொடர்ந்தாற் போல் படப்பிடிப்பு இருந்தாலும் அவரிடம் சோர்வே காண முடியாது.

எம்.ஜி.ஆரிடம் தைரியமாகப் பேசக் கூடியவர் சாண்டோ சின்னப்பா தேவர் ஒருவர் தான். மற்றவர்கள் எம்.ஜி.ஆர். அருகில் செல்லக்கூடப் பயப்படுவார்கள்.

ஒரு முறை தேவர் பிலிம்ஸின் 'முகராசி' படத்தின் படப்பிடிப்பு வாகினி ஸ்டூடியோவில் நடந்து கொண்டிருந்தது. அன்றைக்கு எம்.ஜி.ஆர். வர தாமதமாகும் போலிருந்தது.

தேவர் உடனே தொலைபேசியை எடுத்து 'என்னண்ணே இங்கு எல்லோரும் வந்து விட்டார்கள். நீங்கள் ஒருவர்தான் பாக்கி. இப்போ நீங்க வர்றீங்களா? அல்லது படப்பிடிப்பை கான்சல் செய்துடட்டுமா?' என்று கோபத்துடன் [illegible]

''இதோ வந்துட்டேங்க'' என்று பதிலளித்து விட்டு விரைந்து வந்தார்.

அப்போதும் தேவரின் கோபம் அடங்கவில்லை. எம்.ஜி.ஆரின் அருகிலிருந்த ஜெமினியைத் திட்டுவது போல், ''என்னய்யா வசனம் பேசறீங்க?'' என்று இடித்துக் காட்ட, அதற்கு எம்.ஜி.ஆர்., ஜெமினியிடம் ''தேவர் திட்டுவது உங்களையல்ல. என்னைத்தான்'' என்று சொல்லி சிரித்தார்.

முடிவில் எம்.ஜி.ஆர். வீட்டுக்குப் போகும்போது ''அண்ணே, நான் ஏதோ அவசரத்தில் பேசியிருப்பேன், அதெல்லாம் மனசுல வெச்சுக்காதீங்க'' என்று சமாதானமாகப் பேசுவார். இருவரும் மிகுந்த சிநேகமானவர்கள். இல்லையென்றால் எம்.ஜி.ஆரை வைத்து பதினெட்டு படங்கள் எடுத்திருப்பாரா?

'அடிமைப் பெண்' படத்தின் வெளிப்புறப் படப்பிடிப்பு ஜெய்ப்பூரில் நடைபெற்றது. அங்குள்ள கண்ணாடி மாளிகையொன்றினை படப்பிடிப்பிற்காக ஏராளமான செலவில் அலங்கரித்து எல்லோரையும் வியப்பிலாழ்த்தி விட்டார்.

ஒரு நாள் படப்பிடிப்பின் போது கண்ணாடி மாளிகையில் சிக்கலான ஒரு இடத்தில் காமிராகோணம் அமைக்கும்படி ஒளிப்பதிவாளர் ராமமூர்த்தியிடம் எம்.ஜி.ஆர். சொல்ல, அதற்கு ராமமூர்த்தி சரியாக வராது என்று வாதிட்டார். ''முயற்சித்துப் பாருங்களேன்'' என்று எம்.ஜி.ஆர். மீண்டும் வற்புறுத்த, ராமமூர்த்தி வேண்டா வெறுப்புடன் எம்.ஜி.ஆர். சொன்ன இடத்தில் காமிராவை வைத்துப் பார்த்து விட்டு, ''என்னால் இந்தக் கோணத்தில் எடுக்க முடியாது'' என்று எழுந்து விட்டார்.

அவரது செயலை விட்டுக் கொடுக்காமல் எம்.ஜி.ஆர். என்னிடம் ''பார்த்தீர்களா, வேலையில் எப்படி ஒழுங்காக இருக்கிறாரென்று. முடியும் என்றால் முடியும். இல்லை என்றால் இல்லை. இப்படித்தான் ஒரு ஒளிப்பதிவாளர் இருக்க வேண்டும்'' என்று ராமமூர்த்தியை பாராட்டினார்.

படப்பிடிப்பு நேரத்தில் எம்.ஜி.ஆரை நம் இஷ்டத்திற்கு ஸ்டில் எடுக்க முடியாது. தேவையின்றி போஸ் கொடுக்க மாட்டார். அவரை எந்த சமயத்தில் படமெடுக்க அழைத்தால் ஒத்துழைப்பார் என்று எனக்கு நன்றாகத் தெரியும்.

ஒரு முறை நடேஷ் ஆர்ட் பிக்சர்ஸின் படப்பிடிப்பில் எம்.ஜி.ஆரை தேவையான அளவு ஸ்டில் எடுத்து விட்டேன். பெரும்பாலும் நான் அவர் நடித்துக் கொண்டிருக்கையிலே எடுத்து விடுவதால், தயாரிப்பாளரும்- இயக்குநருமான நடேசன் அதை அறியாமல், ''ஸ்டில் எடுங்கள்'' என்று வற்புறுத்திக் கொண்டேயிருந்தார்.

நான் அவரை அருகில் வைத்துக் கொண்டே எம்.ஜி.ஆரிடம், ''ஸ்டில் எடுக்க வேண்டும்'' என்று சொல்ல, எம்.ஜி.ஆர். சிரித்துக் கொண்டே இருகரம் கூப்பி, ''மன்னிச்சிடுங்க. நான் போஸ் கொடுக்க மாட்டேன்!'' என்று கூறிவிட்டுச் செல்ல, நடேசன் அதற்கு மேல் என்னிடம் எதுவும் கேட்கவில்லை.

எம்.ஜி.ஆர். முதல்வராக வருவதற்கு பல வருடங்களுக்கு முன் அவர் வீட்டிற்குச் சென்றிருந்தேன். அவரைச் சந்திக்க பல ஊர்களிலிருந்தும் ரசிகர்கள் கூட்டம் கூட்டமாய் வந்திருந்தார்கள். அவர்களில் சிலர் எம்.ஜி.ஆரோடு படம் எடுத்துத் தரும்படி கேட்க, எனக்கும் மறுக்க மனமின்றி சரியென்று சொல்லி தயாரானேன்.

நான் படம் எடுத்த நேரத்தில் அந்த ரசிகர்களில் சிலர் எம்.ஜி.ஆரின் மேல் பூக்கள் நிறைந்த கூடையொன்றை கவிழ்க்க, அவை பூக்களை கொட்டியவர்கள் மீதும் விழுந்தன. 'எம்.ஜி.ஆரின் மேல் பட்ட பூக்கள் தம் மீதும் விழுகின்றதே' என்ற பேரானந்தம் அவர்களுக்கு.

எம்.ஜி.ஆர். படங்களுக்கு சண்டைக் காட்சி அமைத்து புகழ் பெற்ற ஸ்டண்ட் மாஸ்டர் சியாம்சுந்தர், எனக்கு நல்ல நண்பர். ஒரு நாள் அவரோடு பேசிக் கொண்டிருக்கையில் ஒரு சிறு மனத்தாங்கல் காரணமாக, ''எம்.ஜி.ஆரிடம் வேலை செய்வது எனக்கு சரிபட்டு வராது'' என்று எதேச்சையாக என் மன உளைச்சலை வெளிப்படுத்தினேன். அதை அவர் எம்.ஜி.ஆரிடம் போய் சொல்லி விட்டார்.

அதன் பிறகு தேவர் பிலிம்ஸ் படப்பிடிப்பில் ஒரு நாள் எம்.ஜி.ஆர்., நம்பியார் உட்பட ஐம்பதுக்கு மேற்பட்டவர்கள் செட்டில் இருந்தார்கள். ஒரு ஷாட் படமாகி முடிந்ததும் நான் ஒரு ஸ்டூல் மீது ஏறி நின்று எம்.ஜி.ஆரையும், சாவித்திரியையும் இணைத்து ஸ்டில் எடுத்தேன்.

முடித்து இறங்குவதற்குள் நேராக என்னிடம் வந்த எம்.ஜி.ஆர். என் கரங்களோடு சேர்ந்து என்னை அணைத்துப் பிடித்துக் கொண்டு, ''என்னை மன்னிச்சிடுங்க!'' என்றார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. அழுகை வந்து விட்டது.

தழுதழுத்த குரலில், ''இப்படியெல்லாம் செய்யாதீங்க!'' என்று, சொன்னேன்.

இந்த சம்பவத்தை அடுத்து ஐதராபாத்தில் தெலுங்குப் படப்பிடிப்பிற்காக போனேன்.



என்னோடு வந்தவர்கள் ஒளிப்பதிவாளர்கள் பி.எல். ராய், தாரா, ஸ்டண்ட் மாஸ்டர் சியாம் சுந்தர். ஒரு நாள் மாலை நேரத்தில் சாவகாசமாக பேசிக் கொண்டிருந்தோம்.

அப்போது நான் சியாம் சுந்தரிடம் கோபமாக, ''எம்.ஜி.ஆரிடம் போய் கோள் மூட்டி விடுகிறீரே, நாளைக்கு அவருக்கு ஏதாவது ஆகி விட்டால், அப்ப என்ன செய்வீர்?'' என்று நான் சொன்னதைக் கேட்டு எல்லோரும் பயந்து ஓடி விட்டார்கள்.

மறுநாள் சென்னைக்கு ரெயிலில் திரும்புகிறோம். நெல்லூரில் காலையில் ரெயில் நின்றது. ஆங்கில தினசரியை வாங்கிப் பார்த்தால், அதில் எம்.ஜி.ஆர். சுடப்பட்ட செய்தி வந்திருந்தது. சியாம்சுந்தரிடம் காட்டி, ''இப்ப என்ன செய்வீர்?'' என்று கேட்டேன்.

சென்ட்ரலில் ரெயில் நின்றதும், சியாம் சுந்தர் நேராக அரசு மருத்துவமனைக்கு ஓடினார். எம்.ஜி.ஆரிடம் நான் சொன்னதைப் பற்றி என்ன சொன்னாரோ, குணமாகி வந்த பின் என்னை எம்.ஜி.ஆர். எப்போது பார்த்தாலும் ''என்னை ஆசீர்வதிங்க!'' என்பார். அதிலிருந்து நாகராஜராவுக்கு கருநாக்கு; ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்' என்பார்கள்.

எம்.ஜி.ஆருக்கு வயதின் காரணமாக தாடைக்குக் கீழே சதை மடிப்பு இருக்கும். அதை மறைக்க என்னென்னவோ செய்து பார்த்தார். உடையலங்காரம் மூலம் உயரமான காலர் மூலம் மறைக்கப் பார்த்தார்.

நான் ஒரு முறை, 'முட்டையிலுள்ள வெள்ளைக் கருவை அந்த இடத்தில் ஸ்பிரிட்டோடு தடவினால் ஒட்டிக் கொள்ளும். சுழல் சுருக்கம் தெரியாது என்றேன். 'அப்படியா?' என்று வியப்போடு கேட்டார். ஆனால், அதை பின்பற்றினாரா என்று தெரியவில்லை.

எம்.ஜி.ஆர். 1977-ல் தேர்தலில் தீவிர பிரச்சாரம் செய்வதற்கு முன் 'குமுதம்' அட்டைப் படத்திற்காக அவரை படமெடுக்கச் சென்றேன். அவர் சாதாரணமாக போஸ் கொடுத்து நின்றபோது, நான் அவரிடம் 'V' ''for victory'' என்று இரு விரல்களை விரிக்கச் சொல்லி படமெடுத்தேன்.

அது என்னவென்றால் இரட்டை இலைக்கு முக்கியத்துவம் கொடுப்பதுபோல் அந்தப் படம் பெரிய அளவில் விளம்பரமாக விஸ்வரூபமெடுத்து விட்டது.

அன்று நான் அவரை படமெடுப்பதற்கு முன், அவரிடம் ஷேம நலம் விசாரித்துப் பேசிக் கொண்டிருக்கையிலே, என்னை தனது 'பொலராய்டு' காமிராவில் படமெடுத்து (உடனே டெவலப் செய்து பிரிண்ட் கொடுக்கும் தானியங்கி காமிரா) என்னிடம் காண்பிக்க, நான் 'வெரிகுட்' என்று சொல்லி அவரை பாராட்டினேன். படத்தை என்னிடம் தராமல் தானே வைத்துக் கொண்டார். நானும் கேட்கவில்லை. முதல்- அமைச்சரான பின்பு கூட அந்த காமிராவால் அவர் படங்கள் எடுத்திருக்கிறார் என்று நினைக்கிறேன்.

எம்.ஜி.ஆர். முதல்வராக பதவியேற்ற முதல் நாளில் நான்தான் முதல் படமெடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அவர் முதல்வர் நாற்காலியில் அமருகையில், கோட்டைக்குச் சென்று படங்கள் எடுத்து, 'ஆனந்தகவிகடன்' அட்டையில் வெளியானது. அவர் ராஜாஜி ஹாலில் பதவிப் பிரமாணம் எடுத்த போதும் படமெடுத்தேன்.

எம்.ஜி.ஆருக்கு டயரி எழுதும் வழக்கமுண்டு. அதனால், நாற்பது, ஐம்பது வருடங்களுக்கு முன்பு நடந்த சம்பவங்களைக் கூட அவரால் சரியாக குறிப்பிட்டுச் சொல்ல முடியும்.

எம்.ஜி.ஆர். கோபம் கொண்டு பேசி எப்போதுமே பார்க்க முடியாது. அவருக்கு யாருடைய செய்கையாவது பிடிக்கவில்லையென்றால் பலர் முன்னிலையில் சொல்லாமல், அந்த நபரின் காதிலேயே சொல்வார். இதை 'ஐரோப்பியர் பாணி' என்பார்கள்.

எம்.ஜி.ஆருக்கு கன்னடம், ஆங்கிலம், மலையாளம் இவற்றுடன் தெலுங்கும் ஓரளவு

பேச வரும். சில சமயங்களில் என்னுடன் தெலுங்கில் பேசுவார்.

படப்பிடிப்புக்கு எம்.ஜி.ஆருடன் சூட்கேஸ் ஒன்றும் சேர்ந்து வரும். அதில் நிறைய பணமிருக்கும். தேவையென்று வருவோருக்கு அதிலிருந்து நிறைய கொடுப்பார். எனக்குத் தெரிந்து ஸ்டூடியோக்களில் படப்பிடிப்பு நேரத்தில் பல அரசியல்வாதிகள் எம்.ஜி.ஆரைச் சந்தித்து பணம் வாங்கியதை பலமுறை கண்டிருக்கிறேன்.

குழந்தைகள் மீது எம்.ஜி.ஆருக்கு கொள்ளை பிரியம். எந்த இடத்திலும் குழந்தைக ளைக் கண்டு விட்டால் அவர்களை வாரி அணைத்து கொஞ்ச ஆரம்பித்து விடுவார். அந்த குழந்தைகளின் உடலோ, உடையோ அழுக்காக இருந்தால் கூட அது பற்றி லட்சியம் செய்ய மாட்டார்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு சோவியத் கலாச்சார சபையில் ஒரு புகைப்படக் கண்காட் சியில் என்னை ஒரு நீதிபதியாக நியமித்திருந்தார்கள். கடைசி நாள் சிறந்த படங்களுக்கு பரிசளிப்பு விழா நடந்தபோது முதல்வர் எம்.ஜி.ஆர். தலைமை தாங்கி பரிசுகள் வழங்கி எனக்கும் பொன்னாடை போர்த்தி பேசினார்.

அப்போது ''என் போன்றவர்களின் ஜாதகமே நாகராஜராவ் அவர்கள் கையில்தான் இருக்கிறது. ஆரம்பத்திலிருந்து இன்று வரையிலும் திரையுலக கலைஞர்களின் வளர்ச்சி யெல்லாம் அவருக்கு அத்துபடி. அவரை சாதாரணமானவர் என்று நினைத்தால் ஆபத்து தான். அதனால் அவரிடம் நாங்கள் எச்சரிக்கையாக இருப்போம். அவருக்கு பொன்னாடை போர்த்தும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தற்காக பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன்'' என்று பாராட்டினார்.



## முதல் கசப்பு!

**எம்.**ஜி.ஆரின் வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு படம் 'சாயா'. 1942-ல் உருவாகி 6000 அடிகளுடன் நின்று போன படம் அது. அவருக்கு கதாநாயகனாக வேடம் கிடைத்த முதல் படம் அதுதான்.

சிறு சிறு வேடங்களில் நடித்துக் கொண்டு வாழ்க்கையோடு போராடிக் கொண்டிருந்த எம்.ஜி.ஆர். மனம் வெறுத்து ராணுவத்தில் சேர தயாரானார். அந்த நேரத்தில் 'சாயா'

படத்தில் கதாநாயகனாக நடிக்க அவருக்கு அழைப்பு வந்தது.

தனக்கு இனி வாழ்வு விடிந்து விடும் என்ற நம்பிக்கையோடு இருந்தவருக்கு 'உனக்கு நடிக்கத் தெரியவில்லை. மரக்கட்டை மூஞ்சி' என்றும் அடிக்கடி 'மங்கி! மங்கி! என்ன நடிக்கிறாய்?' என்றும் இயக்குநர் நந்தலால் ஜஸ்வந்தலால், தயாரிப்பாளர் மீதிருந்த கோபத்தை எம்.ஜி.ஆரிடம் காட்டி அவரை வேதனைக்குள்ளாக்கினார். இன்றைக்கும் புது முக நடிகர் நடிகையின் பாடு இதுதான்!

தயாரிப்பாளருக்கும் நந்தலாலுக்கும் ஏற்பட்ட தகராறினால் அந்தப் படம் நின்று போனது. அப்புறம் பி.யூ. சின்னப்பா அந்த படத்தில் நடிப்பதாக இருந்து அதுவும் நடக்க வில்லை.

அந்த நாளில் எம்.ஜி.ஆருடன் நடித்தபோது தனக்கேற்பட்ட அனுபவங்களை மறைக் காமல் குறிப்பிட்டார், 'சாயா'வில் எம்.ஜி.ஆருக்கு ஜோடியாக நடித்த டி.வி. குமுதினி.

'அசோக்குமார்' படத்தில் பாகவதரின் ஜோடியாக நான் நடித்தேன். எம்.ஜி.ஆருக்கு அதில் தளபதியைப் போன்ற சில காட்சிகளில் மட்டுமே வரும்படியான சிறு வேடம்.

அப்போதெல்லாம் தனக்கு காட்சியில்லாதபோது எம்.ஜி.ஆர். துணை நடிகர்களுடன் ஓரமாக நின்று கொண்டிருப்பார். நல்ல தோற்றத்துடன் இருப்பார். அதனாலேயே அவரைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு ஒரு அனுதாப உணர்வு எழும். யாருடனும் அதிகம் பேச மாட்டார். அண்ணன் சக்கரபாணி வந்தால் அவரோடு மட்டும் பேசிக் கொண்டிருப்பார்.

அடுத்து 'சாயா' படம் துவங்கியது. நாராயணன் கம்பெனியின் தயாரிப்பான இந்த படத்தின் படப்பிடிப்பு கோவை சென்ட்ரல் ஸ்டூடியோவில் நடந்தது. இதில் எனக்கும் கதாநாயகனாக நடித்த எம்.ஜி.ஆருக்கும் வீர தீரக் காட்சிகள் உண்டு என்பதால் அதற்கான பயிற்சிகளையும் மேற்கொண்டோம். குதிரை பயிற்சியெல்லாம் சென்னையிலேயே கற்றுக் கொண்டோம்.

சென்னை தீவுத்திடல் அருகில் 'பாடி கார்டு' என்ற இடத்தில் (இப்போது அங்கு பல்லவன் பஸ் டெப்போ இருக்கிறது) குதிரை லாயம் இருந்தது. அங்குள்ள குதிரைகளில் ஏறி மெரீனா கடற்கரை வரை செல்வோம்.

நான் குதிரைச் சவாரி செய்ய 'மாத்ரு பூமி' படத்தின் போதே ஓரளவு கற்றிருந்தேன் என்பதால் எனக்கு எளிதாக இருந்தது. எம்.ஜி.ஆர். குதிரை மீது ஏறவே பயப்படுவார். ஏறி விட்டாலும் அருகில் பயிற்சியாளர் இருந்தால்தான் நகர்த்திச் செல்ல அவருக்கு தைரி யம் வரும்.

பல நாட்கள் குதிரை லாயத்திற்கு வந்தும் எம்.ஜி.ஆர். சரிவர பயிற்சி பெறாததால் படப்பிடிப்பின் போது சமாளித்துக் கொள்ளலாம் என்று நந்தலால் ஜஸ்வந்த்லால் சொல்லி விட்டார்.

(எம்.ஜி.ஆர். சரித்திர படங்களில் எத்தனையோ நடித்து இருந்தாலும், குதிரையு டன் அவரை அரிதாகத்தான் பார்க்க முடியும். நடித்த சில காட்சிகளில் டூப் போட்டிருக் கிறார். குதிரை மீது உட்கார்ந்து நடித்ததோடு சரி.

குதிரை மீது அமர்ந்து வேகமாகச் செல்வதெல்லாம், 'பேக் புரொஜக்ஷன்' முறை யில், ஸ்டூடியோவில் எம்.ஜி.ஆர். மரக்குதிரை மீதமர்ந்து கையை அசைத்து நடிப்பது போல் படமாக்கி இருக்கிறார்கள். பின்னணியில் காட்சிகள் நகர எம்.ஜி.ஆர். குதிரை மீது செல்வது போல் தெரியும்.

உதாரணமாக 'நாடோடி மன்னன்' படத்தில் "உழைப்பதினால் உழைப்பை பெறு



'சாயா' படத்தில் எம்.ஜி.ஆர்., குமுதினி

**வதினால் இன்பம் உண்டாகுமென்றே சொல் என் தோழா'' என்ற பாடல் காட்சியில் எம்.ஜி.ஆர். பாடியபடியே குதிரை மீது செல்வது போல் உள்ள காட்சி 'பேக் புரொஜக் ஷன்' முறையில் படம் ஆக்கப்பட்டதுதான்)**

'சாயா' படத்தில் 'சாயா'வாக நானும், எனது ஜோடியாக 'ராணா வீர்சிங்' என்ற வேடத்தில் எம்.ஜி.ஆரும், மற்றும் பி.யூ. சின்னப்பாவின் மனைவி சகுந்தலா, என்.எஸ். கிருஷ்ணன், டி.ஏ. மதுரம் ஆகியோரும் நடித்தோம்.

படத்தில் இடம்பெற்ற பாடல்களை நான் என் சொந்தக் குரலிலேயே பாடினேன். எம்.ஜி.ஆர். பாய்ஸ் கம்பெனி நாடகங்களில் பாடுவதற்கு பயற்சி பெற்றவர் என்றாலும், ஏனோ சினிமாவில் அவருக்கு பாட வரவில்லை. அதனால் அவர் பாட வேண்டிய பாடல் களை இசையமைப்பாளர் ஜி. ராமனாதன் பின்னணியாக பாடுவார். படத்திற்கு ஒளிப்பதிவா ளர் கூப்பர்.

எம்.ஜி.ஆர். கதாநாயகன் என்றாலும், புதுமுக நடிகர் என்பதால், படப்பிடிப்பு இடை வேளையில் செட்டின் ஓரமாக நாற்காலியைப் போட்டு உட்கார்ந்திருப்பார். அப்போதும் யாருடனும் பேசுவதில்லை. துணைக்கு வரும் அண்ணன் சக்கரபாணியுடன்தான் பேசுவார்.

படப்பிடிப்பு முடிந்தபின் எம்.ஜி.ஆர். கம்பெனி காரில் செல்வார் அல்லது நடந்தே வீட்டுக்குப் போவார். எனக்கு அப்போது சொந்தமாக கார் உண்டு. அதனால் எனது இருப்பிடத்திற்கு காரில் திரும்புகையில் சில வேள்ளைகளில் நானும் என் கணவரும் எம்.ஜி. ஆரை அழைப்போம். அவர் கூச்சத்துடன் மறுப்பார்.

நாங்கள் வற்புறுத்தி அவரை ஏற்றிக் கொண்டு கோவை ராமநாதபுரத்திற்கு அருகில் 'வாலாங்குளம்' என்ற இடத்திலிருக்கும் அவரது வீட்டில் கொண்டு போய் விடுவோம். அப்போது அவருடன் தாயார் சத்யபாமா மற்றும் சக்கரபாணியின் மனைவி ஆகியோரும் இருந்தார்கள்.

சத்யபாமாவுக்கு தன் மகன் கதாநாயகனாக நடிக்கிறானே என்று கொள்ளை மகிழ்ச்சி. அவருடன் ஜோடியாக நடிக்கும் கதாநாயகி என்பதால் என் மீது அவருக்கு மிகுந்த அன்பு. எம்.ஜி.ஆரின் தாயாரைப் பார்க்கும் போதெல்லாம் என் மனம் நெகிழ்ந்து விடும்.

ஒரு நாள் பாடல் காட்சி ஒன்றுடன் இணைந்த நீளமான ஷாட் ஒன்று படமாக்க வேண்டும். பாபநாசம் சிவன் எழுதிய பாடலை நான் பாடி முடித்ததும், தன்னை துரத்திக் கொண்டு வரும் எதிரி நாட்டுப் படைகளிடமிருந்து விடுபட்டு, நான் தோழிகளுடன் இருக்கும் இடத்திற்கு வந்து மயங்கி விழுவார் எம்.ஜி.ஆர். நான் அவரை மடியில் தூக்கி வைத்து அவரது மயக்கத்தை தெளிய வைக்க முயற்சிப்பேன். இதெல்லாம் ஒரே ஷாட்டில் படமாக்கப் பட வேண்டும்.

அந்தப் பாடல் அம்பாளை துதித்து பாடுவது போல் உள்ள காட்சி. ரஜபுத்திர பெண்களில், வயது வந்த பெண் ஒரு ஆடவனை தொட்டு விட்டாலே அவனைத்தான் கணவனாக வரித்துக் கொள்ள வேண்டும்.

அதனால் உயிர் பிழைக்க தப்பி வரும் 'ராணாவீர்சிங்' என்ற எம்.ஜி.ஆரை 'சாயா' என்ற ரஜபுத்திர பெண்ணாகிய நான் காப்பாற்றும் நேரத்தில் அவரையே மணந்து கொள்ளும் நெருக்கடி என் மனதில் உண்டாகிறது.

எம்.ஜி.ஆரை என் மடியில் தூக்கி வைக்கும் போது என் மனதில் சிக்கலான உணர்வுகள் எழும். இதையெல்லாம் ஒரே ஷாட்டில் சரியாகச் செய்தாக வேண்டும். இதற்கு பலமுறை ஒத்திகை பார்த்தாகிவிட்டது.

'டேக்' நேரத்தில் எம்.ஜி.ஆருக்கு ஓடி வந்து மயங்கி விழுவது, என் மடியில் படுக்கும் போது மயக்க உணர்வைக் காட்டுவது இதெல்லாம் சரியாகச் செய்யும் டைமிங் வரவில்லை. அதனால் மீண்டும் படமாக்கினார்கள். அப்போதும் எம்.ஜி.ஆருக்கு வரவில்லை. இப்படியே பத்து (டேக்) முறை படமாகி வீணாகியது.

ஏற்கனவே எம்.ஜி.ஆர். நாடக பாணியில் நடிக்கிறார். வசனம் பேசுகிறார் என்று இயக்குநர் மிகுந்த கோபமாக இருந்தார். இப்போது எம்.ஜி.ஆர். மீது மிகுந்த எரிச்சலை வெளிப்படுத்தினார்.

இந்த சந்தர்ப்பத்தில் என் கணவர் சும்மா இருந்திருக்கலாம். அவருக்கு வேறு வகையில் கோபம் வந்து விட்டது. ''இரண்டு வெற்றிப் படங்களில் கதாநாயகியாக நடித்த என் மனைவி, துணை நடிகராக நடித்த ஒருவரை மடியில் தூக்கி வைத்து எத்தனை முறைதான் நடிப்பாள்? நடிக்கத் தெரியாதவர்களெல்லாம் வந்து ஏன் நம் கழுத்தை அறுக்கிறார்கள்?'' என்று தனது உணர்ச்சியை செட்டுக்கு வெளியே வந்து பலரின் முன் வெளிப்படுத்தி இருக்கிறார்.

துணை நடிகராக இருந்து முதன் முதலில் கதாநாயகனாக ஒப்பந்தமான எம்.ஜி.ஆர். முன்பே பிரபல கதாநாயகியாக விளங்கிய என்னுடன் நடித்த போது, எம்.ஜி.ஆரைப் பற்றி என் கணவர் சொன்ன சொற்கள் உள்ளத்தில் இருந்து வந்தவை அல்ல. ஏதோ உணர்ச்சி வேகத்தில் சொன்னவை.

என் கணவரின் வார்த்தைகளை அப்போது அங்கே இருந்த சக்கரபாணியும் கேட்டுக் கொண்டு இருந்திருக்கிறார். அண்ணனிடம் ஆறுதல் பெற வந்த எம்.ஜி.ஆரிடம் இந்த விஷயங்கள் காதுக்கு போயிருக்கிறது.

அதிலிருந்து செட்டில் அவருக்கு என்னைப் பார்த்துப் பேச சந்தர்ப்பம் இருந்தாலும் மவுனமாயிருந்து விடுவார். எல்லாவற்றிற்கும் உச்சகட்டமாக தயாரிப்பாளருக்கும், இயக்குனருக்கும் ஏற்பட்ட தகராறில் படம் நின்று போனது.



'சாயா'வில் ஒரு காட்சி

தயாரிப்பாளர் எம்.ஜி.ஆரை நீக்கி விட்டு, பி.யு. சின்னப்பாவை நடிக்கச் செய்யும் எண்ணம் கொண்டிருந்ததும் நடக்கவில்லை.

பின்னாளில் எம்.ஜி.ஆருக்கு மீண்டும் பிரதான வேடங்கள் கிடைத்த போது அவருடன் சேர்ந்து நடிக்கின்ற சந்தர்ப்பங்களில் அவரது கோபம் பல்வேறு ரூபங்களில் வெளிப்பட்டது.

கவிஞர் கண்ணதாசன் 'ஊமையன் கோட்டை' என்று ஒரு படம் தயாரித்தார். அதில் நான், டி.எஸ். பகவதி நடித்தோம். ஒரு முறை படப்பிடிப்புக்கு வந்த எம்.ஜி.ஆர்., கண்ணதாச னிடம் பேசிக் கொண்டிருநது விட்டு 'இந்தப் படத்தில் நான் நடிக்க விரும்புகிறேன்' என்றார். கண்ணதாசனுக்கு மகிழ்ச்சி. ஆனால் நான் அந்தப் படத்தில் நடிக்க முடியாதே என வருந்தி னேன். எம்.ஜி.ஆரும் நடிக்காமல் கடைசியில் அந்த படமே நின்று போனது.

'மணிமேகலை' என்று ஒரு படம். மணிமேக்லையாக பானுமதியும், மாதவியாக ஜெய லலிதாவின் தாயார் சந்தியாவும், மகாராணியாக நானும், மணிமேகலையைக் காதலிக்கும் என் மகன் உதயனாக எம்.ஜி.ஆரும் நடிப்பதாக பூஜை எல்லாம் நடந்தது. எம்.ஜி.ஆர். அட்வான்ஸும் பெற்றுக் கொண்டார்.

ஆனால் செட் போட்டு நான்கு மாதங்கள் ஆகியும் எம்.ஜி.ஆர். கால்ஷீட் தரவில்லை. அதனால் எம்.ஜி.ஆருக்கு பதில் டி.ஆர். மகாலிங்கம் நடிக்க படப்பிடிப்பு ஆரம்பமாகி, படம் வெளிவந்தது.

எம்.ஜி.ஆரின் இத்தகைய நடவடிக்கைகளால் ஒரு சமயம் எனக்கு படங்களே இல்லா மல் போனது. 'இதை இப்படியே விட்டால் நல்லதில்லை. நேரிலேயே கேட்டு விடுவோம்' என்று எம்.ஜி.ஆருக்கு போன் செய்து வீட்டுக்கு வரும்படி சொன்னேன்.

வந்தவரிடம் ''ஏன் இப்படி செய்கிறீர்கள்? நான் உங்களுக்கு எந்தத் தீங்கும் செய்யாத




குமுதினி அன்றும் இன்றும்

போது, நீங்கள் செய்யலாமா?'' என்று கேட்டேன். அதற்கு எம்.ஜி.ஆர். ''நீங்கள் நினைப்பது போல் நான் எதிலும் தலையிடவில்லை'' என்று பொதுவாக விளக்கம் சொல்லி சென்று விட்டார்.

ஒரு சமயம் என்.கே.டி. கலா மண்டபத்தில் நட்சத்திர நிகழ்ச்சி ஒன்று நடந்தது. அதில் நானும் கலந்து கொண்டேன். நிகழ்ச்சியை படம் எடுத்த போதும், புகைப்படம் எடுத்த போதும் என் முகமே தெரியாதவாறு மறைத்து நின்றார் எம்.ஜி.ஆர்.

விஜயா கார்டனில் நடிகர் சங்க விழா நடந்தது. அப்போது விளையாட்டுப் போட்டிகளும் நடைபெற்றன. விளையாட்டுகளில் கலந்து கொள்ள ஆர்வமாக இருந்த என்னை எம்.ஜி.ஆர். தடுத்து நிறுத்தி விட்டு ''உங்களுக்கு வேறு வேலைகள் இருக்கின்றன. அதைப் பாருங்கள்'' என்று சொல்லி அனுப்பி விட்டார்.

இவ்வளவு நடந்தாலும் எம்.ஜி.ஆர். குடும்பத்தோடு எனக்கு உறவு நின்று விடவில்லை. அடிக்கடி சக்கரபாணி வீட்டிற்கு சென்று வருவோம். அவர்கள் வீட்டு திருமணங்களுக்கும் தவறாமல் அழைப்பு வரும். நானும் செல்வேன். அப்போதெல்லாம் எம்.ஜி.ஆர். 'நலமாக இருக்கிறீர்களா?' என்று விசாரிப்பார். அவ்வளவுதான்.

வி.என். ஜானகியைச் சந்திக்கும் போதெல்லாம் அன்பொழுக பேசுவார். எம்.ஜி.ஆரைப் பற்றி குறிப்பிடும் போது 'உங்க ஹீரோ' (சாயாவில் எனக்கு ஜோடியாக நடித்த காரணத்தினால்) என்று சொல்வார். மற்றவர்களிடம் அறிமுகப்படுத்தும் போதும் 'இவங்களோட ஹீரோ' என்று பெருமையாகச் சொல்வார்.

நான் போன் பேசினாலும் எம்.ஜி.ஆரின் நலம் விசாரிக்கும் போதும், 'உங்க ஹீரோ தானே, இப்போதான் படப்பிடிப்புக்கு போய் திரும்பினார்' என்று சொல்வார்.

எம்.ஜி.ஆரின் சொந்தப் படமான 'அடிமைப் பெண்'ணில் எனக்கொரு வாய்ப்பு வந்தது. அதை உறுதி செய்தவர் சக்கரபாணி.

அதற்காக உடைகளுக்கு அளவு எடுக்க சக்கரபாணி வீட்டிற்கு சென்றபோது எம்.ஜி.ஆரும் அங்கே இருந்தார். 'தயாராகத்தான் இருக்கீங்க போல் இருக்கே' என்றார். அதை எந்த உணர்ச்சியில் சொன்னார் என்று எனக்குப் புரியவில்லை, ஆனால் படப்பிடிப்புக்கு எனக்கு அழைப்பு வரவே இல்லை.

என்.எஸ். கிருஷ்ணன் சகோதரர் திரவியம் 'ஒரு தாய் மக்கள்' என்று ஒரு படம் எடுத்தார். அதில் நடிப்பதற்கு என்னை அழைத்தார். 'அசோகனுக்கு அத்தை வேடம்' என்றார்.

எம்.ஜி.ஆர். நடிக்கும் இந்தப் படத்தில் நமக்கு எப்படி வாய்ப்பு இருக்க முடியும் என்ற

சந்தேகத்தில், 'எம்.ஜி.ஆருக்கு 'மறுப்பிருக்காதே' என்று கேட்டேன்.

'எம்.ஜி.ஆரிடம் உங்கள் வேடம் பற்றி சொன்ன போது மறுப்பு தெரிவிக்கவில்லை' என்றார். படப்பிடிப்பில் எனக்கு எந்த பிரச்சினையும் இல்லை. எம்.ஜி.ஆரும் நல்ல விதமாகவே நடந்து கொண்டார்.

நான் கடைசியாக எம்.ஜி.ஆரைப் பார்த்தது நாகேஷ் வீட்டு திருமணத்தில். முதல்வராக அந்த திருமணத்திற்கு எம்.ஜி.ஆர். வந்தார். கூட்டம் அதிகமாகவும், நாங்கள் வேறு வேறு இடங்களிலும் இருந்த காரணத்தாலும் எம்.ஜி.ஆரோடு பேச முடியவில்லை.

ஆனால் என் பேத்தி கார்த்தி அவருக்கு அருகில் இருந்திருக்கிறாள். 'குமுதினி அம்மாவின் பேத்தி' என்று சொல்லப்பட்டபோது, அவளை ஆசையாகத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டார்'' என்றார்.



'நாடோடி மன்னன்' மேக்கப் டெஸ்ட் புகைப்படம்

## ஒப்பனை ரகசியம்!

**எம்.**ஜி.ஆருடன் பாய்ஸ் கம்பெனி நாடகங்களில் நடித்தவர்களில் இன்று உயிரோடிருப்பவர் 83 வயதாகும் மேக்கப்மேன் ராமதாஸ்.

'தாய்க்குப் பின் தாரம்' படத்தில் ஆரம்பித்து 'தாய் சொல்லைத் தட்டாதே', 'தாயைக் காத்த தனயன்', 'மதுரை வீரன்', 'நாடோடி மன்னன்' ஆகிய படங்கள் உள்பட ஆனந்த ஜோதி வரை எம்.ஜி.ஆருக்கு மேக்கப் மேனாக இருந்தவர் ராமதாஸ். எம்.ஜி.ஆருக்கு

அப்புறம் சரோஜாதேவி, மஞ்சுளா ஆகியோருக்கும் சிவாஜிக்கும் ஒப்பனையாளராக இருந் திருக்கிறார்.

''பாண்டிச்சேரியைச் சேர்ந்த நான் எனது 8-வது வயதில் (1919-ல்) மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் சேர்ந்தேன். பாய்ஸ் கம்பெனியில் பெரும்பாலும் (75 சதம்) ஸ்தீரி பார்ட் வேடங்கள்தான். எனக்கு சிறு வயது முதலே நீண்ட கூந்தல் உண்டு. நடிக்கிற போது போக மற்ற சமயங்களில் கொண்டை போட்டுக் கொள்வேன்.

நாங்கள் ஊர் ஊராக நாடகம் நடத்தச் செல்ல எங்களுக்காக ஒரு ஸ்பெஷல் ரயில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். அப்படித்தான், கும்பகோணம் சென்றோம்.

அங்குதான் ஏழு வயது துவங்கிய நிலையில் சிறுவன் எம்.ஜி.ஆரை நாராயணன் நாயர் என்பவர் அழைத்து வந்தார். எம்.ஜி.ஆர்., சக்கரபாணி இருவருக்கும், தாய் மாமனாக இருந்தவர் வேலுநாயர். எனக்கு அப்போது 14 வயது இருக்கும்.

எம்.ஜி.ஆர்., சக்கரபாணி இருவருமே ஒல்லியாக இருந்தார்கள். எம்.ஜி.ஆர். படபடப் பாக சுறுசுறுப்பாக இருப்பார். சக்கரபாணி சற்று அமைதியான சுபாவம்.

அண்ணன்- தம்பி இருவருமே இணை பிரியாத நண்பர்களாக இருப்பார்கள். அச்சில் வார்த்தது போல் ஒரே சாயலில் முகம், நிறம், இருவரையும் பார்க்க ஆச்சரியமாக இருக்கும்.

கறுப்பாக இருக்கும் என்னை எம்.ஜி.ஆரின் தாயார் சத்யபாமா 'கரிக்குட்டி' என்றே அழைப்பார். அவர் தன் பிள்ளைகளை கண்டிப்பதில் கூட ஒரு நாகரிகம் இருக்கும். இருவ ரும் தவறு செய்து அவருக்கு கோபம் வந்தால் 'கூனி' 'கைகேயி' என்று புராண உதாரணம் காட்டித்தான் திட்டுவார்.

எம்.ஜி.ஆர். 18 வயதை எட்டிப் பிடிக்கிற வரை மிகுந்த அம்மா செல்லமாகவே இருந்தார். பாலக்காட்டில் நாங்கள் முகாமிட்டிருந்த போது கே.பி. கேசவன் வீட்டிற்கு எம்.ஜி.ஆர். அடிக்கடி செல்வார். அங்கேயே தாயாருடன் தங்கியதும் உண்டு.கேசவன் மனைவி மாதவிகுட்டியை எம்.ஜி.ஆர். 'அண்ணி' என்றே அழைப்பார்.

16 வயது இருக்கும் போதே எம்.ஜி.ஆருக்கு சத்யபாமா பல் தேய்த்து விட்டிருக்கிறார். அதை மாதவிக்குட்டி ''நீ என்ன சின்னப் பையனா? அம்மா பல் தேய்த்து விடற அளவுக்கு'' என்று கூறி கேலி செய்வார். அப்போதெல்லாம் தாயாரின் பின்னால் எம்.ஜி.ஆர். மறைந்து கொள்வார்.

புத்தகங்கள், நாவல்கள் படிப்பதென்றால் எம்.ஜி.ஆருக்கு மிகுந்த விருப்பம். நாடகக் கம்பெனியில் ஓய்வு நேரம் கிடைத்தால் எம்.ஜி.ஆரை ஏதேனும் புத்தகத்துடன்தான் பார்க்க முடியும்.

வடுவூர் துரைசாமி அய்யங்கார் நாவல்கள் உட்பட பல புத்தகங்களை ஒரே நாளில் படித்து முடித்து விடுவார். அப்போது கைரேகை உட்பட பல ஜோதிடம் சம்பந்தப்பட்ட புத்தகங்களை படித்திருக்கிறார்.

எம்.ஜி.ஆர். பல சமயம் பெண் வேடமிட்டு நடித்திருக்கிறார். 'சக்குபாய்' என்ற நாடகத் தில் பெண் வேடமிட்டு நடிக்க வேண்டிய ஒருவர் வராததால், அந்த முறை மட்டும் அவரது வேடமேற்று பெண்ணாக நடித்தவர் சக்கரபாணி.

'மார்க்கண்டேயா' என்ற நாடகத்தில் நான் ஊர்வசியாகவும், எம்.ஜி.ஆர். மேனகாவாக வும் நடித்தோம். நான் கறுப்பாக இருக்கிற காரணத்தால் மேக்கப் போட ஒன்றரை மணி நேரம் ஆகும்.

எம்.ஜி.ஆரோ நாடகம் துவங்க மணி அடிக்கும் போது மட்டும் (சிவப்பாக இருந்த



'நாடோடி மன்னன்' படத்திற்காக எம்.ஜி.ஆருக்கு ஒப்பனை செய்யும் ராமதாஸ்.

காரணத்தால்) தானே மேக்கப் செய்து கொள்வார். நான் எம்.ஜி.ஆரக்கு நிகராக சிவப்பாக ஒப்பனை செய்து கொள்வேன்.

பின்னாளில் 'புதுமைப்பித்தன்' படப்பிடிப்பில் டி.ஆர். ராஜகுமாரியிடமும், 'நாடோடி மன்னன்' படப்பிடிப்பில் பானுமதியிடமும் 'அண்ணன் ராமதாஸ்' கறுப்பா இருக்காரேன்னு நினைக்காதீங்க. பாய்ஸ் கம்பெனி நாடகங்களில் நடிக்கறப்போ அவர் மேக்கப் போட்டுக்கிட்டார்ன்னா, என்னை விட அழகா இருப்பார்' என்று கூறி பாராட்டியிருக்கிறார்.

ராஜாஜி எங்கள் நாடகங்கள் பலவற்றைப் பார்த்திருக்கிறார். அந்த வகையில் எம்.ஜி. ஆர்., சக்கரபாணி இருவர் மீதும் அவருக்கு அபிமானமுண்டு.

இப்போது லாயிட்ஸ் சாலையில் சக்கரபாணி குடும்பத்தார் வசிக்கும் 'தாய் வீடு' முன்பு வி.பி. ராமன் குடும்பத்தாருக்கு சொந்தமாக இருந்தது. அங்கு ஒரு பகுதியில் இடம் காலியாக இருப்பது அறிந்து எம்.ஜி.ஆர். வாடகைக்கு குடி இருக்க கேட்டிருக்கிறார். வி.பி. ராமன் தந்தை 'நடிகர்களுக்கெல்லாம் வீடு தர முடியாது' என்று மறுத்து விட்டிருக்கிறார்.

எம்.ஜி.ஆர். நேராக ராஜாஜியை சென்று பார்த்தார். ராஜாஜி நலம் விசாரித்த போது, இறந்து போன எம்.ஜி.ஆரின் தாயார் சத்யபாமா பற்றி விசாரித்து விட்டு பேசிக் கொண்டிருக்கையில், எம்.ஜி.ஆர். பேச்சு வாக்கில் வி.பி. ராமன் வீடு பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்.

ராஜாஜி தாமதிக்காமல் வி.பி. ராமன் தந்தையிடம் தொடர்பு கொண்டு, 'எம்.ஜி.ஆர். சக்கரபாணி இருவரும் ராம- லட்சுமணன் மாதிரி. இரண்டு பேருமே நல்லவர்கள். அவர்களுக்கு வீடு கொடுக்கலாம்' என்று சிபாரிசு செய்ய, அங்கு குடியிருக்கப் போன எம்.ஜி.ஆர்., சக்கரபாணிக்கு, பின்னாளில் அந்த வீடே சொந்த வீடானது.

எம்.ஜி.ஆர். சென்னை தங்கசாலையில் குடியிருந்த போது அங்கு முனுசாமி நாயுடு என்ற ஸ்டண்ட் வாத்தியார் ஒருவர் இருந்தார். அவரிடம் எம்.ஜி.ஆர். உட்பட பலரும் ஸ்டண்ட் வித்தைகள் கற்றுக் கொண்டார்கள்.

கர்லாக்கட்டை சுழற்றுவது, பஸ்கி எடுத்தல், உட்கார்ந்து எழுவது எல்லாவற்றையும்

ஆர்வமாக கற்றுக் கொண்ட பின், எம்.ஜி.ஆருக்கு வியக்குமளவில் கம்பீரமான உடல்வாகு வந்தது.

'எம்.ஜி.ஆர். சினிமாவில் நடிக்க ஆரம்பித்த பின், நான் ஹரிபாபுவிடம் மேக்கப் உதவியாளராக பணிபுரிந்தேன். அந்த வகையில் 'மீரா' படத்திற்கு நாங்கள் பணியாற்றிய போது ஹரிபாபு எம்.எஸ். சுப்புலட்சுமிக்கு ஒப்பனை செய்தார்.

படத்தில் சிறு சிறு வேடங்களில் நடிக்கின்றவர்களுக்கு மேக்கப் போடும் வேலை என்னுடையது. 'மீரா'வில் சிறிய வேடம் எம்.ஜி.ஆருக்கு. அதனால் பல பேர்களுக்கு ஒப்பனை செய்கையில் நேரம் போதாமல் அவசரம் அவசரமாக வேலை நடக்கும்.

எம்.ஜி.ஆருக்கும் அப்படி செய்யும் போது, என் மனம் கஷ்டப்படும். ஆனால், என் மனதைப் புரிந்து கொண்டு எம்.ஜி.ஆர். 'வருத்தப்படறதுக்கு ஒண்ணுமேயில்லை அண்ணே' என்பார்.

தேவர் பிலிம்ஸ் துவங்கிய போது 'தாய்க்குப் பின் தாரம்' படத்தில் எம்.ஜி.ஆருக்கு மேக்கப் மேன் ஆனேன்.

எம்.ஜி.ஆர். என்னை 'அண்ணே' என்றும், 'ராமதாஸ் அண்ணே' என்றும் அழைப்பார். நான் அவரை 'வாய்யா, போய்யா' என்பேன். ஒரு சமயம் 'நாடோடி மன்னன்' படப்பிடிப்பில் பேச்சுவாக்கில் எம்.ஜி.ஆரை 'சொல்லுங்கண்ணா' என்றேன். எம்.ஜி.ஆர். சிரித்துக் கொண்டே ''என்னை கிழவனாக்குறீர்களே, 'வாடா போடா' என்றே சொல்லுங்கள்'' என்றார்.

படப்பிடிப்பின் போது செட்டுக்கு வெளியே வந்தால் எம்.ஜி.ஆர். அருகிலேயே இருப்பேன். அனாவசியமாக அருகில் யாரையும் விடுவதில்லை. என் அனுமதியின்றி யாராவது அருகில் வந்தால் உதைத்து விடுவேன். எம்.ஜி.ஆருக்கு பயப்படுகிறார்களோ இல்லையோ, எனக்கு பயந்து கொண்டு யாரும் வர மாட்டார்கள்.

எம்.ஜி.ஆருக்கு மேக்கப் செய்வதென்றால் ஒரு மணி நேரமாகும். அவரது கன்னங்களில் இரு பக்கமும் பள்ளம் இருக்கும். அதை லைட் அண்ட் ஷேட் (Light and Shade) முறையில் சரி செய்வேன்.

கண்களின் கீழே வளையம் இருக்கும். அதற்கு 'ஐ லெட்' (Eye lead) கொடுப்பேன். புருவங்களை மறுபுறத்தில் இருந்து நடுமையத்திற்கு தீட்டுவேன்.

என் கை பெண்களைப் போல் மிருதுவாக இருக்கும். அதனால் நான் மேக்கப் போடத் தொட்டாலே எம்.ஜி.ஆர். தூங்க ஆரம்பித்து விடுவார். மேக்கப் முடியும் கட்டத்தில் கண்ணைத் தொடும்போது விழித்துக் கொள்வார்.

எனக்குத் தெய்வ நம்பிக்கை உண்டு. எம்.ஜி.ஆருக்கு அப்போது நம்பிக்கை இல்லை. படங்களின் பூஜை நடந்தாலும், எம்.ஜி.ஆர். விபூதி, குங்குமம் இட்டுக் கொள்ள மாட்டார். சொந்தப் படங்களுக்கு பூஜை சமாச்சாரங்கள் கிடையாது.

1955-ல் 'நாடோடி மன்னன்' படம் துவங்கிய நேரம், முதல் நாள் படப்பிடிப்பு வாகினி ஸ்டூடியோவில் நடைபெற்றது.

நான் அதிகாலை 5-00 மணிக்கே ஸ்டூடியோவுக்குப் போய் விட்டேன். மேக்கப் அறையில் என் விருப்பப்படி தேங்காய், பழம், ஊதுபத்தியினால் பூஜை செய்து கண்ணாடியில் (மேக்கப் கிரீம்) பேன் ஸ்டிக்கினால் பொட்டு வைத்து முடித்தேன்.

துப்புரவுத் தொழிலாளியிடம் பூஜை பொருட்களை கொடுத்து போகச் சொல்லி விட்டேன். 5-45 மணிக்கு வந்த எம்.ஜி.ஆர். கண்ணாடி முன் நாற்காலியில் மேக்கப் போட

அமர்ந்தார்.

கண்ணாடியில் பொட்டு இருப்பதைப் பார்த்து ''என்ன அது பொட்டு இருக்கிறது?'' என்று கேட்டார். ''முதல் நாள் இரவு யாரோ வைத்து விட்டுப் போயிருக்கிறார்கள்'' என்றேன்.

எம்.ஜி.ஆரோ விடாமல் ''பொட்டு ஈரமா புதுசா இருக்கே. ராத்திரி வைத்தது இன்னுமா காயாம இருக்கும்?'' என்று கேட்க, அதற்கு மேல் பேச்சை வளர்க்க விரும்பாமல் டிஸ்யூ பேப்பர் மூலம் பொட்டைத் துடைத்தேன். எம்.ஜி.ஆர். ''இருந்து விட்டுப் போகட்டுமே ஏன் துடைக்கிறீர்கள்?'' என்று கேட்டார். 'உங்களை உறுத்தக் கூடாது' என்று பதிலளித்தேன்.

தொழில் ரீதியாக எம்.ஜி.ஆரை விட்டு விலகினாலும், அவரைத் தொடர்ந்து சந்தித்துக் கொண்டு தான் இருந்தேன். என் அறுபதாம் மணி விழாவின் போது எம்.ஜி.ஆர். தன் மனைவி ஜானகி அம்மாளுடன் வந்து வாழ்த்தினார்.

கடைசியாக நான் எம்.ஜி.ஆரை சந்தித்தது சக்கரபாணி காலமான அன்று, அவரது வீட்டில்.



## ஆத்திகரான நாத்திகர்

**எம்.**ஜி.ஆரின் தனிப்பட்ட சொந்த வழ்க்கை பெரும் பாலும் யாரும் அறியாத ஒன்று.

1952-ல் எம்.ஜி.ஆர். தி.மு.க.வில் சேரும் வரை காந்திய வாதியாக கதர் உடை அணிந்து (உள் ஆடைகள் உட்பட) கழுத்தில் துளசி மாலை அணிந்து நெற்றியில் பட்டையாக சந்தனம், குறுக்காக குங்குமக் கோடிட்டு பக்தி மயமாக இருப்பாராம்.



'நல்லவன் வாழ்வான்' படப்பிடிப்பின்போது இயேசுவாக எடுத்துக் கொண்ட புகைப்படம்.

முருகக் கடவுள், அம்மனின் மீது அவருக்கு மிகுந்த பக்தி உண்டு. வால்டாக்ஸ் சாலையில் எம்.ஜி.ஆர். குடியிருந்தபோது அங்குள்ள கோவில்களுக்கு தவறாமல் சென்று வழிபட்டிருக்கிறார்.

எம்.ஜி.ஆரின் அன்னை சத்தியபாமா அடிக்கடி தன் உறவினர் வேலுநாயர் துணையுடன் திருப்பதி கோவிலுக்குச் சென்று வருவாராம். சில சமயம் எம்.ஜி.ஆரும் தாயுடன் சென்று வந்திருக்கிறார்.

தி.மு.க.வில் சேர்ந்த பின் எம்.ஜி.ஆர். நாத்திகவாதியாக மாறினார். கோவில்களுக்குச் செல்வதை நிறுத்தினார். கதர் உடை பட்டுத் துணியாக மாறியது.

திரைப்படங்களிலும் நாத்திக உணர்வுடன் நடித்தார். நடிப்புக்காக கூட நெற்றியில் விபூதி இட்டுக் கொள்ள மாட்டார். ஆனாலும் வீட்டில் ஏசுவின் படத்தை மாட்டி வைத்திருக்கிறார். துன்பம் நேரிடும் சமயங்களில் 'முருகா' என்றும் 'ஏசுவே' என்றும் கூறியதை அவருக்கு நெருக்கமாக இருந்தவர்கள் தெரிவிக்கிறார்கள்.

புராணப் படங்களே அதிகமாக தயாரிக்கப்பட்டு வந்த தமிழ் சினிமாவின் ஆரம்ப நாட்களில் 'புராணப் படங்களில் நடிப்பதில்லை சமூகப் படங்களில் தான் நடிப்பது' என்ற

சபதத்தோடு இரண்டு நடிகர்கள் சினிமாவுக்கு வந்தார்கள். அவர்கள் எம்.ஜி.ஆரும், கே.பி. கேசவனும். ஆனாலும் இருவராலுமே அதை கடைப்பிடிக்க முடியவில்லை. இது காரணம் பற்றி 1949-ல் வெளிவந்த சினிமா இதழ் ஒன்றில் இப்படி சொல்லப்பட்டிருந்தது. ''படத் தொழிலில் ஈடுபட்ட உடனேயே ராமச்சந்திரன் 'சமூகப் படங்களில்தான் நடிப்பது' என்று தீர்மானம் செய்து கொண்டார்.

முதல் மூன்று படங்களையும் அவற்றில் தமக்கு கிடைத்த சந்தர்ப்பங்களையும் கவனித்த பின்னர் 'இந்தத் தீர்மானத்தை முதலில் பறக்க விட வேண்டும். இல்லாவிட்டால் நாமே சினிமா உலகில் இருந்து பறந்து விட வேண்டியிருக்கும்' என்பதை அறிந்து கொண்டார். சூழ்நிலை கருதி தன் தீர்மானத்தை கைவிட்டு விட்டார்.''

புராணப் படங்களில் நடிப்பதில்லை என்ற தீர்மானத்தை விட்டு விட்ட பிறகு எம்.ஜி. ஆர். நடித்த புராணப் படங்கள் தட்சயக்ஞம், மாயமச்சேந்திரா, பிரகலாதன், சீதா ஜனனம் (இந்திரஜித் வேடத்தில்), ஜோதி மலர் (சிவன் வேடம்), தமிழறியும் பெருமாள், அரிச்சந் திரா, மீரா, ஸ்ரீ முருகன் (சிவன் வேடம்), அபிமன்யூ (அர்ச்சுனன் வேடம்) - இது தி.மு.க.வில் சேருவதற்கு முன்.

சேர்ந்த பின் புராணம் சம்பந்தப்பட்ட படங்களை அறவே தவிர்த்திருக்கிறார். மாயா ஜாலம், பக்தி சம்பந்தப்பட்ட படம் என்பதற்காக, ராமண்ணா டைரக்ஷனில் 'காத்தவராயன்'



'ஸ்ரீமுருகன்' படத்தில் எம்.ஜி.ஆர்.

படத்தில் நடிக்க மறுத்தார்.

ராமண்ணாவை தன் விருப்பப்படி சம்மதிக்க செய்து விடலாம் என்று முதலில் 'காத்தவ ராயன்' படத்தில் நடிக்க ஒப்புக் கொண்டு செட்டுக்குப் போன எம்.ஜி.ஆர்., அங்கு மந்திர காட்சிகளை தந்திரத்தால் வெல்வது போன்ற காட்சிகளாக மாற்ற வேண்டும் என்று யோசனை தர, ராமண்ணா மறுத்து விட்டார். அதனால் அந்தப் படத்தில் இருந்தே எம்.ஜி. ஆர். பின் வாங்கியதால் சிவாஜி நடித்தார்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு தேவரின் தனிப்பிறவி படத்தில் 'எதிர்பாராமல் நடந்ததடி' என்ற பாடல் காட்சியில் ஜெயலலிதா வள்ளிக் குறத்தியாக, எம்.ஜி.ஆர். முருகக் கடவுளாக நடித்தார்கள், அதுவும் கனவுக் காட்சி என்ற பெயரில். முருகன் எம்.ஜி.ஆரின் இஷ்ட தெய்வம் வேறு.

ஏசு வேடத்தில் நடிக்க வேண்டும் என்ற விருப்பம் எம்.ஜி.ஆருக்கு நீண்ட காலமாக இருந்தது. அதை அறிந்த 'தலைவன்' படத் தயாரிப்பாளர் பி.ஏ. தாமஸ் ஒரு யுக்தி செய்தார்.

'தலைவன்' படம் துவங்கி நீண்ட காலமாக முடியாமல் இருந்தது. எப்படி முடிப்பது என்று யோசித்த தாமஸ், எம்.ஜி.ஆர். விருப்பப்படி 'ஏசு நாதர்' படத்தைத் துவக்கினார். ஆனால், கதையின் முடிவில் 'ஏசுவை சிலுவையில் அறைவது' போன்ற காட்சியில் நடிப்பதை நாங்கள் விரும்ப மாட்டோம் என ரசிகர்கள் எதிர்ப்பு தெரிவிக்க படம் பூஜையோடு நின்றது. ஆனால், தாமஸ் அதை 'ஜீசஸ்' என்ற பெயரில் மலையாளத்தில் எடுத்து தமிழிலும் வெளியிட்டார். ஜெயலலிதா அதில் நடனக் காரியாக நடித்தார்.

'நல்லவன் வாழ்வான்' என்ற படத்தில் நடித்தபோது, ஒரு நாள் படப்பிடிப்பு இடைவேளையில் எம்.ஜி.ஆர். ஏசு நாதர் போல் தாடி, உடைகள் அணிந்து ஒப்பனை செய்து கொண்டு புகைப்படம் எடுத்துக் கொண்டார். அது ஆசைக்காக எடுத்துக் கொண்டது.

1976-ல் வெளிவந்த 'உழைக்கும் கரங்கள்' படத்தில் எம்.ஜி.ஆர். சிவன் வேடத்தில், ருத்ரதாண்டவம் ஆடுவது போல் கிளைமாக்ஸ் காட்சியில் நடித்தார். சினிமாவில் இப்படி என்றால் நிஜ வாழ்வில் வெளியே சொல்ல முடியாத ஒரு ஏக்கம் இருந்தது.


எம்.ஜி.ஆரின் இரண்டாவது மனைவி சதானந்தவதியின் தாயார் மூகாம்பிகை அம்மாள். அவர் இறப்பதற்கு முன் கேரள இந்து மலையாளிகளுக்கு குல தெய்வமாக விளங்கிய மூகாம்பிகையின் கோவிலுக்கு செல்ல விரும்பினார். ஆனால், அது நிறைவேறவில்லை.

எம்.ஜி.ஆரின் பல படங்களை டைரக்ட் செய்திருப்பவர் கே. சங்கர். அவர் மூகாம்பிகை கோவிலுக்கு வருடம் தவறாமல் சென்று வந்தவர். அந்த கோவிலின் மகிமை பற்றி எம்.ஜி.ஆரிடமும் பலமுறை கூறி இருக்கிறார்.

1976-ல் நவம்பரில் கர்நாடக மாநிலம் மங்களூருக்கு அருகில் உள்ள உடுப்பியில் 'மீனவ நண்பன்' படப்பிடிப்பு நடந்தது. படப்பிடிப்பு முடிந்த பின் ஒரு நாள் டைரக்டர் கே. சங்கருடன் அதிகாலை 5 மணிக்கு (4 மணிக்கே கோவில் திறக்கப்படும்) கோவிலுக்குள் சென்ற எம்.ஜி.ஆர். மூகாம்பிகையை வணங்கி விட்டு பொழுது விடிவதற்குள் திரும்பி விட்டார்.

1977-ல் பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின் ஒரு முறை சென்றார். தேர்தலில் வெற்றி பெற்ற பின் தன் மனைவி வி.என். ஜானகியிடம் (மதுரையில் நாடோடி மன்னன் வெற்றி விழாவில் பெற்ற) தங்க வாளை கொடுத்து அனுப்பினார்.

உறையுடன் சேர்த்து முக்கால் கிலோ தங்கம் உள்ள அந்த வாளின் மொத்த எடை இரண்டரை கிலோ. தங்க வாளை இரவு மூகாம்பிகைக்கு அலங்கார பூஜை செய்யும்



நேரத்தில் வலது புறத்தில் பொருத்துகிறார்கள்.

மங்களூரில் இருந்து 200 கி.மீ. தொலைவிற்கு அப்பாலுள்ளது கொல்லூர் மூகாம்பிகை கோவில். எம்.ஜி.ஆர். அக்கோவிலுக்கு வந்தது பற்றி கோவிலின் நிர்வாக அதிகாரி கோவிந்த மோகரல், எம்.ஜி.ஆருக்கு மிகவும் பிடித்தமான கோவில் குருக்கள் மூர்த்தி கணேஷ்பட் ஆகியோரிடம் பேசியபோது பல விஷயங்கள் அறிய முடிந்தது.

மூகாம்பிகை கோவில் கர்நாடக மாநிலத்தில் இருந்தாலும் கேரள கோவில்களில் உள்ள வழிபாட்டு முறைகள்தான் அங்கு கடைபிடிக்கப்படுகிறது. அதன்படி ஆண் பக்தர்கள் சட்டையை கழற்றி விட்டுத்தான் கோவிலுக்குள் செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.

எம்.ஜி.ஆரும் ஒவ்வொரு முறையும் தொப்பி, கண்ணாடி, மேல சட்டையை கழற்றி கோவிலுக்குள் சென்று வந்திருக்கிறார். அவரது அந்த தோற்றம் அபூர்வமான காட்சி என்று நேரில் பார்த்த அந்த பகுதி போட்டோ —ஸ்டூடியோவைச் சேர்ந்தவர், எம்.ஜி.ஆர். கோவிலை விட்டு வெளியே வரும்போது படம் எடுத்து விட்டார்.

பொதுவாக எம்.ஜி.ஆரை அவர் விரும்பாத தோற்றத்தில் யாரும் புகைப்படம் எடுத்து விட முடியாது என்பது அனைவரும் அறிந்த ரகசியம். கொல்லூர் மூகாம்பிகை கோவிலில் கண்ணாடி, தொப்பி இல்லாத தோற்றத்தில் எடுத்த புகைப்படக்காரரும் எம்.ஜி.ஆரின் மெய்க்காவலரின் பார்வையில் இருந்து தப்பவில்லை.

மெய்க்காப்பாளர் படம் எடுத்தவரிடம் கேமராவை பறித்து அதில் உள்ள பிலிமை உருவி எடுத்து விட்டாராம். அதனால் எம்.ஜி.ஆர். வந்து போனதற்கு கோவிலிலேயே எந்த புகைப் படமும் இல்லை.

தவிர, தான் தமிழகத்தின் முதல் மந்திரி என்ற முறையில் கூட எம்.ஜி.ஆர். பாதுகாப்பு எதுவும் கோரியதில்லை. கொல்லூர் போலீசார் கூட பாதுகாப்புக்கு வந்ததில்லையாம்.

எம்.ஜி.ஆர். மூகாம்பிகை கோவிலுக்கு பதினொரு முறை சென்று இருக்கிறார். ஒவ்வொரு முறையும் மெய்க்காப்பாளர்களே உடன் சென்று இருக்கிறார்கள்.

மூகாம்பிகை கோவிலிலேயே வயதான குருக்கள், மூர்த்தி கணேஷ்பட்டிடம், எம்.ஜி. ஆர். வருவதை முன்னதாகவே அறிவித்து விடுவார்கள். அதனால் கோவிலுக்குள் சென்று தயாராக இருப்பார். எம்.ஜி.ஆருக்கான பூஜை சம்பந்தப்பட்ட எல்லா காரியங்களையும் அவரே கவனிப்பார்.

மூர்த்தி கணேஷ்பட்டரின் வீட்டிற்கும் எம்.ஜி.ஆர். சென்றிருக்கிறார். மற்றபடி அவர் கொல்லூரில் வேறு எங்கும் சென்றதில்லை. கோவிலில் தரப்பட்ட பாலை மட்டும் எம்.ஜி. ஆர். குடித்திருக்கிறார். பூஜை நேரத்தில் வழங்கப்படும் குங்குமத்தை நெற்றியில் இட்டுக் கொண்டும் தீர்த்தத்தை அருந்தியும் இருக்கிறார்.

எம்.ஜி.ஆர். முதல்வரான பின் வருடந்தோறும் மே அல்லது டிசம்பர் மாதத்தில் மூகாம்பிகை கோவிலுக்கு சென்றிருக்கிறார். எம்.ஜி.ஆர். வராதபோது வி.என். ஜானகி தவறாமல் செல்வதுண்டு. அவர் மூர்த்தி கணேஷ்பட் வீட்டிலேயே உணவு அருந்தி இருக்கிறார்.

எம்.ஜி.ஆர். கோவிலுக்கு வந்த சமயங்களில் அங்குள்ளவர்களிடம் கன்னடத்திலேயே பேசி இருக்கிறார். அமெரிக்காவில் சிகிச்சை பெற்று திரும்பிய பின் அவரால் பேச முடியா விட்டாலும், வி.என். ஜானகி உடன் இருந்து உதவியிருக்கிறார். 1984-க்குப் பின் எம்.ஜி. ஆர். மாலை நேரங்களில் கோவிலுக்கு வந்திருக்கிறார்.

அந்த நேரத்தில் எம்.ஜி.ஆர். வருகிறார் என்பதற்காக பக்தர்கள் தடுக்கப்பட்டதில்லையாம். சில சமயம் பக்தர்கள் எம்.ஜி.ஆரை அடையாளம் கண்டு 'புரட்சித் தலைவர் வாழ்க' என்று கோஷமிட்டிருக்கிறார்கள். எம்.ஜி.ஆரின் காலில் விழுந்தும் வணங்கியிருக்கிறார்கள். அவர்களோடு நலம் விசாரித்து எம்.ஜி.ஆர். பேசியிருக்கிறார்.

கோவிலில் இரவு 7-30-க்கு மங்கல ஆரத்தி' என்று விசேஷ பூஜை உண்டு. அந்த நேரத்தில் எம்.ஜி.ஆர். கோவிலீல் ஆஜராகி சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக பூஜை முடியும் வரை இருப்பாராம். பக்தர்களோடு, தானும் அமர்ந்து பூஜை நிகழ்ச்சிகளை கவனித்திருக்கிறார்.

அது தவிர ஆதிசங்கரர் இந்த கோவிலுக்கு வந்து அமர்ந்து, மூகாம்பிகையை வழிபட்ட இடம் 'சங்கர பீடம்' என்று அழைக்கப்படுகிறது. மற்ற பக்தர்களைப் போல எம்.ஜி.ஆரும் அங்கு அமர்ந்து தியானம் செய்வாராம்.

எம்.ஜி.ஆர். கடைசியாக மூகாம்பிகை கோவிலுக்கு சென்றது கடந்த ஆண்டு 14-1-87 மகர சங்கராந்தி அன்று. அன்று உடல் நலிவுற்று இருந்ததால், உடன் அவரது டாக்டர் பி.ஆர். சுப்பிரமணியம் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் அவரது கையைப் பிடித்து நடத்திச் சென்றிருக்கிறார்கள்.

அன்றைக்கு கோவிலில் பணிபுரிந்த அர்ச்சகர்கள் 16 பேர்களுக்கு தலா ஆயிரம் ரூபாயும் மற்றும் கோவிலில் ஊழியர் ஒவ்வொருவருக்கும் நூறு, இருநூறு என்று அன்பளிப்பு கொடுத்திருக்கிறார்.

மூகாம்பிகை கோவிலில் தினமும் பகல் வேளையில் கோவிலுக்குள் வரும் பக்தர்கள் உட்பட சுமார் ஆயிரம் பேர்களுக்கு இலவச உணவு வழங்கப்படுகிறது. அதைப் பற்றிக் கேள்விப்பட்ட எம்.ஜி.ஆர். மிகவும் மகிழ்ந்து போய் நன்கொடையாக தன் தாயார் மற்றும்

உறவினர்கள் பெயரில் சுமார் 1 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் அளித்தாராம்.

மூர்த்தி கணேஷ்பட்டருக்கு நிறைய சன்மானம் அளித்தாலும் அவர் தனக்கு எதுவும் கொடுக்கப்படவில்லை என்று சொல்லிக் கொண்டார். அதன் காரணம் நமக்கு விளங்க வில்லை.

எம்.ஜி.ஆர். மூகாம்பிகை கோவிலுக்கு வரும் போது மணிப்பாலில் உள்ள வேலி வியூ ஹோட்டலில் (Valley view Hotel) தங்கி குளித்து விட்டுத்தான் வருவாராம்.

தவிர எம்.ஜி.ஆர். இந்த கோவிலுக்கு தங்கத்தினால் ஆன கண், காது மூக்கு ஆகிய வடிவங்களில் நகைகள் செய்து காணிக்கையாக தந்திருக்கிறார்.

எம்.ஜி.ஆர். மூகாம்பிகை கோவிக்கு அடிக்கடி வருகிறார் என்று அறிந்து உடுப்பி அதனைச் சுற்றியுற்ற முக்கிய கோவில் நிர்வாகங்களைச் சேர்ந்தவர்கள் எம்.ஜி.ஆரை அணுகி தங்கள் கோவில்களுக்கும் வரும்படி அழைப்பு விடுத்திருக்கிறார்கள். ஆனால் எம்.ஜி.ஆர். மூகாம்பிகை கோவில் தவிர வேறு எங்கும் செல்லவில்லை.

எம்.ஜி.ஆர். அமெரிக்காவில் சிகிச்சை பெற்றபோது மூகாம்பிகை கோவிலில் இருந்து பிரசாதங்கள் அனுப்பி இருக்கிறார்கள்.

எம்.ஜி.ஆர். குணமடைய வேண்டிய அவரது ரசிகர் ஒருவர் 7 கிலோ எடையுள்ள வெள்ளி குடை ஒன்றை கோவிலுக்கு காணிக்கையாக தந்திருக்கிறார்.

சென்னையில் இருந்து மங்களூக்கு விமானத்தில் சென்று, மங்களூரில் இருந்து கொல்லூருக்கு காரில் செல்ல முடியும். ஆனால் எம்.ஜி.ஆர். ஒவ்வொரு முறையும் விமானப் பயணத்தை தவிர்த்து சென்னையில் இருந்து ரயிலிலேயே மங்களூர் சென்றிருக்கிறார்.

எம்.ஜி.ஆருக்காக குளிர் வசதி உள்ள ஒரு பெட்டியையே அவர் செல்லும் ரயிலில் ஏற்பாடு செய்து கொடுத்திருக்கிறது, இந்தியன் ரயில்வே. மூகாம்பிகை கோவிலுக்கு காரில் சென்று விட்டு திரும்புகையிலும் ரயில் பயணம்தான். எம்.ஜி.ஆர். ஏன் ரயில் பயணத்தை தேர்ந்தெடுத்தார் என்பதற்கு பின்னணியில் ஒரு காரணமும் உண்டு.

''பணம் படைத்தவன்'' படத்தில் நடிக்கும் போதுதான் எம்.ஜி.ஆரின் வாழ்க்கையில் புதியதொரு மாற்றம் ஏற்பட்டது. அவரை விமானத்தில் ஏற வைத்தேன். அவர் எங்கு சென்றாலும் காரிலோ ரயிலிலோதான் செல்வது வழக்கம். எத்தனையோ சந்தர்ப்பங்களில் விமானத்தில் ஏற எம்.ஜி.ஆர். மறுத்திருக்கிறார்'' என்று இயக்குனர் ராமண்ணா ஒரு முறை குறிப்பிட்டார்.

பம்பாயில் ஒரு முறை நாடகம் நடத்தச் சென்றபோது கூட கால விரயத்தை பொருட்படுத்தாமல் இரண்டு நாள் ரயிலிலேயே பிரயாணம் செய்தார்.

பின்னர் 'பணம் படைத்தவன்' படப்பிடிப்பை கல்கத்தா நகரத்தில் ஏற்பாடு செய்திருந்த ராமண்ணா, கல்கத்தாவிற்கு ரயிலில் சென்றால் எத்தனை நாள் வீணாகும் என்று எம்.ஜி.ஆரிடம் கொஞ்சம் கொஞ்சமாக பேசி அவர் மனதை மாற்றி, விமானத்தில் ஏறச் செய்தாராம். இதை இயக்குனர் ராமண்ணா 1973-ல் ஒரு பேட்டியில் குறிப்பிட்டிருக்கிறார்.

இளம் வயதில் நாடக உலகில் இருந்தபோது எம்.ஜி.ஆர். திருப்பதி சென்று ஏழுமலையானை தரிசித்திருக்கிறார்.

ராமாவரத்தில் உள்ள தன் தோட்டத்து வீட்டில் உள்ள பூஜை அறையில் எம்.ஜி.ஆர். தன் தாயார் படத்தை வைத்திருக்கிறார். அந்த படத்தின் கீழ்.

''ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் என கேட்ட தாய்''

-என்ற குறள வாசகம் உள்ளது. இதை இன்று எம்.ஜி.ஆர். நினைவு இல்லத்தில் காணலாம்.

எம்.ஜி.ஆர். தன் நூலகத்தில் புத்தர், ஏசு, காந்தி, விவேகானந்தர் ஆகிய மகான்களின் படங்களை வைத்திருக்கிறார். இருந்தாலும் தி.மு.க.வில் இருந்த காலத்தில் ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்ற அண்ணாவின் கருத்தையே கொள்கையாகக் கொண்டிருந்தார்.



## உடலை கோயிலாக காண்பவர்!

எம்.ஜி.ஆர். நடித்த 'அன்பே வா' படத்தின் இயக்குநர் ஏ.சி. திருலோகசந்தர், எம்.ஜி.ஆர். நடித்த இந்த ஒரு படத்தை தான் அவர் இயக்கி உள்ளார் என்று பலரும் அறிந்திருப்பார்கள்.

ஆனால், அவர் எம்.ஜி.ஆர். நடித்த 'குமாரி' (1950-ல்)யில் உதவி இயக்குநராக பணிபுரிந்து இருக்கிறார். அப்போதிருந்தே அவருக்கு எம்.ஜி.ஆரோடு தொடர்பு உண்டு.

ஆற்காட்டைச் சேர்ந்த திருலோக்சந்தர் சென்னை பச்சையப்பா கல்லூரியில் படித்து எம்.ஏ. பயின்றவர். அவர் எம்.ஜி.ஆருடன் பழக நேர்ந்த அனுபவங்களைப் பற்றி கூறினார்.

''பட்டப்படிப்பில் பொருளாதாரமும், அரசியலும் பயின்ற நான் எதிர்பாராத விதமாக சினிமாவுக்கு வந்து சேர்ந்தேன். என்னுடைய பள்ளித் தோழர் ராஜகோபாலுக்கு நண்பர் பத்மனாபன். படத்தின் தயாரிப்பாளர், இயக்குநர் இவர். இவரிடம் உதவியாளராகச் சேர்ந்தேன்.

'குமாரி'யில் எம்.ஜி.ஆர். கதாநாயகன். அவருக்கு ஜோடி ('பராசக்தி'யில் சிவாஜியின்



தங்கை கல்யாணியாக வந்த) ஸ்ரீரஞ்சனி.

முதல் படத்திலேயே எம்.ஜி.ஆரோடு எனக்கு நல்ல நட்பு ஏற்பட்டது. எம்.ஏ. படித்தவன் என்பதால் புத்தகங்களை படிக்கும் பழக்கம் எனக்குண்டு என்பதை அறிந்த எம்.ஜி.ஆர். படப்பிடிப்பு இடைவேளைகளில் ஓய்வு நேரங்களில் என்னோடு பேசுவதில் அதிகம் ஆர்வம் காட்டுவார்.

நான் படித்ததையெல்லாம் சொல்லச் சொல்லி கேட்பார். கேட்டு விட்டு தான் படித்ததையும் என்னிடம் கூறி கருத்தாலோசனைகளை பகிர்ந்து கொள்ளும் போது, அவரது ஞானம் என்னை வியக்கச் செய்யும். அப்போதே அவருக்கு சமூகப் பார்வையும் இந்த நாட்டு மக்களுக்கு தன்னாலானதைச் செய்ய வேண்டும் என்ற நல்ல மனமும் இருந்தது.

அப்போது பெரிய வசதி படைத்த நடிகரல்ல எம்.ஜி.ஆர். ஆனாலும் எந்த நேரத்திலும் தேவைப்படுமென்று நூறு ரூபாய் நோட்டு ஒன்றை சுருட்டிய முழுக்கை சட்டையில் வைத்திருப்பார்.

கழுத்தில் உள்ள தங்கச் சங்கிலியை படப்பிடிப்பு நேரத்தில் என்னிடம் கழற்றிக் கொடுத்து விட்டுப் போவார். வீட்டுக்குச் செல்லும்போது நான் கொடுத்து விடுவேன். சில சமயங்களில் சங்கிலியைக் கொடுக்க மறந்து விடுவேன். அவரும் கேட்காமல் போய் விடுவார்.

மீண்டும் மறு நாள் படப்பிடிப்புக்கு வரும்போது 'சங்கிலியை நீங்களும் மறந்துட்டீங்க. நானும் மறந்துட்டேன்' என்று சொல்லி கொடுப்பேன். ''அதனாலென்ன'' என்று சாதாரணமாக எடுத்துக் கொள்வார்.

'குமாரி'யில் எம்.ஜி.ஆர். குதிரை சவாரி செய்யும் காட்சிகள் பல உண்டு. ஆனால் பெரும்பாலும் குதிரையில் ஏறுவதைத் தவிர்த்து நடிப்பார்.

''குதிரையில் ஏறி சவாரி செய்து நடிப்பது ஆபத்தானது. எந்த நேரமும் நாம் கீழே விழுந்து உடல் ஊனமுற்றால், நான் மட்டுமின்றி பிற தயாரிப்பாளர்களும் அல்லவா பாதிக் கப்படுவார்கள்?'' என்று சொல்வார். இருந்தாலும் சில சமயம் ரிஸ்க் எடுத்துக் கொண்டு நடிப்பார்.

'குமாரி'யில் குதிரை மீது கட்டிப் போடப்பட்டு எம்.ஜி.ஆர். அழைத்துச் செல்லப்படு வது போல் ஒரு காட்சி. அந்தக் காட்சியில் நானே நடிக்கிறேன் என்று எம்.ஜி.ஆர். நடித்தார். ராமாவரம் தோட்டம் அருகில் உள்ள ஓடை ஒன்றில் படப்பிடிப்பு நடந்ததாக நினைவு.

எனக்கு ஆரம்பம் முதலே சிகரெட் புகைக்கும் பழக்கம் உண்டு. ''நல்ல மனுஷர், நல்ல நண்பர் நீங்கள். இதை மட்டும் விட்டு விடலாமே'' என்று கேட்டார், எம்.ஜி.ஆர். என்னால் விட முடியாத பழக்கம் என்பதால், சிரித்துக் கொண்டு அபிப்ராயம் சொல்ல மாட்டேன்.

'குமாரி'க்குப் பின் இருவரும் சேர்ந்து பணிபுரியும் வாய்ப்பில்லா விட்டாலும் படப்பி டிப்புகளில், விழாக்களில் சந்தித்துக் கொள்வோம்.

'அன்பே வா'வில் எம்.ஜி.ஆர். நடிக்கிறார் என்ற போது எனக்கு பெரு மகிழ்ச்சி. படத்தின் இயக்குநர் நான்தான் என்றபோது எம்.ஜி.ஆருக்கும் மகிழ்ச்சி.

தொழில் நுட்ப விஷயங்களில் எம்.ஜி.ஆரின் ஈடுபாடும், அவரது தலையீடும் எனக்குத் தெரியும். ஆனால் 'அன்பே வா'வில் எந்த விஷயத்திலும் அவர் தலையிடவில்லை. நானும் அது பற்றி அவரிடம் எதுவும் தலையைக் கொடுப்பதில்லை.

'அன்பே வா' படத்தின் ஒரு பகுதி படப்பிடிப்பு ஊட்டியில் நடைபெற்றது. ஒரு நாள்



சரோஜாதேவி, எம்.ஜி.ஆர்.



எம்.ஜி.ஆர்., ஏ.சி. திருலோக்சந்தர்

எம்.ஜி.ஆர். வருவதற்கு முன்பாக சரோஜாதேவி வந்து விட்டார். சும்மா இருப்பானேன் என்று அவரை வைத்து படமாக்கிக் கொண்டிருந்தேன்.

எம்.ஜி.ஆர். வந்தபோது அவரது முகம் ஒரு மாதிரியாக இருந்தது. யாரிடமும் எதுவும் பேசிக் கொள்ளவில்லை. தான் நடிக்க வேண்டிய நேரம் போக மற்ற சமயங்களில் தனியாக, 'உம்'மென்று இருப்பார். என்ன சமாச்சாரம் என்று தெரிந்து கொள்ளாவிட்டால் எனக்கு தலையே வெடித்து விடும் போலிருந்தது.

மதிய உணவு நேரத்தில் எம்.ஜி.ஆரிடம் 'ஏதாவது உங்களுக்கு கோபமா? எதுவாக இருந்தாலும் சொல்லி விடுங்கள். நீங்கள் பதில் சொல்லாவிட்டால், தொடர்ந்து படப்பிடிப்பு நடக்காது' என்று உரிமையோடு சொன்னேன்.

சற்று மவுனமாக இருந்தவர், ''என்னை வச்சு ஏன் இன்னிக்கு முதல் ஷாட் எடுக்கலை?'' என்று குழந்தையைப் போல் கேட்ட போது என் குழப்பமெல்லாம் தீர்ந்தது.

'இவ்வளவுதானா? இதற்குப் போய் எங்களை இப்படி படுத்தி விட்டீர்களே. இனிமேல் உங்களை வைச்சு தான் ஒவ்வொரு நாளும் படப்பிடிப்பு ஆரம்பமாகும்' என்று அவருக்கு சமாதானம் சொன்னேன்.

பொதுவாக எம்.ஜி.ஆர். படம் என்றால், அவர் எவ்வளவு தாமதமாக வந்தாலும் அவர் வந்த பின்பே படப்பிடிப்பு நடக்கும்.

அன்று வழக்கம் மாறிப் போயிருந்ததை எம்.ஜி.ஆரால் தாங்கிக் கொள்ள இயல வில்லை. ஒரு குழந்தையைப போல் சங்கடப்பட்ட உள்ளம் எம்.ஜி.ஆருடையது.


'அன்பே வா' படத்தில் எம்.ஜி.ஆர். நெல்லூர் காந்தாராவுடன் சண்டையிடும் காட்சி ஒன்று உண்டு. சண்டையின் முடிவில் காந்தாராவை எம்.ஜி.ஆர். அலாக்காகத் தூக்கி வீசு வார். அது ஒரே ஷாட்டில் வரும்.

நெல்லூர் காந்தாராவ் நல்ல உடல்வாகும், கிட்டத்தட்ட முன்னூறு பவுண்டும் எடையுள் ளவர். உடற்பயிற்சி விதிகளின்படி அவரை எம்.ஜி.ஆர். தூக்கிப் பிடித்தால் மூன்று செகண்ட் தூக்கிப் பிடித்திருக்கலாம். அதற்கு மேல் தூக்கி வைத்திருப்பது ஆபத்து. பளு தூக்கும் கருவிகளை அப்படித்தான் தூக்க வேண்டும்.

ஆனால் 'அன்போ வா'வில் எம்.ஜி.ஆர். காந்தாராவை தூக்கியபோது, அந்தக் காட்சி ரசிர்க்ள் மனதில் பதிய வேண்டும் என்பதற்காக, 'இன்னும் கொஞ்சம் பிடிச்சிருங்க' என்று கேமிரா ஓடிக் கொண்டிருக்கையிலே எம்.ஜி.ஆருக்கு குரல் கொடுத்தேன். அவர் மேலும் ஐந்து செகண்ட் வைத்திருந்த பின்பே காந்தாராவை கீழே போட்டார்.

அது போன்ற சாகசங்களை எம்.ஜி.ஆர். போன்ற அற்புத மனிதரால் மட்டுமே சாதிக்க முடியும். அதற்கு காரணம் அவர் உடலை கோவில் போல் எண்ணக் கூடியவர். சென்னையில் இருக்கும் போது தவறாமல் உடற்பயிற்சி சாதனங்களையும் எடுத்து வந்து விடுவார்.

'அன்பே வா' சிம்லாவிலும், ஊட்டியிலும் படப்பிடிப்பு நடந்தபோது அதிகாலையில் எழுந்து கடும் குளிரிலும் வியர்வை வழிய உடற்பயிற்சிகளை செய்து கொண்டிருப்பார். அப்போதெல்லாம் அவருடன் நானும் சேர்ந்து கொள்வேன். அவரைப் போல் நானும் பளு தூக்குவேன்.



நெல்லூர் காந்தராவைத் தூக்கும் எம்.ஜி.ஆர்.

ஒரு சமயம் அவரது தோட்டத்திலும் அப்படி பளு தூக்கிய போது, 'தொடர்ந்து செய்யறீங்களா? அல்லது விட்டு விட்டு எப்போதாவது பளு தூக்கறீங்களா?' என்று கேட்டார். 'இடைவெளி ஏற்பட்டுடுச்சு' என்று நான் சொன்னபோது கோபித்துக் கொண்டார். 'இடைவெளி விட்டு பயிற்சி செய்வது நல்லதல்ல' என்றார்.

சிம்லாவில் 'அன்பே வா' படப்பிடிப்பிற்கு எம்.ஜி.ஆருடன் அவரது மனைவி வி.என். ஜானகி அவர்களும் வந்திருந்தார். நாங்கள் அங்கே ரயிலில் பயணம் செய்யும் போது 'கல்கா' என்ற ஸ்டேஷனில் ரயில் நின்றது.

திருமதி ஜானகி, 'ஒரு சோடா கிடைத்தால் தேவலை' என்றார். அவ்வளவுதான். யார் முதலில் சோடா வாங்கி வருவது என்பதில் எம்.ஜி.ஆருடன், நான் ஏ.வி.எம். சரவணனும் போட்டி போட்டோம்.

எங்கள் கம்பார்ட்மெண்ட் இருந்த இடத்திலிருந்து சுமார் நூறு மீட்டர் தூரத்தில் இருந்த கடைக்கு ஓட்டப்பந்தயமாகச் சென்றோம். எம்.ஜி.ஆருடன் ஓடிப் பார்க்க முடியுமா என்ன?

அவரே சோடா வாங்கி தன் மனைவிக்கு தந்தார்.

ஆனாலும் நாங்கள் சிரித்தபடி ஓடிய ஓட்டத்தில் அன்று பிளாட்பாரமே அதிர்ந்து போனது. மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்க தன் கணவர் சோடா வாங்கி வந்தது கண்டு ஜானகி அம்மையாருக்கு வேடிக்கையாக இருந்தது.

சிம்லாவில் ஒரு நாள் அங்கிருந்த ராணுவ மருத்துவமனைக்கு விஜயம் செய்வதாக இருந்தார் எம்.ஜி.ஆர். சும்மா எப்படி போவது. அங்கு சிகிச்சை பெறுபவர்களுக்கு ஏதாவது கொடுக்க வேண்டுமே என்று திட்டமிட்ட எம்.ஜி.ஆர்., சிம்லாவில் கிடைக்க வில்லை என்று ஹார்லிக்ஸ் பாட்டில்களை டெல்லியில் இருந்து வரவழைத்து எடுத்துச் சென்றார்.

மருத்துவமனையில் எம்.ஜி.ஆரைப் பார்த்த தமிழ் ஜவான்களுக்கு ஏக மகிழ்ச்சி. ஒவ்வொருவரையும் பார்த்து அவர்களைப் பற்றி விசாரித்து விட்டு வந்தவர், உடல் முழுவ தும் கட்டுப் போடப்பட்டிருந்த சீக்கிய வீரர் ஒருவருக்கு அருகில் சென்றார். அவர் முகத்தி லும் கட்டுப்போடப்பட்டிருந்தது. கண்கள், மூக்கு, வாயைத் தவிர மற்றதெல்லாம் கட்டுக்குள் இருந்தன.

''என்ன நடந்தது?'' என்று எம்.ஜி.ஆர். விசாரித்த போது, டாக்டர் அவரைப் பற்றி சொல்ல, எம்.ஜி.ஆருக்கு மனம் தாளாமல் கண்களில் நீர் கசிந்தது. அவருக்கு ஆறுதல் சொல்லி ஹார்லிக்ஸ் பாட்டில்களைக் கொடுத்து விட்டு ''உங்களுக்கு என்ன உதவி தேவை யானாலும் கேளுங்கள்'' என்று எம்.ஜி.ஆர். சொன்ன போது அசையாதிருந்த நிலையில் சிங்கிற்கு அழுகை வந்து கண்களில் நீர் பெருகியது.

'அன்பே வா' படத்தில் வரும் ''நாடோடி நாடோடி ஓட வேண்டும் ஓடோடி'' என்ற பாடலில் எம்.ஜி.ஆர். சரோஜாதேவி குழுவினருக்கு பதிலடி கொடுப்பது போல் ''புலியைப் பார் நடையிலே புயலைப் பார் செயலிலே'' என்று ஆடிப்பாடுவார்.

அந்த நடனக் காட்சியில் கொஞ்சம் ரிஸ்க்காக ஆட வேண்டும். தன்னால் முடியுமா என்று எம்.ஜி.ஆருக்கு சந்தேகமாக இருந்தது. நாங்கள் கொடுத்த உற்சாகத்தில் சரிவர ஒத்திகை கூட பார்க்காமல் பிரமாதமாக ஆடினார், இப்படி முடியாத விஷயம் எம்.ஜி.ஆரின் வாழ்வில் எதுவும் இருந்ததில்லை.

'அன்பே வா' படப்பிடிப்பு ஊட்டியில் நடந்த போது சரோஜாதேவி கால்ஃப் பந்தைத் தவறாக அடிக்க, எம்.ஜி.ஆர். அவருக்கு எப்படி பந்தை சரியாக அடிக்க வேண்டும் என்று கற்றுத் தருகிறார். முதலில் சரோஜாதேவி பந்தை அடிக்க வேடிக்கை பார்த்தவர்கள் எல்லாம் சிரித்து விட்டார்கள்.

அடுத்து எம்.ஜி.ஆர். அடிக்க வேண்டும். அவர் எப்படி அடிக்கப் போகிறார் என்று கூட்டத்தில் இருந்தவர்கள் மட்டுமல்ல நாங்களும் பார்ப்பதற்கு ஆவலாக இருந்தோம்.

எம்.ஜி.ஆருக்கு கால்ஃப் விளையாடும் பழக்கம் கிடையாது. பழக்கமில்லாமல், அதைச் சரியாகச் செய்யவும் முடியாது. காரணம் கால்ஃப் ஸ்டிக்கை லாவகமாக பிடிப்பது, அதை உயரத் தூக்கி பந்திற்கு கொண்டு வருவது, பந்தை அடித்து வீசுவது என்று மூன்று விஷயங்கள் இருக்கின்றன. ஆனால், அத்தனை பேரும் ஆச்சரியப்படும் வகையில் எம்.ஜி. ஆர். அடித்த பந்து போன உயரமும், வேகமும் நிஜ வீரரின் செயலை மிஞ்சியிருந்தது.

1967-ல் குண்டடிபட்ட எம்.ஜி.ஆரை மருத்துவமனை சென்று சந்தித்தேன். கட்டுப் போடப்பட்டிருந்த நிலையில் ''எப்படி நடந்தது?'' என்று கேட்டேன்.

அசையக் கூடாது அதிகம் பேசக் கூடாது என்று டாக்டர்கள் கட்டளையிட்டிருந்தாலும்,

எம்.ஜி.ஆர். அதைப் பொருட்படுத்தாமல், தன் காது பக்கம் என் விரலை விடச் சொல்லி குண்டு எப்படி பாய்ந்தது என்பதை விளக்கி காட்டினார்.

எம்.ஜி.ஆர். அமெரிக்கா சென்று திரும்பிய பின் 1985 ஜூன் மாதம் என் மகள் திருமணத்திற்காக அவரை அழைத்திருந்தேன். அவசியம் வருவதாகச் சொன்னார். ஆனால் பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளக் கூடாது என்று டாக்டர்கள் நிபந்தனை விதித்திருந்த தால் எம்.ஜி.ஆர் வர மாட்டார் என்று நான் நினைத்திருந்தேன்.

ஆனால் சரியான நேரத்திற்கு வந்ததோடு, சுமார் அரை மணி நேரம் தன் உடல் உபாதையையும் சகித்துக் கொண்டு இருந்து விட்டு எம்.ஜி.ஆர். சென்றதைக் கண்டு மனம் நெகிழ்ந்து விட்டேன்.''

## மதிப்பு என்றால்...




கிருஷ்ணன் (பஞ்சு)



'சதிலீலாவதி'யில் எம்.ஜி.ஆர்.

இரட்டை இயக்குநர்களில் இறுதி வரை பிரியாமல் சினிமாவில் பணி புரிந்த (உலக) சாதனையாளர்கள் கிருஷ்ணன்- பஞ்சு இருவரும்.

பஞ்சுவின் மறைவிற்குப் பின் கிருஷ்ணன் (84 வயது) சற்று தளர்ந்து போனாலும், தனது குடும்பம், நூலகம் என்று சுறுசுறுப்பாக இருக்கிறார். இவரது மகன் தான் டைரக்டர் கே. சுபாஷ். உத்தமபுருஷன், கலியுகம், ஆயுள் கைதி, சத்ரியன் ஆகிய படங்களை இயக்கியவர்.



கிருஷ்ணன் (இன்று)



'மருதநாட்டு இளவரசி'யில் எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆரின் முதல் படம் 'சதி லீலாவதி'. அப்போதே எம்.ஜி.ஆரை சந்தித்து அவரை நண்பராக்கிக் கொண்டவர் கிருஷ்ணன். அதுவும் இவர்களது சந்திப்பு மோதலில்தான் நிகழ்ந்தது. எப்படி என்பதை கிருஷ்ணனே நினைவுப்படுத்திச் சொன்னார்.

''அப்போது ஆழ்வார்பேட்டையில் வேல் பிக்சர்ஸ் என்றொரு சினிமா தயாரிப்பு நிறுவனம் இருந்தது. அங்கு நான் லேபரெட்டரி பிரிண்டராக பணி புரிந்தேன். கையில் நல்ல பணப்புழக்கம். அதனால் ராலே, பி.எஸ்.ஏ. என்று சைக்கிள்களை புதிது புதிதாக மாற்றிக் கொண்டேயிருப்பேன்.

ஒரு நாள் லேபரெட்டரியிலிருந்து வெளியே வந்த நான், என் ராலே சைக்கிளை காணாமல் திடுக்கிட்டேன். புத்தம் புதிய சைக்கிளைக் காணோம் என்றதும் எனக்கு அதிர்ச்சி, கோபம்.

அங்கிருந்த ஒருவர், ''பக்கத்தில் 'சதி லீலாவதி' ஷூட்டிங் நடக்குது. அதிலே நடிக்க வந்தவர் சைக்கிளை எடுத்துட்டுப் போனார்'' என்றார். கோபத்துடன் ஷூட்டிங் நடக்கும் இடத்திற்கு சென்றேன்.

அங்கே என் சைக்கிளுடன் புதிதாய் தெரிந்த ஒருவர் நடித்துக் கொண்டிருந்தார். இன்ஸ்பெக்டர் வேடத்தில் இருந்த அவர் சைக்கிளில் வேகமாக வந்து இறங்கி எம்.கே. ராதாவை கைது செய்வது போல் காட்சி. அமெரிக்கரான எல்லிஸ் ஆர். டங்கன் காட்சியை இயக்கிக் கொண்டிருந்தார்.

அதையெல்லாம் கவனிக்கின்ற பொறுமையில்லாமல் யூனிட்டிலிருந்தவரிடம் என் சைக்கிளைக் கொடுக்கும்படி சத்தம் போட்டேன். டங்கன் அதைக் கவனித்து தன் உதவியாளரிடம் ''Tell him his Cycle is acting'' என்று கூற எனக்கு கோபம் அதிகமாகி விட்டது.

டைரக்டரிடம் நமக்கென்ன பேச்சு என்று என் சைக்கிளை எடுத்து வந்த, இன்ஸ்பெக்டர் வேடத்தில் இருந்தவரின் சட்டையைப் பிடித்துக் கேட்டேன்.

''யாரைக் கேட்டய்யா என் சைக்கிளை எடுத்து வந்தீர்?'' என்று சத்தம் போட்டேன்.



கலைவாணர் என்.எஸ்.கே., எம்.ஜி.ஆர்.

அவர் பதட்டமின்றி என்னிடமிருந்து விடுபட்டுக் கொண்டு, ''நான் நடிக்கிற முதல் படம் இதுதான். எத்தனையோ சிரமத்திற்கு இடையில் இந்த வேடம் கிடைச்சிருக்கு. இன்னிக்கு தான் முதல் நாள் ஷூட்டிங். வந்தவுடன் நடிக்கிறதுக்கு சைக்கிள் ஒன்று வேணும் என்ற போது, சைக்கிள் கிடைக்காம நமக்கு சான்ஸ் போயிடுமோன்னு பயந்து இந்த சைக்கிளை எடுத்துட்டு வந்தேன். உங்க சைக்கிள்தான்னு எனக்குத் தெரியாது. உங்களைக் கேட்காம எடுத்துட்டு வந்தது தப்புதான்'' என்று மன்னிப்பு கேட்கும் பாவனையில் பேசியதும், என் கோபம் போன இடம் தெரியவில்லை.

''பரவாயில்லை நடிச்சுட்டு வாங்க'' என்று அவரைத் தட்டிக் கொடுத்து விட்டு ஒதுங்கினேன்.

அன்று சண்டையில் ஆரம்பித்த எங்கள் சந்திப்பு பின் ஆழ்ந்த நட்பாக மலர்ந்தது. அந்த நட்புக்குரியவர் எம்.ஜி.ஆர்.

'சதி லீலாவதி' படத்தில் ரங்கைய நாயுடு என்ற இன்ஸ்பெக்டர் வேடத்தில் எம்.ஜி.ஆர். நடித்தார். எம்.கே. ராதாவை கைது செய்யும் காட்சி ஒன்று, கடைசியாக கோர்ட்டில் சாட்சி சொல்வது போல் மேலும் இரண்டு காட்சிகளில் நடிக்கும்படியான சிறிய வேடம் தான் எம்.ஜி.ஆருக்கு.

நண்பரான பின் என்னுடைய அறைக்கு வந்து போக ஆரம்பித்தார் எம்.ஜி.ஆர். அப்போது மெலிந்த தேகத்துடன் இருப்பார். அது போதாது என்று எனது யோசனையின் பேரில் உடற்பயிற்சிகளை செய்ய ஆரம்பித்தார். அதுவும் எனது அறையிலேயே நடக்கும்.

எனக்கு ஆங்கிலப் படம் பார்க்கும் பழக்கம் அதிகம் உண்டு. எம்.ஜி.ஆரையும் பல சமயங்களில் அழைத்துச் சென்றிருக்கிறேன். அப்போது கத்திச் சண்டை நடிப்பில் பெயர் பெற்ற ஆங்கில நடிகர் 'டக்ளஸ் ஃபேர் பாங்ஸ்.' எம்.ஜி.ஆருக்கு அவரது நடிப்பும், ஸ்டைலும் பெரிதும் பிடித்துப் போயிற்று. பின்னாளில் எம்.ஜி.ஆர். வாள் வீசி நடிக்கை பில்,

அவரது அபிமான நடிகரின் ஸ்டைல் அவரது நடிப்பில் பிரதிபலித்தது.

நான் பஞ்சுவுடன் சேர்ந்து இயக்குநரான பின் எம்.ஜி.ஆர். என்னிடம் வந்து நட்புரிமையுடன் தனக்கும் வாய்ப்பு கொடுக்கும்படி கேட்பார்.

அப்போது ரத்னகுமார் படப்பிடிப்பிற்கான ஆயத்தங்கள் நடந்து கொண்டிருந்தன. பி.யு. சின்னப்பா தான் ஹீரோ, எம்.ஜி.ஆர். என்னிடம் அந்தப் படத்தில் நடிக்க சான்ஸ் கேட்ட போது ''மனதில் நிற்கும்படியான கேரக்டர் எதுவும் இல்லையே'' என்றேன்.

''பெரியவர் டைரக்ட் செய்யும் படத்தில் எனக்கு வேடம் இல்லாமலா?'' என்று உரிமையோடு பிடிவாதம் பிடித்தார் எம்.ஜி.ஆர். (பஞ்சுவை விட மூத்தவரான கிருஷ்ணனை பட்வுலகில் 'பெரியவர்' என்றே அழைப்பார்கள்)

எம்.ஜி.ஆருக்காக அந்தக் கதையில் ஒரு கோக்டரை உருவாக்கினேன். கே.பி. கேசவன் மந்திரியாகவும், அவருக்காக சதிவேலை செய்யும் கையாளாக எம்.ஜி.ஆரையும் நடிக்க வைத்தேன்.

படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்த போது எம்.ஜி.ஆர். 'மருத நாட்டு இளவரசி' படத்திற்காக மைசூர் செல்ல வேண்டியிருந்தது.

அபூர்வமாக கதாநாயக வேடம் கிடைத்திருக்கின்ற அதிர்ஷ்டத்தை 'ரத்னகுமார்' படத்திற்காக எம்.ஜி.ஆர். இழக்க விரும்பவில்லை. எனவே என்னிடம் வந்து, ''என் சம்பந்தப்பட்ட காட்சிகளை முதலில் முடித்து விடுங்களேன்'' என்று காரணம் சொல்லி கேட்டுக் கொண்டார்.

அப்போது செட்டில் சின்னப்பாவும் இருந்தார். தான் இருக்கும் போது எம்.ஜி.ஆர். சம்பந்தப்பட்ட காட்சிகளை முதலில் படமாக்குவதா என்று முகம் சுளித்தார்.

அதனால் ''மைசூருக்கு போய் வாருங்கள், நான் சமாளித்துக் கொள்கிறேன்'' என்று எம்.ஜி.ஆருக்கு சொல்வது போல் போக்கு காட்டி அவரை ஒதுக்குப்புறமாக அழைத்துச்



'பைத்தியக்காரன்' படத்தில் மதுரம், எம்.ஜி.ஆர்.

சென்றேன்.

மேகம் வரையப்பட்ட படுதாவின் முன் எம்.ஜி.ஆரை நிற்க வைத்து இரண்டு, மூன்று 'குளோஸ் அப் ஷாட்' எடுத்துக் கொண்டேன். மைசூருக்கு அனுப்பி வைத்தேன்.

'ரத்னகுமார்' படத்தில் சின்னப்பா தன் காதலியான மாலதியிடம் நிலவொளியில் சொல்வார், ''நம் சந்திப்பை அந்த சந்திரன் கூட பார்க்கிறான்'' என்று.

உடனே எம்.ஜி.ஆர். முகம் சிம்பாலிக்காக குளோஸ்- அப்பில் காட்டப்படும். அந்த காட்சியில் எம்.ஜி.ஆர். கலந்து கொள்ளாமலேயே ஏற்கனவே எடுத்த குளோஸ் அப்புகளை வைத்து இணைத்திருந்தேன்.

என் சமயோசிதத்தைப் பாராட்டி எம்.ஜி.ஆர். என்னை கட்டித் தழுவிக் கொண்டார். ''மக்கள் மனதில் என் முகம் பதியும்படி செய்து விட்டீர்களே'' என்று பாராட்டினார்.

கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் மீதும், அவர் குடும்பத்தின் மீதும் எம்.ஜி. வைத்திருந்த பிரியமும், அன்பும், பாசமும் அளவு கடந்தது.

என்.எஸ். கிருஷ்ணன், லட்சுமி காந்தன் கொலை வழக்கு சம்பந்தமாக கைது செ பட்டு சிறை சென்ற சமயம் அவரது கேஸ் செலவுகளுக்கு உதவ என்.எஸ்.கே.யின் சொ படத் தயாரிப்பான 'பைத்தியக்காரன்' படத்தில் இலவசமாக நடிதது்க் கொடுத்தார், எ ஆர்.

''பைத்தியக்காரன்'' படத்தில் என்.எஸ்.கே.யின் மனைவி மதுரத்தின் ஜோடியாக மூர்த்தி என்ற வேடத்தில் நடித்தார், எம்.ஜி.ஆர்.

படம் முடியும் தருவாயில் என்.எஸ்.கே. சிறையிலிருந்து விடுதலையாக, மதுரத்தின் கேரக்டரை இரட்டை வேடமாக்கி, மற்றொரு மதுரத்திற்கு ஜோடியாக என்.எஸ்.கே.யை நடிக்க வைத்தேன்.

எம்.ஜி.ஆர். பிஸி நடிகரான பின் அவரோடு இணைய எங்களுக்கு சந்தர்ப்பம் இல்லாமல் போனது. நீண்ட இடைவெளி விட்டு 'பெற்றால்தான் பிள்ளையா?', 'எங்கள் தங்கம்' 'இதய வீணை' ஆகிய படங்களை இயக்கும் வாய்ப்பு கிடைத்தது.

'இதய வீணை' படத்தினை நாங்கள்தான் இயக்க வேண்டும் என்று பிடிவாதமாக இருந்து எங்களை பணிபுரியச் செய்தவர், எம்.ஜி.ஆர்.

'பெற்றால்தான் பிள்ளையா?' படப்பிடிப்பு சத்யா ஸ்டூடியோவில் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம்.

எம்.ஜி.ஆர். பெரிய அளவில் வளர்ந்த பின் நான் பணிபுரியும் முதல் படம் அது. சாதாரணமாக நான் செட்டுக்குள் நுழைந்தால், என்னைப் பார்த்து நடிகர், நடிகைகள் உட்பட மற்றவர்கள் எழுந்து நிற்பார்கள். ஆனால் எம்.ஜி.ஆர். படத்தில் எனக்கு கிடைத்த அனுபவம் வேறு. ஒரு நாள் எம்.ஜி.ஆர். செட்டுக்குள் வந்த போது அத்தனை பேரும் எழுந்து நிற்கையில், நாம் மட்டும் அமர்ந்திருந்தால் மற்றவர்கள் நம்மை திமிர்பிடித்தவன் என்று நினைப்பார்களே, எனக்கும், எம்.ஜி.ஆருக்கும் உள்ள உறவு யாருக்கும் தெரியும் என்ற நினைவுக் குழப்பத்தோடு நானும் எழுந்து நின்றேன்.

வந்து கொண்டிருந்த எம்.ஜி.ஆர். என்னைப் பார்த்து விட்டார். வேகமாக அருகில் வந்தவர் ''இது யார் செய்யற வேலை? நீங்கள் செய்யலாமா?' என்று சத்தமாக கேட்டார்.

அதற்கு நான் சொன்ன பதில் எம்.ஜி.ஆரை விழுந்து விழுந்து சிரிக்க வைத்து விட்டது.

சுற்றி இருந்தவர்களுக்கு ஒரே வியப்பு. ஏன் எம்.ஜி.ஆர். என்னிடம் ஆவேசமாக பேசினார்? அப்படி என்ன சொல்லி சினத்தோடு வந்த எம்.ஜி.ஆரை சிரிக்க வைத்தேன்

என்பதெல்லாம் அவர்களுக்கு புரியாத புதிர்.

நான் சொன்னது, ''எனக்கு நானே மதிப்புக் கொடுக்கத்தான் எழுந்து நின்றேன்'' என்பதுதான்.

எம்.ஜி.ஆர். முதல்வரான பின் என்னை அழைத்து, ''உங்களை திரைப்படக் கல்லூரி முதல்வராக நியமிக்க எண்ணம் கொண்டிருக்கிறேன்'' என்றார்.

சுய மரியாதைகளை இழந்து அங்கு பணிபுரிய எனக்கு விருப்பமில்லை. அதனால் வேண்டாம் என்று நாசூக்காக சொல்லி மறுத்து விட்டேன். தவிர எந்தவித சலுகைகளையோ, உதவிகளையோ நான் பெற்றதும் இல்லை.

இது பற்றி என்னைச் சார்ந்தவர்களுக்கு என் மீது கோபம் இருந்தாலும் எனக்குள் ஒரு ஆத்ம திருப்தி இருக்கிறதே.''




## ராமாவரம் தோட்டத்தில்...

**எம்.**ஜி.ஆர். தன் தாயார் சத்யபாமாவுக்கு தோட்டத்தின் முன் பகுதியில் சிறிய கோவில் எழுப்பி இருப்பது அனைவருக்கும் தெரியும். அங்கு சத்யபாமாவின் பெரிய புகைப்படம் சீரியல் பல்புகளுடன் உள்ளது.

இப்போது சத்யபாமாவின் கோவில் அருகில் எம்.ஜி.ஆருக்கு அவரது மனைவி ஜானகி அம்மாள் நினைவாலயம் எழுப்பியிருக்கிறார், அதே மாடலில்.

சத்யபாமா நினைவாலயம் உள்ள இடம் நீண்ட இரண்டு அடி உயர விசாலமான சுவருடன் உள்ளது. அருகில் தனக்கும் ஒரு கோவில் எழுப்பப்படும் என்று தெரிந்தே




எம்.ஜி.ஆர். நினைவு இல்ல முகப்பு தோ...ாக...

எம்.ஜி.ஆர். சத்யபாமா நினைவாலய இடத்தை அமைத்தது போல் தெரிகிறது.

ராமாவரம் தோட்டத்து வேலியை ஒட்டி தென்னை மரங்கள் அடர்ந்த பகுதி இருக்... இந்த இடம் தான் ஊமைகள், ஊனமுற்றோருக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

TMC 2248 என்ற இம்பாலா காரை ஜெயலலிதா கொள்கை பரப்பு செயலாளராக இருந்த போது அவரது உபயோகத்திற்கு எம்.ஜி.ஆர். கொடுத்திருந்தார். கடைசியில் தன் மரணத்துக்கு முன் ஜெயலலிதாவுக்கு கொடுக்கப்பட்ட டெலிபோன் வாபஸ் செய்யப்பட்ட போது, இந்த காரையும் தோட்டத்துக்கு கொண்டு வந்து விட்டார்கள்.

எம்.ஜி.ஆர். பயன்படுத்திய கார்களின் எண்களது கூட்டுத் தொகை 7-ல் முடிகிறது. எம்.ஜி.ஆரின் ராசியான எண் 7.



பயன்படுத்தப்படாத நீச்சல் குளம்

ராமாவரம் தோட்டத்து வீட்டின் பின்புறம் பெரிய நீச்சல் குளம் உள்ளது. நான்கு புறமும் உயரமான தளம் எழுப்பப்பட்டு உள்ளது. பயன்படுத்தப்பட்டு நீண்ட காலமாகி விட்டதால், நீரில் பாசி பிடித்திருக்கிறது.


தோட்டத்தில் பணியாட்கள் உட்பட, வந்து போகிறவர்கள் எண்ணிக்கை 200-க்கு மேலிருக்கும். இவர்கள் அனைவருக்கும் தோட்டத்தில் தான் சாப்பாடு. எனவே 24 மணி



வரவேற்பறையில் எம்.ஜி.ஆர். அமரும் இடம்.



வரவேற்பறையிலுள்ள ஏசுநாதர் சிலை




எம்.ஜி.ஆர். பயன்படுத்திய கட்டில்



எம்.ஜி.ஆர். சேகரித்த நூல்கள்



ராட்சத டி.வி. பூஸ்



அமெரிக்காவிலிருந்து திரும்பிய பின் எம்.ஜி.ஆர். பயன்படுத்திய உடற்பயிற்சிக் கருவி. உடற்பயிற்சி முடிந்த பின் ஓய்வெடுக்க பயன்பட்ட ஊஞ்சல்.

நேரமும் சமையலறை பிஸியாக இருக்கிறது. அவசர சமையலுக்கு கேஸ் சிலிண்டர் ஒன்று இருக்கிறது. விறகு பயன்படுத்த அடுப்புகளும் இருக்கிறது.

இப்போது முதல் மாடியை ஜானகி அம்மாள் பயன்படுத்துகிறார். முதல் மாடியில் நூலகம் உள்ளது. இங்கு உடற்பயிற்சிக் கருவிகளும் உண்டு. வயது ஏற ஏற உடற்பயிற்சி கருவிகளை ஒவ்வொன்றாக பலருக்கும் அன்பளிப்பாகக் கொடுத்து விட்டார். அப்படித்தான் கர்லாக்கட்டையை சத்யராஜுக்கு கொடுத்தார். பளு தூக்கி ஒன்றை நடிகர் (மாஸ்டர்) ஸ்ரீதருக்கு கொடுத்திருக்கிறார். 'புல்-அப்' செய்யும் மரச் சாதனம் மட்டும் அப்படியே இருக்கிறது.

அமெரிக்கா சென்று திரும்பிய பின் நடைப் பயிற்சிக்காக ஒரு கருவியை வரவழைத்தார். மின்சாரத்தால் இயங்கும் இந்த கருவியில் 5 அடி நீள நகரும் பாதை உள்ளது. இது சுற்றிக் கொண்டே இருக்கும்.

இதன் முனையில் நின்று கொண்டு கால்களை நடப்பது போல் மாற்றி மாற்றி வைத்தால், இயக்கும் அதிர்வில் இரண்டு நிமிடங்களுக்குள் உடம்பெல்லாம் வியர்த்து விடும். ...ாக்கிங் போவதற்கு சமமான பயிற்சியாகும். பயிற்சி முடிந்ததும் ஒய்வு எடுக்க அந்த ...யில் ஊஞ்சல் ஒன்றும் உண்டு.

இரண்டாவது மாடியில் இருந்து கீழ்த்தளத்திற்கு வர (எம்.ஜி.ஆர். அமெரிக்காவில் ...ந்து திரும்பிய பின்) லிஃப்ட் வசதி செய்யப்பட்டிருக்கிறது. கீழே வலது புற அறைக்கு ... பிரமுகர்களை சந்திக்கலாம். அல்லது வாசலுக்கு வராமலே வலது புற அறையை ஒட்டி ...ஷட்டுக்கு பக்கமாக லிஃப்டிலிருந்தே வழி உண்டு. அங்கிருந்து காரில் ஏறி வெளியே ...விடலாம். இந்த வழியாகத்தான் எம்.ஜி.ஆரின் உடல் எடுத்து வரப்பட்டது.


...ரண்டாவது மாடியில் உள்ள எம்.ஜி.ஆர். அறையில் எல்லா வசதிகளும் உண்டு. ...கையின் எதிரே ஒரு பெரிய அளவு திரையுள்ள டி.வி. வீடியோ டெக் வசதியுடன் ...து. அதில் உலகில் உள்ள எல்லா நாடுகளின் நிகழ்ச்சிகளையும் காண்பதற்கு வசதியாக, ...டின் பின்புறம் ராடார் வடிவிலான பூஸ்டர் ஒன்று உள்ளது. இதன் மதிப்பே நான்கு லட்ச ரூபாய்க்கு மேல் இருக்கும்.

சிங்கம் மற்றும் விலங்குகளை பராமரிப்பதற்காக தோட்டத்திலுள்ள பிரதான வீட்டின்

**து**ப்பாக்கியால் சுடப்பட்டு எம்.ஜி.ஆர். மீண்டும் படப்பிடிப்பில் கலந்து கொண்ட முதல் படம் 'அரச கட்டளை'. இதில் தனது தந்தையை குமரிநாட்டு மன்னனின் ஆட்கள் கொன்று தூக்கில் தொங்க விட்டதைக் கண்டு கொதித்துப் போய் இரவில் அரண்மனைக்குச் சென்று தூங்கும் மன்னரை (பி.எஸ். வீரப்பா) வாளால் எழுப்புவார். அப்போது வீரப்பா எழுந்து, ''யார் நீ?'' என்று கேட்பார். அதற்கு எம்.ஜி.ஆர். ''குமரி நாட்டு குடிமகன்'' என்று கூறுவார். அதுதான் அவர் பேசிய முதல் வசனம். இப்போதும் அந்தக் காட்சியை உன்னிப்பாகக் கவனித்தால் தான் எம்.ஜி.ஆர். பேசிய வசனம் புரிய வரும்.

மற்றொரு காட்சியில் மன்னராகிய பி.எஸ். வீரப்பா தன்னைத்தானே குத்திக் கொண்டு, மகள் சந்திரகாந்தாவை எம்.ஜி.ஆரிடம் ஒப்படைத்து ஆட்சியையும் ஒப்படைக்கும் போது எம்.ஜி.ஆர். ''அரசே'' என்பார். அவ்வளவுதான். வேறு வசனம் எதுவும் அவருக்குக் கிடையாது.

'காவல்காரன்' படத்தில் சுமாராகப் பேச ஆரம்பித்தார். அதுவும் சத்யா ஸ்டுடியோவின் ஒரு தளத்தில் மைக் சாதனங்களைக் கொண்டு வந்து தினமும் உரக்கப் பேசி பயிற்சி எடுத்துக் கொண்டதால் ஓரளவு அவரால் பேச முடிந்தது.




மத்திய அரசு வெளியிட்ட எம்.ஜி.ஆர். நினைவு தபால் தலையும், முதல் நாள் யிட்ட சிறப்பு முத்திரையுடன் கொண்ட உறையின் தோற்றமும்.

---

பின்புறம், சிறிய அளவிலான கூண்டு போன்ற அமைப்பில் வீடுகள் கட்டியிருக்க அவை அப்படியே இருக்கிறது. அருகில் உடற்பயிற்சி செய்வதற்குரிய இரும்பு பார் தொங்கு சங்கிலிகள் துருப்பிடித்து உள்ளன.

நீச்சல் குளம் அருகில் சினிமா தியேட்டர் ஒன்றும் உள்ளது. 'நாடோடி ம படத்தை பத்திரிகையாளர்களுக்கும், முக்கிய நண்பர்களுக்கும் இங்கு தான் காட்டியிருக்கிறார். இப்போது அங்கு தியேட்டர் கட்டிடம் மட்டுமே இருக்கிறது சாதனங்களைக் காணோம். எம்.ஜி.ஆர். உயிரோடிருந்தபோது இந்த தியேட்டர் பயன தப்படாமல் இருந்திருக்கிறது.

தோட்டத்தில் மின் தொடர்பு நின்று போனால், ராட்சத ஜெனரேட்டர் வசதி உண் தோட்டத்தில் இடது புற வேலிக்கருகில் அதற்கென்று கட்டிடமொன்று இருக்கிறது.

வெளித் தோற்றத்தில் மரங்கள் சூழ்ந்து வெறும் தோட்டம் என்று தான் நினைக்கத் தோன்றும். ஆனால், உள்ளே எல்லா வசதிகளுமுள்ள ஒரு நவீன கிராமமே இருப்பது போல் உள்ளது.

தோட்டத்து பிரதான வீடு உள்ள பகுதியில் இடது புறத்தில் பெரிய ஷெட் ஒன்று உள்ளது. இங்கு எம்.ஜி.ஆர். பயன்படுத்திய வேன், கார்கள் வரிசையாக நிறுத்தப்பட்டு உள்ளன.

MSW 2248 என்ற வேன் 1958-ல் தேர்தலுக்காக பயன்படுத்தப்பட்டது. திருவண்ணாம லையில் ப.உ. சண்முகம் நின்றபோது, அங்கு அவரை ஆதரித்துப் பேசிய எம்.ஜி.ஆர். இந்த வேனைத்தான் பயன்படுத்தினார். நீண்ட காலமாக பயன்படுத்திப்படாததால் இந்த வேனின் டயர்களில் உள்ள காற்று இறங்கிப் போய் தூசு படிந்திருக்கிறது.

MDT 5960 என்ற வேன் வெளிப்புறப் படப்பிடிப்பிற்கு பயன்படுத்தப்பட்டது. இதில் குளியல் உட்பட எல்லா வசதிகளும் உண்டு. 'ஆயிரத்தில் ஒருவன்' படப்பிடிப்பிற்கு இந்த வேன் கோவா சென்றிருக்கிறது. மற்றும் ஊட்டி, மைசூர் போன்ற இடங்களுக்கும் சென்றிருக் கிறது.

MSX 3157 டாட்ஜ், MSY 2248 பிளைமவுத்- இந்த இரண்டு கார்களையும் 'நாடோடி


மன்னன்', 'மகா தேவி', 'மன்னாதி மன்னன்' படப்பிடிப்பு காலத்தில் எம்.ஜி.ஆர். பயன்படுத்தியிருக்கிறார்.


MSR 9342 செவர்லட் காரை 'உலகம் சுற்றும் வாலிபன்' படத்திலிருந்து பயன்படுத்தியிருக்கிறார்.

TMQ 4777 அம்பாசிடர் காரை 'இன்று போல் என்றும் வாழ்க' படப்பிடிப்பு நேரத்தில் எம்.ஜி.ஆர். வாங்கி அப்போதிருந்து அதனை பயன்படுத்தினார்.

TMX 4777 அம்பாசிடரை முதல்வரான பின் வாங்கி பயன்படுத்தினார். இரண்டு அம்பாசிடர்களையும் மாற்றி மாற்றி பயன்படுத்தினார், எம்.ஜி.ஆர். இப்போது ஜானகி அம்மாள் இந்த இரு கார்களையும் பயன்படுத்துகிறார்.

எம்.ஜி.ஆர். கடைசி முறையாக அமெரிக்கா சென்று திரும்பிய பின் பம்பாயிலிருந்து 'MGR 4777' என்ற அம்பாசிடரை வரவழைத்தார். எம்.ஜி.ஆர். மறைவுக்குப் பின் இந்த இப்போது எம்.ஜி.ஆர். நினைவு இல்லத்தில் காட்சிப் பொருளாக இருக்கிறது.





எம்.ஜி.ஆர். கடைசியாக வாங்கிய

MGR 4777 என்ற எண்ணுள்ள கார்.





எம்.ஜி.ஆர். கடைசியாக வாங்கிய

ஏ.சி. வசதியுள்ள பிரச்சார வேன்.



# அதிரடி வாத்தியார்

**எம்.**ஜி.ஆரின் வாழ்வில் நெருக்கமாக இருந்த மிகச் சிலரில் ஸ்டண்ட் மாஸ்ட எம்.கே. தர்மலிங்கமும் ஒருவர். குறிப்பாக அரசியல் விழா, தேர்தல் பிரச்சார சமயங்களில் எம்.ஜி.ஆரின் பாதுகாவலராக உடன் சென்று பல சமயங்களில் உயிர் காத்திருக்கிறார்.

எம்.ஜி.ஆரால் அன்புடன் 'தர்மு' என்றழைக்கப்பட்ட தர்மலிங்கம், எம்.ஜி.ஆரை தன் உடன்பிறவா சகோதரராக 'அண்ணா' என அழைத்து மகிழ்ந்தவர்.

எம்.ஜி.ஆருடன் முப்பது ஆண்டுகள் பழகிய தனது அனுபவங்களைச் சொன்னார்.

''எனது சொந்த ஊர் மதுரையிலுள்ள மாடக்குளம். என் தந்தை கலிங்க வஸ்தாது. அவருக்கு பிறந்த ஐந்து ஆண்களில் மூத்தவர் அழகிரிசாமி. கடைக்குட்டி நான்.

அழகிரிசாமி அண்ணன் எம்.ஜி.ஆர். அவர்கள் நடித்த பல படங்களுக்கு ஸ்டண்ட் மாஸ்டராக பணியாற்றியவர்.

நான்காவது சகோதரர் காமாட்சிநாதன் பல படங்களில் நடித்திருக்கிறார். ஆயிரத்தில் ஒருவன்' படத்தில் நம்பியாரின் கையாளாக 'நஞ்சப்பா' என்ற வேடத்தில் நடித்திருக்கிறார்.

அண்ணன் அழகிரிசாமி எனக்கு ஐந்து வயதிலேயே கம்புச்சண்டை, குஸ்தி, உடற்ப யிற்சி, கத்திச்சண்டை எல்லாம் கற்றுக் கொடுத்திருக்கிறார்.

நான் 1952 முதலே தி.மு.க. தீவிர அனுதாபியாக இருந்தேன். அதனால் எம்.ஜி.ஆர். அவர்களை சந்திக்க ஆர்வமாக இருந்தேன். அண்ணன் அழகிரிசாமி 1954 முதலே எம்.ஜி. ஆரை அறிவார்.

1954-ல் சென்னை வந்தேன். அப்போது எனக்கு 19 வயது. அழகிரிசாமி என்னை

லாயிட்ஸ் ரோட்டிலுள்ள எம்.ஜி.ஆரின் இல்லத்திற்கு அழைத்துச் சென்றார். நாங்கள் சென்ற போது எம்.ஜி.ஆர். தனது 'இன்பக்கனவு' நாடகத்தின் ஒத்திகையை நடத்திக் கொண்டிருந் தார். அழகிரிசாமி அவரிடம் என்னை அறிமுகம் செய்வித்தபோது என்னைப் பற்றி விசாரித் தார்.

''ஏதேனும் வேலை விஷயமாக சென்னைக்கு வரவழைத்தீர்களா?'' என்று அண்ணனி டம் கேட்டார். ''அப்படி எதுவும் இல்லை. உங்களைப் பார்க்கத்தான் வந்தான்'' என்று அழகிரிசாமி பதில் சொல்ல, எம்.ஜி.ஆர். ஒத்திகையில் மூழ்கி விட்டார். நாங்கள் விடை பெற்று வந்துவிட்டோம்.

நான் அடிக்கடி அண்ணன் எம்.ஜி.ஆரை சந்தித்துப் பேசி வந்தேன். அப்படி ஒருநாள் அவரைப் பார்ப்பதற்காக வாகினி ஸ்டூடியோவிற்குச் சென்றேன். அன்று 'மதுரை வீரன்' படத்திற்காக சண்டைக் காட்சியொன்றின் ரிகர்சலில் இருந்தார்.

அவர் மட்டுமின்றி, அந்தக் காட்சியில் நடிக்கும் ஸ்டண்ட் நடிகர்களுடன் பானுமதியும் இருந்தார். அப்போதெல்லாம் எம்.ஜி.ஆர். ஒரு படத்தின் சண்டைக்காட்சியில் நடிக்கிறா ரென்றால், அந்தக் காட்சியினை எப்படி அமைப்பது, எப்படி படமாக்குவது என்பது பற்றி படப்பிடிப்பு நடக்கும் இடத்தில், செட்டில் ஒன்றிரண்டு நாட்கள் ஒத்திகை பார்த்து அவற்றை ஒழுங்குப்படுத்துக் கொண்டு, அதன் பின்பே படப்பிடிப்பில் கலந்து கொள்வார். படப்பிடிப்பு சிக்கலின்றி துரிதமாக நடக்குமென்பதால் தயாரிப்பாளருக்கு கால விரயம், பொருள் விரயம் அதிகம் ஏற்படாது. சண்டைக்காட்சியும் நன்கு அமையும்.

எம்.ஜி.ஆருடன் பேசிய பின்னே நான் அங்கிருந்த ஸ்டண்ட் நடிகர் ஒருவருடன் பேசிக் கொண்டிருக்கையில், அவர் ஈட்டியொன்றை சிலம்பம் வீசுவது போல் வீசிக் கொண்டிருந் தார். அது 'சிங்கிள் பகில்' வகையாகும். சிலம்பு விளையாட்டில் 'மெட்ராஸ் விளையாட்டு' என்பார்கள்.

ஆனால் மதுரைப் பகுதியிலோ 'டபுள் பகில்' வகையுண்டு. கம்பைப் பிடித்துக் கொண்டு இருபுறமும் சுழற்றுவது போல் இருக்கும். கற்றுக்கொள்வது சற்று சிரமமாக இருக்கும்.

நான் அதைக் கற்றிருந்ததால், அவரிடமிருந்த ஈட்டியை வாங்கி டபுள் பகிலில் சுழற்றிக் காட்டினேன். அதை தூரத்தில் இருந்த எம்.ஜி.ஆர். கவனித்துக் கொண்டிருந்தார். அது அவருக்கு புது முறையாக இருந்ததால் மிகவும் ரசித்தார்.

என்னை அருகில் வரவழைத்து அதை எப்படிச் செய்வது என்று கேட்டார். நான் மீண்டும் டபுள் பகிலைச் செய்து காட்டினேன். அதை உன்னிப்பாக கவனித்து, சற்று நேரத்தில் அதைச் செய்து பார்க்க, தானே முயற்சித்து சுழற்றியும் காட்டினார். அந்த ஆர்வமும் கற்றுக் கொள்ளும் முயற்சியும் எம்.ஜி.ஆரையேன்றி வேறு யாருக்கும் வராது.

'டபுள் பகிலை' ஏதேனும் ஒரு படத்தில் செய்ய நினைத்த எம்.ஜி.ஆர். 'தாயை காத்த தனயன்' படத்தில் அப்படியொரு காட்சியை அமைக்கும்படி செய்தார். படத்தின் ஸ்டண்ட் மாஸ்டராக ஷியாம் சுந்தர் இருந்தபோதிலும், எம்.ஜி.ஆரும் சின்னப்பாதேவரும் சிலம்பம் செய்து மோதிக்கொள்ளும் காட்சியை நானும், அண்ணன் அழகிரிசாமியும் அமைத்துக் கொடுத்தோம்.

அதேபோல் 'பெரிய இடத்துப் பெண்' படத்தில் இரட்டை கம்புடன் எம்.ஜி.ஆரும், அசோகனும் மோதும் சண்டைக்காட்சியையும் நானும், அண்ணனும் அமைத்தோம். அந்த படங்களில் இரண்டு சண்டைக் காட்சிகளும் ஹைலைட்டாக அமைந்தன.

அப்போதெல்லாம் படத்தில் நடிக்கும் துணை நடிகர்- நடிகைகளை 'எக்ஸ்ட்ரா' என்றே

அழைப்பார்கள். அப்படி அழைப்பவர்களைக் கண்டால் எம்.ஜி.ஆர். கண்டிப்பார். 'துணை நடிகர்கள்' என்றோ, 'ஜூனியர் ஆர்ட்டிஸ்ட்' என்றோ அழைக்க வேண்டுமென்பார். அவர்களின் முன்னேற்றத்திற்காக எம்.ஜி.ஆர். எடுத்துக் கொண்ட முயற்சிகள் பல.

தமிழ்ப்பட உலகில் 'துணை நடிகர்கள் சங்கம்' உருவாகக் காரணம் எம்.ஜி.ஆரே.

அப்போது சண்டைக்காட்சிகளில் நடிப்பதற்கென்று முறையாக பயிற்சி பெற்ற நடிகர்கள் பத்து பதினைந்து பேர்கள்தான் இருந்தோம். அது போதாதென்று எம்.ஜி.ஆர். நினைத்தார்.

அதனால் துணை நடிகர்களையெல்லாம் ஒருநாள் வரவழைத்து அவர்களிடம் ''உ[illegible]ளில் வலுவுள்ளவர்களெல்லாம் சண்டைப் பயிற்சிகளை கற்றுக்கொண்டு சினிமாவில் நடிக்[illegible]லாமே!'' என்று கேட்டார்.

அதற்கு அவர்கள், ''எங்களுக்கு யார் கற்றுக் கொடுப்பார்கள்? அதற்கு வசதி வேண்டாமா?'' என்று பதில் கூறியிருக்கிறார்கள். எம்.ஜி.ஆர். ''அதற்கு நானாச்சு'' என்று சொ[illegible]தோடு நில்லாமல், வடபழனியில் (இன்றைக்கு எம்.ஜி.ஆர். திடல்) ஒரு இடத்தை விலை[illegible] வாங்கி, அதை பெரிய மைதானமாக்கி, பந்தல் அமைத்து, ஸ்டண்ட் பயிற்சிகளை சொல்[illegible] தருவதற்கென்று ஏ.எஸ். சாமிநாதன் என்பவரை நியமித்தார். துணை நடிகர்கள் மட்டுமின்[illegible] நடிகைகளும் ஸ்டண்ட் பயிற்சி பெற்றார்கள். இதெல்லாம் எம்.ஜி.ஆரின் சொந்தச் செலவி[illegible] நடந்தது.

தவிர, துணை நடிகர்- நடிகைகளில் அழகாக இருப்பவர்களை நடனம் கற்றுக்கொ[illegible] செய்து, குரூப் டான்ஸிலும் ஆடும்படி செய்தார். அப்படி துணை நடிகையாக இருந்து [illegible] பின் கதாநாயகியாகவும் ஆனவர்தான் சி.ஐ.டி. சகுந்தலா. சகுந்தலா குரூப் டான்[illegible] நடனமாடிய முதல் படமே எம்.ஜி.ஆரின் 'நாடோடி மன்னன்' தான்.

படப்பிடிப்பு உணவு நேரங்களில் எம்.ஜி.ஆர். என்ன ச்சாப்பிடுகிறாரோ, அது [illegible] யூனிட்டில் இருக்கும் மற்றவர்களும் சாப்பிட வேண்டுமென்று நினைப்பார். அதில் உறுதிய[illegible]கவும் இருப்பார். அதனால் தங்களுக்கு அதிக செலவு ஏற்படுவதாகக் கருதிய சில தயாரிப்பாளர்கள், ''எம்.ஜி.ஆர். எங்களுக்கு இப்படி செலவு வைக்கிறாரே, அவர் சொந்தப்படம் எடுத்தால் இப்படியா செலவு செய்வார்?'' என்று பேசியது எம்.ஜி.ஆருக்கு எட்டியது.

''நான் படமெடுத்தால் இதைவிட செலவு செய்வேன்'' என்று மற்றவர்களுக்குக் காட்டுவதற்காகவே 'நாடோடி மன்னன்' படத்தினை தயாரித்தார். அதற்கு முன் அப்படி யாரும் செலவு செய்திருப்பார்களா என்று பிறர் வியக்கும் வகையில் படத்தில் பங்கு பெற்றவர்களுக்கு எவ்வித வித்தியாசமுமின்றி, எல்லோருக்கும் ஒரே வசதிகள், உணவு கிடைக்கும்படி பார்த்துக் கொண்டார்.

இப்போது மவுண்ட்ரோடு புகாரி ஓட்டல் இருக்கும் இடத்திற்கு அருகில் முன்பு 'ஹாரிசன் மிலிடரி ஓட்டல்' இருந்தது. எம்.ஜி.ஆர். அங்கிருந்துதான் அசைவ உணவு வகைகளை எல்லோருக்கும் தருவித்துக் கொண்டிருந்தார்.

முதல்கட்ட படப்பிடிப்பின்போது அப்படிச் செய்தவர், இரண்டாவது கட்டப் படப்பிடிப்பில் அந்த ஓட்டலின் கிளையொன்றை வாகினி ஸ்டுடியோவிற்குள்ளேயே கொண்டு வந்து விட்டார்.

எம்.ஜி.ஆரின் இந்த தாராள செயல் அவரது அண்ணன் சக்கரபாணி அவர்களுக்கே எரிச்சலை மூட்டியது. ''ஏன் இப்படி அனாவசிய செலவு செய்கிறாய்?'' என்று சண்டை போடுவார். எம்.ஜி.ஆர். சிரித்துக் கொண்டே ஒன்றும் பேசமாட்டார்.

'நாடோடி மன்னன்' படத்திற்கு எம்.ஜி.ஆர். தன்னிடமிருந்த சொத்துக்களை எல்லாம்



'திருடாதே' படப்பிடிப்பில் தர்மலிங்கம், எம்.ஜி.ஆர்., மாடக்குளம் அழகிரிசாமி, ...மாட்சி நாதன்.

...டமானம் வைத்ததோடு அல்லாமல், பிறரிடம் கடன் வாங்கித்தான் படப்பிடிப்பு நடத்த ...டியும் என்ற அளவிற்குச் செலவு செய்தார். ஆனால் எந்த நிலையிலும் முன்பிருந்த ...சதிகள் எதுவும் படப்பிடிப்பு குழுவினருக்குக் குறையாமல் பார்த்துக் கொண்டார். ஓட்டல் ...பில் செலவில் ஒரு படமே தயாரித்து விடலாம். 'நாடோடி மன்னன்' படத்திற்குப் பின் தொடர்ந்து வருமானம் இல்லாததால் ஓட்டல்காரரும் அந்த கிளையை நிறுத்தி விட்டார்.

'நாடோடி மன்னன்' படத்தினால் எம்.ஜி.ஆர். கடனைத் தீர்க்கப் போவதில்லை. அவரும் சினிமாவில் இருக்க மாட்டார்'' என்றெல்லாம் எம்.ஜி.ஆருக்கு கடனம் கொடுத்தவர்களைப் பயமுறுத்தினார்கள், சினிமாவுலகிலுள்ள சிலர். ஆனால் அந்தப் படம் வெளியாகி வசூலில் பெரும் சாதனை படைத்து அனைவரையும் பிரமிக்கச் செய்தது.

இந்த வெற்றிக்குப் பின் எம்.ஜி.ஆருக்கு மற்றொரு சோதனை வந்தது. சீர்காழியில் 'இன்பக்கனவு' நாடகத்தின்போது குண்டுமணியை தூக்கிப் போடுகையில் எம்.ஜி.ஆரின் வலது கால் முறிந்தது. ''இனி எம்.ஜி.ஆர். அவ்வளவுதான். அவரால் நடக்க முடியாது. சினிமாவில் நடிக்கவும் முடியாது'' என்றெல்லாம் சினிமாவுலகில் பேசினார்கள். ஆனால் எம்.ஜி.ஆர். எதைப் பற்றியும் கவலைப்படவில்லை.

வீட்டுக்கு அவரைப் பார்க்க வந்தவர்க்கெல்லாம் அவரே ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தார். சிவாஜி, எம்.ஜி.ஆரைப் பார்த்து உணர்ச்சிவசப்பட்டு அடக்க முடியாமல் அழுதார். ''எனக்கு ஒன்றும் இல்லை. எல்லாம் சரியாயிடும். ஏன் அழறீங்க?'' என்று ஆறுதல் சொன்னார், எம்.ஜி.ஆர்.

பூரண குணமடைந்த பின் எம்.ஜி.ஆர். முன்னைவிட சுறுசுறுப்பானார்.

'பாக்தாத் திருடன்' படம் முக்கால்வாசி முடிவடைந்து, கிளைமாக்ஸ் மட்டும் படமாக்க வேண்டியிருந்தது. எம்.ஜி.ஆருக்கு கால்முறிவு ஏற்பட்டதால் படப்பிடிப்பு பாதிக்கப்பட்டது. ஆனால் குணமாகிய பின் 19 நாட்கள் தொடர்ந்தாற்போல் இரவுபகலாக படப்பிடிப்பில்

கலந்து கொண்டார், எம்.ஜி.ஆர்.

காலை ஏழு மணிக்கு எம்.ஜி.ஆர். வந்தாரென்றால் வைஜயந்திமாலா உட்பட பிற நட்சத்திரங்களுடன் நடிக்க வேண்டிய வசன காட்சிகள், மாலையில் தொடர்ந்து சண்டைக் காட்சிகளை எப்படி படமாக்குவது என்பது பற்றி ஆலோசனை நடத்திவிட்டு, வீட்டுக்குச் சென்று குளித்து முடித்தபின் 7-00 மணிக்குச் சரியாக படப்பிடிப்புக்கு திரும்பி வந்து விடுவார். இப்படி 19 நாட்கள் தூங்காமல் எந்தச் சோர்வையும் வெளிக்காட்டாது உழை தார். ''எம்.ஜி.ஆரால் எப்படி தூங்காமல் உழைக்க முடிகிறது?'' என்று உடன் நடித்தவ ளெல்லாம் ஆச்சரியப்பட்டார்கள்.

'பாக்தாத் திருடன்' படத்தின் படப்பிடிப்பு கோல்கொண்டா கோட்டையில் நடந்தது. இது ஐதராபாத் அருகில் இருப்பதால் அப்பகுதி மக்களுக்கு உருது, இந்தி நன்றாக பேச வரும். அப்போது வைஜயந்திமாலா இந்தியில் அறிமுகமான நேரம். அதனால் பெரு கூட்டம் கூடிவிட்டது.

எம்.ஜி.ஆருடன் வைஜயந்திமாலா நடித்துக் கொண்டிருந்ததைப் பார்த்த அப்ப மக்கள், இந்தியில் அடிக்கடி கிண்டல் செய்து கூச்சல் போட்டுக் கொண்டிருந்ததால் பட டிப்பு பாதிக்கப்பட்டது. எம்.ஜி.ஆருக்கு ஓரளவு இந்தி புரியும். அவருக்கு எரிச்சல் வந் விட்டது.

உடனிருந்த எங்களையெல்லாம் 'பின்தொடர்ந்து வர வேண்டாம்' என்று சொ விட்டு, 500 பேர்களுக்கு மேல் திரண்டிருந்த அந்த கூட்டத்தினர் பக்கத்தில் போய் தனிய நின்று, ''நீங்க அமைதியாக சூட்டிங் பாக்கிறதா இருந்தா இங்கே இருங்க. தொந்த பண்ணீங்கன்னா உங்களைச் சும்மா விடமாட்டேன்'' என்று ஓங்கிக் குரல் கொடுத்து, யுத திற்கு அழைப்பதுபோல் இருதோள்களையும் குலுக்கிக் காட்ட, அவரது ஆவேசத்தை கண் வர்கள் அடங்கிப்போய் 'கப்-சிப்' ஆகி விட்டார்கள்.

அதன்பின் படப்பிடிப்புக்கு எவ்வித இடையூறும் இல்லை. இந்த ஒரு சம்பவம் என் றில்லை. அரசியல் காரணங்களுக்காக எம்.ஜி.ஆரை கொலை செய்ய கூட்டம் கூட்டமாக பலர் முயற்சித்தபோதெல்லாம் அந்த கட்டங்களையெல்லாம் தனி ஒருவராகவே சமாளித்து உயிர் தப்பியிருக்கிறார்.

1957-ல் எம்.ஜி.ஆா. தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களுக்கு அதிகம் சென்றதில்லை. அப்போதே அவர் சில கூட்டங்களில் பிரச்சாரம் செய்தபோது என்னையும் அழைத்துச் சென்றார்.

1962-ல் எம்.ஜி.ஆர். தி.மு.க.வுக்கு ஆதரவு தேடி தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்ய ஆயத்தமானார். அப்போது எம்.ஜி.ஆரின் மனைவி சதானந்தவதி உயிருக்கு ஆபத் தான நிலையில் மருத்துவமனையில் போராடிக் கொண்டிருந்தார். அவரது அருகில் இருந்து ஆறுதல் சொல்ல முடியாத நிலையில் எம்.ஜி.ஆர். பிரச்சாரத்திற்குப் புறப்பட்டார்.

தர்மபுரியிலிருந்து சேலம் செல்லும் வழியில் எம்.ஜி.ஆரைச் சுட்டுக்கொல்வதற்காக பிரபல கொள்ளைக்காரன் மம்பட்டியானை காங்கிரசார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அத னால் அந்த வழியே வரவேண்டாம் என்று அப்பகுதி தி.மு.க.வினர் அவசர செய்தி யொன்றை எம்.ஜி.ஆருக்கு அனுப்பி இருந்தார்கள். எம்.ஜி.ஆர். அதைப் பார்த்து சிரித்து விட்டு புறப்பட்டார்.

சென்னையிலிருந்து முதலில் ஓசூர் சென்று, அங்கிருந்து கிருஷ்ணகிரி சென்று இரவு 11 மணிக்கு கூட்டத்தில் கலந்து கொண்ட பின், தர்மபுரியில் நள்ளிரவு 12-45-க்கு நடந்த



'நாடோடி மன்னன்' படத்தில் பானுமதியை இயக்கும் எம்.ஜி.ஆர்.

...ட்டத்தில் கலந்து கொண்டார்.

இரவு ஓய்வு எடுக்க விரும்பாமல் நேராக சேலம் செல்ல எம்.ஜி.ஆர். முடிவெடுத்தார். ...னால் அங்கிருந்தவர்கள் 'மம்பட்டியான் எதுவும் செய்வான்' என்று பயந்தார்கள். எம்.ஜி. ...ரோ, 'என்ன நடக்கிறதென பார்த்து விடலாம்' என்று சொல்ல, நாங்கள் புறப்பட்டோம். ...னால் எதிர்பார்த்தபடி எதுவும் நடக்கவில்லை.

சேலம் சென்ற பின் திருச்சி சென்றோம். சென்னையிலிருந்து திருச்சிக்கு அவசர போன் வந்தது. ''சதானந்தவதி சீரியஸாக இருக்கிறார்'' என்று. எம்.ஜி.ஆர். சென்னை செல்லலாம் என்று முடிவெடுத்தபோது முரசொலிமாறன் வந்து, ''கருணாநிதி (தஞ்சையில் போட்டியிட்டார்) தங்களை பிரச்சாரத்திற்கு வரும்படி அழைத்திருக்கிறார். தாங்கள் வந்தால்தான் ஆச்சு!'' என்று பிடிவாதமாகச் சொல்ல, எம்.ஜி.ஆருக்கு தர்மசங்கடமாக இருந்தது. அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் தஞ்சாவூருக்கே புறப்பட்டார்.

தஞ்சையில் சுற்றுப்புற கிராமங்களிலெல்லாம் எம்.ஜி.ஆர். பிரச்சாரம் செய்தார். அவர்

### நல்லதையே செய்வேன்

*என் மனசாட்சிக்கு எது நியாயம் என்று படுகிறதோ அதையே நான் எப்போதும் செய்வேன். அரசவை கவிஞராக நான் கண்ணதாசனை நியமித்தேன். அவர் என்னை பேசாத பேச்சு, எழுதாத எழுத்து, திட்டாத திட்டு கிடையாது.*

*நான் அவரை அரசவை கவிஞராக நியமித்ததும் அவருக்கே ஒன்றும் புரியவில்லை. தனிப்பட்ட விரோதங்களை நான் என்றுமே பார்ப்பதில்லை. திறமையையே பார்ப்பேன். திறமை உள்ளவர்கள் எனக்கு தீங்கு செய்தாலும், நான் அதை ஒதுக்கி வைத்துவிட்டு அவர்களுக்கு எவ்வளவு நன்மை செய்ய முடியுமோ அவ்வளவு நன்மை செய்திருக்கிறேன்.*

*-1984 திருச்சியில் அண்ணா பவளவிழாவில் பேசிய எம்.ஜி.ஆர்.*

சென்ற வழிகளில் வயல்வெளிகளில் வேலை செய்த விவசாயிகள், பெண்கள் வேலையை நிறுத்தி எம்.ஜி.ஆரைக் காண ஓடிவந்தனர்.

அவர்களிடம் எம்.ஜி.ஆர்., ''நீங்க யாருக்கு ஓட்டுப் போடுவீங்க?'' என்று கேட்டதற்கு, அவர்கள் ''ஐயாவுக்குத்தான் போடுவோம்'' என்று பதில் சொல்ல, திருப்தியுற்று சென்றார்.

வழியெல்லாம் எம்.ஜி.ஆரின் கேள்விக்கு 'ஐயாவுக்குத்தான்' என்ற பதில் வந்தது. அவருக்கு ஏதோ நெருடலாக தோன்ற, ஓரிடத்தில் அவர் கூட்டத்தினரிடம், 'ஐயான்னா யாரைச் சொல்றீங்க?'' என்று மீண்டும் அவர்களிடம் கேட்டதற்கு, ''பரிசுத்த நாடார் ஐயாவுக்குத்தாங்க'' என்றார்கள். காங்கிரஸ் வேட்பாளராக பரிசுத்த நாடார் கருணாநிதிக்கு எதிராக நின்றிருந்தார். அவருக்கு அந்தப் பகுதியில் மிகுந்த செல்வாக்கு உண்டு. எல்லோரும் 'ஐயா' என்றே அவரை அழைப்பது வழக்கம். எம்.ஜி.ஆர். அவருக்குத்தான் ஓட்டு கேட்க வருகிறார் என்று கிராமப் பகுதி மக்கள் நினைத்திருக்கிறார்கள்.

அதைப் புரிந்து கொண்டபின், ''நான் கருணாநிதிக்கு ஓட்டு கேட்டு வந்திருக்கிறேன். நீங்கள் 'உதயசூரியன்' சின்னத்தில் வாக்களிக்க வேண்டும்'' என்று சொல்லி பிரச்சாரம் செய்தார்.

பிரச்சாரத்தின் இறுதிக் கட்டமாக பரிசுத்த நாடாரை ஆதரித்து ஊர்வலம் ஒன்று காங்கிரஸ் சார்பில் நடக்கவிருந்தது. பிற்பகல் 3-00 மணிக்கு காங்கிரஸ் ஊர்வலமும், 5-00 மணிக்கு தி.மு.க. சார்பு ஊர்வலமும் நடக்கவிருந்தது. காங்கிரஸ் ஊர்வலத்தில் காமராஜர், பெரியார், எம்.ஆர். ராதா ஆகியோர் கலந்து கொள்வதாக இருந்தார்கள்.

தி.மு.க. ஊர்வலத்தில் எம்.ஜி.ஆர். கலந்து கொள்வதாக அறிவிக்கப்பட்டதால் மக்கள் திரள், திரளாக வந்து கொண்டிருந்தார்கள். ஏற்கனவே எம்.ஜி.ஆர். பிரச்சாரம் செய்த கூட்டங்களில் கலந்து கொண்ட மக்கள் கூட்டத்தைக் கண்டு காங்கிரசார் மிரண்டு போயிருந்தார்கள். அதனால் 3-00 மணிக்கு நடைபெறுவதாக இருந்த காங்கிரஸ் ஊர்வலம் புறப்படக் காணோம். ஐந்து மணியாயிற்று. அப்போதும் புறப்படவில்லை.

அதனால் ''காங்கிரஸ் ஊர்வலம்தான் புறப்படவில்லை. நாம் புறப்படலாம்'' என்று தி.மு.க.வினர் நினைத்தால், போலீசார் குறுக்கே நின்றார்கள். ''காங்கிரஸ் ஊர்வலம் சென்ற பின்புதான் நீங்கள் செல்ல வேண்டும்'' என்று புறப்படாத ஊர்வலத்திற்கு கருணாநிதியிடம் விதண்டாவாதம் செய்தார்கள். மாலை மணி 6-00 ஆயிற்று. அப்போது போலீஸ் உயர் அதிகாரிகள் அங்கு வந்து தடையாக நின்றார்கள்.

''இதைக் கண்ட எம்.ஜி.ஆருக்கு கோபம் வந்து விட்டது. ஊர்வலம் புறப்படும். நானே தலைமை தாங்குகிறேன். போலீசார் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும். வழக்குத்தானே போடுவார்கள். கவலையில்லை'' என்று ஊர்வலத்தை துவக்கினார். அதற்கு மேல் போலீசார் எதுவும் செய்யவில்லை.

பெரியாரும், எம்.ஆர். ராதாவும் ஊர்வலத்தை ரத்து செய்து விட்டுப் போய்விட்டார்கள். தஞ்சையில் கருணாநிதி வெற்றி பெற்றார். இங்கு தி.மு.க. பெற்ற முதல் வெற்றி அது.

அதே தேர்தல் பிரச்சாரத்திற்காக எம்.ஜி.ஆர். மதுரை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்தார். தேனியில் எஸ்.எஸ்.ஆரை ஆதரித்து பிரச்சாரம் செய்வதற்காக பெரியகுளத்திலிருந்து புறப்பட்டோம்.

நள்ளிரவு 1-45 மணி இருக்கும். எம்.ஜி.ஆர். வேனில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தார். நடுவழியில் 500 பேர்களுக்கு மேல் திரண்டிருந்த கூட்டமொன்று வேனை வழிமறித்தது.

நாங்கள் இறங்கி என்னவென்று கேட்டோம். (நாங்கள் என்றால் நான், பத்மநாபன், ராமகிருஷ்ணன்) அவர்களில் சிலர் தூரத்தில் இருந்த சிறிய மலையைக் காட்டி, அங்கு தீப்பந்தங்கள் எரிந்து கொண்டிருந்ததை அடையாளம் சொல்ல, ''அங்கு வரவேண்டும். எம்.ஜி.ஆரைக் காண ஆவலாக இருக்கிறார்கள்'' என்று சொன்னார்கள்.

நாங்கள், ''ஏற்கனவே நாங்கள் தாமதமாக வந்து கொண்டிருக்கிறோம். தேனியில் எங்களுக்காக மக்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். உங்கள் இருப்பிடத்திற்கு வந்துவிட்டுப் போவதானால் சரியாக இருக்காது. நாங்கள் திரும்பும்போது உங்கள் இருப்பிடத்திற்கு வருகிறோம்'' என்று சொன்னதை அவர்கள் ஏற்கவில்லை.

தங்கள் இடத்திற்கு வந்தேதான் தீரவேண்டும் என்று கெஞ்சுதலாக துவங்கி, மிரட்டலாக மாறியது. நாங்களும் விட்டுக்கொடுக்காமல் மறுத்தோம். அவர்கள் கோபத்துடன், ''இப்போ நீங்கள் வராவிட்டால் வேனை அப்படியே கொளுத்தி விடுவோம்'' என்றார்கள்.

இந்த வார்த்தைகள் எம்.ஜி.ஆரின் காதில் எப்படித்தான் விழுந்ததோ, உள்ளே படுத்திருந்தவர் மேலே தாவி எங்களைத் தாண்டி வேனிலிருந்து முன்புறமாக குதித்து நின்றார்.

''என்னது, வேனை கொளுத்துவீங்களா? செய்யுங்கடா பார்ப்போம்'' என்று போர்க்குரல் கொடுத்ததுதான் தாமதம். மறுநொடி அந்த 500 பேர்களில் ஒருவரையும் காணோம். பறந்து விட்டார்கள். இதெல்லாம் ஒரு சில நொடிகளில் நடந்து விட்டது. எம்.ஜி.ஆரின் அந்த சூப்பர்மேன் செயல் எங்களுக்கே பிரமிப்பாக இருந்தது.

அப்போது நாங்கள், ''உங்களை பாதுகாக்க நாங்கள் இருக்கும்போது நீங்கள் ஏன் ரிஸ்க் எடுக்கிறீர்கள்?'' என்று கேட்டோம். அதற்கு எம்.ஜி.ஆர்., ''இப்போது மட்டுமல்ல, இனி எப்போதுமே எந்த ஆபத்து வந்தாலும் நான்தான் முன்னால் இருப்பேன். நடப்பது நடக்கட்டும்'' என்றார்.

தேனியில் கூட்டம் நடக்குமிடத்திற்குச் சென்றால், அங்கு தி.மு.க. நிர்வாகிகள் நாங்கள் பத்திரமாக வந்திருப்பது பற்றி ஆச்சரியமும் நிம்மதியும் அடைந்தார்கள்.

''உங்களை மலைப்பகுதிக்கு பிரச்சாரம் செய்வதற்கு அழைப்பது போல் அழைத்து, உங்களுடன் வேனை கொளுத்துவதற்கு திட்டமிட்டார்கள். இதற்காக எஸ்.எஸ்.ஆரை எதிர்த்து நிற்கும் காங்கிரஸ் வேட்பாளர் தியாகராஜன் நெல்லையிலிருந்து குண்டர்களை வரவழைத்திருக்கிறார்'' என்று எம்.ஜி.ஆரிடம் சொன்னார்கள்.

அந்தக் கூட்டத்திலேயே எம்.ஜி.ஆர்., தியாகராஜனுக்கு எச்சரிக்கை விடுத்து, ''உங்கள் கொலை முயற்சிகளை இத்தோடு நிறுத்திக் கொள்ளுங்கள்'' என்று சொல்லிவிட்டு வந்தார். எஸ்.எஸ்.ஆர். வென்றார்.

நான் எம்.ஜி.ஆருடன் படங்களில் தொடர்ந்து சண்டைக் காட்சிகளில் நடித்துக் கொண்டிருந்தேன். 'எங்க வீட்டுப் பிள்ளை' படத்தில் எம்.ஜி.ஆருடன் ஒரு சண்டைக் காட்சியில் மட்டும் நடிப்பதற்கு ஆள் தேடினார்கள். சண்டை போடுவதோடல்லாமல் வசனம் பேசி நடிக்கவும் வேண்டும். எனக்கு நாடக அனுபவம் இருந்ததால், எம்.ஜி.ஆர். என்னையே நடிக்கும்படி செய்து விட்டார்.

சரோஜாதேவியிடம் கைப்பையை பறித்துக் கொண்டு ஓடும் என்னை எம்.ஜி.ஆர். வழிமறித்து சண்டை போடுவார். போலீஸ் வந்து என்னை பிடித்துச் செல்லும். இரண்டு நிமிடம் வரும் இந்த சண்டைக் காட்சியை ஒரே ஷாட்டில் படமாக்கினார்கள். எம்.ஜி.ஆர். இப்படி ஒரு காட்சியை ஒரே ஷாட்டில் எடுக்க வேண்டும் என்று நீண்ட நாட்களாக திட்டமிட்டுக் கொண்டிருந்தார். அந்த ஆசையை 'எங்க வீட்டுப் பிள்ளை'யில் தீர்த்துக் கொண்டார்.

என்னை வழிமறிக்கும் எம்.ஜி.ஆரை நான் கத்தியால் குத்த முயற்சிக்க, அதிலிருந்து லாவக மாக விலகி என்னுடன் சண்டையிட்டு போலீசில் ஒப்படைப்பார்.

ஒரே ஷாட் என்பதால் டம்மி கத்தியை தயார் செய்ய நேரமின்றி, உண்மையான கத்தியை பயன்படுத்தும்படி ஆனது. எனக்கு முறையாக சினிமாப்படி எப்படி கத்தியை வீச வேண்டும் என்று தெரிந்திருந்தாலும் ஒரே ஷாட் என்பதால் உதறலாக இருந்தது. ஆனால் நான் பயந்தபடி எதுவும் நடக்கவில்லை. எம்.ஜி.ஆரின் திறமையான சமாளிப்பும் நல்ல நடிப்பாக அமைந்தது. இந்த படத்தின் 100-வது நாள் வெற்றிவிழா பல ஊர்களில் நடைபெற் றது.

எம்.ஜி.ஆரின் பாதுகாப்புக்காக நான் அவருடன் சென்றால், சென்ற ஊர்களிலெல்லாம் ரசிகர்கள் என்னை அடையாளங்கண்டு சூழ்ந்து கொண்டு கையெழுத்து வேட்டையாடினார் கள்.

இதைக் கவனித்த எம்.ஜி.ஆர். சிரித்தபடியே, ''என்ன தர்மு, உனக்கே இப்போ பாது காப்பு வேணும் போலிருக்கே'' என்று கேட்டார். அவர் கேட்டது நிஜமாகி விடும் போலிருந் தது.

அதனால் எம்.ஜி.ஆரை பாதுகாக்க எனக்கு இடையூறாகி விடுமோ என்று பயந்த நான் 'எங்க வீட்டுப் பிள்ளை' படத்திற்கு பின் தனியான வேடங்களில் நடிக்காமல் தவிர்த்தேன். சினிமாவில் நடிப்பது நான் விரும்பி ஏற்றுக் கொண்டதல்ல. எம்.ஜி.ஆரை அருகில் இருந்து கவனிப்பதை விட பெரிய காரியம் எதுவுமில்லை என்று எண்ணினேன். அதனால் குரூப் சண்டைக் காட்சிகளில் மட்டும் நடித்தேன்.

எம்.ஜி.ஆர். தமிழக முதல்வராக ஆன பின்பே, மீண்டும் படங்களில் நடிக்க ஆரம்பித் தேன். காரணம், போலீஸ் பாதுகாப்பு எம்.ஜி.ஆருக்கு வந்து விட்டதால் என் வேலை குறைந்தது. ஆனாலும் அரசியல் கூட்டங்கள், நிகழ்ச்சிகளுக்கு தவறாமல் எம்.ஜி.ஆருடன் சென்று வந்தேன்.

1962-க்குப் பின் 1967-ல் தேர்தல் பிரச்சாரத்தின் போதும் எம்.ஜி.ஆர். பல ஆபத்துக் களை சந்திக்க நேர்ந்தது. மதுரை மாவட்டத்தில் பல ஊர்களில் நிறைய மக்கள் கூடுவார்கள் என்பதால் ஊருக்கு வெளியே ஆற்றங்கரையோரங்களில் வயல் வெளிகளுக்கருகில் கூட் டம் நடத்துவார்கள்.

அதனால் நாங்கள் வேனை கூட்டம் நடத்தும் இடத்திற்கெல்லாம் கொண்டு செல்ல முடியாது. வேனில் இருந்து இறங்கி சற்று தூரம் நடந்துதான் செல்ல வேண்டியிருக்கும். அதுபோன்ற நேரங்களில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு நாங்கள் செல்லும் வழி இருட் டாகி விடும்.

அப்படிப்பட்ட சமயங்களில் எம்.ஜி.ஆரின் முன்னே பத்மநாபன் செல்வார். இருபுற மும் நானும், இராமகிருஷ்ணனும் செல்வோம். அப்போது எம்.ஜி.ஆர். என்ன செய்வார் தெரியுமா? அவரது கழுத்தில் சிறிய கருப்பு- சிவப்பு துண்டு ஒன்று இருக்கும். அதை மார்பின் முன்பாக இரு முனைகளையும் இரண்டு கைகளால் இறுகப் பிடித்துக் கொள்வார். அது மார்புக் கவசம் போல் இருக்கும். யாரும் கத்தியை வீசினாலும் மார்பில் பாயாமல் கைகள் தடுத்துக் கொள்ளும்.

எம்.ஜி.ஆர். எப்போதும் 'கட்-ஷூ' அணிந்திருப்பார். அதன் முனை கூர்மையாக இருக்கும். எம்.ஜி.ஆருக்கு கெடுதல் விளைவிக்க இருண்ட நேரங்களில் எதிரிகள் கூட்டம் கூட்டமாய் நெருங்கி வருவார்கள். மக்கள் கூட்டத்தோடு கூட்டமாய் எம்.ஜி.ஆருக்கு அரு

கில் அவர்கள் வர முனையும்போது கட்-ஷூ அவர்களது காலைப் பதம் பார்க்கும். எம்.ஜி. ஆரின் இந்த அதிர்ச்சியால் எதிரிகள் தாங்க முடியாத வலியால் விலகி ஓடுவார்கள்.

ஏன் அவர்கள் இப்படி ஓடுகிறார்கள் என்பது மக்களுக்குப் புரியாது. எம்.ஜி.ஆர். வைக்கின்ற காலடி ஒவ்வொன்றும் எச்சரிக்கையுடனே இருக்கும். ஆனால் பிறரால் அதை எளிதில் அறிய முடியாது.

அப்போது கதிரேசன் என்பவர் எம்.ஜி.ஆரிடம் டிரைவராக இருந்தார். நாங்கள் டாட்ஜ் கார் ஒன்றில் கோவையிலிருந்து சேலத்திற்கு சென்று கொண்டிருந்தோம். நடுவழியில் எங்க ளுக்கு பின்புறமாக பியட் கார் ஒன்று தொடர்ந்து வந்தது. அதில் ஐந்தாறு குண்டர்கள் இருந்ததால் ஒதுக்குப்புறமான இடங்களில் எங்களது காருடன் மோதுவது போல் வந்தார் கள். கதிரேசன் திறமையாக காரை ஓட்டி அவர்களை சமாளித்தார். குறுகலான இடமொன்றில் கதிரேசன் காரை வேகமாக ஓட்டி பியட் காரை இடித்து தள்ள அது பெரிய பள்ளத்தில் போய் விழுந்தது.

சேலத்திலிருந்து மல்ல சமுத்திரம் செல்லும் வழியில் நாங்கள் காரை முன்னே செலுத்த முடியாத அளவில் 100-க்கும் மேற்பட்ட மாட்டு வண்டிகள் தடை போல் நிறுத்தப்பட்டு இருந்தன. எம்.ஜி.ஆரும் நாங்களும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் வண்டியை அவர் கள் நகர்த்துவதாகக் காணோம். அதற்கு மேல் பொறுமை இழந்து குறுக்காக நிறுத்தப்பட்டு இருந்த முதல் வண்டியை நாங்களே கவிழ்த்து விட்டு வேகமாக காரில் ஏறிப் பறந்தோம்.

மல்ல சமுத்திரத்தில் ஒரு தெருமுனையில் எம்.ஜி.ஆர். வேனில் நின்றபடி பேச, அருகிலிருந்த கூரை ஷெட் ஒன்று அப்படியே (உள்ளே எத்தனை பேர் இருந்து அதை தூக்க முயற்சித்தார்கள் என்று தெரியவில்லை) எங்கள் மீது வந்து கவிழ்ந்தது. ஆனால் அது எங்கள் மீது கவிழ்வதற்குள் எம்.ஜி.ஆரும் நாங்களும் வேனிலிருந்து மின்னலாக வெளியே பாய்ந்து தப்பித்து சற்றும் தாமதிக்காமல் அருகில் இருந்த வீட்டின் மொட்டை மாடி மேல் ஏறிக் கொண்டோம்.

எம்.ஜி.ஆர். அங்கிருந்த படியே பேசினார். பேசி முடித்தபின் வேனில் கவிழ்ந்திருந்த கூரை ஷெட்டை அப்புறப்படுத்தி விட்டு புறப்படுவதற்காக வேனில் ஏறினால், ஒரு பெருங் கூட்டம் வேனை சூழ்ந்து கொண்டது. வேனை அங்கிருந்து நகர்த்த முடியாமல் நின்று கொண்டார்கள். நாங்கள் புறப்பட்டு செல்ல வழியே இல்லை.

அதனால் ஒரு முடிவுக்கு வந்தோம். என்ன ஆனாலும் சரி இரண்டில் ஒன்று பார்த்து விடுவது என்று நானும் இராமகிருஷ்ணனும் வேனின் இரு புறமும் இறங்கிக் கொண்டோம். எம்.ஜி.ஆர். வேனின் ஒரு புறத்தில் கண்ணாடிகளை இறக்கி விட்டுக் கொண்டார்.

கதிரேசன் வேனை ஸ்டார்ட் செய்ய, நாங்கள் இருபுறமும் கண்ணில் பட்டவர்களை யெல்லாம் அடித்து தள்ளிக்கொண்டே முன்னேறினோம். எம்.ஜி.ஆர். தன்னை நோக்கி வந்தர்களை எல்லாம் ஜன்னல் வழியே கைகளால் அடித்து தள்ளினார். இப்படியே அந்த கூட்டத்தை கடந்தோம். சினிமாவை விட நிஜ வாழ்வில் எம்.ஜி.ஆர். போராடியது அதிக மாக இருக்கும்.

1971-ல் ஆதித்தனார் ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் தி.மு.க. வேட்பாளராக போட்டி யிட்டார். அவரை ஆதரித்து எம்.ஜி.ஆர். பிரச்சாரம் செய்வதாக இருந்தது. ஆனால் சாத் தான்குளம் தொகுதிப் பக்கம் மட்டும் போக வேண்டாம். அங்கு உங்கள் உயிருக்கு உலை வைக்க முயற்சி நடக்கிறது என்று தொகுதி தி.மு.க. பிரமுகர்கள் எம்.ஜி.ஆருக்கு முன்னதாக தகவல் சொன்னார்கள். எம்.ஜி.ஆர். வழக்கம் போல் அதை சட்டை பண்ணவில்லை.

ஸ்ரீவைகுண்டம் விருந்தினர் விடுதியில் இரவு 10-30க்கு போய் சேர்ந்தோம். 11-45க்கு ஆதித்தனார் வீடு சென்றால் அவர் எம்.ஜி.ஆரிடம் ''சாத்தான்குளம் போக வேண்டாம்'' என்று கேட்டுக் கொண்டார். எம்.ஜி.ஆர். பதில் ஏதும் சொல்லாமல் சிரித்தார்.

ஆதித்தனாரிடம் விடை பெற்றுக் கொண்டு சாத்தான்குளம் சென்று பிரச்சாரம் செய்த பின் மறுநாள் காலை 5-15க்கு தூத்துக்குடி போய் சேர்ந்தோம். இப்படி எங்கு ஆபத்து நேரும் என்று தெரிந்தாலும் அந்த ஆபத்தை சந்திக்க விரும்பி, அதே இடத்திறகு செல்ல விரும்பு வார் எம்.ஜி.ஆர்.

உசிலம்பட்டியில் இருந்து ஏழுமலை ரூட்டில் எப்போது தேர்தல் பிரச்சாரம் செய்ய சென்றாலும் ஏதேனும் பல வழிகளில் ஆபத்து காத்திருக்கும். 1977, 1980-ல் எம்.ஜி.ஆ டன் சென்ற போது கடும் எதிர்ப்புகளை சமாளிக்க வேண்டியிருந்தது. அந்த பகுதிகளி எம்.ஜி.ஆர். பிரச்சாரம் செய்யும்போது மலர் எறிகிறேன் என்று சொல்லி கல்லை, இரும்பு குண்டுகளை மலர்களுக்குள் வைத்து எம்.ஜி.ஆர். மீது எறிவார்கள்.

ஆனால் அவற்றை நாங்கள் பிடித்துக் கொள்வோம். அப்படித்தான் தேனியில் கனமான போல்ட் நட்டு ஒன்று வீசப்பட்டதை நான் பிடித்தேன். வந்த வேகத்தில் உள்ளங்கையி கடுமையான வலி ஏற்பட்டு காயமாகி இரத்தம் வந்து விட்டது. ஆனால் அதை எம்.ஜி. டம் காட்டிக் கொள்ளாமல் மறைத்து விட்டேன். (என்று சொல்லி தர்மலிங்கம் அந்த தடு பைக் காட்டினார்)

1971 வரை எம்.ஜி.ஆர். காலை 10 மணிக்கு பிரச்சாரம் செய்ய புறப்பட்டார் என்றா மறுநாள் காலை 5-00 மணி வரை சுற்றுப்பயணம் செய்வார். இடைப்பட்ட நேரம்தா அவருக்கு ஓய்வு நேரம். 1971-க்கு பின் 1977-ல் 1980-ல் பகலில் சுற்றுவதைத் தவிர் மாலை 6-00 மணியில் இருந்து மறுநாள் காலை 6-00 மணி வரை பிரச்சாரம் மேற்கொ டார். முதல்வரான பின் அவர் பகலில் பணிகளை கவனித்து விட்டு இரவில் மட் பிரச்சாரம் செய்தார்.

பகலில் போக்குவரத்து இடையூறு, செல்லும் வழியில் மக்கள் அவரவர் இருப்பிட திற்கு அழைக்கையில், செல்ல வேண்டிய இடங்களுக்கு பயணம் செய்வது தாமதிக்கும் என்பதால் இப்படி ஒரு முடிவை மேற்கொண்டார். தவிர பகலில் வெயிலின் கொடுமையை யும் தவிர்க்க விரும்பினார்.

எம்.ஜி.ஆர். வேனில் தூங்கி ஓய்வெடுக்க விரும்பும் போதெல்லாம் எங்களையும் படுத்துக் கொள்ளச் சொல்வார். நாங்கள் அதை விரும்பாவிட்டாலும் கட்டாயப்படுத்தி ஓய்வெடுக்கச் செய்வார்.

வேன் உள்ளே மூன்று பேர், நான்கு பேர் படுப்பதற்கு இடமிருக்காது என்ற காரணத் தால் எம்.ஜி.ஆர். காலில் நாங்களோ அல்லது எங்கள் காலில் எம்.ஜி.ஆரோ தலையணை போல் தலை வைத்து உறங்குவோம்.

செல்லுமிடங்களில் மற்றவரை எதிர்பார்க்காமல், நாங்களே முன்னதாக உணவை வாங் கிக் கொள்வோம். கூட்டமில்லாத இடங்களில் வேனை நிறுத்தி மரத்தடியில் எங்களுடன் அமர்ந்து உணவு அருந்துவார், எம்.ஜி.ஆர். சில இடங்களில் விருந்துக்கும் எம்.ஜி.ஆர். அழைக்கப்படுவார். அப்போதெல்லாம் எங்களுக்கு முதலில் விருந்து பரிமாறப்பட்ட பின்பு தான் சாப்பிட முயல்வார் எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆருக்கு எப்போது ஓய்வு கிடைக்கிறதோ அப்போதுதான் தூங்குவார். தூங்கி எழுந்த பின் உடற்பயிற்சி செய்வார். அதன் பின்பே மற்ற காரியங்கள் துவங்கும்.

எம்.ஜி.ஆர். சண்டைக் காட்சிகளில் நடிக்கும்போது சாப்பிடவே மாட்டார் என்று தவறான பேச்சு இருக்கிறது. சண்டைக் காட்சிகளில் நடிக்கும்போது சாதாரண நேரங்களை விட அதிகம் சாப்பிடுவார்.

எம்.ஜி.ஆருக்கு காய்ச்சல் என்று உடல் நலக்குறைவு எது ஏற்பட்டாலும், அதை வெளிக்காட்டிக் கொள்ள மாட்டார். மருந்து சாப்பிடுவதும் நமக்கு தெரியாது. அவருக்கு காய்ச்சல் வருவதும் குணமாவதும் அவருக்கு மட்டுமே தெரியும். சளி, ஜலதோஷம் என்று வந்தால் ஒரு டப்பாவில் இருக்கும் நெய்யை கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து சாப்பிடுவார் அவ்வளவுதான்.

1967-ல் எம்.ஜி.ஆர். எம்.ஆர். ராதாவால் சுடப்பட்டு ராயப்பேட்டை மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்ட போது நான் வீட்டில் இருந்தேன். 'பத்தாம் பசலி' படத்திற்காக சண்டைக் காட்சியொன்றில் நடிக்கையில், என் வலது கால் மீது லாரியொன்றின் பின் சக்கரங்கள் ஏறி விட்டன. அதனால் எலும்பு முறிவு ஏற்பட்டு சிகிச்சை எடுத்துக் கொண்டிருந் தேன்.

நாங்கள் சிறு வயதில் சண்டைப் பயிற்சி பெறும்போதே உடலில் அடிபட்டால், எலும்பு முறிவு ஏற்பட்டால் எங்களுக்கு நாங்களே சிகிச்சை எடுத்துக் கொள்வோம். அதன்படி நான் வீட்டில் பத்து நாள் கூட ஓய்வு எடுத்திருக்க மாட்டேன். எம்.ஜி.ஆர். சுடப்பட்ட செய்தி அறிந்து, முழுவதும் குணம் அடையாத நிலையில் மருத்துவமனை சென்றால் அங்கு பெருங் கூட்டம். வாசல் வழியே உள்ளே செல்ல முடியவில்லை. அதனால் பக்கவாட்டில் சுவர் ஏறி குதித்து உள்ளே சென்றேன். எம்.ஜி.ஆர். இருந்த அறையில் பக்கத்தில் திரையொன்று மறைவாக இருக்க அங்கே எம்.ஆர். ராதா கிடத்தப்பட்டு இருந்தார்.

சுடப்பட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்த எம்.ஜி.ஆரைக் காண எம் .ஜி.ஆரின் வளர்ப்பு மகன் ரவீந்தரும் வந்தார். அவர் எம்.ஜி.ஆரைக் கண்டதும் அழ ஆரம்பித்து விட்டார். அதைக் கண்டு எம்.ஜி.ஆர். படுத்த நிலையில் இருந்தவர் (கழுத்தில் கட்டு இருந்தது) சற்றே எழுந்து, 'தர்மு' என்ன இது நான் நல்லா இருக்கிறேன். ஏன் இப்படி அழுகிறான்? அவனுக்கு ஆறுதல் சொல்லு' என்று சிரித்தவாறே சொன்னார். இப்படி துன்ப நிலையிலும் சிரிக்கத் தெரிந்தவர் எம்.ஜி.ஆர். ஒருவரே.

கடந்த 1984 அக்டோபர் முதல் தேதி நான் வழக்கம்போல் எம்.ஜி.ஆரை சந்திக்க சென்றேன். 2-ந் தேதியன்று அவர் உடல் நலமில்லாமல் இருப்பதாகச் சொல்லி 4-ந் தேதி வரச் சொன்னார்கள். அங்கு அவரது அறைக்கு வெளியில் இருந்து மட்டும் பார்க்க முடிந்தது. அவர் அமெரிக்கா சென்று சிகிச்சை பெற்று திரும்பிய நாளில் பரங்கிமலை திடலுக்கு சென்றேன். அங்கிருந்து தோட்டத்திற்கு திரும்பியபோது நானும் பின் தொடர்ந்தேன்.

தோட்டத்தில் போய் இறங்கியதும் அன்னை சத்யா சிலை அருகே சற்று மவுனமாக நின்றார். பின்பு எங்களையெல்லாம் சந்தித்து நலம் விசாரித்தார். அதன் பின் அவர் மாடிக்கு செல்ல லிப்ட் தயாராக இருந்தும் அவர் அதில் செல்லாமல் படி ஏறி மேலே சென்றார்.

கவர்னர் மாளிகையில் எம்.ஜி.ஆர். முதல்வராக பதவி ஏற்றபோது நானும், இராமகி ருஷ்ணனும் உடன் தொடர்ந்தோம். அங்கிருந்து அண்ணா சமாதிக்குச் சென்று பின் கோட்டைக் கும் சென்றோம். அங்கு சில ஃபைல்களில் கையெழுத்திட்ட பின் முக்கியமானவர்களுடன் எம்.ஜி.ஆர். படமெடுத்துக் கொண்டார். எங்களையும் வரவழைத்து படமெடுத்துக் கொண் டார்.

நீண்ட இடைவெளிக்குப்பின் செய்யாறு தொகுதியில் நடந்த திருமணத்திற்கு எம்.ஜி.ஆர்.

சென்றிருக்கையில் பாதுகாப்புக்கு நானும் உடன் சென்றிருந்தேன்.

இத்தனை வருட அனுபவத்தில் எம்.ஜி.ஆருக்கு மெய்க்காப்பாளனாக இருந்திருக்கிறேன். தனிப்பட்ட முறையில் அவரிடம் எவ்வித உதவியையும் நான் எதிர்பார்த்ததில்லை. அவர் பல முறை எனக்கு பல்வேறு உதவிகள் செய்ய முன்வந்தாலும். 'நான் உங்களுக்கு தொண்டாற்றுவதை பெரும் பாக்கியமாக கருதுகிறேன். என்னை வற்புறுத்தாதீர்கள்' என்று மறுத்து விடுவேன். எம்.ஜி.ஆர். என் மீது கொண்ட மதிப்பிற்கு ஒரு சம்பவம் உதாரணமாகச் சொல்லலாம்.

1957-ல் நாடோடி மன்னன் படம் தயாராகிக் கொண்டிருந்த போது, ஊரில் எனக் பெண் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதை எம்.ஜி.ஆரிடம் சொன்னேன். 'பெண்ணை பார்த்து விட்டு வந்து சொல்' என்றார். நான் ஊருக்குப் போய் பெண்ணை பார்த்தேன்.

ஆனால் அப்போது 'நாடோடி மன்னன்' வெளியாகாது என்று திரையுலகில் பரவலாகப் பேசினார்கள். அதனால் ''நாடோடி மன்னன் வெளியான பின்பே நான் திருமணம் செய்து கொள்வேன். அதுவரை பொறுத்திருக்க வேண்டும்'' என்றேன். பெண் வீட்டார் அதற் ஒப்புக் கொள்ளவில்லை. அதனால் சென்னை திரும்பி விட்டேன்.

சில மாதங்கள் கழித்து எம்.ஜி.ஆர். நினைவு வந்தவராய், 'நீ ஏதோ பெண் பார் போவதாய் சொன்னாயே, என்ன ஆயிற்று?' என்று கேட்டார். நான் நடந்ததைச் செ னேன். அதற்கு என்னை கடிந்து கொண்டார்.

1958 ஆகஸ்டு 15-ல் நாடோடி மன்னன் ரிலீஸானதும், முதலில் என்னை ஊருக்கு போய் பெண் பார்க்கச் சொன்னார். நான் முதலில் பார்த்த பெண்ணுக்கு திருமணம் நட விட்டதால் வேறு பெண் (இப்போதிருக்கும் என் மனைவியை) பார்த்து செப்டம்பர் 15 திருமணம் செய்வதாக முடிவு செய்து எம்.ஜி.ஆரிடம் சொன்னேன். திருமணத்திற்கு அ யம் வருவதாக சொன்னார்.


திருமண நாளில் நான் மதுரை மாடக்குளத்தில் இருந்தேன். எம்.ஜி.ஆர். தன் குடும் சகிதமாக 36 பேர்களுடன் ஒரு செவர்லெட் கார், செவர்லெட் வேன், பிளைமவுத் காரி வந்து கொண்டிருந்தார்.

அப்போது மதுரை முத்து தி.மு.க. செயலாளராக இருந்தார். மதுரையில் அவரது பெயரில் இளைஞர் படிப்பகம் ஒன்று துவங்கப்பட்டு அதை எம்.ஜி.ஆர். திறந்து வைப்பதாக இருந்தது. ஆனால் எம்.ஜி.ஆர். மதுரைக்கு செல்லாத காரணத்தால் எஸ்.எஸ்.ஆர். திறந்து வைத்தார். இப்போது என் திருமணத்திற்கு எம்.ஜி.ஆர். வருகை தருவது அவருக்கு சங்கடமாக இருந்தது. என்னிடம் கூட, ''எம்.ஜி.ஆர். உன் திருமணத்திற்கு வருவாரா என்ன?'' என்று கிண்டலாகக் கேட்டார். நான் பதில் எதுவும் கூறவில்லை.

மதுரை வந்த எம்.ஜி.ஆரை முத்து எதிர்கொண்டழைத்து 'நீங்கள் மாடக்குளமா செல்லப் போகிறீர்கள்? அந்தப் பக்கம் சைக்கிளில் செல்ல கூட நல்ல பாதை இல்லையே'' என்று மடக்கினார்.

ஆனால் எம்.ஜி.ஆர். 'அப்படியா?' என்று கேட்டுவிட்டு மற்றொரு தி.மு.க. பிரமுகரான பி.எஸ். மணியின் சிறிய ஆஸ்டின் காரில் ஏறிக் கொண்டு, மற்ற கார்களை பின் தொடர்ந்து மாடக்குளம் வரும்படி செய்தார்.

திருமணத்தில் கலந்து கொண்டு வாழ்த்தியவர், ''தர்மலிங்கம் சினிமா உலகில் ஏதாவது ஒரு நடிகையை திருமணம் செய்து கொள்வார் என்றுதான் நினைத்தேன். சினிமா உலகில் இருக்கும் பெரும்பாலோர் அப்படித்தான் நடந்து கொள்கிறார்கள். ஆனால் தர்மலிங்கம்



அமெரிக்காவிலிருந்து திரும்பிய பின்..

அப்படி செய்யாது, பெற்றோரை மதித்து அவர்கள் பார்த்த பெண்ணை திருமணம் செய்து கொண்டதை நான் பெரிதும் மதிக்கிறேன்'' என்று பாராட்டுதலாக சொன்னது இன்றும் என் காதுகளில் ஒலிக்கிறது. நான் என் வாழ்நாளில் அடைந்த மிகப் பெரிய பெருமை உண்டென்றால், அது எம்.ஜி.ஆர். என் திருமணத்தில் கலந்து கொண்டு வாழ்த்தியதுதான்.

'பெரிய இடத்துப் பெண்' படத்தில் நான்கு முரடர்களுடன் எம்.ஜி.ஆர். கம்புச் சண்டை போடுவது இடம் பெற்றுள்ளது. அந்த சண்டைக் காட்சியில் எனது சகோதரர் காமாட்சி நாதனும் கலந்து கொண்டார். நான்கு முரடர்களில் அவரும் ஒருவர்.

எம்.ஜி.ஆர். வேகமாக சுழன்று கம்பை சுழற்றுகையில் காமாட்சி நாதன் ஒரு தவறை செய்து விட்டார். ஓரிடத்தில் வலது புறமாக கம்பை சுழற்றுவதற்கு பதிலாக இடது புறத்தில் சுழற்றி விட, அதன் விளைவு எம்.ஜி.ஆரின் முதுகில் பலத்த அடி விழுந்தது. எம்.ஜி.ஆரின் சிவந்த மேனியில் இரத்தக் கோடு போட்டது போல் அவர் அணிந்த சட்டையையும் மீறி பளிச்சென்று இருந்தது.

அதைப் பார்த்து நாங்கள் பயந்து போனோம். ஆனால் எம்.ஜி.ஆர். அதை பெரிது படுத்தாமல் சிரித்துக் கொண்டே, 'காமாட்சிநாதனை கவனமாக இருக்க சொல்லிவிட்டு'

படப்பிடிப்புக்கு தயாரானார்.

'கொடுத்து வைத்தவள்' படத்தில் குண்டுமணியுடன் ரெயிலில் எம்.ஜி.ஆர். சண்டையிடும் காட்சி இடம் பெறுகிறது. இருவரும் அதில் குத்துச்சண்டை போடுகிறவர்கள். ஓரிடத்தில் எம்.ஜி.ஆர். குத்த வரும்போது குண்டுமணி விலகிவிட வேண்டும். ஆனால் 'ஷாட்' நேரத்தில் குண்டுமணி விலகாததால் எம்.ஜி.ஆர். விட்ட குத்தில் குண்டுமணியின் நெற்றியில் இரத்தக் காயமே ஏற்பட்டு விட்டது.

இதையெல்லாம் ஏன் சொல்கிறேன் என்றால் இன்றைக்கு சண்டைக் காட்சிகளில் நடிக்கின்ற நடிகர்களில் பலரும் கையை காலை அசைப்பதோடு சரி, டைமிங் சென்ஸும் கிடையாது. படப்பிடிப்புக்கான பிலிமில் ஸ்பீடு அட்ஜஸ்ட்மெண்ட் வசதியுண்டு. ஸ்டண்ட் மாஸ்டர்களின், டெக்னீஷியன்களின் திறமையினால் நமது நடிகர்களின் வீரத்திலும் (!) பலவீனங்களை மறைத்துக் கொண்டிருக்கிறோம்.

அன்று எம்.ஜி.ஆர். சண்டையிடும்போது டைமிங் சென்ஸில் மிக கவனமாக இருந்தார். எதிராளிகள் தவறு செய்ததால் எம்.ஜி.ஆரே அடிபடவும், ஒருவர் எம்.ஜி.ஆரிடம் அடிபடவும் காரணமாக அமைந்தது. படப்பிடிப்பு நேரத்தில் எம்.ஜி.ஆரும் எதிராளிகளும் நிஜமா சண்டை உணர்வுடன் நடித்தார்கள் என்பதற்கு மேற்சொன்ன சம்பவங்கள் உதாரணம்.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் எம்.ஜி.ஆரை கேலி செய்ய வேண்டுமென்பதற்கா அவரை 'அட்டைக்கத்தி வீரர்' என்றார்கள். அட்டைக்கத்தியை வைத்துக் கொண்டு சண்டை போடுவது போல் பாவலா காட்டலாம். போஸ் கொடுக்கலாம். அதற்கு மேல் அதை வைத்துக் கொண்டு ஒன்றும் செய்ய முடியாது. எம்.ஜி.ஆரின் வாள் வீச்சு வேகம் நா சொல்லி புதிதாக யாருக்கும் தெரிய வேண்டிய அவசியம் இல்லை.

'அரசிளங்குமரி' படத்தில் பதினான்கு பேர்களுடன் எம்.ஜி.ஆர். ஒருவரே வாள் வீ சண்டையிடும் காட்சி இடம் பெறுகிறது. அதை ஒரே ஷாட்டில் படமாக்கினார்கள். இர டரை நிமிடம் இடம்பெறும் அந்த ஷாட்டில் ஒருவர் பதினான்கு பேர்களுடன் சண்ட போடுவதாக நடிப்பதென்பது சாதாரண விஷயமல்ல.

அதுபோன்ற நேரங்களில் டைமிங் சென்ஸ், ஞாபகசக்தி, உடல் வலிமை அதிகம் இருக்க வேண்டும். அது எம்.ஜி.ஆர். ஒருவருக்கு மட்டுமே இருந்தது.

'மகாதேவி' படத்தில் எம்.ஜி.ஆருடன் பி.எஸ். வீரப்பா வாள் வீசி சண்டையிடும் காட்சியில், வீரப்பாவுக்கு 'டூப்'பாக நான் நடித்தேன். வீரப்பாவுக்கு பதில் எம்.ஜி.ஆருடன் நான் மோதும் ஒரு ஷாட் மூன்று நிமிடம் படமாக்கப்பட்டது. அது இரண்டாவது 'டேக்'கில் ஓ.கே. ஆனது.

முதல் 'டேக்'கின் போது நான் வேகமாக வாளைச் சுழற்ற (நான் அப்படி வாளைச் சுழற்றுவது அதுவே முதல் முறை அதுவும், எம்.ஜி.ஆருடன். அதனால் படபடப்பு அதிகமாகிவிட்டது) எம்.ஜி.ஆரும் வேகம் காட்ட வேண்டியதாகி விட்டது. எனவே ஒளிப்பதிவாளர் ஜி.கே. ராமு இன்னொரு 'டேக்' வேண்டுமெனச் சொல்லி வேகத்தைக் குறைத்துக் கொள்ளச் சொன்னார். அதன்படியே செய்தோம்.

'திருடாதே' படத்தில் இருபது பேர்களுடன் குத்துச் சண்டை போடுவது போல் எம்.ஜி.ஆர். நடித்தார். எம்.ஜி.ஆருக்கு கத்தி மட்டும் தான் பிடிக்கத் தெரியும் என்று பேசியவர்கள் வாயை அடைக்க எம்.ஜி.ஆர். அப்படி நடித்தார். அதற்கு முன் எந்தவொரு திரைப்படத்திலும் அதுபோல் ரோஷமான சண்டைக் காட்சி இடம் பெற்றதில்லை.

'நல்லவன் வாழ்வான்' என்ற படத்தில் எம்.ஜி.ஆருடன் எம்.ஆர். ராதா சண்டையிட்டு

நடிக்க வேண்டி இருந்தது. எம்.ஆர். ராதா சண்டைக் காட்சிகளின் பக்கமே சென்றதில்லை. அதனால் எம்.ஜி.ஆருடன் எப்படி சண்டை செய்து நடிப்பது என்று தயங்கினார்.

எம்.ஆர். ராதாவின் தயக்கத்தை அறிந்த எம்.ஜி.ஆர்., இயக்குநர் நீலகண்டனிடம் 'படப்பிடிப்புக்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்து தயாராக இருங்கள். ராதா அண்ணனை நான் சரி செய்து விடுகிறேன்' என்று சொன்னவர், தனது எண்ணத்தை எம்.ஆர். ராதாவிடம் வெளிப்படுத்தி அவரையும் சம்மதிக்க வைத்து விட்டார். படப்பிடிப்பு நேரத்தில் இருவரும் இணைந்தாற் போல் சண்டை செய்து நடிப்பது ஒரு ஷாட் கூட கிடையாது. எம்.ஜி.ஆர். ராதாவை நேராகக் குத்தும் போது ராதாவின் ரியாக்ஷனையும், ராதா குத்தும் போது எம்.ஜி.ஆர். ரியாக்ஷனையும் மாறி மாறி படமாக்கி அதை ஒன்று சேர்த்து இருவரும் நிஜமாகவே சண்டை போடுவது போல் அமைத்து விட்டார் எம்.ஜி.ஆர்.

இருபது ஆண்டுகளுக்கு முன் இரண்டு நடிகர்கள் நேருக்கு நேர் மோதிக் கொள்ளாமல் ஒரு சண்டைக்காட்சி படமாக்கப்பட்ட சாதனை எம்.ஜி.ஆரையே சாரும்.

'ராஜ ராஜன்' என்று ஒரு படம். அதில் இடம் பெற்ற ஒரு சண்டைக் காட்சியில், ஈட்டியுடன் சில வீரர்கள் எம்.ஜி.ஆரைக் கொல்ல வருவார்கள். அவர்களிடமிருந்து அவர் தப்பித்து மோதுவார்.

கேசவன் என்று ஒரு ஸ்டண்ட் நடிகர். அவர் எம்.ஜி.ஆர். ஏற்பாடு செய்த சாமிநாதனிடம் ஸ்டண்ட் பயிற்சி பெற்றவர். அவருக்கு எம்.ஜி.ஆருடன் நடிக்கின்ற சந்தர்ப்பம் என்ற போது பதட்டம் வந்து விட்டது. அதனால் எம்.ஜி.ஆரை நோக்கி ஈட்டியால் குத்தும் போது ஒரு தவறை செய்தார். எம்.ஜி.ஆரின் கழுத்தை நோக்கி அவர் ஈட்டியுடன் ஓங்கும் போது எம்.ஜி.ஆர். விலகிக் கொள்வார்.

ஆனால் கேசவன் என்ன செய்தார்? எம்.ஜி.ஆர். விலகும் போது, அவரது கழுத்தை வைத்தே கேசவனின் ஈட்டி நகர்ந்தது. இப்படி பல 'டேக்' வீணாகியது.

கேசவனின் நிலைமையை உணர்ந்த எம்.ஜி.ஆர். ஓரிடத்தில் அடையாளம் ஒன்றை வைத்து, கேசவனிடம் 'நீங்கள் இந்த இடத்தை மட்டுமே குறி வைக்க வேண்டும்' என்று சொல்ல அதன்படி கேசவனும் செய்ய 'டேக்'கில் சரியாக வந்து விட்டது. இப்படி சண்டைக் காட்சிகளில் எம்.ஜி.ஆரின் மதி நுட்பம், அவர் புரிந்த சாதனைகளும் எத்தனையோ, எவரிடமும் காண முடியாதது.

1977-ல் அ.தி.மு.க. வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்த நேரம், எம்.ஜி.ஆர். முதல்வராக பொறுப்பேற்றுக் கொள்வதற்கு முன் 'மீனவ நண்பன்' படத்தின் கடைசி நாள் படப்பிடிப்பில் கலந்து கொண்டிருந்தார். படப்பிடிப்பு வாகினியில் நடைபெற்ற பொது பலரும் எம்.ஜி. ஆரை சந்தித்து வாழ்த்து தெரிவித்தவாறு இருந்தார்கள்.

ஆனால் ஸ்டண்ட் கலைஞர்கள், ஸ்டண்ட் மாஸ்டர் ஷியாம் சுந்தர் உட்பட சிலர் 'நீங்கள் சினிமாவில் இல்லாவிட்டால் எங்களின் வாழ்க்கை இப்போது போல் வளமாக இருக்காது' என்று தங்களது மனக்குறைகளை வெளிப்படுத்தினர்

அதையெல்லாம் கேட்ட எம்.ஜி.ஆர். என்னிடம் கருத்தை கேட்டார், ''என்ன செய்யலாம்?'' என்று, மற்றவர்களுக்கு இருந்த மனக்குறை எனக்கும் இருந்தது. ஆனால் அதை வெளிப்படுத்தாமல் 'நீங்கள் சினிமாவில் சாதிக்காதது எதுவுமில்லை. அதுபோல் அரசியலிலும், ஆட்சிப் பொறுப்பிலும் நீங்கள் நிறைய சாதனை புரிய வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டேன். எம்.ஜி.ஆருக்கு அது வியப்பாக இருந்ததால் என்னை தட்டிக் கொடுத்து பார்க்கலாம் என்று சொல்லி விட்டுப் போனார். அவரது அரசியல் உலக சாதனை என்னைப் போன்றவர்க்கெல்லாம் பெருமையாக இருக்கிறது'' என்றார் எம்.கே. தர்மலிங்கம்.

# பிரம்மாண்ட தயாரிப்பாளர்!

சந்திரபாபு



'நாடோடி மன்னன்' படத்தில் எம்.ஜி.ஆர்., சந்திரபாபு, அங்கமுத்து.

டெலிபோன் மணி இரண்டு முறை ஒலித்தது.

'பாபு, பேசறேன்' என்று ரிசீவ்ரைக் கையிலெடுத்து பதில் குரல் கொடுத்தேன்.

'நான்தான் எம்.ஜி.ஆர். பேசுகிறேன். 'அடிமைப் பெண்' படத்தில் நீங்கள் நடிக்க வேண்டும்!' என்றார்.

திரு. எம்.ஜி.ஆரைப் பற்றி நன்றாகப் புரிந்து வைத்து இருப்பவர்களில் நானும் ஒருவன். எனவே இதைப் பற்றி நான் ஆச்சர்யப்படவில்லை; அதிர்ச்சி அடையவும் இல்லை.

'உங்கள் விருப்பம் எப்படியோ, அப்படியே செய்கிறேன்' என்றேன். எங்கள் பேச்சு முடிந்தது.

படத்தில் நடிக்க எனக்கு எவ்வளவு பணம் வேண்டும் என்று கம்பெனியின் சார்பில் ஒரு முக்கியஸ்தர் அடுத்தபடி போனில் என்னிடம் கேட்டார்.

என் சொந்தப் படமான 'மாடி வீட்டு ஏழை' படத்திற்காக நான் கொடுத்த முன் பணம் அவரிடம் இருந்தது. அது வேறு. அது 'பிசினஸ்'.

ஆனால் இதற்கிடையில் என் வீட்டின் மீது நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்ட போது, அந்த நெருக்கடியான நேரத்தில் எனக்கு பணம் தந்து உதவியர் திரு. எம்.ஜி.ஆர்.தான்.

ஆக இந்தப் பணத்தை நான் எப்படியும் ஒரு நாள் அவருக்குத் திருப்பித் தந்தே ஆக வேண்டும். பணமாகக் கொடுத்தால் என்ன, அவர் படத்தில் நடித்து கழித்தால் என்ன, இரண்டும் ஒன்றுதானே?

ஆனால் இதை எல்லாம் மனதில் நினைத்துக் கொண்டேனே தவிர, அவரிடம் எதையும் [illegible]லவில்லை. எவ்வளவு பணம் வேண்டும் என்றும் கேட்கவில்லை.

'எம்.ஜி.ஆர். என்ன தர வேண்டும் என்று நினைக்கிறாரோ, அதைத் தரச் சொல்லுங்கள். [illegible]ன் ஒன்றும் தொகையைக் குறிப்பிட்டுச் சொல்ல மாட்டேன்' என்று சொல்லி விட்டேன்.

மாதா மாதம் ஒரு பெரும் தொகையை எனக்கு அனுப்பி விட்டு, கடைசியில் கணக்கைப் [illegible]ந்துக் கொடுக்கலாம் என்று எம்.ஜி.ஆரே ஒரு தீர்மானத்திற்கு வந்தார்.

அப்படியே மாதாமாதம் பணம் அனுப்பி வந்தார்; வருகிறார்.

'அடிமைப் பெண்' படத்தில் எனக்குத் தரப்பட்டு இருக்கும் வேஷம் என் மனதிற்குப் [illegible]தமான பாத்திரம்.

'நாடோடி மன்னன்' படத்திற்குப் பிறகு, திரு. எம்.ஜி.ஆருடன் நான் சேர்ந்து நடிக்கும் [illegible] இதுதான்.

இந்தப் படத்திற்காக ஜெய்ப்பூரில் வெளிப்புறக் காட்சிகளில் கலந்து கொள்ள நாங்கள் [illegible]றோம்.

சென்னை எங்கே, ஜெய்ப்பூர் எங்கே?

ஆனால் அங்கேயும் தமிழ்நாட்டின் மணத்தை அதாவது இட்டிலி சாம்பாரைக் கொண்டு [illegible] விட்டார் எம்.ஜி.ஆர்.

தினமும் விருந்துச் சாப்பாடுதான்; வகை வகையான அயிட்டங்கள்!

அது மட்டுமா?

பாலைவனத்தில் கூல்டிரிங்க்ஸ் வேறு!

ஆமாம்! உண்மையைத்தான் சொல்கிறேன்.

ஷெர்ஹாட் என்ற பாலைவனம், ராஜஸ்தானத்தில் இருக்கிறது. இங்கேதான் ஒட்டக காட்சிகள் பலவும், என்னுடைய காட்சிகளும் படமாக்கப்பட்டன. இங்கே நாங்கள் படப்பிடிப்பில் இருந்து வந்தபோது, எங்கள் குழுவுக்காக– தாக சாந்தி செய்து கொள்வதற்காக– ஒரு 'கொகோ கோலா' வண்டியையே கொண்டு வந்து நிறுத்தி விட்டார், எம்.ஜி.ஆர்.

'ஒரு பெரிய ஹாலிவுட் படக் கம்பெனி கூட இந்த அளவுக்கு வசதிகளைச் செய்து தருமா?' என்றுதான், அவரது ஒவ்வொரு செயலையும் கண்டு, எனக்கு நானே கேட்டுக் கொள்வேன்.

தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவரது நலனிலும் அக்கறை எடுத்துக் கொண்டு இருந்தார், அவர்.

படப்பிடிப்பில் கலந்து கொள்ளச் சென்று இருந்த ஒவ்வொருவரிடமும், 'நாம் தமிழ் நாட்டில் இருந்து வந்திருக்கிறோம். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு மூன்றும் நம் லட்சியக் குரல்கள். அதை மனதில் கொண்டு எல்லாரும் நடந்து கொள்ள வேண்டும் என்று சொன்னார். அதைக் காப்பாற்றி விட்டே வந்தோம்

# பகைவரை வென்றவர்

-கண்ணதாசன்

அவர் உற்சாகமாக இருக்கிறார். சிரித்த முகத்தோடு இருக்கிறார். திடகாத்திரமாகவும், சுறுசுறுப்போடும் இருக்கிறார். முன்னை விடப் பளபளப்பாக இருக்கிறார்.

மதுரையில் வேட்பு மனு தாக்கல் செய்து விட்டுச் சென்னை வந்த எம்.ஜி.ஆரை இ... (ஞாயிற்றுக்கிழமை) ஆற்காடு முதலித் தெருவில் சந்தித்தபோது, நான் ஆச்சரியப்... வில்லை. சுமார் ஒன்றரை மணி நேரம் என்னோடு அவர் பேசிக் கொண்டு இருந்தார். அதி... தன்னம்பிக்கையின் உச்சக் கட்டம் தெரிந்தது.

நியாயம்தான். தமிழ்நாடு பூராவிலும் அவர் மீது ஓர் அனுதாபம் இருக்கிறது.



'ராஜா தேசிங்கு' படத்தில் எம்.ஜி.ஆர்., கண்ணதாசன், எஸ்.எஸ்.ஆர்.

'நாங்கள் இந்திரா வர வேண்டும் என்று விரும்பினோமே தவிர, எம்.ஜி.ஆர். போக வேண்டும் என்று விரும்பவில்லை' என்பது ஏழை- எளிய மக்களின் வாதம். 'டெல்லிக்கு இந்திரா; நம் ஊருக்கு எம்.ஜி.ஆர்.' என்றே எங்கே பார்த்தாலும் பேசுகிறார்கள்.

அதை நேரிலேயே கேட்டு, மக்கள் வெள்ளத்தைச் சந்தித்துத் திரும்பிய வர், நாணய மான நடத்தையை இந்த நாட்டு மக்கள் மதிக்கிறார்கள் என்பதை நன்றாக உணர்ந்து இருக்கி றார்.

அவரை விட்டு விலகிச் சென்றவர்கள் கூட அவரைப் பற்றி எந்தக் குற்றச்சாட்டையும் சுமத்த முடியவில்லையே!

சட்டசபை கலைக்கப்பட்டதில் இருந்து நேற்று வரை நான் எம்.ஜி.ஆரைச் சந்திக்க

வில்லை. காரணம் இந்திரா காங்கிரசோடு கூட்டு வைத்துக் கொள்ளும் வாய்ப்பை அவர் தவற விட்டதில் எனக்கு வருத்தமிருந்தது. ஆனால் நான் அவர் மீது காட்டிய பகைமையையும், அவர் என் மீது காட்டிய அன்பையும் எப்படி மறக்க முடியும்? ஆகவே, இன்று அவரைச் சந்தித்தேன்.

குறைந்த பட்சம் 135 இடங்களை அ.தி.மு.க. பெறும் என்று அவர் நம்புகிறார். எனக்குக் கூட அப்படித்தான் தோன்றுகிறது.

நாட்டு மக்கள் ஓட்டுப் போட கற்றுக் கொண்டு விட்டார்கள். இனி அவர்கள் மனோபா வத்தைக் கணிப்பது கடினமான காரியமல்ல.

வங்காளத்தையும், கேரளாவையும் போல அவருக்குப் பத்து, இவருக்குப் பத்து என்ற நிலைமை எப்போதுமே தமிழ்நாட்டில் இல்லை. ஓட்டுச் சீட்டை ஒரே மாதிரிப் போட்டு ஒரு கட்சி மெஜாரிட்டிக்குக் கொண்டு வந்து விடுகிறார்கள்.

நிர்வாகத் திறமையில் எம்.ஜி.ஆர். ஒரு சர்ச்சிலாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் மக்களின் மனோபாவத்தைக் கணிப்பதில் எப்போதுமே அவர் வெற்றி பெற்று இருக்கிறார்.

அவர் என்னிடம் அரசியலைப் பற்றி ஏதும் அலட்டிக் கொள்ளவில்லை. அதற்கு பதிலாக என்னோடு வந்திருந்த என் மகன் கலைவாணனுக்கு ஒரு மணி நேரம் புத்திமதிகள் சொன்னார்.

சினிமாவில் நடிக்கும் கலைவாணன் உடம்பை எப்படி வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்கு, அவர் சில ஆசனங்களைச் செய்தே காட்டினார்.

கலைத் துறையில் அரை நூற்றாண்டாக வளர்ந்து கொண்டு இருக்கும் அவர், உடம்பைக் காப்பாற்றிக் கொண்டிருக்கும் முறை கண்டு என் மகனே கூட ஆச்சரியமடைந்தான்.

தேர்தல் சூடு பிடித்திருக்கும் இந்த நேரத்தில் அது பற்றிப் பரபரப்பே கொஞ்சம் கூட அவரிடம் காணப்படவில்லை.

'வெறும் கறி மீனிலே உடம்பைக் காப்பாற்ற முடியாது. கீரை வகைகள் நிறையச் சாப்பிடு' என்றார், அவர்.

இடையிடையே வருகின்ற டெலிபோன் கால்களுக்கு அமைதியாகப் பதில் சொல்லிக் கொண்டு இருந்தார்.

அவரிடம் நிதி கொடுப்பதற்கென்றே ஒரு பெரும் கூட்டம் காத்துக் கொண்டு இருந்தது.

நான் மதுரை வீரனையோ, மன்னாதி மன்னனையோ, ராஜா தேசிங்கையோ, நாடோடி மன்னனையோ சந்திக்கவில்லை. மக்களின் விசுவாசத்துக்குப் பாத்திரமான ஒரு மகாமனித னைத்தான் அப்போது சந்தித்தேன்.

'எழுதினால் கண்ணதாசன்தான் எழுத வேண்டும்' என்று அவர் சொன்ன காலங்களும் உண்டு. 'கண்ணதாசன் எழுத வேண்டாம்' என்று மறுத்த காலங்களும் உண்டு. ஆனால் கவிதையில் அவர் என்னை ரசித்ததைப் போல், யாரையும் ரசித்ததில்லை.

'எதிரி என்றால் எதிரி; நண்பன் என்றால் நண்பன்' என்பதுவே அவரது கொள்கை. நண்பன் என்று சொல்லிக் கொண்டே முதுகிலே குத்தும் பழக்கம் அவருக்கு இல்லை.

இன்றைய சூழ்நிலை அவருக்குச் சாதகமாகவே அமைந்து உள்ளது. காரணம் எந்தவி தக் குற்றச்சாட்டும் இல்லாமல், அவரது மந்திரி சபை டிஸ்மிஸ் செய்யப்பட்டது.

ஒரு படத்தில் அவருக்காக நான் வசனம் எழுதினேன். 'என்னை நம்பாமல் கெட்டவர் கள் உண்டே தவிர, நம்பிக் கெட்டவர்கள் இல்லை' என்று. அது இன்று பலிக்கிறது.

நம்பாமல் சென்று விட்டவர்கள் இன்று அஞ்ஞாத வாசம் செய்கிறார்கள். நம்பித் துணை நிற்போர், நல்ல எதிர்காலத்தை எதிர்பார்த்து இருக்கிறார்கள்.

அவருடைய ஜாதகம் அசுர ஜாதகம். விழுவது போல் தெரியும். எழுந்து விடுவார். நீண்ட கால வீழ்ச்சியை அவர் சந்தித்ததே இல்லை.

தமிழர்கள், அவரைத் தமிழன் என்றே அறிவார்கள். அவரை வேறு பாஷைக்காரர் என்றோ, கப்பல் பேரத்தில் ஊழல் செய்தவர் என்றோ சொல்லப்படுவதை மக்கள் நம்பத் தயாராக இல்லை.

1980- 'குமுதம்' வார இதழில் கண்ணதாச



# நானும், எம்.ஜி.ஆரும்

–சாண்டோ சின்னப்பா தே

'வேணு கானம்' என்ற படத்தில் எனக்கும், என் அண்ணனுக்கும் சிறு வேடம் தந்து இருந்தார்கள். வேடம் சிறியது என்றாலும், முதன் முதலாக நமது உருவம் திரையில் தெரியப் போகிறதே என்ற மகிழ்ச்சியில் அது அவ்வளவாகத் தெரியவில்லை.

இந்தப் படத்தின் வெளிப்புறக் காட்சியில் நாங்கள் ஒரு நாள் நடித்துக் கொண்டு இருந்தோம். எம்.வி. மணியும் அன்று நடித்துக் கொண்டு இருந்தார்.

'உங்களைப் பார்ப்பதற்காக, உங்களுடைய நெருங்கிய நண்பர் ஒருவர் வந்து இருக்கிறார்' என்று சொல்லி, அவரிடம் ஓர் இளைஞரை அழைத்து வந்தார்கள்.

செக்கச் செவேலென்ற கம்பீரமான உருவம். பாகவதர் முடி. களையான முகம். தும்பைப் பூவைப் போல கதர் வேஷ்டி, ஜிப்பா.

பார்க்கப் பார்க்க, இன்னும் கொஞ்சம் பார்த்துக் கொண்டு இருக்க மாட்டோமா என்று ஏங்க வைக்கும் வகையில் வசீகரமாக அமைந்து இருந்தது அந்த இளைஞரது தோற்றம். நானும், என் அண்ணனும் அவரையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டு இருந்தோம்.

'யார் அவர்?' என்று அறியத் துடித்த எனது உள்ளத்திற்கு விடை உடனே கிடைத்தது.

'அவர்தான் திரு. எம்.ஜி. ராமச்சந்திரன். 'சாயா' படத்தில் கதாநாயகனாகப் போகிறவர். எம்.வி. மணிக்கு ரொம்பவும் நெருங்கிய நண்பர். அவரைப் பார்ப்பதற்காக வந்து



'குலேபகாவலி' படத்தில் எம்.ஜி.ஆர்., தேவர்.

...கிறார்!' என்ற விவரங்கள் தெரிந்தன.

அன்றுதான் நான் திரு. எம்.ஜி.ஆர். அவர்களை முதன் முதலாகப் பார்த்தேன்.

...சாலி வாகனன்' படத்தில் கே.எல்.வி. வசந்தா, டி.ஆர். ராஜகுமாரி, பாலய்யா, எம்.ஜி. ...ரஞ்சன் நடித்து வந்தார்கள்.

...ரு. ரஞ்சன்தான் இதில் 'சாலி வாகனன்'

...திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் விக்கிரமாதித்தன்.

நான் விக்கிரமாதித்தனின் மந்திரி பட்டி.

பி.என். ராவ் டைரக்டர்.

படத்திலே ஒரு காட்சி.

அதாவது ஃபைட்டிங் சீன். முதல் ஷாட்!

விக்கிரமாதித்தனுக்கும், ரஞ்சனுக்கும் கத்திச் சண்டை. ரஜபுத்திர வாட் சண்டை.

ரஞ்சன் கத்தியை வீச, பதிலுக்கு எம்.ஜி.ஆர். வீச, அதைச் சமாளிக்க முடியாமல் ரஞ்சன் அதைக் 'கட்' பண்ணி விட்டார்.

உடனே ரஞ்சன், டைரக்டரிடம் 'எம்.ஜி.ஆர். வேண்டுமென்றே என்னை அடிக்கிறார்' என்று சொல்லி விடவே, டைரக்டர் எம்.ஜி.ஆரை அழைத்து விசாரிக்க, எம்.ஜி.ஆர். தான் செய்தது சரி என்பதை விளக்கினார்.

உண்மையைச் சொல்லப் போனால், எம்.ஜி.ஆரின் வீச்சை, ரஞ்சனால் சமாளிக்க முடியவில்லை.

அதாவது அவரால் இயலவில்லை.

பட்டி வேடத்தில் இருந்த நான் பக்கத்தில் இருந்து இதையெல்லாம் கவனித்துக் கொண்டு இருந்தேன். அதனால்தான் எனக்கு இது தெரியும். அன்றைய படப்பிடிப்பு முடிந்தது.

'எம்.ஜி.ஆர். என்னிடம் வந்து, 'என்னண்ணே! உண்மையான தொழில் திறமையைக்



‘தேர்த் திருவிழா’ படப்பிடிப்பில் எம்.ஜி.ஆர்., தேவ

ட்ட முடியாமல் இருக்கிறதே!’ என்று வருத்தப்பட்டார்.

நான் அவரைத் தேற்றினேன்.

‘உண்மையான திறமைக்கு என்றுமே மதிப்பு உண்டு. உங்களிடம் உள்ள தி ிச்சயம் ஒரு நாள் உலகுக்குத் தெரியப் போகிறது’ என்று சொன்னேன்.

அப்போதைக்கு நான் அவரைச் சமாதானப் படுத்தச் சொன்ன வார்த்தைகளாக இரு லும், அன்று நான் பக்கத்தில் இருந்து கவனித்ததில் இருந்தும், தொடர்ந்து அவரிடம் ப வருவதில் இருந்தும் சொல்கிறேன். இன்றைய தினம் ஃபைட்டிங் என்று சொல்வதானால் நம் நாட்டிலேயே அதில் ராஜாவாக விளங்கும் நடிகர் ‘மக்கள் திலகம்’ தான். ஃபைட்டிங் ஷயத்தில் அவருக்குத் தெரியாத நுணுக்கங்களோ, விஷயங்களோ எதுவும் கிடையாது.

‘சாலி வாகனன்’ சமயத்தில் இருந்துதான் நானும், அவரும் பேசிப் பழக ஆரம்பித் ம். அன்பைப் பரிமாறிக் கொண்டோம்.

எங்களிடையே நட்பும் வளர ஆரம்பித்தது.

ஜூபிடர் பிக்சர்ஸ் ‘ராஜகுமாரி’ படத்தை ஆரம்பித்தார்கள். எம்.ஜி.ஆர். அவர்கள் ான் இதில் கதாநாயகன். எம்.ஜி.ஆர். கதாநாயகனாக நடித்து வெளி வந்த முதல் படம் ‘ராஜகுமாரி’தான்.

கதையில் ஒரு சம்பவம்.

ஒரு மகாராணி.

அவளுக்கு மெய்க் காவலனாக ஒரு பெரிய பயில்வான்.

கதாநாயகன் அவனுடன் போரிட்டு, அவனை ஜெயிக்க வேண்டும்.

அதாவது கதாநாயகனாக நடிக்கும் எம்.ஜி.ஆர். அவனைத் தோற்கடிக்க வேண்டும்.

தயாரிப்பாளர்களில் ஒருவரான சோமு அவர்கள் ஒரு பிரபலமான பயில்வானை இந்த படத்தில் நடிக்க வைக்க ஏற்பாடு செய்யும்படிச் சொன்னார். கோவையில் அப்படிப்பட்ட



'தாயைக் காத்த தனயன்' படத்தில் எம்.ஜி.ஆர்., தேவர்.

...வான் யாரும் கிடைக்கா விட்டால், சென்னையில் இருந்தாவது வரவழைக்கும்படி ...னார்.

...ம்.ஜி.ஆர். அவர்கள் இதைக் கேள்விப்பட்டு, சோமு அவர்களிடம் சென்றார்.

'உங்க கம்பெனியிலேயே அந்த வேடத்திற்குப் பொருத்தமான நடிகர் இருக்கும் போது, ...ளியேயிருந்து ஏன் வரவழைக்க வேண்டும்?' என்று சோமு அவர்களிடம் கேட்டார்.

'நீங்க யாரைச் சொல்றீங்க?' என்று திருப்பிக் கேட்டார் சோமு.

'சின்னப்பா இருக்கிறாரே! என்ன வனப்பான உடல். எவ்வளவு திறமையாகச் சண்டைப் போடக் கூடியவர். அவரையே போடலாமே' என்று எம்.ஜி.ஆர். சொன்னார்.

சோமு உடனே, 'அதெல்லாம் வேண்டாம். நம்ம கம்பெனியிலே மாதச் சம்பளம் வாங்கிக் கொண்டு வரும் 'எக்ஸ்ட்ரா' அவன். வேறு பிரபலமானவரைப் போடலாம்' என்றார்.

'சின்னப்பாவின் திறமை உங்களுக்குத் தெரியாது. எனக்குத் தெரியும். ரொம்ப நன்றாகச் சண்டை போடுவார். வளரும் ஒரு நடிகருக்கு உதவினாற் போலவும் இருக்கும். அவரையே போடலாம்' என்று எம்.ஜி.ஆர். மறுபடியும் வாதிட்டார்.

'நீங்களே கதாநாயகனாக நடிப்பது இது முதல் தடவை. புதிசு. உங்களுக்கு எதிரே சண்டை போடக் கூடியவர் பிரபலமானவராக இருந்தால் தானே நன்றாக இருக்கும்? வேணும்னா இங்கேயே கமால்தீன் பயில்வான்னு பிரபலமான ஒருத்தர் இருக்கிறார். அவரை வேணுமானாலும் போட்டுக்கலாம்' என்று சோமு சொல்ல, அதற்கு உடனே எம்.ஜி.ஆர்., 'என்னை மன்னிச்சுடுங்க. இந்தச் சண்டை காட்சியிலே சின்னப்பாவையே போடுங்க! இல்லா விட்டால் இந்த 'பைட்டிங் சீனே வேண்டாம்' என்று அடித்துச் சொன்னார்.

'தனக்கு முதல் படமும் அதுதான். இதில் ஏதாவது பிடிவாதமோ தகராறோ செய்து தயாரிப்பாளர் வேண்டாம் என்று சொல்லி விட்டால், எதிர்காலமே தனக்குப் பெரும் சூனிய



'நல்ல நேரம்' படப்பிடிப்பில் எம்.ஜி.ஆர்.

மாகி விடும்' என்று நன்றாகத் தெரிந்து இருந்தும், என் மீதுள்ள அன்பிற்காக, என் மு
றத்தின் மீதுள்ள அக்கறைக்காக, நான் முன்னுக்கு வர வேண்டும் என்ற ஒரே காரணத்
அந்த நிலையிலும் எனக்காக வாதிட்டு, இறுதியில் அந்த வேடத்தை எனக்கே எம்.
வாங்கித் தந்தார்.

அன்றைய தினம், எனக்காகப் போராடி, எம்.ஜி.ஆர். அந்த வேடத்தை என
வாங்கித் தந்திராமல் இருந்தால், இன்றைய தினம் திரைப்பட உலகில் நான் ஒரு நல
'ஸ்டண்ட்' நடிகராக விளங்கி வருவதற்கும், திரையுலகில் ஓரளவுக்கு நான் நிலைத்து நிற்பதற்கும் முடியாமற் போயிருக்கும்.

'ராஜகுமாரி' படம் முடிந்ததும், சோமு அவர்கள் அதைப் பார்த்தார்.

படத்தில் போட வேண்டாம் என்று சொன்ன அவரே, என்னைத் திரையில் பார்த்ததும் பெரும் மகிழ்ச்சி கொண்டார்.

எம்.ஜி.ஆரிடம் உடனே அவர் 'ராமச்சந்திரன், நீங்க சொன்னது ரொம்பவும் சரி. என்ன அழகாக, அற்புதமாக சின்னப்பா சண்டை போட்டு இருக்கிறார்' என்று மனதாரப் பாராட்டினார்.

அந்தப் பாராட்டைக் கேட்டு நான் அடைந்த சந்தோஷத்தை விட, இரட்டிப்பு மகிழ்ச்சி கொண்டவர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள்தான்.

முதன் முதலாக எம்.ஜி.ஆர். கதாநாயகன் வேடம் ஏற்று நடித்த 'ராஜகுமாரி' பெரும் வெற்றிப் படமாக அமைந்து, அவருக்குப் பெரும் புகழையும், ரசிகர்கள் இடையே மகத்தான வரவேற்பையும் பெற்றுத் தந்தது.

அதன் பிறகு எம்.ஜி.ஆர். எந்தப் பதிய படத்தில் நடிக்க ஒப்பந்தமானாலும், அதில் ஒரு சண்டைக் காட்சியை வைக்கச் சொல்லுவார். அதில் என்னை போடும்படியும் பலமாகச் சிபாரிசு செய்வார். இப்படி சுமார் பதினைந்து படங்களுக்கும் மேலாக அவர் எனக்கு வாங்கித் தந்தார்.



'நீதிக்குப் பின் பாசம்' படப்பிடிப்பில் தேவர், எம்.ஜி.ஆர்..

மாடர்ன் தியேட்டர்ஸ் அதிபர் டி.ஆர். சுந்தரம் அவர்கள் கண்டிப்புக்கு பெயர் பெற்ற வர். ஷ்டூடியோவில் அவர் வகுத்த திட்டங்களை மாற்றவோ, திருத்தவோ யாரும் முன்வர மாட்டார்கள். அவ்வளவு பயம்.

அந்த ஸ்டூடியோவில் 'சர்வாதிகாரி' படம் தயாரான சமயம், எம்.ஜி.ஆர். அவர்கள் அதில் கதாநாயகனாக நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டார்.

இந்தப் படத்தில் எனக்காக, அந்தக் கடுமையான சட்டத் திட்டங்களுக்கு மீறி வாதாடி, எனக்கு ஒரு வேடத்தை அதில் வாங்கித் தந்தார். இதைப் போல மதுரை வீரன், குலேபகாவலி போன்ற அவர் நடித்த பல படங்களில் எனக்கு சந்தர்ப்பத்தைப் பெற்றுத் தந்தார்.

நாளுக்கு நாள், படத்திற்குப் படம் எங்கள் அன்பின் ஆழமும், நட்பின் நெருக்கமும் வளர்ந்து, ஒருதாய் மக்கள் போலவே பழக ஆரம்பித்தோம்.

எதையும் அவர் என்னிடம் மறைக்க மாட்டார். நானும் எதையும் அவரிடம் மறைக்க மாட்டேன்.

எங்களுக்குள் ரகசியம் என்பதோ, ஒருவருக்கொருவர் தெரியாத விஷயமோ இருந் ததே இல்லை.

நான் சொந்தமாகப் படம் எடுக்க ஆசைப்படுவதையும், முக்கியமாக என் தம்பி திருமுகத்தை டைரக்டராக்கவே 'தேவர் பிலிம்ஸ்' நிறுவனத்தை நான் ஆரம்பிக்கப் போவ

தையும் என் அருமை நண்பர் 'மக்கள் திலகம்' திரு. எம்.ஜி.ஆர். அவர்களிடம் சொன்னதும், அவர் அதைக் கேட்டு பெரும் மகிழ்ச்சி அடைந்தார்.

'தைரியமாக ஆரம்பியுங்கள். என்னால் முடிந்த எல்லா உதவிகளையும் நான் செய்கி றேன்' என்று உற்சாகமூட்டினார்.

கதையைத் தேர்ந்தெடுத்தோம்.

அதுதான் 'தாய்க்குப் பின் தாரம்'

கதைக்கான நடிகர்களைத் தேர்ந்து எடுக்க முனைந்தோம்.

கோவை சென்டிரல் ஸ்டுடியோவிலேயே படத்தை எடுக்க நான் விரும்பினேன்.

சொந்த ஊர்; பழக்கமான இடம்; தெரிந்த மனிதர்கள்- இப்படிப் பல வகைகளில் சிந்தித்துப் பார்த்த போது, எனக்கு கோவையில் படப்பிடிப்பை வைத்துக் கொள்வது லாபகர மாகப்பட்டது.

எனவே 'கோவையில்தான் படப்பிடிப்பு இருக்கும்' என்று சொல்லி, நாங்கள் ல பத்மினி மற்றும் சிலரைப் போய் பார்த்து படத்தில் நடிக்க அழைத்த போது, அவ ஏற்கனவே சென்னையில் நடிக்க இருந்த படங்களைச் சுட்டிக் காட்டி, தங்களால் கோவை வந்து நடிப்பது என்பது அப்போதைக்கு இயலாத காரியம் என்பதை நியாய உணர்வே விளக்கினார்கள்.

அப்படியானால் என் படத்திற்கு கதாநாயகி யார்?

திரு. எம்.ஜி.ஆர். அவர்களிடம் நடந்ததைச் சொன்னேன். திருமதி பானுமதி அவ அப்போது 'மக்கள் திலகம்' அவர்களுடன் ஒரு படத்தில் நடித்துக் கொண்டு இருந்தா

'அவரிடம் நானே கேட்டுச் சொல்கிறேன்' என்று அந்தப் பொறுப்பை எம்.ஜி அவர்களே ஏற்றுக் கொண்டார்கள்.

அதன்படியே படப்பிடிப்புக்காக வந்த பானுமதி அவர்களிடம் என்னையும் அழைத் சென்று அறிமுகப்படுத்தி வைத்து, 'இவர் என் சிறந்த நண்பர். சொந்தத்தில் படம் எடுக்க போகிறார். நீங்கள் அதில் நடிக்க வேண்டும்' என்று என் சார்பில் கேட்டுக் கொண்டார்.

'அதற்கென்ன? நடிக்கிறேன்' என்று மறு வார்த்தை கூடச் சொல்லாமல் உடனே சம்மதத் தைத் தெரிவித்தார்.

'கோவையில் படப்பிடிப்பு இருக்கும்' என்று சொன்ன போது, 'அதனாலென்ன! நீங் களே போகும் போது, நான் மட்டும் என்ன! வருகிறேன்' என்று, அதற்கும் பானுமதி அவர்கள் ஒப்புக் கொண்டார்.

எனக்கு அளவற்ற மகிழ்ச்சி.

எனது மகிழ்ச்சியில் பெரும் பங்குக்குக் காரணமாக திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்த போதும், அவர் அதைக் காட்டிக் கொள்ளாமல், நான் சந்தோஷப்படுவதைக் கண்டு பெரு மையும், பூரிப்பும் கொண்டார்.

மற்ற நடிகர்களையும் உடனடியாக ஒப்பந்தம் செய்து கொண்டோம்.

இந்தக் கட்டத்தில் காலஞ் சென்ற என் நண்பர் ஆர்.ஆர். சந்திரன் என்னிடம் வந்து, 'படப்பிடிப்பை கோவையில் வைத்துக் கொள்வதை விட, சென்னையில் வைத்துக் கொள் வது பல வழிகளிலும், வகைகளிலும் நல்லது; லாபகரமாகவும் இருக்கும்' என்று காரணங்க ளோடு விளக்கி, 'சென்னையில் வாகினி ஸ்டுடியோவிலேயே படப்பிடிப்புக்கான வசதிகளை எனக்கு ஏற்படுத்தித் தருவதாகவும்' சொல்லி, என்னை வாகினி ஸ்டியோவுக்கு அழைத்துச் சென்று, திரு. ராமாநுஜம் (புரோக்கிராம் எக்சிக்யூடிவ்வாக இருந்த இவர் காலமாகி விட்



'கன்னித்தாய்' படப்பிடிப்பில் எம்.ஜி.ஆர்., தேவர்.

டார்) என்பவரிடம் என்னை அறிமுகப்படுத்தி வைத்தார்.

ராமாநுஜம் என் திட்டங்களை எல்லாம் கேட்டார். பிறகு என்னை வாகினியின் அதிபர் திரு. பி. நாகி ரெட்டியார் அவர்களிடம் அழைத்துச் சென்றார்.

முதன் முதலாக அப்போதுதான் நான் திரு. ரெட்டியார் அவர்களைச் சந்தித்தேன்.

அவரது எளிமையும், பகட்டில்லாத பேச்சும், நாணயமும் என்னைக் கவர்ந்து விட்டன.

அதே போல் என்னையும் அவருக்குப் பிடித்து விட்டது.

வாகினியில் படப்பிடிப்பை வைத்துக் கொள்வதற்கான வசதிகளை அவர் தருவதாக வாக்களித்தார்.

திரு. எம்.ஜி.ஆர். அவர்களிடம் நான் நடந்ததை எல்லாம் சொன்னேன்.

சென்னையில் படப்பிடிப்பை வைத்துக் கொள்வதை அவரும் வரவேற்றார்.

1955-ம் வருடம் ஜூலை மாதம் 5-ம் தேதி, தேவர் பிலிம்சின் முதல் படமான 'தாய்க்குப் பின் தாரம்' படத்திற்கான பூஜை போடப்பட்டது.

திரு. நாகி ரெட்டியார் அவர்கள் காமிராவை இயக்கி வைத்தார்கள்.

தேவர் பிலிம்ஸ் தயாரிப்புகளுக்கு அன்று, பிள்ளையார் சுழிப் போடப்பட்டு விட்டது.

'தாய்க்குப் பின் தாரம்' படம் ஷூட்டிங் ஆரம்பமாகி விட்டது.

இதிலே எனக்கும், திரு. எம்.ஜி.ஆருக்கும் ஒரு கம்புச் சண்டை.

எம்.ஜி.ஆர். என்னைக் கூப்பிட்டு, 'அண்ணே! இந்தக் கம்புச் சண்டையை நாம இரண்டு பேரும் செய்யப் போகிறோம். ரசிகர்கள் நம்மிடம் அதிகமாக எதிர்பார்ப்பாங்க. ஆகையினாலே நமக்கு இதிலே 'டூப்' வேண்டாம். நாம இரண்டு பேருமே நிஜமா கம்புச் சண்டையைப் போடுவோம். காமிரா தந்திரங்களையும் கையாளாமல், வேகமாகவும் சண்டை போ வோம்' என்றார்.

'ஓ.கே!' என்றேன்.

சண்டைக் காட்சிக்கான ஒத்திகைகளில் நாங்கள் கலந்து கொள்ள ஆரம்பித்தோம்.

நாலு வயல். அதிலே தண்ணீர். அங்கேதான் சண்டை.

தண்ணீர் பாய்ச்சுவதில்தான் எனக்கும், அவருக்கும் இடையே தகராறு எழுந்து இ சண்டை முற்றுகிறது.

முதல் நாள் காலை ஆரம்பித்த சண்டை, மறுநாள் காலையில்தான் முடிந்தது.

ரியல் பைட்டிங்தான்! காமிரா ஸ்பீடோ வேறு எதுவும் சண்டையின் வேகத்தை ரிக்க 'அட்ஜெஸ்ட்' செய்து உபயோகப்படுத்தவில்லை.

அப்போதே இந்தச் சண்டையைப் பார்த்து விட்டு, டெக்னீஷியன்களும், மற்ற நண் ளும் 'பிரமாதம்! பிரமாதம்!' என்று சொன்னார்கள்.

ஒரு பெரிய மைதானத்தில் இரண்டு பேர், பயங்கரமாக மோதிக் கொண்டால் எ சண்டைப் போட்டுக் கொள்வார்களோ, அப்படி அமைந்தது இந்தச் சண்டை

அத்தனையும் பெரிய ஷாட்டுகள்!

50 அடி, 60 அடி! இப்படி இங்கிருந்து அவர் விரட்டிட்டு வருவாரு; நான் பதி விரட்டிட்டுப் போவேன்.

ஆக தத்ரூபமாகவே, கண்முன்னே நடப்பது போல இருக்கும் இந்தச் சண்டை.

படம் வெளி வந்த பிறகு, படத்தைப் பார்த்த பலரும் 'தாய்க்குப் பின் தாரம்' ஒரு நல்ல குடும்பப் படம் என்று பாராட்டினார்கள். நானும் திரு. எம்.ஜி.ஆர். அவர்களும் செய்த அந்தக் கம்புச் சண்டையைப் பாராட்டி, ஆயிரக்கணக்கான ரசிகர்கள் தேவர் பிலிம்சுக்குக் கடிதம் எழுதி இருந்தார்கள்.

'எம்.ஜி.ஆரும், நானும் இது போல் இன்னும் பல படங்களில் சேர்ந்து நடித்து, இம்மாதிரி சாகசம் நிறைந்த சண்டைக் காட்சிகளில் தோன்றி, எங்களை மகிழ்விக்க வேண்டும்' என்று சொல்லி வைத்தாற் போல அவர்கள் எழுதி இருந்தார்கள்.

இந்தக் கடிதங்கள் ஒவ்வொன்றும் எனக்கு புதிய சக்தியைத் தந்தன. என் எதிர்காலத்தைப் பற்றி நல்ல நம்பிக்கையையும் கொள்ள வைத்தன.

எனது முதல் படமான 'தாய்க்குப் பின் தாரம்' பெரும் வெற்றிப் படமாக அமைந்தது. திரையிடப்பட்ட எல்லா இடங்களிலும் அமோகமான வசூல்.

நான் இதுவரை தயாரித்த படங்களிலேயே, அதிகமான வசூலை குவித்த படம் இது தான். இன்றும் கூட எந்த ஒரு இடத்தில் திரையிடப்பட்டாலும், நல்ல வசூலை இப்படம் தந்து விடுகிறது.

இந்த அளவுக்கு நான் வளர்ச்சி அடைந்து இருப்பதற்கு முக்கியமான காரணம் இரண்டு பேர்கள்தான்.

ஒருவர் என் தெய்வம் முருகன்; மற்றொருவர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள்.



'தனிப்பிறவி' படப்பிடிப்பில் தேவர், எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா, நடன இயக்குநர் தங்கப்பன்.

ஒரு நாள் படப்பிடிப்பில் எம்.ஜி.ஆரை பயமுறுத்த வேண்டுமென்று, எம்.ஜி.ஆருக்கு சற்று தூரத்தில் உட்கார்ந்து கொண்டு, 'இன்றைக்கு நான் விரதம். யாரும் என் அருகில் வரக் கூடாது' என்று உத்தரவு போட்டேன்.

எம்.ஜி.ஆர். என்ன நினைத்தாரோ, என் அருகில் வந்தார். சட்டென்று கட்டிப்பிடித்து முகத்தில் முத்தமழை பொழிந்து விட்டார். 'இப்போ என்ன செய்வீங்க?' என்று சிரித்தபடி பார்த்ததும் எனக்குத்தான் அசடு வழிந்தது.

எம்.ஜி.ஆருக்கு தெய்வ பக்தி இல்லையென்று நிறைய பேர் சொல்வார்கள். என் எதிரே யாரும் சொன்னதில்லை. எம்.ஜி.ஆருக்கு கடவுள் பக்தி உண்டு. நான் மருதமலைக்கு எப்போது போனாலும் எம்.ஜி.ஆர். பெயருக்கு அர்ச்சனை செய்வேன்.

அந்த பிரசாதத்தை நான் சென்னை வந்ததும் எம்.ஜி.ஆரிடம் கொண்டு போய் கொடுப்பேன். பிரசாதம் கொடுக்கும் போது உட்கார்ந்து இருந்தால் கூட எழுந்து பய பக்தியோடு எம்.ஜி.ஆர். வாங்கிக் கொள்வார்.

ஒரு நாள் 'மருதமலை போயிட்டு வந்தேன்'னு அவரிடம் சொன்னேன். வழக்கம் போல் 'பிரசாதம் எங்கே?' என்று ஆவலோடு கேட்டார். சோதனையாக அன்று எடுத்துக் கொண்டு போக மறந்து விட்டேன். அன்று முழுவதும் எம்.ஜி.ஆர். என்னுடன் பேசவே இல்லை.

# மக்கள் திலகத்தின் அசாதாரண திறமை!



-கே. கண்ணன்

கிரேனில் கேமராவுடன் எம்.ஜி.ஆ

**எனது சொந்த ஊரான சிவகங்கையில் 'ஸ்ரீராம்'** என்ற பெயரில் தியேட்டர் ஒ உள்ளது. என் சிறு வயதில் அங்கு திரையிடப்படும் எம்.ஜி.ஆர். படம் எதையும் பார்க் தவறியதில்லை. படம் பார்ப்பதோடு நின்று விடாமல் மாலை நேரங்களில் தியேட்டரு அருகில் நின்று எம்.ஜி.ஆர். பேசும் வசனங்களை அடிக்கடி கேட்டு பாடம் செய்து, நண்ப ளிடம் அப்படியே சொல்லி அவர்களைக் கலகலப்பூட்டுவேன்.

பின்னர் சினிமாவில் நடிக்க வேண்டுமென்ற ஆசையில் சென்னைக்கு வந்தேன். பல் வேறு படங்களில் சிறிய வேடங்களில் நடித்து படிப்படியாக முன்னுக்கு வந்த நேரத்தில்தான் எம்.ஜி.ஆருடன் 'மதுரை வீரன்' படத்தில் நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது. முதல் நாளே எம்.ஜி.ஆருடன் வசனம் பேசி நடிக்கும் காட்சியாக எனக்கு அமைந்தது நான் செய்த அதிர்ஷ்டம் என்றே நினைக்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களாகிய எங்களை நரேந்திரன் (பாலையா) கொடுமைப்படுத்து வார். அதைத் தாள முடியாமல் வீரனிடம் (எம்.ஜி.ஆர்.) வந்து முறையிடுவோம். 'எங்களை எப்படியாவது நீங்கள் தான் காப்பாற்ற வேண்டும்' என்று. அப்போது அவர், 'கவலையே பட வேண்டாம். உங்களை காப்பாற்ற வேண்டியது என் பொறுப்பு' என்று சினிமாவுக்காக பேசிய வசனம் சென்டிமென்டலாக நிஜ வாழ்க்கையிலும் அப்படியே பலித்து போய் விட்டது.

'மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன்' படப்பிடிப்புக்காக ஜெய்ப்பூர் சென்றிருந்தேன். அங்கு இருபத்தாறு நாட்கள் படப்பிடிப்பு நடந்தது. லதாவுடனும், பத்மப் பிரியாவுடனும் எம்.ஜி.ஆர். நடித்த பாடல் காட்சிகள் படமாக்கப்பட்டனவே ஒழிய என் பாகம் சம்பந்தப் பட்ட படப்பிடிப்பு வரவேயில்லை. அத்தனை நாட்களும் சாப்பிட்டு விட்டு படப்பிடிப்பை வேடிக்கை பார்த்துக் கொண்டுதான் இருக்க முடிந்தது. மாலை நேரங்களில் படப்பிடிப்பு முடிந்து என்னை சந்திக்கும் போதெல்லாம், 'என்ன கண்ணன், நன்றாகச் சாப்பிட்டாயா? நன்றாகத் தூங்கினாயா?' என்று எம்.ஜி.ஆர். என்னைக் கேட்கும்போது வெட்கப் பட்டு

சிரித்துக் கொண்டே போய் விடுவேன்.

இருபத்தாறாவது நாள் கடைசி கட்ட படப்பிடிப்பு. அன்று பிற்பகலில் ஏழு பக்க வசனங்களை திடீரென்று கொண்டு வந்த எம்.ஜி.ஆர். என்னிடம் ஒரு பகுதியைக் கொடுத்து விட்டு, மற்ற பகுதியை லதாவிடம் கொடுத்து (அப்போது மணி 2) 'இருவரும் பாடம் செய்து விட்டு 4 மணிக்கு தயாராயிருங்கள்' என்று சொன்னதும் எனக்கு ஒரே குழப்பம். அதைப் புரிந்து கொண்ட எம்.ஜி.ஆர்.,

'ஒன்றும் கவலைப்பட வேண்டாம். பக்கம் பக்கமாக நாடக வசனங்களை பாடம் செய்த னக்கு இது பெரிய காரியமல்ல. தவிர 5 மணிக்கு மேல் சூரிய ஒளி நன்றாக இருக்காது. ன்றோடு இந்த படப்பிடிப்பு முடிந்து நாளை காலை நாம் சென்னை புறப்படுகிறோம்' என்று சொல்லி விட்டு படப்பிடிப்புக்கான மற்ற ஏற்பாடு செய்வதற்கு சென்று விட்டார்.

கோசலை நாட்டு மன்னனான நான் போருக்கு புறப்படும்போது, கயல்விழியான லதா பார் வேண்டாம்' என்று என்னை தடுத்து நிறுத்த வேண்டும். அப்போது இருவரும் பேசும் னம்தான் அந்த நேரத்தில் படமாக்கப்பட இருந்தது. நாங்கள் வசனங்களை பாடம் செய்த த்தில், எம்.ஜி.ஆர். மிக நீண்ட காட்சியை எப்படி படமாக்கப் போகிறார் என்று என் னதிற்குள் குறுகுறுப்பு. ஏனென்றால் படத்தின் இயக்குநரே அவர்தான்.

நாங்கள் பாடம் செய்த நேரத்திற்குள் எம்.ஜி.ஆர். என்ன செய்தார் தெரியுமா? ஒரே ட்டில் இந்த காட்சியை படமாக்க வேண்டுமென்பதற்காக ஏற்கனவே போர்க் காட்சிகளை மாக்குவதற்காக கொண்டு வந்திருந்த ஒன்பது காமிராக்களை வெவ்வேறு கோணங்க ), வெவ்வேறு இடங்களில் அமைத்து- ஒன்றின் பார்வை மற்றதன் மீது படாமல் இருக்க மேப் ஒன்றினை வரைந்து, நாங்கள் தயாராவதற்குள் எம்.ஜி.ஆர். தயாரான சுறுசுறுப் பார்த்து பிரமித்துப் போய் விட்டேன். சரியாக 4 மணிக்கு நானும், லதாவும் ரெடி.



'மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்' படப்பிடிப்பில் எம்.ஜி.ஆர்.



'காவல் காரன்' படத்தில் கவர்ச்சி வில்லன் கே. கண்ணன், எம்.ஜி.ஆர்., ஜஸ்டின்

ஒரு முறை நாங்கள் ஒத்திகை பார்த்துக் கொள்ள, காமிரா கோணங்கள் சரியாக இருக்கின் னவா என்று எம்.ஜி.ஆர். பரிசோதித்துக் கொண்டு 4-15-க்கு 'ஸ்டார்ட்' சொல்ல, நாங் வசனம் பேசி நடிக்க ஒன்பது காமிராக்களும் ஒரே நேரத்தில் இயங்கின. சரியாக 4-30- 'டேக்' ஓ.கே. ஆனதும் எம்.ஜி.ஆர். தன்னை மறந்து கை தட்ட சுற்றியிருந்த போர் வீரர்க நடித்தவர்களும், கை தட்ட நான் மெய்சிலிர்த்துப் போனேன். என் அனுபவத்தில், நா தில் நடித்ததற்காக கை தட்டல் வாங்கியிருக்கிறேன் தவிர, இப்படி படப்பிடிப்பு நேரத் கை தட்டல் வாங்கியதை வாழ்க்கையில் நான் செய்த மிகப் பெரிய சாதனையாகக் கருது றேன்.

படத்தில் நானும், லதாவும் நடித்த அந்தக் காட்சியை பார்த்தபோது என்னிடம் எழுந்த வியப்புக்கு அளவேயில்லை. ஒரு நாள் முழுக்க படப்பிடிப்பு நடத்தினாலும், எடுக்க முடி யாத அந்தக் காட்சியை ஒரே நேரத்தில் படமாக்கி, ஒன்பது 'ஷாட்'களாக பிரித்த எம்.ஜி.ஆ ரின் தொழில் நுட்ப சாமர்த்தியத்தை என்னவென்று சொல்வது! தமிழ் திரையுலகில் வேறு யாரிடமும் இப்படிப்பட்ட சாதுரியத்தை இன்றுவரை நான் பார்த்ததில்லை,

எம்.ஜி.ஆர். தன் முதல் மனைவி தங்கமணியை திருமணம் செய்து கொண்டது புதன் கிழமை. சென்னையிலிருந்து அவரை ஊருக்கு அனுப்பியது புதன்கிழமை. எம்.ஜி.ஆரை யும், இந்த உலகத்தையும் விட்டு தங்கமணி பிரிந்து சென்றதும் ஒரு புதன்கிழமை. இதை எம்.ஜி.ஆர். எப்போதும் மறந்ததில்லை.



'தெய்வத்தாய்' படத்தில் எம்.ஜி.ஆர்.

# எம்.ஜி.ஆரின் அபூர்வ குணாதிசயங்கள்!

**எம்.**ஜி.ஆரின் மனோதிடம் யாவரும் அறிந்த ஒன்றே. அது அவரை மகோன்னத மான மனிதராகவும் உயர்த்தியிருக்கிறது. கீழேயும் கொண்டு வந்திருக்கிறது.

எம்.ஜி.ஆர். உடல் நலமற்று அமெரிக்காவில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தபோது இங்கே தேர்தல். தேர்தலில் எம்.ஜி.ஆர். ஆண்டிபட்டியில் போட்டியிட வேண்டி, அவரிடம் அமெரிக்க ப்ரூக்ளின் மருத்துவமனையிலேயே ஒப்புதல் பெற்றார்கள். விண்ணப்ப பாரத்தை பூர்த்தி செய்தபின் எம்.ஜி.ஆர். கையெழுத்திட வேண்டும். ஆனால் எம்.ஜி.ஆரின் கை விரல்கள் அசையவில்லை. எவ்வளவோ முயன்றும் எம்.ஜி.ஆரால் முடியவில்லை. அவ ருக்கு கண்களில் நீர் பெருகியது. தன் இயலாமையை நினைத்து வேறு வழியின்றி விரல் ரேகையை பதிய வைத்து பாரத்தை அனுப்பி வைத்தார். அன்றைக்கு மனம் கலங்கிய நிலையில் அவர் எடுத்துக் கொண்ட உறுதி, தமிழக முதல்வராக கவர்னர் முன்னிலையில் பொறுப்பேற்றபோது 'எம்.ஜி.ராமச்சந்திரன்' என்று கையெழுத்திட வைத்தது.

அண்ணாவின் (மகன் இளங்கோவின் மகள்) பேத்தி கண்மணி எம்.ஜி.ஆரின் மேல் உயிராக இருப்பவள். விவரம் அறிந்த வயதிலேயே எம்.ஜி.ஆருடன் தினமும் ஒருமுறை போனில் தொடர்பு கொண்டு பேசினால் தான் கண்மணிக்கு நிம்மதி.

அந்த கண்மணிக்கு திருமண வயது வந்தபோது எம்.ஜி.ஆர். தமிழக முதல்வர். கண்ம

ணியின் திருமண அழைப்பிதழில் எம்.ஜி.ஆரது படம் மட்டுமின்றி, கருணாநிதியின் படமும் அச்சிடப்பட்டது. இந்த ஒரே காரணத்திற்காக எம்.ஜி.ஆர் கண்மணியின் திருமணத்திற்கு வரவேயில்லை. கண்மணி எம்.ஜி.ஆரை எதிர்பார்த்து அழுது அழுது ஓய்ந்தது தான் மிச்சம். கருணாநிதியின் மீதுள்ள துவேஷ உணர்ச்சிக்காக ஒரு பாச நெஞ்சத்தை துடிக்க வைத்த கல் மனமும் எம்.ஜி.ஆருக்கு உண்டு.

எம்.ஜி.ஆரை இப்படி அப்படி என்றில்லாமல், கணக்கு பார்க்காமல் திட்டித் தீர்த்தார் ஒரு நடிகர். அந்த நடிகர் ஒரு சமயம் மிக மோசமாக நொடித்துப் போனார். யாரும் அவருக்கு உதவுவாரில்லை. எம்.ஜி.ஆர். அதைக் கேள்விப்பட்டு நடிகரை வரவழைத்து சுமார் 85,000 ரூபாய் கொடுத்தார். நடிகரால் உணர்ச்சியை அடக்க முடியாமல் கண்கலங்க நன்றி சொல்லி விட்டுப் போனார்.

எம்.ஜி.ஆரின் அருகில் இருந்தவர்கள் ''உங்களை மிக கேவலமாக விமர்சித்தவரை தண்டிக்காமல் பணம் கொடுத்து அனுப்புகிறீர்களே?'' என்று கேட்டதற்கு, ''இப்போது நான் அவருக்கு உதவியிருக்கிறேனே, இதை எண்ணி எண்ணியே அவர் மனம் துடிதுடிக்கும். அதுதான் அவருக்கு தண்டனை'' என்றார் எம்.ஜி.ஆர்.

கண்ணதாசனை விட எம்.ஜி.ஆரை விமர்சித்தவர்கள் யாருமிருக்க முடியாது. 'அலை ஓசை'யில் எம்.ஜி.ஆரைப் பற்றி தொடர் கட்டுரை எழுதி, ஏற்படுத்திய பரபரப்பு சாதாரணமல்ல. அது மட்டுமின்றி 'ராணி' வார இதழில் அவர் எழுதிய 'அரங்கமும் அந்தரங்கமும்' என்ற தொடர்கதை சுமார் 50 வாரங்களுக்கு வந்தது. இதில் எம்.ஜி.ஆர். அரங்கத்தில் எப்படிப்பட்டவர், அந்தரங்கத்தில் எப்படிப்பட்டவர் என்றெல்லாம் கடுமையாக எழுதினார்.

எம்.ஜி.ஆர். பெயரை 'சூரியசந்திரன்' என்றும், பி.டி. சரஸ்வதியை 'விஜயா' என்றும் நாஞ்சில் மனோகரனை 'தங்கராஜ்' என்றும் பெயர் சூட்டி விமர்சித்தார். இதில் அட்வகேட் ஜெனரல் வி.பி. ராமன் அந்தரங்கமெல்லாம் வந்தது. ஆனால் இவ்வளவுக்கும் எம்.ஜி.ஆர். கண்ணதாசனை கடுமையாக கண்டு கொள்ளவில்லை. பதிலடி கொடுக்கவில்லை.

முதல்வரான பின் எம்.ஜி.ஆர். கண்ணதாசனை அரசவைக் கவிஞராக்கி கௌரவம் கொடுத்தார். அன்றிலிருந்து சாகும்வரை கண்ணதாசன் எம்.ஜி.ஆரின் புகழ் பாடிக் கொண்டே இருந்தார்.

துறையூர் மூர்த்தி என்று ஒரு கதாசிரியர் 'ஆசை முகம்' படத்திற்கு அவர் எழுதிய சில வசனங்கள் எம்.ஜி.ஆருக்கு பிடிக்கவில்லை. மாற்றச் சொன்னார். மூர்த்தி மறுத்து விட்டார்.

ஒருநாள் நம்பியாருடன் எம்.ஜி.ஆர். படப்பிடிப்பில் கலந்து கொள்ள வேண்டும். படப்பிடிப்பிற்கு வந்த எம்.ஜி.ஆர். நம்பியாரை கட்டிப் பிடித்துக் கொண்டு ''என்ன உங்களுக்கு உடம்பு சரியில்லைன்னு கேள்விப்பட்டேன். போய் டாக்டரிடம் காண்பிச்சுட்டு ஓய்வு எடுத்துட்டு வாங்க. படப்பிடிப்பை அப்புறம் வச்சுக்கலாம்'' என்று சொல்லி, எம்.ஜி.ஆர். நம்பியாரை பேச விடாமல் இழுத்துக் கொண்டு போய் விட்டார். படப்பிடிப்பு தள்ளிப் போனது.

படப்பிடிப்பு நடந்தபோது துறையூர் மூர்த்தி கோபம் கொண்டு வரவில்லை. ''இனி எம்.ஜி.ஆர். படங்களுக்கு எழுத மாட்டேன்'' என்று சபதம் பூண்டார். இது சினிமா வட்டாரத்தில் பரபரப்பாகப் பேசப்பட்டது.

வாகினியில் ஒரு படப்பிடிப்பில் எம்.ஜி.ஆர். கலந்து கொண்டிருந்தார். அந்தப் பக்கம் வேறொரு வேலையாக வந்த துறையூர் மூர்த்தி அவர் கண்ணில் பட்டு விட்டார். எம்.ஜி.ஆர். ஓடோடிச் சென்று அவரைக் கட்டிப் பிடித்துக் கொண்டார். ''ஏன் இப்படி கோபப்படுகிறீங்க. நீங்களும் சினிமாக்காரர். நானும் சினிமாக்காரன். ஒருவருக்கொருவர் விரோதம் பாராட்ட



'இதயக்கனி' படப்பிடிப்பில் எம்.ஜி.ஆரின் முன் ஒளி அளவைக் கணக்கிடுகிறார் ஒளிப்பதிவு உதவியாளர் பிலிப்ஸ். இது ஒரு அபூர்வ காட்சி.

லாமா?'' என்று சமாதான வார்த்தைகள் கூற, மூர்த்திக்கு நா எழவில்லை.

அன்றோடு மூர்த்தியின் விமர்சனத்திற்கு ஒரு முற்றுப் புள்ளி விழுந்தது. ''எம்.ஜி.ஆர். இவ்வளவு அன்பா, பாசமா பேசறார். அவரைப் போய் மூர்த்தி என்னவெல்லாம் பேசினார்'' என்று அந்தக் காட்சியை நேரில் பார்த்தவர்கள் பேச ஆரம்பித்து விட்டார்கள்.

இப்படி தன்னுடைய இமேஜை காப்பாற்றிக் கொள்ள எந்த விலையும் தரத் தயங்க மாட்டார் எம்.ஜி.ஆர். சாகும் வரை இமேஜுக்கு பங்கம் வராமல் வாழ்ந்த ஒரு மனிதர் எம்.ஜி.ஆரைப் போல் உலகில் யாரும் இருக்க முடியுமா என்பது கேள்விக்குறியே.

பிறந்தது முதல் இறக்கும் வரை போராடியே வாழ்ந்தவர் எம்.ஜி.ஆரைப் போல எவருமுண்டா என்பது கேள்விக்குறி. இவரது புற வாழ்க்கை எல்லோரும் ஓரளவு அறிந்தது. அக வாழ்க்கை அதிலுள்ள மேடு பள்ளங்களை முழுமையாக அறிந்தவர் எவருமுண்டா? நிச்சயமாக இல்லை. தன்னுடன் பழகிய, பழகாத அனைவருக்கும் இவர் ஒரு அற்புத மனிதராக, மர்ம மனிதராக, நல்ல மனிதராக, மோசமான மனிதராக இப்படி எல்லா கோணங்களிலும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறார்.

நடிகர் திலகம் சிவாஜி எப்படிக் கூட்டுக் குடும்பத்தில் அக்கறை கொண்டிருந்தாரோ அதே போல மக்கள் திலகம் எம்.ஜி.ஆரும் தன் குடும்பத்தைச் சார்ந்தவர்களை நிராதரவாக விட்டதில்லை. சிறு வயது முதல் அண்ணன் சக்கரபாணியுடன் ஒரே குடும்பமாக வசித்தவர், 1962-ல் அவரது இரண்டாவது மனைவி சதானந்தவதி இறந்த பின், அவரது நினைவுகளிலிருந்து விடுபட விரும்பி, வி.என். ஜானகியுடன் ராமவரம் தோட்டத்திற்கு சென்று குடியேறினார். அங்கு சென்று விட்டாலும் சக்கரபாணியின் குடும்பத் தேவைகளை நிறைவேற்றத் தவறவில்லை. அவர் மறையும் வரை அவர்களது குடும்பத்திற்கு உதவிப் பணம் செ கொண்டே இருந்தது. நடுவே சக்கரபாணி குடும்பத்தாருடன் அவருக்கு பிணக்கு இரு லும் அதைப் பொருட்படுத்தாமல் உதவினார் எம்.ஜி.ஆர்.

கவிஞர் கண்ணதாசனுடன் தனக்கு பிணக்கு இருந்தபோது, எம்.ஜி.ஆர். ஏனோதானோவென்று இருந்து விடாமல் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தை ஊக்குவித்தார். கம்யூனிஸ்ட்டான பட்டுக்கோட்டையாரைக் கொண்டு புரட்சிகரமான சித்தாந்தங்க தனது படங்களில் சொல்ல வைத்தார். 'சின்னப் பயலே சின்னப் பயலே சேதி கேளடா' 'அரசிளங்குமரி' படப் பாடலும், 'திருடாதே பாப்பா திருடாதே' என்று 'திருடாதே' பாடலும், 'உழைப்பதிலா உழைப்பை பெறுவதிலா இன்பம்' என்ற 'நாடோடி மன்னன் பாடலும் அதற்கு உதாரணங்களாகும்.

எம்.ஜி.ஆர். படப் பாடல்கள் எதுவும் இசையின் ஆதிக்கத்தால் புரியாமல் இ தில்லை. பாமரரும் புரிந்து கொள்ளுமளவில் அவரது படப்பாடல்கள் அமைந்திரு சினிமாவில் சொல்லப்படுகின்ற எந்த ஒரு விஷயமும் கடைக்கோடி மக்கள் வரை டைய வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பார் எம்.ஜி.ஆர். அதற்கு ஒரு உதாரண

'தெய்வத்தாய்' படத்தின் மூலம் சினிமாவில் அடி எடுத்து வைத்தவர் கே. பா அந்தப் படத்திற்காக வசனங்களை பாலசந்தர் எழுதிக் கொடுத்தபோது, எம்.ஜி.ஆர். றைப் பார்வையிட்டு, பாலசந்தரை அழைத்தார். ''இதிலுள்ள சில வசனங்கள் புரியும்படி இல்லையே?'' என்றார். பாலசந்தருக்கோ, ''என்னது எம்.ஜி.ஆருக்கு நாம் எழுதிய வசனம் புரியவில்லையா?'' என்று உள்ளுக்குள் நினைத்தார். அதைப் புரிந்து கொண்ட எம்.ஜி.ஆர். ''நீங்கள் எழுதிய வசனம் எனக்குப் புரிந்து என்ன பயன்? படம் பார்க்கும் மக்களுக்குப் புரிய வேண்டும்'' என்று விளக்கம் சொல்ல, பாலசந்தர் தெளிவடைந்து வசனங்களை எளிமையாக எழுதிக் கொடுத்தார்.

இன்றைக்கு லட்சக்கணக்கில் சம்பளம் வாங்கும் நடிகர்கள் இருக்கிறார்கள். 30 அல்லது 40 நாள் கால்ஷீட்டுகளைக் கொடுத்து படத்தில் நடித்து விட்டுப் போவதோடு சரி. ஆனால் எம்.ஜி.ஆர். அப்படியல்ல.

'ஒளிவிளக்கு' படத்திற்கு மட்டும் எம்.ஜி.ஆர். 100 கால்ஷீட்டு (ஒரு கால்ஷீட் என்பது 8 மணி நேரம்) தந்திருக்கிறார். 'அன்பே வா'விற்கு 70 கால்ஷீட்டுக்கும் மேலே. இப்படி நடிப்பதற்காக நாட்களை பார்க்காதவர் எம்.ஜி.ஆர். அது மட்டுமல்ல, பாடல் பதிவிலிருந்து, படப்பிடிப்பு அம்சங்கள், படத்தொகுப்பு (எடிட்டிங்) என்று அத்தனையிலும் தலையைக் கொடுப்பவர் அவர். அதற்காக கூடுதல் சம்பளம் எதுவும் பெறுவதில்லை. தான் நடிக்கும் படம் நல்லவிதமாக அமைய வேண்டும் என்பதில் மிகவும் கவனமாக இருப்பார். இதில் தான் அவருக்கு கெட்ட பெயர் அதிகமாக வந்தது.

எம்.ஜி.ஆரை வைத்து படமெடுப்பவர்களோ, விரைவில் படம் முடிந்து, அதிக பட்ச லாபம் வந்தால் தேவலையே என்று நினைத்துக் கொண்டிருப்பார்கள். லாபம் குறையும்




'நேற்று இன்று நாளை' படத்தின் பூஜையைத் தொடங்கி வைக்கிறார் எம்.ஜி.ஆர்.

து எம்.ஜி.ஆரை பகைவனாக நினைக்க ஆரம்பித்து விடுவார்கள். அதனால் அவரை மற்றவர்களிடம் புறம் பேசும்போது அது எம்.ஜி.ஆரின் காதுகளுக்குப் போய் விடும். ஜி.ஆரின் பழிவாங்கும் நடவடிக்கைகள் அப்போதுதான் ஆரம்பமாகும். தன்னால் யன் அடையப் போகின்றவர் தன்னையே குறை சொன்னால் எப்படி என்று படம் முடியும் வரை அவர்களை ஒரு வழி பண்ணி விடுவார். அசோகனுக்கு 'நேற்று இன்று நாளை' படத்தில் ஏற்பட்ட அனுபவம் இப்படித்தான். 'கிழவன் இழுத்தடிக்கிறான்' என்று அசோகன் சொன்ன வார்த்தைகள் அவரை படாதபாடுபடுத்தி விட்டது. இத்தனைக்கும் எம்.ஜி.ஆர். சம்பளம் தவிர கார் பெட்ரோலுக்கு பணம், பேட்டாவெல்லாம் கேட்க மாட்டார்.

ஜுபிடரின் 'அரசிளங்குமரி' படப்பிடிப்பு சமயத்தில் அவர்களது 'தங்கப்பதுமை' படப் பிடிப்பும் ஒரே சமயத்தில் நடந்தது. சிவாஜிக்கு ஒப்பனை செய்த ரங்கசாமியிடமே எம்.ஜி.ஆ ரும் மேக்கப் போட்டுக் கொண்டார். எம்.ஜி.ஆரின் ஒரு படம் முடிய என்ன பிரச்சினையெல் லாம் இருக்கிறது என்று 'அரசிளங்குமரி'யையே உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். நாலரை ஆண்டுகளாக படப்பிடிப்பு நடந்த (நாடோடி மன்னன் படத்திற்கு முன்) 1956-ல் துவங்கப்பட்ட படம் இது. 'அரசிளங்குமரி'யை எம்.ஜி.ஆரே டைரக்ட் செய்ய நினைத்தார். ஆனால் ஜுபிடர் நிறுவனத்தில் அதற்கு சம்மதிக்கவில்லை. ''நாடோடி மன்னனுக்கு'' அப்பு றம் (ஜுபிடர்) சோமுவிடம் எனக்கு டைரக்ட் செய்ய படம் தரும்படி கேட்டேன். ஆனால் அவர் ஏ.எஸ்.ஏ. சாமியை நம்பினார்'' என்று ஜுபிடரிலுள்ளவர்களிடம் வருத்தப்பட்டுக் கொண்டார் எம்.ஜி.ஆர். இதனால் ஏ.எஸ்.ஏ. சாமிக்கும் எம்.ஜி.ஆருக்கும் ஒத்துப் போக வில்லை. கால்ஷீட் தகராறு எழுந்தது.

சில சமயம் படப்பிடிப்பு நடக்கும், பல மாதங்கள் இடைவெளிவிட்டு. இதனால் ஏ.எஸ்.ஏ. சாமி முக்கால்வாசி படம் முடிந்திருந்தபோது ஒதுங்கிக் கொண்டார். மீதிப்

படததையும், கிளைமாக்சையும் எம்.ஜி.ஆர். டைரக்டர் செய்தார். நடுநடுவே சாமிக்கும், எம்.ஜி.ஆருக்கும் தகராறு வரும்போது ஜுபிடர் சோமுவும், ஏ. காசிலிங்கமும் டைரக்ஷன் வேலைகளை கவனித்தார்கள்.

படம் நீண்ட நாட்களாக வளராமல் இருந்த சூழ்நிலையில் எம்.ஜி.ஆரின் மற்ற படங்கள் வரிசையாக தோல்வியுற்றன. அரசியலிலும் இறக்கம். மதிப்பில்லை. யாரும் கேட்பாரற்று மதிப்பிழந்து போனார்.

'எம்.ஜி.ஆர். சொந்த ஊருக்குப் போகிறார்' என்றெல்லாம் பத்திரிகைகள் எழுதின அந்த சமயம் ஜுபிடர் சோமுவும் இறந்து போனார். அதற்கும், பல தயாரிப்பாளர்க சாவுக்கு எம்.ஜி.ஆர்தான் காரணமென்று ஜுபிடர் நிறுவனத்து ஊழியர்களுக்கெல்லா கோபம். எம்.ஜி.ஆர். ஏதாவது சொன்னால் நெப்டியூன் ஸ்டூடியோ ஊழியர்களே (இன் றைய சத்யா ஸ்டூடியோ தான் அது. முன்பு ஜுபிடர் வசம் இருந்தது) அடித்து விடுமளவுக்கு நிலைமை மோசம்.

இத்தகைய இக்கட்டமான சூழ்நிலைகளில் எம்.ஜி.ஆர். தானே 'அரசிளங்குமரி'யி படப்பிடிப்பினை நடத்தி, ரஷ் பார்த்து, எடிட்டிங் திருத்தங்கள் செய்து விட்டு, இரவு அ லக வாயிலில் படுத்துக் கொள்வார். மறுநாள் காலை 4-00 மணிக்கு எழுந்து வீட்டு சென்று உடற்பயிற்சி முடித்து குளித்து தயாராகி 6-00 மணிக்கெல்லாம் ஸ்டூடியோ வ விடுவார்.

இவ்வளவு கடுமையாக படப்பிடிப்பு வேலைகளைக் கவனித்தும் செட்டில் உ லைட்மேன் உட்பல பலரும் ''இவர் படமெடுத்து கிழிச்சு... படம் ஓடி... போ... போ' எ எம்.ஜி.ஆரின் காது படவே கிண்டல் செய்வார்கள். எம்.ஜி.ஆர். அதையெல்லாம் கன் காணாதது போல் சிரித்துக் கொள்வார். அந்த சூழ்நிலையில் பொறுமையை இழ யில்லை.

அரசிளங்குமரி 1-1-1961 அன்று ரிலீஸ். ஆனால் முதல் நாள் இரவு வரை படப்பிடி நடந்து, அடுத்து எடிட்டிங் நடந்து, லாபரட்டரியில் பிரதிகள் தயாராகிக் கொண்டிருந்தது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் ரிலீஸ் நாளன்று காலை 4-00 மணிக்கு இரண்டு ஷாட் எடுக்க வேண்டும் என்றார் எம்.ஜி.ஆர். பல நாட்கள் தூக்கமில்லாமல் வேலை பார்த்த ஸ்டூடியோ ஊழியர்களோ எம்.ஜி.ஆரை எரித்து விடுவது போல் பார்த்தார்கள். ஒலிப்பதிவு பொறியா ளர் சீனிவாசராவ், ''இயந்திரமெல்லாம் சூடாயிருச்சு. இனி எதுவும் செய்ய முடியாது'' என்று மறுத்து விட்டார். எம்.ஜி.ஆர். மௌனமாக வீட்டுக்குச் சென்று விட்டார். அதாவது கோபமா கச் சென்றார் என்று பொருள்.

1-1-61 அன்று வெலிங்டன் தியேட்டருக்கு பிற்பகல் 3-00 மணியிலிருந்து அரசிளங்கு மரி படப்பிரதி மூன்று மூன்று ரீல்களாக லாபரட்டரியிலிருந்து சென்று கொண்டிருந்தன.

இப்படி ஒவ்வொரு படத்தயாரிப்பாளருக்கும் ஒவ்வொரு அனுபவம்.

**த**ன்னை சந்தித்த ஒவ்வொரு மனிதரிடத்திலும் தன்னைப் பற்றிய பாதிப்பை ஏற்படுத்தி யவர் எம்.ஜி.ஆர். அவரது வாழ்க்கையின் ஒவ்வொரு மணி நேரமும் முக்கியமானதாய் அமைந்தது. தான் பிற்காலத்தில் இப்படித்தான் வருவோம் என்று நினைத்தாரோ என்னவோ தன்னைப் பற்றிய, தனக்கு வந்த கடிதம் உட்பட எதையும் அவர் தூக்கி எறிந்ததில்லை.

1967-ல் எம்.ஆர். ராதாவால் துப்பாக்கியால் சுடப்பட்டபோது, அவருக்கு மருத்துவம னையில் கழுத்தில் மாவுக்கட்டு போட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. இரண்டு முறை மாவுக்



'மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன்' படப்பிடிப்பு ஜெய்ப்பூரில் நடந்த போது யூனிட்டில் உள்ளவர்களுக்கு மருந்து, மாத்திரைகளை எடுத்துக் கொடுக்கிறார் எம்.ஜி.ஆர். அவரிடம் மருந்துகள் அடங்கிய பை எப்போதும் இருக்கும்.

...ட்டு போடப்பட்டது. இரத்தக்கறையுள்ள இரண்டையும் அவர் பாதுகாத்து வைத்து இருக்கிறார்.

'சமநீதி' என்ற இதழினை சிறப்பாசிரியராக இருந்து எம்.ஜி.ஆர். நடத்தியிருக்கிறார். வெளிவந்த இதழ்கள் அனைத்தையும் பைண்ட் செய்து பாதுகாத்து வைத்திருக்கிறார்.

ரசிகர்கள், தொண்டர்கள் தனக்கு பரிசாக தந்த பல பொருட்களை அவர் மூலையில் போட்டு முடக்கி வைத்து விடவில்லை. ஒரு தொண்டர் பரிசாக தந்த தனது புகைப்படமொன்றை படுக்கையறையிலேயே அவர் மாட்டி வைத்திருந்தார்.

தான் விலை கொடுத்து வாங்கிய அத்தனை கார்களையும், பிரச்சார வேன்களையும் ராமாவரம் தோட்டத்திலேயே நிறுத்தி வைத்து இருக்கிறார். அதில் ஒன்று இப்போது ஜேப்பியாருக்கு விற்கப்பட்டு இருப்பதாகக் கேள்வி.

1964-ல் எம்.ஜி.ஆருக்கு ரசிகர் ஒருவர் தங்க மோதிர வளையமொன்றை பரிசளித்தார், அதைக் கழற்றக் கூடாதென்ற அன்பு உத்தரவுடன். எம்.ஜி.ஆரும் அதைக் கழற்றவில்லை. படங்களில் நடித்தபோதும் அதை அணிந்து இருந்தார். தாயின் மடியில், எங்கவீட்டுப் பிள்ளை, கன்னித்தாய், முகராசி... இப்படி 1967 வரை வெளிவந்த அத்தனை படங்களிலும் ('பெற்றால்தான் பிள்ளையா'வில் மட்டும் இல்லை) அதைக் காணலாம். ஆனால் துப்பாக்கியால் சுடப்பட்ட பின் மருத்துவமனையில் அதைக் கழற்றும்படி ஆனது.

எம்.ஜி.ஆர். தனது கழுத்தில் தன் தாயினுடைய துளசி மாலையும், கையில் ரசிகர் அளித்த மோதிரம் மட்டுமே அவர் அணிந்த ஆபரணங்கள். பிற்பாடு தனது திருமண நாட்களில் மட்டும் மோதிரங்கள், நகைகள் அணிந்து கொண்டதுண்டு.

எம்.ஜி.ஆர். எளிதில் யாரையும் நம்ப மாட்டார். அதன் பலன் அவர் முதலில் குருவி போல பின்னர் அருவி போல் சேர்த்தவையெல்லாம் எப்படியெப்படியோ... யார், யார்... கைகளுக்கோ போய் விட்டன. அவரது பொருட்களை மட்டுமல்ல, பிறருக்கு கொடுக்க

வேண்டும் என்ற அவரது எண்ணத்தையும் புதைத்து விட்டனர். எம்.ஜி.ஆர். எந்த நேரத்தில் என்ன செய்வார் என்று யாராலும் யூகிக்க முடியாது. இதற்கு பல சம்பவங்களைச் சொல்லாம்.

மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் படப்பிடிப்பு ஜெய்ப்பூரில் 1000-க்கு மேற்பட்ட ஆட்கள், யானைகள், குதிரைகள் என்று பெரிய கூட்டமே படப்பிடிப்பில் பங்கு கொள்ள, ஏதோ வித்தியாசம் இருப்பதை உணர்ந்தார் படத்தின் இயக்குனருமான எம்.ஜி.ஆர், யாருக்கும் குடிப்பதற்கு தண்ணீர் சரியாக கொடுக்கவில்லை என்றதை அறிந்ததும், கோபத்துட ஜீப்பில் ஏறி தங்குமிடத்திற்குச் சென்று விட்டார். அது போர்க்காட்சி என்பதால் இயக்குநர் ளில் கே. சங்கர், எம். கர்ணன் ஆகியோரையும் அழைத்திருந்தார். அவர்கள் எம்.ஜி.ஆரிட சென்று சமாதானம் செய்தும் அவர் இரங்கவில்லை. அதனால் அன்று படப்பிடிப்பும் நடக்கவில்லை. மறுநாள் லாரிகளில் தண்ணீர் எடுத்து வந்த பின் படப்பிடிப்பு நடந்தது.

''மாட்டுக்கார வேலன்'' படப்பிடிப்பு வைகை அணையில் நடந்தபோது பெரும் திர ளான கூட்டம். கேமராவை எந்தப் பக்கம் திருப்பினாலும் தலைகளாகத் தெரிந்தன. என்ன செய்வது? படப்பிடிப்பு ரத்து என்று அனைவரும் மதுரைக்கு புறப்பட்டனர். கூட்ட கலைந்தது. ஆனால் இரண்டு மணி நேரத்திற்கு பின் யூனிட் மீண்டும் வைகை அ திரும்பியது. பிரச்சனையில்லாமல் படப்பிடிப்பு நடந்தது. எல்லாம் எம்.ஜி.ஆரின் யே னையே.

இதே படத்திற்காக பால், உணவு வகையறாக்கள் தேனியிலிருந்து தினமும் வரவ கப்பட்டது. அதில் ஒரு நாள் தடங்கல் ஏற்பட, அவையெல்லாம் வந்தால்தான் படப்பிடி நடக்கும் என்று எம்.ஜி.ஆர். சில மணி நேரங்களுக்கு படப்பிடிப்பையே நிறுத்தி விட்ட பசியின் கொடுமை அறிந்தவர் என்பதால், எந்த ஒரு படப்பிடிப்பிலும் யாரையும் பசியே



'ம.மீ.சு.பாண்டியன்' படப்பிடிப்பு ஜெய்ப்பூரில் நடந்த போது தீபாவளி விருந்து தரப் பட்டது. விருந்தில் லதா, எம்.ஜி.ஆர்., ஒளிப்பதிவாளர் ராமசாமி, எம்.கே. முஸ்தபா, டாக்டர் பி.ஆர்.எஸ்.



'மாட்டுக்கார வேலன்' படப்பிடிப்பில்.

இருக்க விட மாட்டார். அப்படி உணவு வர தாமதப்பட்டால் தானும் சாப்பிட மாட்டார்.

ராமாவரம் தோட்டத்திற்கு யார் சென்றாலும் சாப்பிடாமல் திரும்பியதில்லை.. அதாவது எம்.ஜி.ஆரை சந்தித்தவர்கள் சாப்பிடாமல் திரும்ப முடியாது. அந்த வகையில் ராமாவரம் தோட்ட அடுப்புகள் 'வற்றாத சுரபி' என்று சொல்ல வேண்டும். கணக்கு பார்க்காமல் செலவு செய்தாலும், செலவு கணக்கு பார்க்க தவற மாட்டார் எம்.ஜி.ஆர். வேலையெல்லாம் முடிந்து இரவு வீடு திரும்பினால் தனக்கு வந்த கடிதங்கள், அன்றைய வரவு- செலவு கணக்குகளை எம்.ஜி.ஆர். சரிபார்க்கத் தவறுவதில்லை. தோட்டத்திற்கு எத்தனை பேர் வந்து சாப்பிட்டுப் போனார்கள். செலவு என்ன என்றெல்லாம் பார்ப்பார். சில சமயம் அதையெல்லாம் பார்த்து முடிக்க இரவு 12-00-க்கு மேல் கூட ஆகி விடும்.

எம்.ஜி.ஆரின் உதவியாளர்கள் தவறு செய்தால் தவறாமல் தண்டனை உண்டு. உண்மையை ஒப்புக் கொண்டால் மன்னிப்போடு விடுவிக்கப்படுவார்கள். இல்லையென்றால், அடி, உதைக்கு பஞ்சமிருக்காது.

'மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்' படப்பிடிப்பு ஜெய்ப்பூரில் நடைபெற்றபோது, எம்.ஜி.ஆரின் உடையலங்கார உதவியாளர் ஒருவர் தயாரிப்பாளர்களில் ஒருவரான சேவுகன் செட்டியாரிடம், ''எம்.ஜி.ஆர். வெள்ளித்தட்டில்தான் சாப்பிடுவார்'' என்று சொல்ல, செட்டியாரும் வாங்கிக் கொடுத்திருக்கிறார். வெள்ளித்தட்டை உதவியாளரே வைத்துக் கொண்டார்.

படப்பிடிப்பு முடிந்து சென்னை திரும்பிய பின் சேவுகன் செட்டியார் எம்.ஜி.ஆரைச் சந்தித்துப் பேசியபோது, பேச்சுவாக்கில், ''வெள்ளித்தட்டு வசதியாக இருந்ததா?'' என்று கேட்டிருக்கிறார். அவ்வளவுதான் எம்.ஜி.ஆர். உடனே அந்த உதவியாளரை பிடித்து வரச் சொன்னார். உதவியாளர் வந்ததும், ''அய்யா... என்னை மன்னிச்சிடுங்க'' என்று அழுதபடியே எம்.ஜி.ஆர். காலில் விழுந்து மன்னிப்பு கேட்டு தப்பித்தார்.

வெளிப்புறப் படப்பிடிப்பிற்காக தயாரிப்பாளருக்கு பணப்பற்றாக்குறை ஏற்பட்டால் எம்.ஜி.ஆர். தனது சொந்தப் பணத்திலிருந்து தருவார். 'நவரத்தினம்' படப்பிடிப்பு ஊட்டியில் நடைபெற்றபோது ஒரு நாள் ஏ.பி. நாகராஜனிடம் பணம் இல்லை. எம்.ஜி.ஆர் தன்னிடமிருந்த பணத்தைக் கொடுத்து படப்பிடிப்பு நடைபெறச் செய்தார். பொதுவாகவே எம்.ஜி.ஆர். வெளிப்புறப் படப்பிடிப்பிற்கோ, வெளியூருக்கோ சென்றால் சுமார் லட்ச ரூபாய் வரை நோட்டுக் கத்தைகளாகவே எடுத்துச் செல்வார். 'செக்' சமாச்சாரமெல்லாம் அவரிடம் கிடையாது.

அவுட்டோரில் முதல் ஆளாக இருப்பவர் அவரே. 'ஊருக்கு உழைப்பவன்' படப்பி டிப்பு மைசூரில் நடைபெற்றுக் கொண்டு இருந்தபோது, சென்னையில் தி.மு.க.வில் மு னாள் மந்திரியாக இருந்த என்.வி. நடராஜன் இறந்து போன செய்தி எம்.ஜி.ஆருக்கு வந்த அதனால் அன்றைக்கு படப்பிடிப்பை ரத்து செய்தவர், மாலை 6-00 மணிக்கு என்.வி.எ உடலை எடுத்துச் சென்று விட்டார்கள் என்ற செய்தி வந்த பின், 7-00 மணிக்கு படப்பி டிப்பை ஆரம்பித்து மறுநாள் காலை வரை நடக்கச் செய்தார்.

யூனிட்டிலுள்ளவர்கள் எம்.ஜி.ஆரிடம் ''சென்னை போகவில்லையா?'' என்று கே தற்கு, ''பார்க்கலாம்'' என்றாரே தவிர, எதுவும் பேசவில்லை.

**ஊ**ருக்கு உழைப்பவன் படத்தின் படப்பிடிப்பு நந்திமலையில் நடந்தது. அன்று பிக்னிக் காட்சி படமாக வேண்டும். அதற்கான பொருட்கள் எடுத்து வரவில்லை. காரணம் பிக்னிக் காட்சியைப் படமாக்கச் சொன்னவர் எம்.ஜி.ஆர். முன் திட்டமில்லாததால் யூனிட்டிலுள்ளவர்கள் விழித்துக் கொண்டு இருந்தார்கள். அதே சமயம் சென்னை பெரியமேட்டைச் சேர்ந்த முஸ்லிம் பெருமக்கள் அங்கு வந்து இருந்தார்கள். அவர்களிடம் உள்ள பொருட்களைப் பயன்படுத்தி பிக்னிக் காட்சியை படமாக்கினார்கள். 12-00 மணிக்கு மதிய உணவு இடைவேளை.

நந்திமலையிலுள்ள ஹோட்டலில் சாப்பிடலாமென்றால் அங்கு இடமில்லை. அதனால் மரத்தடியிலேயே சாப்பிடலாமென்று உட்கார்ந்து விட்டார் எம்.ஜி.ஆர். சாப்பிட்ட பின் ஓய்வுக்கு ஹோட்டலில் ஒரு அறை வேண்டுமென்றார். பிற்பகல் 3-30 வரை மட்டுமே ஒரு அறையில் இடமிருந்தது. அதை அறிந்த எம்.ஜி.ஆரின் உதவியாளர் சபாபதி, குண்டுராவ் பெயரைச் சொல்லி எம்.ஜி.ஆரை தங்க வைத்தார்.

அறையில் உள்ள ஈஸி சேரில் சாய்ந்து தூங்க ஆரம்பித்து விட்டார் எம்.ஜி.ஆர். 3-30 தாண்டி விட்டது. அதற்கு பின் அந்த அறையை புக் செய்திருந்த பம்பாய்க்காரர் வந்து விட்டார். ஓட்டல் மேனேஜருக்கோ சங்கடமாகி விட்டது. காரணம் தூங்கும் போது எம்.ஜி. ஆரை எழுப்பினால் அவருக்கு அசாத்திய கோபம் வரும். பூனைக்கு யார் மணி கட்டுவது? படப்பிடிப்பு யூனிட்டில் உதவி இயக்குநராக, நிர்வாக உதவியாளராகவும் இருந்த ராமு, எம்.ஜி.ஆர். இருந்த அறை பக்கம் சென்றார். லேசாக செருமினார். அதைக் கேட்டு எம்.ஜி.



நந்தி மலையில் 'ஊருக்கு உழைப்பன்' ஒரு காட்சி. எம்.ஜி.ஆர்., வெ.ஆ . நிர்மலா.

ஆருக்கு தூக்கம் கலைந்து விட்டது.

விழித்தபடியே கேட்டார்: ''நாளைக்கு இங்கு படப்பிடிப்பு உண்டா?''

''உண்டு. ஆனால் பெங்களூரில் சுற்றுலாத் துறையிடம் 5-00 மணிக்குள் அனுமதி வாங்க வேண்டும்'' என்றார் ராமு. அதன் பின் எம்.ஜி.ஆர். எழுந்து புறப்பட்டுப் போய் விட்டார்.

மறுநாள் பிற்பகல் படப்பிடிப்பிற்கு 2-30-க்கு வந்தார். படப்பிடிப்பு முடிந்து சொந்தக் காரில் ஊட்டிக்கு போக வேண்டும். புறப்படும்போது துணையாக மற்றொரு கார் கேட்டார். ஊட்டி வரை மற்றொரு கார் அவரது காரை பின் தொடர்ந்தது. அவர் எந்தக் காரில் போனார் என்பது அவருக்கே வெளிச்சம். அரசியல் தலைவரான பின் அவரது ஜாக்கிரதை உணர்வு அப்படிப்பட்டது.

ராஜீவ்காந்தியின் மறைவுக்குப் பின் அரசியல் தலைவர்களுக்கு, நாடாள்பவர்களுக்கு கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் தரப்பட்டு, அதனால் மக்களும் கடுமையாக பாதிக்கப் படுகிறார்கள். ஆனால் இந்த அதிரடி பாதுகாப்பு ஏற்பாடுகளெல்லாம் எம்.ஜி.ஆரிடம் எப்போதுமே இருந்ததில்லை. காரணம் தனக்குத் தானே பாதுகாப்பு கொடுக்கத் தெரிந்தவர் அவர். எதிரிகளால் ஆபத்து நேர்ந்தாலும் அதை எப்படி சமாளிக்க வேண்டும் என்று தெரிந்தவர் அவர்.

இதற்கு மற்றொரு சம்பவமொன்றைச் சொல்ல வேண்டும். எம்.ஜி.ஆரிடம் அசோக னுக்கு பிணக்கு ஏற்பட்டிருந்தாலும், 'நேற்று இன்று நாளை' படப்பிடிப்பு அசோகன் இல்லாம லேயே நடந்து கொண்டிருந்தது.

மைசூரில் இதன் படப்பிடிப்பிற்கு அசோகன் வரவில்லை. தொடர்ந்து நான்கு நாட்கள் பாடல் காட்சி படப்பிடிப்பு நடந்தது. 5-வது நாள், தயாரிப்பு நிர்வாகியை அழைத்து

''பாடலின் மீதியை மைசூரில் படமாக்கினால் எவ்வளவு செலவாகும்? சென்னையில் விஜயா கார்டனில் படமாக்கினால் எவ்வளவு செலவாகும்?'' என்று கேட்டார்.

நிர்வாகி அது பற்றிய விபரங்களைச் சொன்னார்: ''சரி மீதியை சென்னையிலேயே படமாக்கிக் கொள்ளலாம்'' என்றார் எம்.ஜி.ஆர். எம்.ஜி.ஆருக்கு சென்னை செல்ல வேண்டிய கட்டாயம். மறுநாள் அங்கு வேறு ஒரு படப்பிடிப்பில் கலந்து கொண்டாக வேண்டும்.

சென்னை செல்ல பெங்களூரில் இருந்து விமான டிக்கெட் எடுக்கச் சொன்னார் எம்.ஜி. ஆர். அதற்காக பெங்களூர் வந்தார், விமான டிக்கெட்டை ரத்து செய்யச் சொல்லி, இரவு ரயிலில் ஏ.சி. கோச்சில் நான்கு டிக்கெட் எடுக்கச் சொன்னார். இரவு 10-00 மணிக்கு ரயில் புறப்படும். ஆனால் எம்.ஜி.ஆரிடம் எந்த அசைவும் இல்லை. இரவு 9-50-க்கு ரயில் டிக்கெட்டுகளையும் ரத்து செய்யச் சொல்லி விட்டார். யூனிட்டிலுள்ளவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

இரவு 12-00 மணிக்கு, மற்றவர்கள் தடுத்தும் கேளாமல், காரிலேயே புறப்பட்டு மறுநாள் காலை 6-00 மணிக்கு சென்னை வந்தவர், 7-00 மணிக்கு குறிப்பிட்டபடி அந்த படப்பிடிப்பில் கலந்து கொண்டார். அதனால் எம்.ஜி.ஆரின் நடவடிக்கைகள் இப்படித்தான் இருக்குமென்று யாராலும் யூகிக்க முடியாது. அவர் புகழ்மிக்க நடிகராக வளர ஆரம்பித்த போதும் இப்படித்தான் இருந்தார்.

'மலைக்கள்ளன்' படத்தில் எம்.ஜி.ஆர்., ஸ்ரீராம் நடிக்கும் ஒரு காட்சி எப்படி படமாக வேண்டும் என்று இயக்குநர் ஸ்ரீராமுலு நாயுடு முதல் நாளே சொல்லிவிட்டுப் போய் விட்டார். அதன்படி மறுநாள் ஒளிப்பதிவாளர் சைலன்போஸ் (இவரது கறுப்பு- வெள்ளை சாதனைகளுக்கு ஈடாக வண்ண ஒளிப்பதிவைக் கூட சொல்ல முடியாது) கேமிரா கோணம் வைத்திருந்தார். படப்பிடிப்பிற்கு வந்த எம்.ஜி.ஆர்., கேமிரா கோணத்தை மாற்றச் சொன்னார். சைலன் போஸோ டைரக்டர் சொன்னபடிதான் படமாக்குவேன் என்று உறுதியாக



'மலைக்கள்ளன்' படப்பிடிப்பில் கேமராவுடன் எம்.ஜி.ஆர்., பின்னணியில் படப்பிடிப் புக் குழுவினர்.



'மலைக்கள்ளன்' படத்தில் எம்.ஜி.ஆர்., பானுமதி.

சொல்லி விட்டார்.

இதனால் எம்.ஜி.ஆர். கோபத்துடன் தலையிலிருந்த ஸ்கார்ப்பை கழற்றி விட்டு, போய் விட்டார். அதனால் அன்று ஸ்ரீராம் கத்தி வீசுவது போல் ஒரு ஷாட் மட்டும் எடுத்தார்கள். மறுநாள் படப்பிடிப்பு நடைபெறுவதற்குள் என்ன நடந்ததோ, ஏது நடந்ததோ, சைலன் போஸ் விருப்பப்படிதான் படப்பிடிப்பு நடந்தது.

'மலைக்கள்ளன்' தமிழ் தவிர ஐந்து மொழிகளில் உருவாக்கப்பட்டது. எம்.ஜி.ஆர்-பானுமதி நடித்த வேடத்தில் தெலுங்கில் என்.டி. ராமராவ்- பானுமதி நடித்தார்கள். படத்தின் பெயர் 'அக்கி ராமுடு'.

மலையாளத்தில் 'தஸ்கர வீரன்' (சத்யன்- ராகினி ஜோடி). கன்னடத்தில் 'பெட்டத கல்லா' (கல்யாணகுமார்- மைனாவதி ஜோடி). இந்தியில் 'ஆசாத்' (திலிப்குமார்- மீனாகுமாரி ஜோடி). சிங்கள மொழியில் 'சூரசேனா' (காந்தி குணதுங்கா- இலங்கை பேரழகி ஒருவரும் நடித்தார்கள்) என்று ஆறு மொழிகளில் வெளிவந்தது. ஜனாதிபதி பரிசு பெற்ற முதல் தமிழ்ப்படம் என்ற பெருமையும் இதற்கு உண்டு. 'மலைக்கள்ளன்' படத்தில் எம்.ஜி. ஆர். வயோதிக முஸ்லிமாக வேடமிட்டு, பானுமதியை 'குழந்தே...' என்று அழைத்தபடி ஒரு மாதிரியான ஸ்டைலில் நடிப்பார். அந்த ஸ்டைல் மற்ற மொழிப் படங்களின் ஹீரோக்களுக்கு வரவில்லையாம்.

மார்க்கெட்டில் புதிதாக எந்த புகைப்பட கேமிரா வந்தாலும், அதை தவறாமல் வாங்கி விடுவார் எம்.ஜி.ஆர். உபயோகித்த பின் யாருக்காவது பரிசாகக் கொடுத்து விடுவார்.

'மலைக்கள்ளன்' படத்தில் நடித்தபோதும் எம்.ஜி.ஆரிடம் ஒரு ஸ்பீனியோ கேமரா இருந்தது. அதன் அப்போதைய மதிப்பே 2,500 ரூபாய். அரைவட்ட வடிவிலான 180 டிகிரி லென்ஸ் உள்ள கேமிராவால் படமெடுத்தால் Panaramic View-வில் படம் வரும்.

எம்.ஜி.ஆரின் அந்தரங்கமானது பாமரன் அறியாதது. தீவிரமாக பத்திரிகைகள் படிப்பவர்கள், அரசியல்- சினிமா வட்டாரத்தினர் மட்டுமே எம்.ஜி.ஆரின் அந்தரங்கம் அறிவார்கள். அதுவும் கேள்விப்பட்டதன் வாயிலாக 'நேருக்கு நேர் பார்த்தேன்' என்று சொல்வதற்கு யாருமில்லை.

இன்றைக்கு அரசியலாகட்டும், சினிமாவகட்டும், வெளிப்படையாக சிலர் கேவலமாக நடந்து கொள்வார்கள். அதெல்லாம் எம்.ஜி.ஆரிடம் பார்க்க முடியாது.

வெளிப்படையாக சில முரண்பட்ட விஷயங்களும் எம்.ஜி.ஆரிடம் உண்டு. 1966-ல் இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் எம்.ஜி.ஆர். இலங்கை சென்றிருந்தார். எம்.ஜி.ஆருடன் சரோஜாதேவியும் சென்றார். ''எம்.ஜி.ஆர். தன் மனைவியை விட்டு விட்டு சரோஜாதேவியை அழைத்துச் செல்லலாமா?'' என்ற கேள்வியை காங்கிரஸ் கட்சியிலுள்ள சிலர் கேட்டார்கள். சில பத்திரிகைகளும் அதை விமர்சனம் செய்தன. ''எம்.ஜி.ஆர். ஒரு நடிகராக இலங்கை சென்றிருக்கிறார். அதனால் சக நடிகை என்ற முறையில் சரோஜாதேவியும் உடன் சென்றிருக்கிறார். இதிலென்ன குற்றமிருக்கிறது? காமாலைக் கண்ணுக்கு கண்டதெல்லாம் மஞ்சளாகத் தெரியுமாம்'' என்று எம்.ஜி.ஆர். தரப்பில் பதிலடி தரப்பட்டது. ஆனால் எம்.ஜி.ஆருடன் நடிகையரோ, வேறு பெண்களோ இணைத்து பேசப்பட்டாலும், எழுதப்பட்டாலும் அதனால் அவரது இமேஜ் எந்தளவும் பாதிக்கப்பட்டதில்லை. காரணம் அவர் மற்றவரது அந்தரங்கம் பற்றி எழுதியதோ, மேடையில் பேசியதோ இல்லை. மற்றவர் ஒழுக்கம் பற்றி விமர்சனமும் செய்ததில்லை. அந்த நாவடக்கம்தான் கடைசி வரை மக்கள் மத்தியில் அவரை மாமனிதராக வாழ வைத்தது.

சில சமயம் அரசியல் மேடையில் அவரது பேச்சு வேடிக்கையாக இருக்கும். 1971-ல் நடந்த தமிழக சட்டமன்றத்திற்கான தேர்தல் பிரசாரத்தில் எம்.ஜி.ஆரும், சிவாஜியும் கடுமையாக மோதிக் கொண்டார்கள்.

அப்போது சிவாஜி ஒரு கூட்டத்தில், ''என்னோடு நடித்து நீ ஜெயிக்க முடியுமா?'' என்று கேட்டார்.

அதற்கு எம்.ஜி.ஆர். ''எனது படங்களின் வசூலை உனது படங்கள் எட்டிப் பிடிக்க முடிந்ததா? நான் வாங்கும் சம்பளம் நீ வாங்க முடியுமா? என்னைப் போல் சண்டைக் காட்சியில் நீ நடிக்க முடியுமா? நீ நடிப்பு போட்டிக்குத் தானே சவால் விட்டாய். நான் தயார். எப்போது, எங்கு வைத்துக் கொள்ளலாம்?'' என்று பதில் கொடுத்தார்.

நல்ல வேளையாக காங்கிரஸ் தலைவர்கள் குறுக்கிட்டு சிவாஜியிடம் ''இப்படியெல்லாம் சவால் பிரச்சாரமெல்லாம் வேண்டாம்'' என்று சொல்ல, அத்தோடு சிவாஜி எம்.ஜி.ஆரின் சினிமாவைத் தொடுவதை நிறுத்தி விட்டார்.

பொதுவாகவே ''எம்.ஜி.ஆருக்கு நடிக்கத் தெரியாது. அழ வேண்டிய காட்சிகளில் தூணைப் பிடித்துக் கொள்வார் அல்லது முகத்தை மூடிக் கொள்வார். உணர்ச்சிகரமாக வசனம் பேசத் தெரியாது'' என்று எம்.ஜி.ஆரைப் பிடிக்காத, படித்த சினிமா ரசிகர்கள் மத்தியில் ஒரு எண்ணம் உண்டு. பேச்சும் உண்டு. குறிப்பிட்ட சில படங்களைப் பார்த்து விட்டு அவர்கள் அப்படி கருத்துக் கூறுவது ஏற்புடையதல்ல.

எம்.ஜி.ஆரின் அத்தனை படங்களையும் பார்த்தவர்களுக்கு தெரியும் அவர் சிறந்த நடிகரா இல்லையா என்பது.

எம்.ஜி.ஆர். ஆரம்பம் முதலே சீரியஸ் நடிப்பை விரும்பியதில்லை என்று சொல்வதை விட, அதை தன்னிடம் மக்கள் விரும்பவில்லை என்பதை புரிந்து கொண்டிருந்தார் என்பதே



'சங்கே முழங்கு' படப்பிடிப்பில் எம்.ஜி.ஆர்.

சரியாகும். 'பாசம்' அதற்கு உதாரண படம்.

'பாசம்' படத்தின் முடிவில் எம்.ஜி.ஆர். இறந்து போவது போல் வந்ததை மக்களால் ஜீரணிக்க முடியாததால், அது படுதோல்வி அடைந்தது. 'ராணி சம்யுக்தா'வில் மன்னன் பிரதிவிராஜ் (எம்.ஜி.ஆர்.) மாண்டு போனதையும் மக்கள் ஏற்கவில்லை. 'மதுரை வீரன்' கதையின் முடிவு வேறு விஷயம். அது மக்களிடம் தெருக் கூத்து, நாடக வடிவில் பழக்கப் பட்ட கதையாகும். அதனால் அதன் நிஜ கதையின் முடிவு எப்படியிருந்தாலும் படத்தின் வெற்றி நிச்சயமானது.

எம்.ஜி.ஆர். எப்படிப்பட்ட இமேஜை மக்கள் மனத்தில் விதைத்திருந்தாரோ, அதிலி ருந்து அவரால் மீள முடியவில்லை என்பது நிஜம். நூறுக்கு மேற்பட்ட படங்களில் நடித்திருந் தாலும் எம்.ஜி.ஆருக்குப் பிடித்த படங்கள், 'என் தங்கை', 'பெற்றால்தான் பிள்ளையா?' இரண்டு மட்டுமே.

'பெற்றால்தான் பிள்ளையா?'வில் எம்.ஜி.ஆரின் நடையே விசித்திரமாக இருக்கும். அவரது வழக்கமான ஸ்டைல், கையைக் காலை தூக்கி (பாடல் காட்சியில்) நடிப்பது எல்லாம் இதில் இல்லை. 'சர்க்கரை கட்டி ராசாத்தி' என்ற பாடல் காட்சி தவிர படம் முழுவதும் எம்.ஜி.ஆர். சாதாரண உடையணிந்தே நடித்திருந்தார்.

'செல்லக்கிளியே மெல்ல பேசு தென்றல் காற்றே மெல்ல வீசு' என்ற சோகமான பாடல்

காட்சியில் எம்.ஜி.ஆர். தூணைப் பிடிக்கவுமில்லை. முகத்தை மறைக்கவுமில்லை. எம்.ஜி.ஆரின் இமேஜுக்கு மாறுபட்டு வந்த படம். எம்.ஜி.ஆர். அபிமானிகளை மட்டுமின்றி, மற்ற ரசிகர்களையும் கவர்ந்தது. அதனால் படம் வெற்றி பெற்றது.

1953-ல் எம்.ஜி.ஆர்., பி.எஸ். வீரப்பா, ஏ. காசிலிங்கம் இவர்களுடன் கலைஞர் கருணாநிதியும் கூட்டாக சேர்ந்து தயாரித்த படம் 'நாம்'. மேகலா பிக்சர்ஸ் பேனரில் வந்த முதல் படம் இது. படம் தோல்வியுற்றதால் இந்த கூட்டு தொடரவில்லை.

'நாம்' படத்தினை இப்போது காண்பவர்கள் வியந்து போவார்கள். காரணம் எம்.ஜி ரின் இமேஜுக்கு சிறிதும் பொருந்தாத படம் அது.

பி.எஸ். வீரப்பா வீட்டு வேலையாளாக அதில் எம்.ஜி.ஆர். நடித்திருந்தார். எம்.ஜி.ஆர். வேலையில் குற்றம் கண்டு பிடிக்கும் வீரப்பா அவரை ஒரு காட்சியில் மிதிமிதியென்று மிதித்து உதைப்பார். இப்படி எம்.ஜி.ஆர். வில்லனிடம் அடி வாங்குவது போல் எந்தப் படத்திலும் பார்த்திருக்க முடியாத அடி அது. எம்.ஜி.ஆர். அத்தனையும் பொறுத்துக் வார். ஆனால் ரசிகர்கள் பொறுத்துக் கொள்வார்களா? வீரப்பாவை மிக மோசமாக தீர்த்து விட்டார்கள், பின்னாளில் மறு திரையீடுகளில்.

ஒரு காட்சியில் எம்.ஜி.ஆர். நீண்ட நேரம் உணர்ச்சிகரமாக வசனம் பேசுவார். ஷாட் அது. கேமராமேன் கேமராவை ஓடவிட்டு டீ குடிக்க போய் விட்டார் போலும்' என் படம் பார்த்தவர்கள் விமர்சனம் செய்யும் அளவில் நீண்ட ஷாட் அது.

படத்தில் பார்வையிழந்தவராகவும் எம்.ஜி.ஆர். (பிற்பகுதியில்) வருவார் காட்சிகளெல்லாம் மிக சோகமானவை.

1976-ல் வந்த படம் 'ஊருக்கு உழைப்பவன்'. தன் குழந்தை இறந்து போன றிந்து எம்.ஜி.ஆர். ஓடோடி வருவார். சுடுகாட்டில் குழந்தை புதைக்கப்பட்டது அங்கு செல்வார். குலுங்கு குலுங்கி அழுவார். பல கோணங்களில் அந்தக் காட்சியை ப பிடித்து இருப்பார்கள்.

'நீதிக்கு தலைவணங்கு'.எம்.ஜி.ஆரின் மாறுபட்ட நடிப்பைக் கொண்ட படங்களில் ஒன்று.

'எங்க வீட்டு பிள்ளை'யில் கோழை எம்.ஜி.ஆரின் வேடம் எல்லா ரசிகர்களையும் கவர்ந்ததாயிற்றே. 'சிரித்து வாழ வேண்டும்' படத்தில் வரும் 'அப்துல் ரகுமான்' என்ற முஸ்லிம் வேடத்திற்காக குரலை மாற்றிப் பேசியிருந்தார் எம்.ஜி.ஆர். இப்படி பல படங்களை சொல்லிக் கொண்டே போக முடியும். ஆனால் பார்ப்பவர்களுக்கு பெரிய வித்தியாசம் தெரியாத காரணம், எம்.ஜி.ஆரின் படங்களின் கதையம்சம் ஒரே பார்முலாவில் இருந்த கோளாறுதான்.

சிவாஜியை தவிர்த்து விட்டு பார்த்தால், சினிமாவில் எம்.ஜி.ஆரின் ஸ்டைல், மேனரிஸங்களில், ஒரு ரிதம் இருக்கும். அதை பின்னாளில் நாம் எந்த நடிகரிடமும் கண்டதில்லை. இதெல்லாம் சொல்லிப் புரிவதல்ல. பார்த்து தெரிந்து கொள்வதே சரியாக இருக்கும்.

# சண்டைக் காட்சிகளில் நான்

—எம்.ஜி.ஆர்.

ஒரு நடிகன் பல்வேறு குண விசேடங்கள் உள்ள பாத்திரங்களை ஏற்று நடித்தால்தான் நடிப்பில் பல புதுமைகள் பிறக்க முடியும்.

இப்போது நான் அறிமுகமாகியுள்ள அளவுக்கு அறிமுகமாகாத நிலையில், முன்பு, தங்கை' படத்தில் நடித்தேன். அந்தப் படம் வெற்றி வாயிலை எட்டிப் பிடித்த படமும் அதில் எனக்கு சண்டைக் காட்சிகள் இல்லை. ஆனால் அது வெற்றி கண்டது.

நாளடைவில் நான் நடிக்கும் படத்தில் சண்டைக் காட்சிகள் இருக்க வேண்டும் என்ற நிலை எப்படியோ நிரந்தரமாக உண்டாக்கப்பட்டு விட்டது. அதற்குப் படத் தயாரிப்பாளர் கள் சொல்லும் காரணம், 'ரசிகர்கள் உங்களுடைய சண்டைக் காட்சிகளை முக்கியமாக



'என் தங்கை'யில் எம்.ஜி.ஆர்., ஈ.வி. சரோஜா.

எதிர்பார்க்கிறார்கள்' என்பது. அது மட்டுமல்ல, விநியோகஸ்தர்கள் அப்படிச் சொல்கிறார் கள் என்பதும் அவர்கள் கூறும் காரணம்.

நான் சண்டைக் காட்சியில் நடித்ததனாலா 'என் தங்கை' படம் வெற்றி கண்டது? இல்லையே. அது இடையில் ஏற்பட்ட ஒரு நிலை.

அண்மையில் வெளிவந்து, வெற்றியுடன் ஓடிக் கொண்டு இருக்கும் 'பெற்றால்தான் பிள்ளையா?' படத்தில், தேவையற்ற ஒரு கட்டத்தில் ஒரு சண்டைக் காட்சி படமெடுக்கப் பட்டு இணைக்கப்பட்டு இருந்தது. 'ரசிகர்களுக்குத் தேவை' என்ற காரணத்தைச் சொல்லியே அதை எடுத்தும், இணைத்தும் இருந்தார்கள். இப்போது நீங்கள் காணும் அந்தப் படத்தில்



'பெற்றால் தான் பிள்ளையா' படத்தி


அந்தக் காட்சி கிடையாது. அதைச் சிறிது கூட, அந்தக் கட்டத்தில் உங்கள் ரசனை எதிர் கவில்லை என்பதும் உறுதியாகி விட்டது. அது இருந்தால்தான் ரசனை உணர்வுக்கு யாக இருந்து இருக்கக் கூடும் என்பதும் தெளிவாகத் தெரிந்து விட்டது.

'அந்தச் சண்டைக் காட்சி வேண்டாம்' என்கிற என் கருத்தோடு, டைரக்டர்களின் கருத்தும் இணைந்த காரணத்தால், அது நீக்கப்பட்டது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகி றேன்.

இவ்வாறு எல்லாப் படங்களிலுமே எது தேவையோ, அதையே எதிர்பார்க்கும் 'ரசனை வரையறை' ரசிகர்களாகிய உங்களிடம் ஏற்பட வேண்டும். அந்த வரையறை உணர்வை நீங்கள் படத் தயாரிப்பாளர்களுக்கும், விநியோகஸ்தர்களுக்கும், ஏன் படத் துறையில் சம்பந்தப்பட்ட அனைவருக்குமே தெரிவிக்க வேண்டும். உணர்த்த வேண்டும்' - என்று 1967-ல் எம்.ஜி.ஆர். கட்டுரையொன்றில் குறிப்பிட்டு உள்ளார்.

சதானந்தவதி உயிருடனிருந்த போதே வி.என். ஜானகி எம்.ஜி.ஆர். மனைவியானா லும், அவர் மூலம் வாரிசு உண்டாக்கிக் கொள்ள முடியாத நிலை. சதானந்தவதியின் மனம் நோகக் கூடாது. குடும்பத்தில் குழப்பம் நேரக் கூடாது என்பதற்காக ஜானகி மூலம் வாரிசுக்கு வழி வகுத்துக் கொள்ளவில்லை. சதானந்தவதி இறந்தபின், எம்.ஜி.ஆர். ஐம்பது வயதை நெருங்கிக் கொண்டிருந்தார். அதற்கு பின் குழந்தை பெறுவது சரியாகுமா?

ஆனால் உலகம் என்ன சொன்னது, எம்.ஜி.ஆர். ஆண்மையற்றவர் என்று. கமல்ஹாச னுக்கும் இதே அவச்சொல் இருந்தது. ஆனால் அவர் அதை நீக்கிக் கொண்டார்.



# 'அவருக்குத் தெரியாத தொழில் நுட்பமில்லை'

சிவந்த மண், நெஞ்சிருக்கும் வரை, அன்பைத் தேடி ஆகிய சிவாஜி நடித்த படங்களை ஒளிப்பதிவு செய்த என். பாலகிருஷ்ணன், எம்.ஜி.ஆர். நடித்த உரிமைக்குரல், ஊருக்கு உழைப்பவன், மீனவ நண்பன், இதயக்கனி, அண்ணா நீ என் தெய்வம் (அது தான் 'அவசர போலீஸ் 100') ஆகிய படங்களிலும் ஒளிப்பதிவாளராக பணி புரிந்திருக்கிறார். எம்.ஜி.ஆருடன் அவரது அனுபவங்கள் உங்களை பல்வேறு உணர்வுகளில் ஆழ்த்தும்.

முன்னாள் தமிழக முதல்வரும் புரட்சி நடிகருமான திரு. எம்.ஜி.ஆருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது என் அதிர்ஷ்டம் என்றே சொல்ல வேண்டும்.

எம்.ஜி.ஆர். 'நாடோடி மன்னன்' படத்தைத் தயாரித்தபோது நான் ஜெமினி ஸ்டுடியோவில் கேமரா உதவியாளனாக இருந்தேன். அவர் தன் படத்தில் பாலத்தில் நடக்கும் ஒரு சண்டைக் காட்சிக்காக ஜெமினி ஸ்தாபனம் வைத்திருந்த 'ஹை ஸ்பீட்' கேமராவை வரவழைத்திருந்தார். அமெரிக்காவிலிருந்து வரவழைக்கப்பட்ட சாதனம் அது.

அன்று மாலை இரண்டு முதல் ஒன்பது மணி வரை கால்ஷீட். திட்டமிட்டபடி ஒன்பது மணிக்கு சண்டைக் காட்சி முடியவில்லை. ஓவர்டைம் செய்து காட்சியை தொடர்ந்து எடுக்கலாம் என்றார்கள். நான் உடனே, ''இம்மாதிரி விஷயங்களில் எல்லாம் நானாக எந்த முடிவும் எடுக்க முடியாது. டெலிபோனில் நானே தொடர்பு கொண்டு அதிகாரிகளிடம் அனுமதி பெற வேண்டும்; இல்லாவிட்டால் கேமராவை உடனே எடுத்துப் போக வேண்டும்'' என்றேன். இத்தனைக்கும் அன்றுதான் நான் எம்.ஜி.ஆரையே பார்த்தது.

சொன்னபடி ஜெமினி ஸ்டுடியோவுக்கும் போன் செய்து அனுமதி வாங்கினோம். ஒரு சிலர் என்னைப் பார்த்து, ''என்ன பாலு, இது எம்.ஜி.ஆர். படம். கொஞ்சம் கூடப் பயமில்லாமல் கேமரா ஓவர்டைமுக்காக ஸ்டுடியோவைக் கேட்க வேண்டும் என்கிறாய். விஷயம் அவர் காதுக்கு எட்டினால் என்ன ஆகும்?'' என்று பயமுறுத்தினார்கள்.

நான் சிரித்துக் கொண்டே மவுனமாக இருந்தேன். பிற்பாடு நான் கம்பெனி சட்டப்படி அனுமதி வாங்கி கேமராவை இயக்கியது பற்றி எம்.ஜி.ஆர். மகிழ்ச்சியுற்றார்.

டைரக்டர் ஸ்ரீதர் திடீரென்று 'உரிமைக்குரல்' படத்தைத் துவக்கினார். அப்போது முக்தா சீனிவாசன் தயாரித்த 'அன்பைத் தேடி' படத்தின் கேமராமேனாக நான் பணிபுரிந்து கொண்



'ஊருக்கு உழைப்பவன்' ஆரம்ப நாளில் வாணிஸ்ரீ, எம்.ஜி.ஆர்., ஒளிப்பதிவாளர் பாலகிருஷ்ணன்.

டிருந்தேன். அதுவோ சிவாஜி படம்.

சித்ராலாயாவின் சார்பில் தயாரிக்கப்படவிருந்த 'உரிமைக்குரல்' படத்தில் எங்க யூனிட்டை உபயோகித்துக் கொள்ள ஸ்ரீதர் விரும்பினார். நான் டைரக்டரிடம், ''முக் பிலிம்ஸ படத்தை நான் ஏற்கனவே ஒப்புக்கொண்டு விட்டேன். உங்கள் பட பணிபுரிய வேண்டுமானால் நாலு நாட்கள் கிராஷ் ஆகும். அந்த நாலு நாட்கள் வே யாரையாவதுதான் அனுப்ப முடியும்'' என்று சொல்லி விட்டேன்.

'எதற்கும் நான் எம்.ஜி.ஆரிடம் கேட்டுப் பார்க்கிறேன்' என்றார், டைரக்டர் ஸ்ரீதர்.

அன்று மாலையில் யதார்த்தமாக சித்ராலயா ஆபீஸ் பக்கம் போனேன். இதற்கிடையே ஸ்ரீதர் எம்.ஜி.ஆரிடம் தனது சொந்த யூனிட்டை உபயோகித்துக் கொள்ள அனுமதி வாங்கி விட்டார். எம்.ஜி.ஆர். அவர்களின் பெருந்தன்மைய கேள்விப்பட்டு வியந்தேன்.

'உரிமைக்குரல்' படப்பிடிப்பின் முதல் நாள். பூஜை முடிந்தது. ஸ்ரீதர் சம்பிரதாயப்படி எம்.ஜி.ஆரிடம் என்னை அறிமுகப்படுத்தினார்.

'இவரை எனக்கு ஏற்கனவே தெரியுமே!' —சிரித்தார் எம்.ஜி.ஆர். உண்மையைச் சொல்லி விடுகிறேன். எனக்கு அன்று கொஞ்சம் நடுக்கம்தான்.

லைட் போட்டு சரிபார்க்க ஒரு உதவியாளரைக் கூப்பிட்டு நிற்கச் சொன்னேன். மேக் அப் டச்சப் செய்து கொண்டிருந்த எம்.ஜி.ஆர். பரபரப்பாக ஓடி வந்து தானே குறிப்பிட்ட இடத்தில் நின்றார். எனக்கோ ஒரே வியப்பு!

நாங்கள் படப்பிடிப்பைத் துவங்குவதற்கு முன்னால் ஒரு பிரபல கேமரா மேன் எங்களை ஒரு விஷயத்தில் எச்சரித்திருந்தார். குறிப்பிட்ட கோணங்களில் எம்.ஜி.ஆரை நிற்க வைத்துப் படமாக்கினால் அவருக்குப் பிடிக்காது என்று.

அன்று லோ ஆங்கிளில் அவரைப் படமெடுக்க வேண்டும். அந்தக் காட்சி வந்ததும் ஸ்ரீதர் என்னை ஜாடையாகப் பார்த்தார். பிரபல கேமராமேனின் எச்சரிக்கை ஞாபகத்துக்கு வந்தது. நான் ஸ்ரீதரைப் பார்த்தேன். எங்கள் இருவரையும் பார்த்த எம்.ஜி.ஆர். விஷயத்தை

ஊகித்தவாறே, 'நீங்கள் எந்தக் கோணத்தில் வேண்டுமானாலும் படம் எடுங்கள். எனக்கு ஆட்சேபணையில்லை.' என்றார்.

எங்களுக்கு ஒரே மகிழ்ச்சி. அன்று அவரது ஒத்துழைப்புடன் ஒரு பெரிய காட்சியை மளமளவென்று படமாக்கினோம்.

இன்னொரு நிகழ்ச்சி. மைசூரில் நூறு அடி நீளமான பாலத்தில் தீப்பிடிப்பது போலவும் அது சமயம் எம்.ஜி.ஆர். ரேக்ளா வண்டியில் பாலத்தில் வருவது போலவும் ஒரு சீன் எடுக்கப்பட வேண்டியிருந்தது. அந்தக் காட்சியில் நடிப்பது பெரிய நடிகரான எம்.ஜி. ஆருக்கு ஆபத்தாக முடியக் கூடும் என்று நினைத்து 'டூப்' ஏற்பாடு செய்திருந்தோம். பாலத்தில் சிறு விறகுகளைப் போட்டு கொளுத்தி விட்டோம். நல்ல உயரமாக தீப்பொறி பரவி விட்டது.

திடீரென்று எம்.ஜி.ஆர். 'படத்திலே இது ரொம்ப முக்கியமான காட்சி. நானே நடிக்கி றேன். டூப் வேண்டாம்!' என்றார் கண்டிப்பாக. அவரிடம் எப்படி வாதாட முடியும்? பயந்து கொண்டே கேமராவை செட் அப் செய்தோம்.

'நான் நீங்கள் சொல்வது போல ஒத்திகையில் வருகிறேன். ஸூம் (Zoom) வைத்து நல்லா எடுங்க. அப்புறம் உங்க 'ஐடியா'ப்படி சீனை எடுங்கள்' என்ற எம்.ஜி.ஆர். கடகட வென்று ரேக்ளா வண்டியோடு எதிர்ப் பக்கம் போய் விட்டார்.

பாலத்தில் நெருப்பு. எங்கள் மனதிலும் 'தீ' காட்சி நல்லபடியாக முடிய வேண்டுமே என்ற பயம். பல ஸ்டண்ட் மாஸ்டர்கள் எம்.ஜி.ஆருக்கு எதுவும் நேர்ந்து விடாத வண்ணம் எச்சரிக்கையாக பல இடங்களில் மறைந்து நின்றார்கள்.

'வரலாம்' — நாங்கள் கையை அசைத்தோம். எரிகின்ற நெருப்புப் பாலத்தில் எம்.ஜி. ஆர். சர்வ சாதாரணமாக தனது உயிரையும் துச்சமாக மதித்து குதிரை வண்டியை ஓட்டி ...ர்.

ஒத்திகை முடிந்தது. நல்ல வேளை! ஆபத்து எதுவுமில்லை. பாலத்தை நெருங்கியதும் எம்.ஜி.ஆர். எச்சரிக்கையாக கால்களைத் தூக்கி வைத்துக் கொண்டு குதிரையைத் தட்டி விட்டார். மறுபடியும் 'டேக்'. எல்லாமே கண நேரத்தில் நடந்து விட்டது! 'ஷாட் ஓ.கே!'

ஸ்ரீதர் உற்சாகத்துடன குரல் கொடுத்தார். எம்.ஜி.ஆர். சர்வ சாதாரணமாக 'வேண்டுமா னால் இன்னொரு டேக் எடுங்களேன்' என்றார். அடுத்த வினாடியே வண்டியிலிருந்த குதிரையைக் காணோம்? எங்கே அந்தக் குதிரை.

'மீண்டும் அந்த தீப்பிடித்த பாலத்தில் வர வேண்டுமா?' எம்.ஜி.ஆர். டைரக்டரிடம் கேட்டுக் கொண்டிருக்கும்போதே நெருப்பைப் பார்த்து பயந்த குதிரை, பாலத்துக்குப் பக்கத் தில் உள்ள பள்ளத்தில் இறங்கி சரிவாக ஓட ஆரம்பித்தது.

சட்டென்று பார்க்கும்போது அந்தக் குதிரை யார் கண்ணிலும் படவில்லை. ஸ்டண்ட் பார்ட்டியைச் சேர்ந்த ஒருவர் ஓட்டமாக கீழே ஓடி ரேக்ளா வண்டியையும், குதிரையையும், மேலே தள்ளிக் கொண்டு வந்தார்.

'ஊருக்கு உழைப்பவன்' படத்துக்காக பம்பாய் கடற்கரையில் ஒரு வித்தியாசமான காட்சி படமாக்கப்பட்டது.

கடலில் ஒரு படகில் தேங்காய் சீனிவாசன் செல்வது போலவும் அந்தப் படகை ஒரு ஹெலிகாப்டர் துரத்திச் செல்வது போலவும் காட்சி. தேங்காய், ஹீரோவின் உதவியாளர். ஹெலிகாப்டரில் இருப்பது வில்லன் வீரப்பா.

அது ராணுவத்தைச் சேர்ந்த இடம். அதனால் விசேஷ அனுமதி பெற்று படப்பிடிப்பை நடத்தினோம். கீழே கடலில் படகு; வானில் ஹெலிகாப்டர், அதற்கு மேலே ஒரு ஹெலிகாப்

டரில் கேமராவுடன் நான்.

ராணுவத்தைச் சேர்ந்த இடமாதலால் நாங்கள் எடுக்கும் படப்பிடிப்பை மேற்பார்வையிட ஒரு அதிகாரியை நியமித்திருந்தார்கள். அவர் ஒரு சர்தார்ஜி. எம்.ஜி.ஆர். எப்படியெல்லாம் படப்பிடிப்பு நடக்க வேண்டும் என்பதை விளக்க ஒரு கூட்டம் கூட்டினார்.

ஹெலிகாப்டரில் இரண்டு மைல் தூரத்தில் இருந்து பறந்து வர வேண்டும். படகு கடலில் போகும். இன்னொரு ஹெலிகாப்டரில் கேமரா. இவற்றையெல்லாம் குழப்பமில்லாமல் படம் எடுப்பது எப்படி?

ராணுவ அதிகாரியிடம் 'சார், ஹெலிகாப்டரில் இரண்டே பேர்தான் போக முடியு[illegible] ஒன்று கேமராமேன். இரண்டாவது நீங்கள். நீங்கள் தயவு செய்து கொஞ்சம் கீழே இறங்கிக் கொண்டால் எம்.ஜி.ஆர். ஒரு முறை பறந்து வந்து ஆங்கிள் பார்க்க சௌகரியமாக இருக்கும்' என்று கேட்டோம்.

அவர் மறுத்து விட்டார். 'அதெல்லாம் முடியாது. உங்களைக் கண்காணிப்பதே எனது வேலை. கேமரா பக்கத்தில் நிற்க வேண்டும் என்பதே எனக்கு மேலிடத்து உத்தரவு' என்றார்.

ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத இந்த சேஸிங் காட்சியை எப்படி எடுப்பது? ஒரு[illegible]ருக்கொருவர் உத்தரவு கொடுக்கவோ, பேசிக் கொள்ளவோ முடியாதே?

எம்.ஜி.ஆர். ஆழ்ந்து சிந்தித்து திட்டமிட்டார். எங்களுக்குக் காட்டுவதற்காக பச்சை, சிவப்பு, வெள்ளை, மஞ்சள் போன்ற நிறங்களில் கரையிலிருந்து வானத்தில் பறக்கும் கொடிகளைத் தயாரித்தார். பச்சைக்கொடி: கிளம்பலாம். சிவப்பு: நிறுத்துங்கள். கே[illegible] இயங்க வெள்ளை. இப்படி அடையாளம் வைத்துக் கொண்டோம்.

படப்பிடிப்பு துவங்குவதற்கு முன்பு எம்.ஜி.ஆர். என்னைப் பார்த்து 'இது கடற்கரை[illegible] ரொம்பவும் ரிஸ்க் எடுக்க வேண்டாம். மிகவும் எச்சரிக்கையாக இருங்கள். மேலே[illegible] ஹெலிகாப்டர் பறக்கும்போது அதன் மேலே செங்குத்தாக இன்னொரு ஹெலி[illegible] பறப்பது ஆபத்து. மேலே உள்ள ஹெலிகாப்டரின் காற்று கீழே உள்ள ஹெலிகாப்டரை கடலில் தள்ளிவிடும். அதனால் சற்று பக்கவாட்டில் தள்ளி இருந்து படப்பிடிப்பை நடத்துங்கள்' என்றார்.

உடனே ஒரு ஹெலிகாப்டர் பைலட் எம்.ஜி.ஆரின் கையை மகிழ்ச்சியுடன் குலுக்கியவாறே, 'நான் ஒரு பைலட் என்றாலும் இந்த முக்கிய விஷயம் மறந்து போச்சு. யூ ஆர் ரைட்' என்றார்.

சின்ன விஷயமாகட்டும், பெரிய விஷயமாகட்டும் எம்.ஜி.ஆரின் நேரடிக் கண்காணிப்பில் படப்பிடிப்பு நடந்தபோது அவரது எண்ண அலைகளில் எழுந்தபடி படப்பிடிப்பை வெற்றிகரமாக எடுக்க முடிந்தது! எம்.ஜி.ஆர். ஒரு ஹெலிகாப்டரிலிருந்து மற்றொரு ஹெலிகாப்டரில் உள்ள வில்லன் வீரப்பாவைச் சுடுவது போலவும், அந்த ஹெலிகாப்டர் தீப்பிடித்து எரிந்து நீரில் தத்தித் தத்திச் சென்று இறுதியில் அது முழுகுவது போலவம் ஒரு கஷ்டமான காட்சி எடுக்கப்பட வேண்டியிருந்தது..

கரித்தூளை புகைய வைத்தும் வெடி வெடித்தும் இக்காட்சியை தந்திரமாக எடுத்தோம். இந்த நேரத்திலும் எம்.ஜி.ஆர். ஒரு முக்கியமான விஷயத்தைக் கூறினார்.

முதலில் ஹெலிகாப்டர் வானில் பறக்கும்போது கரித்தூள் புகை காற்றில் எந்தப் பக்கம் போகிறது என்பதைப் பார்க்கச் சொன்னார். காற்று எதிர் திசையில் அடித்தால் புகை ஹெலிகாப்டரின் மீதே பட்டு பைலட் பார்த்து ஓட்ட முடியாதபடி நேரிடலாம் என்றார். அவர் சொன்னது நூற்றுக்கு நூறு சரி என்பதை ஒத்திகையில் தெரிந்து கொண்டோம். இவ்வாறு



'இதயக் கனி'யில் ராதா சலூஜாவுடன் எம்.ஜி.ஆர்.

பல நுணுக்கமான விஷயங்களைக் கூட எம்.ஜி.ஆர். உன்னிப்பாகக் கவனித்து செயல்பட்டதால் படப்பிடிப்பு சரிவர நடந்தது.

கடற்கரையை ஒட்டியிருக்கும் சேற்றில் எம்.ஜி.ஆரும் ஸ்டண்ட் மாஸ்டர் ஷெட்டியும் சண்டை போடுவதுபோல ஒரு சீன். அது ஒரு சதுப்பு நிலம். அதையும் நாங்கள் வானில் ... படமாக்க ஏற்பாடு. இருவரும் சேற்றில் இறங்கினார்கள். முழங்கால் வரை சேற்றில் சிக்கினார்கள். அப்புறம் சண்டை போட்டால் அது தத்ரூபமாக இல்லை. எம்.ஜி.ஆர். சொன்ன யோசனையின் பேரில் நூறு சதுர அடி பிளைவுட் பலகை வாங்கி அதை சேற்றில் புதைத்தோம். அதன் மீது இருவரும் சண்டையிட்டபோது நல்ல எஃபெக்ட் கிடைத்தது!

பம்பாய் படப்பிடிப்பு நடந்து முடிந்தவுடன் பெங்களூருக்கு விரைந்தோம். அங்கு கண்டீரவா ஸ்டூடியோவில் ஆர்ட் டைரக்டர் அங்கமுத்துவிடம் சொல்லி ஒரு விசித்திரமான செட் போடச் சொன்னார் எம்.ஜி.ஆர்.

ஒரு பெரிய மாளிகை, நடுவில் ஒரு பெரிய அறை வட்டவடிவில். அதைச் சுற்றி பல அறைகள். எந்த அறையில் இருந்து பார்த்தாலும் நடுவில் உள்ள வில்லனின் அறை தெளிவாகத் தெரியும். இங்கு படப்பிடிப்பு நடத்தும்போதே மகிழ்ச்சியாக இருந்தது. காரணம் வித்தியாசமான மாளிகை அமைப்பு.

'உரிமைக் குரல்' படப்பிடிப்பு தலைக்காட்டில் தொடர்ந்து நடந்தது. அது கர்நாடக மாநிலம் என்றாலும் எம்.ஜி.ஆரைப் பார்க்க ஐயாயிரம் பேர்களுக்கு மேல் அங்கே கூடிவிட்டார்கள். டைரக்டர் ஸ்ரீ தருக்கு ஒன்றும் புரியவில்லை. படப்பிடிப்பு நடக்குமா என்று குழம்பினார். எவ்வளவோ வேண்டிக் கொண்டும் மக்கள் நகரவில்லை. வேறு வழியில்லாமல் கேமரா ஆங்கிளை மாற்றியமைக்க ஏற்பாடு செய்தார்.

இதைக் கவனித்த எம்.ஜி.ஆர். அவசரம் அவசரமாக ஓடி வந்து 'ஏன் ஆங்கிளை மாற்றுகிறீர்கள்?' என்றார், டைரக்டரிடம்.

'உங்களைப் பார்க்க இவ்வளவு கூட்டம் கூடிப் போச்சே?'

'நீங்க கவலைப்படாதீங்க. நான் பார்த்துக் கொள்கிறேன்?' என்ற எம்.ஜி.ஆர்., கூட்

டத்தை நோக்கி வணங்கியவாறே வேறு பக்கம் போகச் சொன்னார். ஒருவர் கூட முணுமுணுக்கவில்லை. ஏதோ ஒரு ராணுவ அதிகாரிக்கு வீரர்கள் கட்டுப்படுவது போல கூட்டம் நகர்ந்து வேறு திசையில் நின்றது! எம்.ஜி.ஆர். சிரித்துக் கொண்டே ஸ்ரீதரிடம் 'உம்... படத்தை நல்லா திட்டமிட்டபடி எடுங்க' என்றார்.

நாங்கள் அந்த வியப்பிலிருந்து விடுபட வெகு நேரமாயிற்று. 'உரிமைக்குரல்' படப்பிடிப்பின் கிளைமாக்ஸ் சீன். அன்று எனக்கே ஒரு கிளைமாக்ஸாக அமைந்தது.

அன்று எனக்கு ஒரே பரபரப்பு! ஏவி.எம். ஸ்டுடியோவில் 'உரிமைக் குரல்' படப்பிடிப்பு. அதே நேரத்தில் கற்பகத்தில் 'அன்பைத் தேடி' ஷூட்டிங். இரண்டுக்கும் நான்தான் கேமராமேன்! எம்.ஜி.ஆரிடம் அன்று எனது நிலைமையை விளக்கி, கற்பகம் ஸ்டுடியோ வரை போய்வர அனுமதி கேட்டேன். அவர் முகமலர்ச்சியோடு 'தாராளமாக போயிட்டு வாங்க' என்று அனுமதி கொடுத்தார்.

கற்கபம் ஸ்டுடியோவில் 'அன்பைத் தேடி' படப்பிடிப்பு மளமளவென்று நடந்தது. ஸ்டண்ட் சீன் மாலை நாலரை மணிக்குத்தான் முடியும் என்று நினைத்தேன். மூன்று மணிக்கே முடிந்து விட்டது. நான் அவசரம் அவசரமாக கிளம்புவதைப் பார்த்த நடிகர் திலகம்:

'என்னப்பா- இன்று கடைசி நாள்- கொஞ்ச நேரம் ஜாலியா பேசிகிட்டிருக்கலாம்னு நினைச்சேன். அவசரமாகக் கிளம்புறியே?' என்றார் சிரித்துக் கொண்டே. படம் நல்லபடி முடிந்த திருப்தி அவருக்கு.

'இல்லை சார்- ஏவி.எம்.மில் எம்.ஜி.ஆர். சார் ஷூட்டிங் இருக்கு.' 'ஐயையோ அப்படியா? இதை முன்பே சொல்லியிருக்கக் கூடாதா? உடனே போப்பா' என்று விடை கொடுத்தார் சிவாஜி.

மாறுபட்ட கட்சியிலும், வித்தியாசமான கருத்துக்களை கொண்டிருந்தாலும் எம்.ஜி.ஆரும், சிவாஜியும் ஒருவருக்கொருவர் மரியாதை கொடுத்துக் கொண்டதையும் எனக்கு அனுசரித்துப் போனதையும் நினைத்து சந்தோஷப்பட்டேன்.

ஏவி.எம். ஸ்டுடியோவுக்குள் நான் மீண்டும் வியர்க்க விறுவிறுக்க நுழைந்தபோது எம்.ஜி.ஆர். என்னைப் பார்த்து, 'என்ன, அங்கே வேலையெல்லாம் திருப்தியாக முடிந்ததா? அரைகுறையாக விட்டு விட்டு வந்து விட்டீர்களா?' என்று கேட்டார். நடந்ததைச் சொன்னேன். அவருக்கும் மட்டற்ற மகிழ்ச்சி.

சத்யா மூவிஸ் சார்பில் திரு ஆர்.எம். வீரப்பன் அவர்கள் 'இதயக்கனி' படத்தை எடுக்கத் திட்டமிட்டபோது எம்.ஜி.ஆர். அவர்கள் அந்தப் படத்துக்கு என்னை ஒளிப்பதிவாளராகப் பணிபுரிய சிபாரிசு செய்தார். பூஜையன்று அவருக்கு நன்றி தெரிவித்தேன்.

'இதயக்கனி' வெளிப்புறக் காட்சி சிவசமுத்திரம் நீர்வீழ்ச்சியில் நடந்தது. ஒரு நாள் தற்செயலாக மலைச்சரிவிலிருந்து நூறு அடி தூரம் கீழே இறங்கிப் போய்ப் பார்த்தோம். பிரமாதமான இயற்கைக் காட்சி அது.

'இந்த இடத்தில் படப்பிடிப்பு நடத்தலாம். சின்னவர் (எம்.ஜி.ஆர்) வருவாரா?' என்று சிலர் ஐயப்பட்டார்கள்.

விவரத்தைக் கேள்விப்பட்ட எம்.ஜி.ஆர். 'இவ்வளவு தூரும் கஷ்டப்பட்டு வந்திருக்கிறோம். இம்மாதிரி லொகேஷனில் படப்பிடிப்பு நடப்பது ரொம்ப அபூர்வம். அதிலும் நீங்கள் தேர்ந்தெடுத்த இடம் பிரமாதம்- நான் ரெடி. நீங்கள் கேமராவைக் கீழே கொண்டு வர சௌகரியப்படுமா?' என்றார் சவாலைப் போல.

'முடியும்.!'

'அப்படியானால் எனக்கும் முடியும்!' என்றார் எம்.ஜி.ஆர். நடுக்கும் குளிர். அத்துடன்



'அவசர போலீஸ் 100' (அண்ணா நீ என் தெய்வம்) படத்தில் எம்.ஜி.ஆர். பின்னணியில் லதா, சங்கீதா.

...க்கனி' அவுட்டோரின் கடைசி நாளன்று சிவசமுத்திரம் என்ஜினீயர்ஸ் அசோசியேஷன், கூர்க்கில் எங்களுக்கு ஒரு பாராட்டு விழா நடத்தினார்கள். அந்த ஊரே நிகழ்ச்சிக்குத் திரண்டு வந்திருந்தது. அம்மாதிரி ஒரு கூட்டம் கூடுவது முதல் தடவை என்று கூட பலர் பேசிக் கொண்டார்கள்.

எம்.ஜி.ஆர்., டைரக்டர் ஏ. ஜெகன்னாதன், மற்ற டெக்னீஷியன்கள் எல்லோரையும் மேடையில் அமரச் செய்து பேசுமாறு அன்புக் கட்டளை விடுத்தார். பிற்பாடு எங்களை ஒவ்வொருவராக கூட்டத்தினருக்கு அறிமுகம் செய்து வைத்தார். தொழில் நுட்பக் கலைஞர்களான எங்களை அவர் பொது இடத்தில் பெருமைப்படுத்தியது மறக்க முடியாத நிகழ்ச்சி.

அவருக்கு ஒரு தனி முகராசி உண்டு என்பார்கள். அதை வேறொரு சந்தர்ப்பத்தில் நேரில் கண்டேன். கடலூரில் பத்து கப்பல்களை ஏற்பாடு செய்து அவருக்கும், மனோகருக்கும் கத்திச் சண்டை நடப்பதாக காட்சிகளை எடுக்கவிருந்தோம்.

அந்த சுற்று வட்டாரத்திலிருந்து மக்கள் ஆயிரக்கணக்கில் அங்கே கூடி விட்டார்கள். பலர் எம்.ஜி.ஆருக்கு மாலை போடுவதும் கை குலுக்குவதுமாக இருந்தார்கள்.

எம்.ஜி.ஆர். 'இன்னிக்கு விசிட்டர்ஸ் டே மாதிரி. ஒத்திகை மட்டும் பார்த்துக் கொள்ளுங்கள். நாளைக்கு 'ஷாட்' எடுக்கலாம்' என்றார்.

தேனீக்களைப் போல மொய்த்த மக்களையும் ரசிகர்களையும் நொந்து கொள்ளாமல் அவர் மனம் விட்டு அளவளாவியது அந்த வட்டரத்திலுள்ளவர்களுக்கு பெரும் திருப்தி. பேச்சுவாக்கில் அடுத்த நாள் நடக்கப் போகும் படப்பிடிப்பைப் பற்றி கூறி 'இன்று போல யாரும் தொந்திரவு செய்ய வேண்டாம்' என்றும் அவர் சொல்லியிருக்கிறார்.

என்ன கட்டுப்பாடான மக்கள்! அடுத்த நாள் அந்த இடத்துக்கு ஒரு ஈ, காக்கை கூட

வரவில்லை. ஜெட் வேகத்தில் படப்பிடிப்பை நடத்த முடிந்தது.

'அண்ணா நீ தெய்வம்' படப்பிடிப்பு நடந்தபோது என் தாயாருக்கு உடல்நிலை சரியில்லை. வேறொரு கேமரா மேனை ஏற்பாடு செய்து அனுப்பி விட்டு தாயைக் கவனிப்ப தற்காக வீட்டுக்கு விரைந்தேன். ஆனால், என் துரதிருஷ்டம். சில நாட்களாக நோய் வாய்ப் பட்டிருந்த எனது தாயார் இறந்து போனார். அம்மாவுக்கு நான் பெரிய நடிகரான எம்.ஜி.ஆரின் படங்களில் ஒளிப்பதிவாளராகப் பணிபுரிவதில் ஏக சந்தோஷம். அடிக்கடி அவர் எம்.ஜி.ஆரின் நல்ல குணாதிசயங்களைப் பற்றி தான் கேள்விப்பட்டதை என்னிடமே சொல்லி மகிழ்வார்.

என் தாயார் இறந்த செய்தியை நான் பெரிது படுத்தவில்லை. அதே நேரத்தில் படப்பி டிப்பு நடந்து கொண்டிருந்தது. ஈமக்கிரியைகள், சடங்குகள் எல்லாம் முடிந்து மூன்று நாட்கள் கழித்து ஃப்ளோருக்குப் போனேன். எம்.ஜி.ஆர். கேட்ட முதல் கேள்வி:

'உங்கள் தாயாருக்கு உடல்நிலை சரியில்லை என்று கேள்விப்பட்டேன். இப்போது எப்படியிருக்கிறார்?' எனக்கு அழுகை வந்து விட்டது. 'அவர்... தேதி இறந்து விட்ட 'அப்படியா?' — எம்.ஜி.ஆருக்கு ஒரே ஷாக்.

'பாலு நீங்க தவறு செய்துட்டீங்களே? இது ஒரு முக்கிய விஷயமில்லையா? எனக்குத் தகவல் அனுப்பினால் நான் அந்தத் தாயின் முகத்தை ஒரு தடவையாவது பார்த்திருப் பேனே?' என்றார் வருத்தம் கலந்த குரலில்.

'இல்லை— என்னால் படப்பிடிப்பு தாமதப்படுமே... என்று...' நான் பேச்சை முடிப்ப தற்குள் எம்.ஜி.ஆர். 'என்ன பெரிய படப்பிடிப்பு? இம்மாதிரி யூனிட்டிலுள்ள ஒருவரது தாயாரின் ஈமச்சடங்குக்குப் போய் வந்ததால் அரை மணி தாமதமானாலும், அரை நாள் தாமதமானாலும் பரவாயில்லை. ஒருவருக்கு தாய்தான் தெய்வம். மறுபடியும் சொல்கி நீங்க செய்தது தவறுதான்' என்றார், எம்.ஜி.ஆர். அவரிடம் மேலும் வாக்குவாதம் செய்யும் சக்தி எனக்கில்லை. நான் மௌனமாக நின்றேன்.

அன்று மாலை வீட்டுக்குத் திரும்பியதும் எம்.ஜி.ஆர். என்னிடம் வருத்தப்பட்டதை நினைத்துப் பார்த்தேன். அவர் கூறியது உண்மைதான். நான் செய்தது தவறாகவே பட்டது. 'மீனவ நண்பன்' படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தபோது மாநில சட்டமன்றத் தேர்தல் வந்தது. அ.இ.அ.தி.மு.கழகத்தின் மாபெரும் வெற்றியைத் தொடர்ந்து திரு எம்.ஜி.ஆர். முதல்வராகத் தேர்வு பெற்றார். அவர் பதவியேற்பதற்கு முதல் நாள்:

'மீனவ நண்பன்' படத்திற்காக அவர் படகில் செல்வது போல சில காட்சிகள் வாஹினி யில் எடுக்கப்பட்டன. அன்று பூராவும் அவர் தண்ணீரில் சொட்டச் சொட்ட நனைந்து கொண்டே பொறுமையாக நடித்தார். விடிந்தால் அவர் மாநில முதல் அமைச்சர். செட்டுக்கு வெளியே பலர் அவரைப் பாராட்டவும், பல்வேறு பிரச்சினைகள் பற்றிப் பேசவும் காத்திருந் தார்கள். இம்மாதிரியான ஒரு பரபரப்பான சூழ்நிலையிலும் அவர் தனது பொறுப்பினை உணர்ந்து 'மீனவ நண்பன்' படத்தின் முக்கிய காட்சிகளை முடித்துக் கொடுத்ததை அனை வரும் பாராட்டினார்கள். படப்பிடிப்பு முடிந்ததும் எம்.ஜி.ஆர். ஒவ்வொருவரிடமும் கை குலுக்கியவாறே மன மகிழ்வுடன் புதுப்பணி ஏற்க விடை பெற்றது மனதைத் தொடுவதாக இருந்தது.

# எம்.ஜி.ஆருடன் எழுந்த தகராறு

**'குல தெய்வம்' ராஜகோபால் எம்.ஜி.ஆருடன் தனக்கேற்பட்ட அனுப வங்களை விவரித்தார்.**

'மன்னாதி மன்னன்' உருவான நேரத்தில் எம்.ஜி.ஆர். சமூகப் படங்களுக்கு லாயக்கில் லாதவர் என்ற அவப் பெயர் இருந்தது. தொடர்ந்து சரித்திரப் படங்களில் நடித்துக் கொண்டு இருந்த எம்.ஜி.ஆர்., 'தாய் மகளுக்கு கட்டிய தாலி' என்ற சமூகப் படத்தில் நடித்தார். அது தோல்வியுற்ற நேரத்தில் எம்.ஜி.ஆருக்கு 'மன்னாதி மன்னன்', 'விக்ரமாதித்தன்' தவிர வேறு படங்கள் இல்லை.

அப்போது என்னோடு பாய்ஸ் கம்பெனி நாடகங்களில் ஒன்றாக இருந்த ராகவன், ஒரு படம் தயாரிக்க முன் வந்தார். ஒரு நகைச்சுவை படம் உருவாக்குவது என்று முடிவானது. படத்தின் பெயர் 'சபாஷ் மாப்ளே', யாரை நடிக்க வைக்கலாம் என்று யோசனை எழுந்த



'சபாஷ் மாப்பிளே'யில் எம்.ஜி.ஆர்., ராஜகோபால்.

போது சிவாஜியும், ஜெமினியும் பிஸியாக இருந்ததால், எம்.ஜி.ஆரை நடிக்க வைக்கலாமே என்று ராகவனிடம் தெரிவித்தேன். ராகவன் பயந்து போனார்.

'எம்.ஜி.ஆரை வைத்து படம் எடுத்து யார் அவதிப் படறது. நம்மால் முடியாதப்பா' என்று பின் வாங்கியவரை நான்தான் சமாதானம் செய்து சம்மதிக்க வைத்தேன்.

இது குறித்து எம்.ஜி.ஆரை சந்தித்துப் பேசினேன். அவர் மிகவும் மனம் நொந்து 'சமூகப் படங்களுக்கே நான் லாயக்கில்லை என்று சினிமா உலகம் முடிவு செய்திருக்கிறது. ஏன் விஷப் பரீட்சையில் இறங்குகிறீர்கள்?' என்று சொன்னபோது எனக்கு சங்கடமாக இருந்தது.

இருந்தாலும் எம்.ஜி.ஆரையே நடிக்கச் செய்வது என்று தீர்மானித்து பட வேலைகளில்

இறங்கினோம். எம்.ஜி.ஆர். சரித்திரப் படங்களில் மட்டுமின்றி, கூண்டுக்கிளி, தாய் மகளுக்கு கட்டியத் தாலி உட்பட பல படங்களில் 'விக்' அணியாமலே நடித்திருந்தார்.

ஒரு மாறுதல் வேண்டி அவருக்கேற்ற 'விக்' ஒன்றை தயார் செய்து எடுத்துக் கொண்டு சாரதா ஸ்டூடியோ போனேன். ஸ்டூடியோவில் உள்ள அறை ஒன்றில் ஆளுயர நிலைக் கண்ணாடி முன் எம்.ஜி.ஆருக்கு பேண்ட்- சர்ட் அணிவித்து 'விக்'கும் பொருத்தி பார்த்தோம். எம்.ஜி.ஆர். தன் தோற்றத்தையே நம்ப முடியாமல் 'கல்லூரி மாணவன் மாதிரி இருக்கேனே' என்று வியந்து போனார்.

அந்த தோற்றத்தில் புகைப் படங்கள் எடுத்து பத்திரிகைகளுக்கு கொடுத்தோம். நாட்களிலேயே எம்.ஜி.ஆர். ஏழு சமூகப் படங்களில் நடிக்க ஒப்பந்தமானார். அதுவரை 'திருடாதே' படத்தில் 'விக்' அணியாமல் நடித்து வந்த எம்.ஜி.ஆர். ஏற்கனவே படமாக்கிய பகுதிகளில் குளோசப் காட்சியை எல்லாம் தூக்கி விட்டு, 'விக்' அணிந்து மீண்டும் அதே காட்சிகளில் நடித்தார். லாங் ஷாட்டிலெல்லாம் சொந்த முடி தெரியும்.

'மாடப்புறா' படம் துவங்கிய நேரத்தில் ஒரு சோக சம்பவம். என்னை வளர்ந்து ஆளாக்கிய என் தந்தையைப் பெற்ற தாயார் இறந்து போனார். அவருக்கு நான்தான் எல்லாம். அவரது உடலை இடுகாட்டிற்கு எடுத்துச் செல்ல முனைந்து கொண்டிருந்தேன். கம்பெனியிலிருந்து இன்றைக்கு ஷூட்டிங். எம்.ஜி.ஆர். காத்து கொண்டு இருக்கிறார். வாருங்கள் என்று அழைப்பு வந்தது. எப்படி இருக்கும் எனக்கு?

'சடங்குகள் முடிந்து நாளை பிற்பகல் வருகிறேன்' என்று சொல்லி அனுப்பினேன். நான் வராததால் நான் இல்லாமலே காட்சியை மாற்றி, படமாக்கி விட்டார்கள். மறுநாள் மாலை நான் நேராக எம்.ஜி.ஆரையே போய் பார்த்து காரணம் கேட்டேன். எம்.ஜி.ஆர். ஏதோ காரணம் சொன்னார். 'இனி நாம் வீண் தகராறு செய்து கொள்ள வேண்டாம்' என்று சொல்லி விட்டு நான் வந்தேன்.

அப்புறம் கோர்ட்டு வரை இந்த விவகாரம் போவதாக இருந்து அமுங்கி விட்டது. இதில் எம்.ஆர். ராதா தலையிட்டு சமரசம் செய்யப் பார்த்தார்.

அதன் பின் கிட்டத்தட்ட பதினைந்து ஆண்டுகளுக்குப் பின் எம்.ஜி.ஆரும் நானும் சந்தித்தோம். அதுவும் அவரின் அழைப்பின் பேரில் இருவரும் மனம் விட்டுப் பேசினோம். அதன் விளைவு அவரது கட்சியில் சேர்ந்தேன். அவரது கடைசி நேரம் வரை என்னோடு நல்ல நட்புடன் இருந்தார்' என்றார், குலதெய்வம் ராஜகோபால்.

## எம்.ஜி.ஆர். வாங்கிய உதை

எம்.ஜி.ஆர். சிறு வயதில் ஒரு நாள் குளித்து விட்டு உடலை துவட்டிக் கொள்ள, கொடியில் உலரப் போட்டிருந்த துண்டை தேடினார். துண்டைக் காணோம்.

'அம்மா என் துண்டைக் காணவில்லை' என்று எம்.ஜி.ஆர். தன் தாயிடம் சொன்ன போது, அவர் மகனை அடித்து விட்டார். மறுபடியும் 'என் துண்டைக் காணவில்லை' என்று மகன் சொல்ல, மறுபடியும் தாய் அடித்தார்.


'ஏன் சின்னப் பிள்ளையை இப்படி போட்டு அடிக்கிறீர்கள்?' என்று பக்கத்தில் இருந்தவர்கள் கேட்டதற்கு, எம்.ஜி.ஆரின் தாயார் சொன்னார். 'பின்னே என்ன, இந்த வயதிலேயே என் துண்டை காணவில்லை என்கிறான். 'என்' என்ற எண்ணம் வரலாமா?'.



# எம்.ஜி.ஆரும் டைரக்டர் ஏ. பீம்சிங்கும் நல்ல நண்பர்கள்

டைரக்டர் ஏ. பீம்சிங் என்றாலே பாசமலர், பாவமன்னிப்பு, பாலும் பழமும், பழநி, பந்தபாசம் என்று 'ப' வரிசை படங்களாகவே நினைவுக்கு வரும். 1960 முதல் 1965 ...ரையில் அவரது இயக்கத்தில் சிவாஜி நடித்த படங்களெல்லாம் பெரும் வெற்றி பெற்றுள் ...ஏ. பீம்சிங் என்றால் சிவாஜி டைரக்டர் என்ற பெயர் இருந்தாலும், அவர் எம்.ஜி.ஆருட ...ம் நெருங்கிய நட்பு கொண்டிருந்தார். அது வெளியுலகம் அறியாத ஒன்று.

எம்.ஜி.ஆர்., பீம்சிங் இயக்கத்தில் நடித்திரா விட்டாலும் இருவரும் இணைந்து படம் செய்வதற்கான சந்தர்ப்பங்கள் வந்தும் அவை தவறிப் போய் விட்டன.



'புத்தா பிக்சர்ஸ்' நிறுவன துவக்க விழாவில் சிவாஜி, ஜெமினி, எம்.ஜி.ஆர்., பீம்சிங், (கண்ணாடி அணிந்து) பின்புறம் இருப்பவர் ஜி.என். வேலுமணி.



பி. லெனின்

பி.யூ. சின்னப்பா நடித்த 'ரத்னகுமார்' படத்தில் எம்.ஜி.ஆர். சிறிய வேடமொன்றில் நடித்தார். அந்தப் படத்தின் இயக்குனர்களான கிருஷ்ணன்- பஞ்சுவிடம் உதவியாளராக இருந்த பீம்சிங் சிறிய நடிகரான எம்.ஜி.ஆரிடம் தொழில் ரீதியில் நட்பு கொண்டார். அது இருவரும் வளர வளர பெருகிக் கொண்டே போனது. ஆனால் இருவரும் வளர்ந்த நிலையில் அவர்களது சினிமா பாணி ஒத்துப் போக முடியவில்லை. இருந்தாலும் எப்படியும் இருவரும் இணைந்து பணியாற்ற வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்குள் இருந்தது.

பீம்சிங், சிவாஜி, ஜெமினி நடித்த 'பதிபக்தி'யை 'புத்தா பிக்சர்ஸ்' என்ற பேனரில் தயாரித்து இயக்கினார். அந்த நிறுவனத்தின் தொடக்க விழா பூஜை நடந்தபோது எம்.ஜி. ஆர். அதை முன்னின்று நடத்தினார்.


பின்னாளில் எம்.ஜி.ஆருக்கு மாறுபட்ட வேடங்களில் நடிக்க விருப்பம் இருந்தபோது, பீம்சிங்கிடம் அது பற்றிச் சொன்னார். அவருக்காக கதை தேடினார்கள். அசோக்குமார் இந்தியில் பிரதான வேடமொன்றில் நடித்த 'விஸ்வநாத்' என்ற படம் எம்.ஜி.ஆருக்கு பொருத்தமாக இருக்குமென்று பீம்சிங் கருதினார். அந்தப் படத்தில் தந்தைக்கும், மகளுககும உள்ள பாசம் மிகவும் உணர்ச்சிகரமாக இருக்கும். தந்தையாக அசோக்குமார் நடித்திருந்தார். அதையும், மகளை மகனாக மாற்றி, எம்.ஜி.ஆர். இரட்டை வேடங்களில் நடிப்பதாக இருந்தது. ஆனால் எம்.ஜி.ஆர். அரசியலில் தீவிரமான காரணத்தால் அந்தப் பட முயற்சி நின்று போனது. இந்தப் படத்தின் டிஸ்கஷனுக்காக பீம்சிங் தனது குழுவினருடன் ராமாவரம் தோட்டத்திற்கு சென்று வந்திருக்கிறார்.

எம்.ஜி.ஆர். தமிழக முதல்வராக ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பின்பும் அவருக்கு ஒரு ஆசை இருந்தது. தனது 'எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ்' நிறுவனத் தயாரிப்பில் ஏதாவது ஒரு படமொன்றை பீம்சிங் இயக்க வேண்டுமென்று விரும்பினார். அதற்காக சத்யா ஸ்டூடியோவில் பூஜையொன்றும் நடந்தது. அதில் வேறு நடிகர்கள் நடிப்பதாக இருந்தார்கள். ஆனால் அந்தப் பட வேலைகள் நடந்து கொண்டிருந்த போதே பீம்சிங்கிற்கு உடல் நலமில்லாமல் போனது. அதனால் அந்தப் படமும் நின்று போனது.

பீம்சிங் காலமானாலும், எம்.ஜி.ஆர். அவருக்குத் தர வேண்டிய மரியாதையை செய்யத் தவறவில்லை. அவரது 'சில நேரங்களில் சில மனிதர்கள்' படத்திற்கு சிறந்த படமென லட்ச ரூபாய் பரிசு கிடைக்கச் செய்தார், முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர்.

இந்த விஷயங்களையெல்லாம் நினைவு கூர்ந்தவர், பீம்சிங்கின் புதல்வரும், படத் தொகுப்பாளருமான (எடிட்டர்) பி. லெனின். இவர் சத்யா ஸ்டூடியோவுக்கு தந்தையுடன் ஒரு சமயம் சென்றபோது எம்.ஜி.ஆர். இவரது உடலமைப்பைப் பார்த்து விட்டு, 'நல்லா உடற்பயிற்சி செய்' என்று யோசனைகள் சொன்னாராம்.




எம்.ஜி.ஆர்
என்ற
அதிசய மனிதரின்
அபூர்வ
வாழ்க்கை
உண்மைகள்,
அபூர்வ
படங்களுடன்...